# பாவாணர்

# தமிழ்க்களஞ்சியம் - 4



## திருக்குறள் தமிழ் மரபுரை

இன்பத்துப்பால்

தமிழ்மண் அறக்கட்டளை

# பாவாணர்
# தமிழ்க் களஞ்சியம்

4

## திருக்குறள் தமிழ் மரபுரை – 4

*உரையாசிரியர்*

மொழிஞாயிறு **ஞா. தேவநேயப் பாவாணர்**

**தமிழ்மண் அறக்கட்டளை**

*சென்னை – 600 017*

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **பாவாணர் தமிழ்க் களஞ்சியம் - 4** |
| உரையாசிரியர் | : | மொழி ஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 1967 |
| மறுபதிப்பு | : | 2009 |
| தாள் | : | 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 8 + 208 = 216 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **200/-** |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | வ. மலர் |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்சு<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**தமிழ்மண் அறக்கட்டளை**

**“பெரியார் குடில்”**

பி.11 குல்மொகர் குடியிருப்பு,

35 செவாலிய சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர்,

சென்னை - 600 017. தொ.பே. 2433 9030

மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in

இணையதளம் : www.tamilmann.in

# பதிப்புரை

*தமிழுக்கும் தமிழருக்கும் வளமும் வலிமையும் சேர்க்கக் கூடிய பழந்தமிழ் நூல்களையெல்லாம் தேடியெடுத்துத் தமிழ் கூறும் உலகிற்கு வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன்* ***தமிழ்மண் பதிப்பகம்*** *தொடங்கப்பட்டது. அதன் வாயிலாக மொழிஞாயிறு பாவாணரின் நூற்றாண்டு நினைவாக அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் சேர்த்து அவருடைய மறைவுக்குப் பிறகு 2000-த்திலும், பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் வெளிவந்து, நூல் வடிவம் பெறாத பாவாணரின் அரிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து 2001- லும் ஒருசேர வெளியிட்டு உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு வழங்கினோம். பாவாணர் வழி நிலை அறிஞர்களான முதுமுனைவர்* ***இரா. இளங்குமரனார்*** *அவர்களும், மருத்துவர்* ***கு.பூங்காவனம்*** *அவர்களும் இவ்வரிய கட்டுரைப் புதையல்கள் நூல் வடிவம் பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். இப்பெருமக்களை நன்றியுணர்வுடன் நினைவுகூர்கிறேன்.*

*“சொல்லாராய்ச்சித் துறையில் தேவநேயர் ஒப்பற்ற தனித் திறமையுடைவர் என்று* ***மறைமலையடிகளும்,*** *நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று* ***பாவேந்தரும்,*** *தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் நற்றொண்டு ஆற்றியவர் பாவாணர் என்று* ***பேரறிஞர் அண்ணா*** *அவர்களும், வெட்ட வெட்டக் கிடைக்கும் தங்கச் சுரங்கம் போன்றவர் என்று தமிழறிஞர்* ***இராசமாணிக்கனாரும்,*** *தமிழகம் மொழித்துறையிலே பாவாணர் போன்ற ஒரு அறிஞரை இன்னும் பெற்றுத் தரவில்லை என்று* ***பன்மொழிப் புலவர் அப்பாத்துரையரும்,*** *குறைமதியர் தேக்கிவைத்த கரையிருளை நீக்க வந்த மறைமலையார் வழிவந்த நிறைமலையார் பாவாணர் என்று மேனாள் பேரவைத்தலைவர்* ***தமிழ்குடிமகன்*** *அவர்களும், தமிழர் யார்? எதிரிகள் யார்? என்று ஆய்ந்து அறிந்து காட்டியவர் பாவாணர் என்று பேராசிரியர்* ***இளவரசு*** *அவர்களும், ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணி” பாவாணர் என்று முதுமுனைவர்* ***இளங்குமரனார்*** *அவர்களும் குறிப்பிட்டுள்ள பெருமைகளுக்குரிய பேரறிஞரின் நூல்களை மீள்பதிப்பக வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.*

"பாவாணர் நூல்கள் அத்தனையும் தமிழ்மொழிக்கு ஏற்றம் உரைப்பன. தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக் காப்பன. வீழ்ந்து பட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ்மொழியை மீட்கவல்லது" என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கூற்றை இக் களஞ்சிய வெளியீட்டில் பதிவு செய்வது எமது கடமையாகும்.

பாவாணரைத் தூக்கிப் பிடித்தால்தான் தமிழினம் உருப் படமுடியும் - உயரமுடியும். பாவாணர் கொள்கைகள் தமிழர் உள்ளமெல்லாம் நிலைத்து நிற்பதற்கும், பாவாணர் நூல்கள் தமிழர் இல்லமெலாம் இடம் பெறுவதற்கும் முன் குறிப்பிட்ட 2000 - 2001 காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட பாவாணரின் அறிவுக் கருவூலங்களையெல்லாம் ஒட்டு மொத்தமாக சேர்த்து ஒரே வீச்சில் **பாவாணர் தமிழ்க் களஞ்சியம்** எனும் தலைப்பில் எம் அறக்கட்டளை வெளியிடுகிறது.

மறைக்கப்பெற்ற மாபெரும் வரலாற்றையும், சிதைக்கப் பெற்ற ஒப்புயர்வுயற்ற மொழியையும் கொண்ட தமிழினத்தின் முன்னேற்றம் கருதி இவ்வருந்தமிழ் புதையல்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க முன் வந்துள்ளோம். தமிழ் மொழியை மூச்சாகவும், பேச்சாகவும், செயலாகவும் கொண்டு ஒருநாளின் முழுப்பொழுதும் தமிழாகவே வாழ்ந்த செம்புலச்செம்மல், தனித்தமிழ்க் கதிரவன் மொழிஞாயிறு பாவாணர் நூல்களை வாங்கிப் பயன் கொள்வீர்.

இளமையிலேயே பொதுத்தொண்டிலும், தனித்தமிழ் இயக்கத் தொண்டிலும் நான் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் **பெரும்புலவர் நக்கீரன்** அவர்களும், அவர்தம் இளவல் **புலவர் சித்திரவேலன்** அவர்களும் ஆவர். இவர்களை இவ்வெளியிட்டின் வாயிலாக நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறேன். தந்தை பெரியாரின் தன்மதிப்பு இயக்கக் கொள்கை களாலும், மொழிஞாயிறு பாவாணரின் தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டவன். அத்தகு பின்புலத்தோடு பதிப்புப்பணியில் என் காலடிச் சுவடுகளைப் பதித்து வருகிறேன்.

**கோ. இளவழகன்,**
**பதிப்பாளர்.**

# குறுக்க விளக்கம்

அதி. - அதிகாரம்

ஆ.பா. - ஆண்பால்

இடை. - இடையியல்

இ-ரை. இதன் தொடருரை

இ.வே. - இருக்கு வேதம்

எ-டு. - எடுத்துக் காட்டு

ஒ.நோ: - ஒப்பு நோக்க

க. - கன்னடம்

கம்பரா - கம்பராமாயணம்

கலித். - கலித்தொகை

கள. - களவியல்

சச் - சச்சிதானந்த சிவம்

சி.சி. - சிவஞான சித்தியார்

சிலப். - சிலப்பதிகாரம்

சீவக. - சீவக சிந்தாமணி

சொல். - சொல்லதிகாரம்

த.வி. - தன்வினை தெ. தெலுங்கு

திருமந். - திருமந்திரம்

தெலுங்கு

தொம.சத. - தொண்டை மண்டல சதகம்

தொ . - தொகாப்பியம்

நன். - நன்னூல்

நாலடி. - நாலடியார்

நான்மணி - நான்மணிக்கடிகை

பி.வி. - பிறவினை

புறம். - புறநானூறு

பெ. பா. - பெண்பால்

பொதுப்பா - பொதுப்பாயிரம்

ம. - மலையாளம்

மணிமே. - மணிமேகலை

மலைபடு. - மலைபடுகடாம்

முல்லை. - முல்லைப்பாட்டு

வ. - வடசொல்

AF - Anglo French

E - English

F - French

G - German

Gk - Greek

L - Latin

LL - Late Latin

ME - Middle English

MHG - Middle High German

OE - Old English

OF - Old French

OHG - Old High German

OS - Old Saxon

Skt - Sanskrit

# அதிகார அகரவரிசை

## III இன்பத்துப்பால் - 4


1. அலரறிவுறுத்தல் ........................ 36
2. அவர்வயின் விதும்பல் ............ 93
3. உறுப்பு நலனழிதல் .................... 81
4. ஊடலுவகை ................................ 121
5. கண்விதுப் பழிதல் .................... 55
6. கனவுநிலை யுரைத்தல் ............ 72
7. காதற் சிறப்புரைத்தல் .............. 27
8. குறிப்பறிதல் ................................ 10
9. குறிப்பறி வுறுத்தல் ................... 99
10. தகையணங்குறுத்தல் ................. 4
11. தனிப்படர் மிகுதி ....................... 63
12. நாணுத் துறவுரைத்தல் ............. 31
13. நிறையழிதல் ............................... 89
14. நினைந்தவர் புலம்பல் .............. 68
15 நலம்புனைந் துரைத்தல் .......... 22
16. நெஞ்சொடு கிளத்தல் ............. 85
17. நெஞ்சொடு புலத்தல் ............. 107
18. பசப்புறு பருவரல் ....................... 59
19. படர் மெலிந்திரங்கல் ............... 50
20. பிரிவாற்றாமை ........................... 45
21. புணர்ச்சி மகிழ்தல் .................... 15
22. புணர்ச்சி விதும்பல் ................. 103
23. புலவி ............................................... 111
24. புலவி நுணுக்கம் ........................ 116
25. பொழுதுகண் டிரங்கல் ............ 76

# உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| *பதிப்புரை* | | ... | iii |
| *குறுக்க விளக்கம்* | | ... | v |
| *அதிகார அகரவரிசை* | | ... | vi |


## III இன்பத்துப்பால் – 4


**1. களவியல்**

| | | | |
|---|---|---|---|
| (1) தகையணங்குறுத்தல் | (அதி. 109) | ... | 4 |
| (2) குறிப்பறிதல் | (அதி. 110) | ... | 10 |
| (3) புணர்ச்சி மகிழ்தல் | (அதி. 111) | ... | 15 |
| (4) நலம்புனைந்துரைத்தல் | (அதி. 112) | ... | 22 |
| (5) காதற் சிறப்புரைத்தல் | (அதி. 113) | ... | 27 |
| (6) நாணுத் துறவுரைத்தல் | (அதி. 114) | ... | 31 |
| (7) அலரறிவுறுத்தல் | (அதி. 115) | ... | 36 |

**2. கற்பியல்**

| | | | |
|---|---|---|---|
| (1) பிரிவாற்றாமை | (அதி. 116) | ... | 45 |
| (2) படர் மெலிந்திரங்கல் | (அதி. 117) | ... | 50 |
| (3) கண்விதுப் பழிதல் | (அதி. 118) | ... | 55 |
| (4) பசப்புறு பருவரல் | (அதி. 119) | ... | 59 |
| (5) தனிப்படர் மிகுதி | (அதி. 120) | ... | 63 |
| (6) நினைந்தவர் புலம்பல் | (அதி. 121) | ... | 68 |
| (7) கனவுநிலை யுரைத்தல் | (அதி. 122) | ... | 72 |
| (8) பொழுதுகண் டிரங்கல் | (அதி. 123) | ... | 76 |
| (9) உறுப்பு நலனழிதல் | (அதி. 124) | ... | 81 |
| (10) நெஞ்சொடு கிளத்தல் | (அதி. 125) | ... | 85 |
| (11) நிறையழிதல் | (அதி. 126) | ... | 89 |
| (12) அவர்வயின் விதும்பல் | (அதி. 127) | ... | 93 |
| (13) குறிப்பறி வுறுத்தல் | (அதி. 128) | ... | 99 |
| (14) புணர்ச்சி விதும்பல் | (அதி. 129) | ... | 103 |
| (15) நெஞ்சொடு புலத்தல் | (அதி. 130) | ... | 107 |
| (16) புலவி | (அதி. 131) | ... | 111 |
| (17) புலவி நுணுக்கம் | (அதி. 132) | ... | 116 |
| (18) ஊடலுவகை | (அதி. 133) | ... | 121 |
| பின்னிணைப்பு | | ... | 127 |
| அருஞ்சொற்பொருள் அகரவரிசை | | ... | 191 |
| பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை | | ... | 194 |

# திருக்குறள்
# தமிழ் மரபுரை

## III இன்பத்துப்பால் – 4

அறவழியி லீட்டப்பெற்ற பொருளைக்கொண்டு இன்பந்து-க்கும் வகை யைப்பற்றிக் கூறும் பெரும்பகுதி **இன்பத்துப்பாலாம்**. இது அகப் பொருளிலக் கணத்திற் சொல்லப்பட்ட 'மூன்றன் பகுதி'யின் (தொல். அகத். 41) முடிவுநிலை பற்றியதாம். அறம்பொரு ளின்பம் (வீடு) என்று கூறுவதே மரபாதலானும், இப் பொருட்பாகுபாடு தமிழர் கண்டதேயாதலானும், இப் பகுதிக்கு இன்பத்துப் பால் என்பதே ஆசிரியர் இட்ட பெயராம்.

"அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
றிறந்தெரிந்து செப்பிய தேவை" (8)

"வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய முப்பத்து மூன்றொன்றூழ் – கூடுபொரு
ளெள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்" (20)

"இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்" (33)

"அறமுப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
திறமிருபத் தைந்தாற் றெளிய" (37)

"அறந்தகளி யான்ற பொருடிரி யின்பு
சிறந்தநெ– செஞ்சொற்றீத் தண்டு" (47)

"அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
றிறனறிந்தேம் வீடு தெளிந்தேம்" (50)

"அறநான் கறிபொரு ளேழொன்று காமத்
திறனே றெனப்பகுதி செ–து" (22)

"காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு" (27)

*எனத் திருவள்ளுவமாலைச் சொ-யுள்களுள் ஆறு இன்பம் அல்லது இன்பு என்றே குறித்தலையும். இரண்டே காமம் என்னுஞ் சொல்லை ஆளுதலையுங் காண்க. பரிமேலழகர் காமம் என்னுஞ் சொல்லை ஆண்டதற்கு அவரது வடமொழி வெறியே கரணியம் என்பதையும் அறிக. ஆயினும், அச் சொல்லுந் தென்சொல்லே யென்பதை அவர் அறியார். காமம் ஆசையாகிய கரணியம்; இன்பம் அதன் விளைவாகிய து-ப்பு.*

*உலக இன்பங்களுள் தலைசிறந்ததும் ஐம்புல இன்பங்களையும் ஒருங்கே கொண்டதும் பெண்ணின்பமே. அவ் வின்பம் ஆடவர்க்குப் போன்றே பெண்டிர்க்கும் ஐம்புல வின்பந் தருவதால் இருபாற் பொதுவாம். ஆயினும், ஆண்பாலின் வலிமை மேம்பாடும் உரிமைச் சிறப்பும் வலியத் து-ப்பும் து-ப்பாற்றலும் அடக்கக் குறைவும்பற்றி ஆண்பா லின்பமாகவே பொதுவாகக் கருதவுஞ் சொல்லவும்படும்.*

# 1

# களவியல்

மாந்தருள் இருபாலுங் கூடி இன்பந்து-த்து அறஞ்செ-து ஒழுகும் இல்லற வாழ்க்கை, களவாகத் தொடங்குவதும் கற்பென்னும் வெளிப் படை யாகத் தொடங்குவதும் என இருவகைப்படும். கூடி இன்பந் து-க்கும் பருவ மடைந்த ஓர் இளைஞனும், ஓர் இளைஞையும் பிறர் இல்லாத இடத்தில் தற் செயலாகத் தலைக்கூடிக் காதலொருமித்துப் புணர்ந்து, பின்பு வெளிப்படை யாகக் கூடி வாழத் தொடங்கும்வரை, குறித்த இடத்திற் சிறிதுகாலம் பெற் றோர்க்கும் மற்றோர்க்கும் தெரியாது நாள்தொறும் அல்லது அடிக்கடி மறை வாகக்கூடியொழுகும் ஒழுக்கம் களவாம்; அதன்பின் வெளிப்படையாகக் கூடிவாழும் வாழ்க்கை கற்பாம்.

ஆணும்பெண்ணும் பிறர்க்குத் தெரியாது மறைவாகக் கூடிப்புணர்தல் பலவகையில் நிகழுமேனும், மணமாகாத எதிர்ப்பா லிளந்தையர் இருவர், தெ-வ ஏற்பாட்டின்படி தமியராக ஒருவரையொருவர் கண்டவுடன் காதலித்து மெ-மறந்து புணர்ந்து, அன்றே நிலையான வாழ்க்கைத்துணைய ராவதும், அடுத்தோ சிறிதுகாலம் இடையிட்டோ கற்பாக மாறுவதும், அதற்குத் தடை யேற்படின் இருவரும் உயிர் துறப்பதுமான உயரிய மறை வொழுக்கமே, தமிழ் நூல்களிற் களவெனச் சிறப்பித்துச் சொல்லப்படுவதாம். களவென்பது மறைவு. களவாக வொழுகும் ஒழுக்கம் களவெனப்பட்டது; ஆதலால் யாதொரு தீதுமற்றதாம். இத்தகைய வொழுக்கம் ஒரோவோ ரிடத்து ஒரோவொரு சமையத்து ஒரோவோரிணையரிடத்தன்றி, எவ்விடத் தும் எக்காலும் எல்லா ரிடத்தும் நிகழ்வதன்று. ஆதலாற் கோவைப் பனுவல்களிலும் இத் திருக்குற ளின்பத்துப் பாலிலும் களவுங் கற்பும் ஒரே தொடர்ச்சியாகக் கூறப்பட்டிருப்பது பற்றி, கற்பெல்லாங் களவொடு தொடங்கு வனவாகக் கருதற்க.

மாந்தன் பெறக்கூடிய பேறுகள் என்னும் வகையில் எல்லாப் பொருள் களையும் அறம்பொரு ளின்பம் வீடென நான்காக வகுத்து,

அவற்றை மீண்டும் உள்ளத்தொடு நெருக்க முண்மையும் இன்மையும் பற்றி அகம் (இன்பம்), புறம் (அறமும் பொருளும் வீடும்) என இரண்டாகப் பகுத்து, அவ் விரண்டையும் எவ்வேழு திணையாக விரித்து, அகத்திணைகளை மூவகைக் காதலாகப் பிரித்து அவற்றுள் ஒன்றாக ஐந்திணைகளைத் தொகுத்து, அவ் வைந்திணையைக் களவு கற்பென இருவகைக் கைகோட் படுத்தி அவற்றைப் பல்வேறு பகுதிகளாகவும் பதிற்றுக்கணக்கான கிளவித்தொகை களாகவும் நூற்றுக்கணக்கான துறைகளாகவும் பாகுபாடு செ–தும் கூறு படுத்தியும், மேலையர் திங்களையுஞ் செவ்வாயையும் அடையும் இக்காலத்தும் ஏனை மொழி யெதிலுமில்லாத பொருளிலக் கணத்தை, குமரிநாட்டுத் தலைக்கழகக் காலத்திலேயே தமிழ முனிவர் தமிழில் அறிவியல் முறையில் அமைத் திருக்கவும், "இது (காமவின்பம்) புணர்ச்சி பிரிவென விருவகைப்படும். ஏனை இருத்தல் இரங்கல் ஊடலென்பனவோவெனின், இவர் பொருட்பாகுபாட்டினை அறம்பொரு ளின்பமென வடநூல் வழக்குப்பற்றி யோதுதலான், அவ்வாறே யவற்றைப் பிரிவின்க ணடக்கினா ரென்க" என்று பரிமேலழகர் வரைந்திருப்பது, எத்துணைப் பொ–யும் புரட்டுமான செ–தியாகும்! புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஐந்தும் ஒன்றனுளொன்று அடங்காத தனித்தனி யுரிப்பொரு ளென்றும், அவற்றுள் ஊடலொழிந்த ஏனை நான்கும் இரு கைகோட்கும் பொதுவென்றும், அவர் அறிந்திலர் போலும்!

தமிழரின் இன்ப வாழ்க்கை தொன்றுதொட்டுக் களவு கற்பு என்றே பிரிக்கப்பட்டிருந்தமையை, திருக்குறட்கு ஐந்நூற்றாண்டுகட்கு முன்பே தோன்றிய தொல்காப்பியம் என்னும் சார்பிற் சார்புநூலில் உள்ள களவியல் கற்பியல் என்னும் ஈரியல்களைக் கண்டு தெளிக.

இக் களவியலை ஆசிரியர் ஏழதிகாரத்தாற் கூறத்தொடங்கி, முதற்கண் தகையணங்குறுத்தல் கூறுகின்றார்.

## அதி. 109 - தகையணங்குறுத்தல்

அதாவது, மருதநிலத்தினின்று குறிஞ்சிநிலத்திற்கு வேட்டையாடச் சென்ற இளவரசனான தலைமகன், தன் பக்கத் துணைவரினின்றும் நீங்கித் தனியனா– ஒரு மானைத் துரத்திச் சென்றவிடத்து அங்குச் சோலைவிளை யாட்டிற்குத் தன் தோழியர் கூட்டத்துடன் வந்து தற்செயலா– அவரினின்று நீங்கித் தனித்து நின்ற, அம் மலைநாட்டரசன் மகளாகிய கன்னிகையைக் கண்டு, அவள் கழிபெருங் கட்டழகு தன்னைத் துன்புறுத்தலைச் சொல்லுதல். இது கண்டவுடன் நிகழ்தலால், இத் துறை இப் பெயர்பெற்றது. இதிற் காட்சி,

ஐயம், தெளிதல் என்னும் மூன்றும் அடங்கும். குறிப்பறிதலுங் கருதப் பெறும். ஆதலால், இது ஆசிரியரே அமைத்துக்கொண்ட கலவைத் துறையாம்.

உலகிற் காமவின்பத்தை உயர்ந்த அளவில் நுகர்தற்கு, அவ்வவ் விடத்தில் ஒப்புயர்வற்ற பதவியும் மாபெருஞ் செல்வமுங் கழிபெருங் கட்டழகும் வேண்டியிருத்தலின், இலக்கண நூலார் கிழவன், வேள், மன்னன், கோ, வேந்தன் என்று ஏறுவரிசையில் ஐவகைப்பட்ட அரசவகுப்பாருள் ஒருவனையும் ஒருத்தியையுமே காதலனும் காதலியுமாகக் கொண்டிருக்கின்றனர். இது கிழவன் கிழத்தி, தலைவன் தலைவி, தலைமகன் தலைமகள் என்று காதலரைக் குறித்தலாலும்; ஊர, (குறும்பொறை) நாட, வெற்ப, துறைவ, தோன்றால் என்று தலைவனை விளித்தலாலும்; காதலர் தேரும் யானையும் குதிரையும் ஊர்வதாகச் சொல்லப்படுவதாலும் அறியப்படும். இங்ஙனம் உயர்ந்தோரையே காதலராகக் கொண்டாலும், உலகியற்கொத்த உண்மைத் தன்மையும் ஊட்டு வதற்குத் தாழ்ந்தோர்க்குரிய செ-திகளும் இடையிடை விரவிக் கூறப்படும். இது,

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்" **(தொல். அகத். 53)**

எனப்படும். இனி, காதல காதலியர் இருவரும் குடியுங் குணமும் உருவுந் திருவும் அன்பும் அறிவும் ஒத்திருப்பதும், இன்பச்சிறப்பிற்கும் நீடிப்பிற்கும் வேண்டப்படும். ஆயினும், காதலனுக்குப் பதினாறாட்டைப் பருவமும் காதலிக்குப் பன்னீராட்டைப் பருவமுமாக, அகவையில்மட்டும் ஒவ்வாமை கொள்வர். உருவுங் குணமும் அன்பு மொழிந்த மற்றவகைகளிலும் காதலன் உயர்ந்தவனா யிருக்கலாம். இவையும் புலனெறி வழக்கம்.

"ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை யின்றே" **(தொல். களவு. 2)**

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே." **(மேற்படி. மெ-ப். 25)**

**1081.** **அணங்குகொல் ஆ-மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு.**

(தலைமகளுருவு முதலியன முன் கண்டறிந்தவற்றினுஞ் சிறந்தமையின், அவளைத் தலைமகன் ஐயுற்றுக்கூறியது.)

**(இ-ரை.)** கனங்குழை - இங்குத் தோன்றும் கண்ணியம் மிக்க காதணி யுடையாள்; அணங்குகொல் - இச் சோலையில் வதியும் தெ-வ மகளோ; ஆ-மயில் கொல் - அன்றேல், இறைவன் ஆ-ந்து படைத்த ஒரு சிறப்பான மயில்வகையோ; மாதர் கொல் - அன்றேல், அழகிற் சிறந்த ஒரு மாந்தப் பெண் தானோ; என் நெஞ்சு மாலும் - என் மனம் இவளை இன்னளென்று அறியாது மயங்குகின்றது.

இலக்கண நூலார் புலனெறி வழக்கப்படி பல செ-திகளைக் கூறினா லும், அகப்பொருளியலிற் கூறிய காதலர் வாழ்வு உண்மையானதும் உலகியற் கொத்ததுமே யாகும். ஒருகாலத்து ஓரிடத்து ஓரிணையர்மாட்டு நிகழ்ந்த உயரிய வாழ்க்கையை அளவைப்படுத்தியதேயன்றி வேறன்று. ஆதலால், "பிணிமூப் பிறப்புகளின்றி எஞ்ஞான்று மொருதன்மையரா- ... புணர்ந்து வருவது" என்று பரிமேலழகர் கூறியிருப்பது பொருந்தாது. சேர சோழ பாண்டியர் போலும் ஓர் அரசக் குடும்பத்திற் பிறந்து நாகரிகமாகவும் மேனத்தாகவும் வளர்ந்து, இயற்கையழகொடு செயற்கையழகும் நிரம்பிப் பொன்மை கலந்த வெண்ணிறம் மின்னும் ஒரு கன்னிகையை, இயற்கைவளம் பொலிந்த ஒரு கண்கவர் கவின் காவில் மகிழ்ச்சி நிலையிற் கண்ட போது, 'அணங்கு கொல் ஆ-மயில் கொல்லோ' என்று ஓர் இளவரசனும் வியந்தது என் வியப்பாம்!

அணங்குதல் வருத்துதல். அணங்கு வருத்துந் தெ-வப்பெண். குறிஞ்சி நிலத்தில் நிற்றலும் அழகால் தன்னை வருத்துதலும்பற்றி 'அணங்கு கொல்' என்றும், சாயலும் சோலையில் நிற்றலும்பற்றி 'ஆ-மயில்கொல்' என்றும்,

**"வண்டே இழையே வள்ளி பூவே**
**கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்**
**றன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ**
**நின்றவை களையுங் கருவி யென்ப"** **(தொல். களவு. 5)**

என்றவாறு. வண்டு மூசுதல், அணிகல னணிந்திருத்தல், தோளில் தொ-யிற் கொடி யெழுதப்பட்டிருத்தல், மாலை வாடுதல், கண்ணிமைத்தல், கால் நிலந் தோ-தல், ஆடையசைதல் முதலியவற்றால் 'மாதர்கொல்' என்றும், கூறினான். 'கொல்' மூவிடத்தும் ஐயம். 'ஓ' அசைநிலை. 'கணங்குழை' யென்பது காலிங்கர் கொண்ட பாடம். 'கனங்குழை' அன்மொழித்தொகை. "கணங்குழை யென்று பாடமோதிப் பலவா-த் திரண்ட குழையென் றுரைப்பாரு முளர்" என்றார் பரிமேலழகர். பாம்படம், தண்டொட்டி, அரிசித்தழுப்பு, பூச்சிக்கூடு ஆகிய பாண்டிநாட்டுக் காதணிகளைக் குறிப்பின், அப் பாடமும் பொருந்துவதே. மாது - மாதர். 'அர்' மேலீறு. இனி வருமிடத்தும் இச் சொற்கு இங்ஙனமே உரைக்க.

**1082. நோக்கினா ணோக்கெதிர் நோக்குத றாக்கணங்கு**
**தானைக்கொண் டன்ன துடைத்து.**

*(மாந்தப் பெண்ணாதல் தெளிந்த தலைமகன்*
*அவள் நோக்கினாலான வருத்தங் கூறியது.)*

**(இ-ரை.)** நோக்கினாள் நோக்கு எதிர் நோக்குதல் - இத்தகைய அழகிய தோற்ற முடையாள் என் நோக்கிற்கு எதிர்நோக்குதல்; தாக்கு அணங்கு தானைக் கொண்ட அன்னது உடைத்து - தானே தாக்கி வருத்தும் ஒரு தெ-வப் பெண், தனக்குத் துணையாக ஒரு படையையுஞ் சேர்த்துக் கொண்டாற் போலும் தன்மையை யுடையதாம்.

அழகால் தன்னை வருத்துதல் மேலும், காதல் தோன்றாத எதிர்நோக்கால் தன்னை வருத்துதல் கூறியவாறு. தாக்கணங்கு சூரர மகள். 'தானைக் கொண்டு' எதுகை நோக்கி வலிமிக்கது.

**1083. பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்**
**பெண்டகையாற் பேரமர்க் கட்டு.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** கூற்று என்பதனைப் பண்டு அறியேன் - காலன் என்று சொல் லப்படுவதை இதற்கு முன்பு கேட்டறிந்ததல்லது கண்டறியேன்; இனி அறிந் தேன் - இப்போது கண்டறிந்தேன்; பெண் தகையால் பேர் அமர்க்கட்டு - அது பெண்டன்மையுடன் பெரிய அமர்த்த கண்களை யுடையது.

பெண்டன்மை செயல்களாற் குறிப்பாயறியப்பட்ட அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன. அமர்த்தல் போர் செ-தல். 'ஆல்' உடனிகழ்ச்சிப் பொருளது. அழகும் காதல் தோன்றாத எதிர்நோக்கும் அளவிறந்து துன்புறுத்து வதால், கூற்றாக்கிக் கூறினான்.

**1084. கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்**
**பேதைக் கமர்த்தன கண்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** பெண்தகைப் பேதைக்குக் கண் - பெண்டன்மையுடைய இப் பேதைமையாளுக்குள்ள கண்கள்; கண்டார் உயிர் உண்ணும் தோற்றத்தான் அமர்த்தன - தம்மைக் கண்டவரைக் கொல்லும் தோற்றத்துடன் கூடிக் கொடி யனவா யிருந்தன.

இனி அமர்த்தல் மாறுபடுதல் என்றுகொண்டு கண்கள் பெண்டன்மை யொடும் பேதைமையொடும் பொருந்தாது மாறுபட்டிருந்தன எனினுமாம். 'கண்', பால்பகா அஃறிணைப்பெயர். பேதை யென்னுஞ்சொல் இங்குப் பருவங் குறியாது இளமை குறித்து நின்றது.

**1085. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவர**
**னோக்கமிம் மூன்று முடைத்து.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** கூற்றமோ - என்னைக் கொல்வதுபோல வருத்துவதாற் காலனோ; பிணையோ - இடையிடை மருண்டு பார்ப்பதாற் பெண்மானோ; கண்ணோ - இவ் விருதன்மையும் இல்லாது சில வேளைகளி லிருப்பதால் இயல்பான மாந்தக்கண்தானோ; மடவரல் நோக்கம் இம் மூன்றும் உடைத்து - இப் பெண்ணின் பார்வை இம் மூவகைத் தன்மையும் உடையதாயிருக்கின்றது.

மேற்கூறிய கொல்லுந் தன்மையோடு வேறிரு தன்மைகளும் உடைமை இங்குக் கூறப்பட்டது. 'கூற்றம்', 'கண்', 'பிணை' என்னும் மூன்றும் ஆகு பொருளன. 'மடவரல்' ஆகுபெயர். இதில் வந்துள்ள அணி ஐயவுவமை.

**1086. கொடும்புருவங் கோடா மறைப்பி னடுங்கஞர்**
**செ-யல மன்னிவள் கண்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** கொடும்புருவம் கோடா மறைப்பின் - அருகிலுள்ள வளைந்த புருவங்கள் நேராக விருந்து மறைக்குமாயின்; இவள் கண் நடுங்கு அஞர் செ-யல - இவள் கண்கள் நான் நடுங்குதற்கேதுவான துன்பத்தைச் செ-ய மாட்டா.

இயல்பாகக் கொடிய புருவங்கள் தம் நேர்மையில்லாத் தன்மையால், தமக்கருகிலுள்ள கண்கள் எனக்குக் கடுந்துன்பஞ் செ-வதைத் தடுக்காது போயின, என்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைப் பொருளது. 'புருவம்', 'கண்' பால்பகா வஃறிணைப் பெயர்கள்.

**1087. கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்**
**படாஅ முலைமேற் றுகில்.**

*(அவள் முலைகளினாலான வருத்தங் கூறியது.)*

**(இ-ரை.)** மாதர் படாமுலைமேல் துகில் - இப் பெண்ணின் சரியாத முலைகளின்மேல் அமைந்த கச்சு; கடாக் களிற்றின்மேற் கண்படாம் - மதயானையின்மேல் இரு மத்தகங்களையும் மறைக்குமாறு போர்த்த முகபடாத்தையொக்கும்.

முலைக்கச்சு மதயானையின் முகபடாத்தை யொப்பது, தோற்றப் பொலிவும் அஞ்சத்தக்கதும் எல்லாரும் தொடமுடியாததுமான இடத்திலிருப்பதும் பற்றியாம். மாந்தருள் பாகன் தவிர வேறொருவரும் முகபடாத்தைத் தொடமுடியாதது போல, ஆடவருட் காதலன் தவிர வேறொருவரும் முலைக் கச்சைத் தொடமுடியாமை நோக்குக. இரு முலைபோல் இரு மத்தகமிருப்பதும் உவமைக்குத் துணையாம். ஆடவர் கைபடாக் கன்னிமுலை யாதலின், அதன் விடைப்புங் கட்டமைப்புந் தோன்றப் 'படாஅமுலை' என்றார். 'கடாஅ', 'படாஅ' இசைநிறை யளபெடைகள். மாதர் என்னுஞ் சொற்கு முன்னுரைத்தாங் குரைக்க (குறள். 1081). முலைக்கச்சை நாணுடை மகளிர் மார்பை மறைத்த துகில் என்று, மார்யாப்புச் சேலையாகப் பரிமேலழகர் கூறியிருப்பது பொருந்தாது.

***1088.*** **ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு**
**ணண்ணாரு முட்குமென் பீடு.**

*(அவள் நெற்றியினாலான வருத்தங் கூறியது.)*

**(இ-ரை.)** ஞாட்பினுள் நண்ணாரும் உட்கும் என் பீடு - போர்க்களத் திற்கு வந்து என் வலிமையை அறியாத பகைவரும் வந்தறிந்தார்வா-க் கேட்டு அஞ்சுதற்கேதுவான என் பெருவலிமை; ஒள்நுதற்கு ஓ உடைந்ததே - இப் பெண்ணின் ஒளிபொருந்திய சிறு நெற்றியொன்றிற்கே ஐயோ! அழிந்து விட்டதே!

பெண் என்பது அதிகாரத்தால் வந்தது. பீடு என்பது பெருமை, பேர் முதலியவற்றையுந் தழுவும். 'ஓ' கழிவிரக்கம்பற்றி வந்தது. 'ஓஒ' இசைநிறை யளபெடை. உம்மை எச்சம். ஏகாரம் தேற்றம். "பெருமையும் உரனும் ஆடூஉ மேன" (தொல். களவு. 7) என்று கூறிக்கொள்ளும் பெருமை யெல்லாம் பெண் ணிடத்துச் செல்லாதென்று, காமத்தின் இயல்பு கூறியவாறு.

**"கோம்பிக் கொதுங்கிமே யாமஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும்**
**பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கப் பணைமுலைக்கே**
**தேம்பற் றுடியிடை மான்மட நோக்கிதில் லைச்சிவன்றா**
**ளாம்பொற் றடமலர் சூடுமென் னாற்ற லகற்றியதே"** **(திருக்கோ. 21)**

என்னுந் திருக்கோவைச் செ-யுள் ஈங்குக் கவனிக்கத்தக்கதாம்.

**1089. பிணையேர் மடநோக்கு நாணு முடையாட்**
**கணியெவனோ வேதில தந்து.**

*(அணிநலத்தினாலான வருத்தங் கூறியது.)*

**(இ-ரை.)** பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு - புறத்துப் பெண்மானொத்த பார்வையழகையும் அகத்து நாணழகையும் உடைய இவளுக்கு; ஏதில தந்து அணி எவனோ - இயற்கையும் தற்கிழமைச் சார்பு மான இவ் வணிகளே அமைந்திருக்க, செயற்கையும் பிறிதின்கிழமைச் சார்பு மான பிற அணிகளைக் கொண்டுவந்து அணிதல் எதற்காம்.

மடநோக்கு அழகிய பார்வை. இயற்கையழகை மறைத்தலும் இவளுக்கு வீண் சுமையாதலும் எனக்குத் துன்பந் தருதலுமன்றி, இப் புறவணிகளால் ஒரு பயனுமில்லை யென்பது தலைமகன் கருத்து.

**1090. உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போற்**
**கண்டார் மகிழ்செ—த லின்று.**

*(தலைமகள் குறிப்பறிதலுற்றான் சொல்லியது.)*

**(இ-ரை.)** அடுநறா - கா-ச்சப்படும் இனிய மது; உண்டார்கண் அல்லது - தன்னைப் பருகினவருக்கன்றி; காமம்போல் கண்டார் மகிழ் செ-தல் இன்று - காதலிக்கப்பட்ட பெண்போலத் தன்னைப் பார்த்தவருக்கும் மகிழ்ச்சி தருத லில்லை.

அடுநறா, சுவையும் மணமும் மிக்கனவும் உடம்பிற்கு உரஞ்செ-வனவும் சிறிது மயக்கந் தருவனவுமாக, கூலங்களினின்றும் கனிகளினின் றும் காயச்சரக்குகள் சேர்த்துக் கா-ச்சி யிறக்கப்படும் மட்டுவகைகள். மகிழ் என்பது, களி என்னுஞ் சொற்போல இன்பத்தையும் மயக்கத்தையும் உணர்த் தும். காமம் என்றது இங்கு அதை நுகர்தற்கு இடமானவரை. அவர் ஆட வர்க்குப் பெண்டிரும் பெண்டிர்க்கு ஆடவருமாவர். கண்டார்கண் என்பதிற் கண்ணென்னும் இடப்பொருளுருபு தொக்கது. இவள் காதற் குறிப்பை இன் னும் அறியாமையால் கண்டாரின்பமே யன்றி உண்டாரின்பம் யான் பெற் றிலேன் என்பது குறிப்பெச்சம்.

## அதி. 110 - குறிப்பறிதல்

*அதாவது, தலைமகன் தலைமகளின் காதற்குறிப்பை அவள் பார்வையி னின்றும் செயல்களினின்றும் உ-த்துணர்தல். இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழ்வதும் நிகழக்கூடியதும் இஃதொன்றே யாயினும், பொருளொப்புமை பற்றியும் சுருக்கம்பற்றியும், பாங்கியிற் கூட்டத்திற்கு*

*முன் தலைமகன் தோழி குறிப்பினையறிதலும், அவள் தலைமக்களிருவர் குறிப்பினையு மறிதலும், இங்குச் சேர்த்துக் கூறப்பட்டுள என அறிக.*

*தகையணங்குற்ற தலைமகன் தலைமகளைக் கூடுவதற்கு அவள் குறிப் பறிதல் இன்றியமையாதாதலின், இது தகையணங்குறுத்தலின் பின்னும் இயற் கைப் புணர்ச்சிக்கு முன்னும் வைக்கப்பட்டது.*

***1091.*** **இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு**
**நோ–நோக் கொன்றந்நோ– மருந்து.**

*(தலைமகன் தலைமகள் காதற்குறிப்பை அவள் நோக்கினால் அறிந்தது.)*

**(இ–ரை.)** இவள் உண்கண் இருநோக்கு உள்ளது - இவளுடைய மையூட்டிய கண்கள் என்மீது இருவகையான நோக்குகள் கொண்டுள்ளன; ஒரு நோக்கு நோ– நோக்கு ஒன்று அந் நோ– மருந்து – அவற்றுள் ஒன்று என்னிடத்து நோயைச் செ–வது, இன்னொன்று அந் நோ–க்கு மருந்தாவது.

அழகிற்காகவும் குளிர்ச்சிக்காகவும் தமிழ்ப்பெண்டிர் கண்ணிற்கு மையிடும் பண்டை வழக்குப்பற்றி 'உண்கண்' என்றார். நோ–நோக்கு தலை மகன்மேற் காதற்குறிப்பை வெளிப்படுத்தாத பொதுநோக்கு; மருந்து நோக்கு அதை வெளிப்படுத்தும் சிறப்பு. இதுவரை ஒருதலைக் காதலாகிய கைக்கிளை யாயிருந்த காமநிலை, இன்று இருதலைக் காதலாகிய ஐந்திணையாகப் பெயரத்தொடங்கியமை, இதனாற் கூறப்பட்டது. கண்டே மகிழும் காதலன் இனி உண்டு மகிழும் வா–ப்பையுங் கண்டான்.

***1092.*** **கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்**
**செம்பாக மன்று பெரிது.**

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** கண் களவு கொள்ளும் சிறுநோக்கம் – இவள் கண்கள் எனக்குத் தெரியாமல் என்னை மறைவாகப் பார்க்கும் இடுகிய பார்வை; காமத்தில் செம் பாகம் அன்று பெரிது - மெ–யுறு புணர்ச்சியில் சரிபாதி யன்று, அதற்கும் மேம்பட்டதாம்.

தான் நோக்குங்கால் கவிழ்ந்து நிலம் நோக்கியும் தான் நோக்காக்கால் தன்னை நேர் நோக்கியும் வருதலாற் 'களவுகொள்ளும்' என்றும், தன்னை நோக்குவது இடுகியும் நேரங் குறுகியுமிருத்தலால் 'சிறுநோக்கம்' என்றும், அச் சிறுநோக்கம் தன்மேற் காதலை யுணர்த்துதலால் இனிப் புணர்தலுறுதிபற்றிச் 'செம்பாக மன்று பெரிது' என்றுங் கூறினான்.

**1093. நோக்கினா ணோக்கி யிறைஞ்சினா ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர்.**

*(தலைமகள் காதலை நோக்கினாலும் நாணினாலும் அறிந்தது.)*

**(இ-ரை.)** நோக்கினாள் - நான் நோக்காதபோது அவள் என்னை அன்புடன் நோக்கினாள்; நோக்கி இறைஞ்சினாள் - அங்ஙனம் நோக்கினவள் உடனே ஒன்றைக் கருதி நாணங்கொண்டு என்னை வணங்குவாள் போலத் தலை குனிந்தாள்; அஃது அவள் யாப்பினுள் அட்டிய நீர் - அச் செயல் எம் மிருவேமையும் பிணிக்கும் காதற்பயிர் வளர அவள் வார்த்த நீராகும்.

யாக்கும் அன்பை யாப்பென்றார். யாப்பைப் பயிராக வுருவகியாமை யின் இது ஒருமருங் குருவகம்.

**1094. யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற்
தானோக்கி மெல்ல நகும்.**

*(தலைமகள் காதலை நாணினாலும் மகிழ்ச்சியினாலும் அறிந்தது.)*

**(இ-ரை.)** யான் நோக்கும் காலை நிலன் நோக்கும் - நான் அவளை நோக்கும்போது அவள் எதிர்நோக்காது நாணித் தலைகுனிந்து நிலத்தை நோக்குவாள்; நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும் - அதைக் கண்டு நான் அவளை நோக்காதபோது அவள் என்னை நோக்கித் தனக்குள் மகிழ்ந்து புன்னகை செ-வாள்.

மென்னகையாற் புணர்ச்சி விருப்பம் வெளியாயிற்று.

**1095. குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** குறிக்கொண்டு நோக்காமை அல்லால் - என்னை முக நோக்கி உற்றுப்பார்க்காத தன்மையேயன்றி; ஒரு கண் சிறக்கணித்தாள் போல நகும் - ஒரு கண்ணைச் சுருக்கிப் பார்த்தாற் போல என்னை நோக்கிப் பின் தனக் குள்ளே மகிழ்வாள்.

சிறங்கணித்தாள் என்பது எதுகைநோக்கி வலித்தது. சிறங்கணித்தல் வெளிப்படையா- நிகழாமையாற் 'போல' என்றான். நோக்கி என்பது சொல் லெச்சம். இனி இவளை யடைதல் உறுதியென்பது குறிப்பெச்சம்.

இதுவரை கூறப்பட்டது தலைமகன் தலைமகள் குறிப்பினை யறிதல். இனிக் கூறப்படுவன தலைமகன் தோழி குறிப்பினை யறிதலும் தோழி அவ் விருவர் குறிப்பினையு மறிதலுமாம்.

**1096. உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர்சொ**
**லொல்லை யுணரப் படும்.**

*(தோழி சேட்படுத்தியவழி அவள் குறிப்பறிந்த தலைவன் தன்னுள்ளே சொல்லியது.)*

**(இ-ரை.)** உறாதவர் போல் சொலினும் - புறத்தில் அயலார்போல் அன்பில்லாத சொற்களைச் சொன்னாராயினும்; செறார் சொல் ஒல்லை உணரப் படும் - அகத்திற் பகையில்லாதவர் சொல் பின் பயன்படுதல் குறை வேண்டிய வரால் விரைந்தறியப்படும்.

சேட்படுத்தலாவது, தலைமகன் தலைமகள் ஆகிய இருவரின் காதல் நிலைமைகளையும் முற்றுந் தெளிவாக அறிதற்பொருட்டும், தலைமகளை அருமைப்படுத்தற் பொருட்டும், தோழி தலைமகனை நெருங்கவொட்டாது சில நாள் நீக்கி வைத்தல். அங்ஙனம் சேட்படுக்கும் போது, எம் உறவினர் கடுங்கண் மறவர் என்றும், இவ்விடம் காவன் மிகுதி யுடைமையால் நீர் வரத் தகாது என்றும், அன்பிலாதவள் போலக் கடுஞ்சொற்களைச் சொல்லுதல் மரபு. ஆயினும், தலைமகன் அறிவுடையனாதலின், அத்தகைய சொற்களால் தள ராது, தன் குறை முடிக்கக் கருதியே சேட்படுக்கின்றமை குறிப்பாலறிந்து, உல கியல்மேல் வைத்துக் கூறியதாகும் இக் குறட் கூற்று. இது வருகின்ற குறட்கும் ஒக்கும். 'செறார்' எனவே அன்புடைமை பெறப்படும். 'உறாஅ(தவர்)', 'செறா அர்' என்பன இசைநிறை யளபெடைகள். 'போல்' என்பது உண்மையில் உறாதவ ரன்மையைக் காட்டும். உம்மை எதிர்மறை.

**1097. செறாஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னோக்கு**
**முறாஅர்போன் றுற்றார் குறிப்பு.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** செறாச் சிறுசொல்லும் - உண்மையாக வெறுப்புக் கொள்ளாத போலிக் கடுஞ்சொல்லும்; செற்றார்போல் நோக்கும் - அகத்திற் பகையாதிருந்தே புறத்திற் பகைத்தார்போற் பார்க்குஞ் சினப்பார்வையும்; உறார் போன்று உற்றார் குறிப்பு - அயலார்போல் நடித்து அன்பராயிருப்பவரிடம் ஒரு கருத்துப்பற்றி நிகழ்வனவாம்.

இவை இயல்பல்லாது உள்ளத்துட் குறித்த ஒரு பயன்நோக்கிச் செ-கின்றன வாதலின், இவற்றாற் கலங்க வேண்டுவதின்று என்பதாம். 'குறிப்பு' ஆகுபெயர். 'செறாஅ'. 'உறாஅர்' இசைநிறை யளபெடைகள்.

## *1098.* அசையியற் குண்டாண்டோ ரேஎர்யா னோக்கப் பசையினள் பைய நகும்.

*(தன்னை நோக்கி மகிழ்ந்த தலைமகளைக் கண்டு தலைமகன் கூறியது.)*

**(இ–ரை.)** யான் நோக்கப் பசையினள் பைய நகும் – தோழி என்னைச் சேட்படுத்துரைக்குஞ் சொற்காற்றாது யான் இரங்கி நோக்கிய விடத்து, அஃதறிந்து அன்பால் நெகிழ்ந்து மெல்ல நகுவாள்; அசையியற்கு ஆண்டு ஓர் ஏர் உண்டு – ஆதலால், அசையும் மெல்லியலாளாகிய என் காதலிக்கு அந் நகையின்கண் ஓர் அழகிய குறிப்புளது.

அக் குறிப்பால் என் வேணவா நிறைவேறும் என்று மகிழ்ந்தான் என்ப தாம். 'அசையியல்' அன்மொழித்தொகை. 'ஏஎர்' இசைநிறை யளபெடை. 'ஏர்' ஆகுபெயர்.

## *1099.* ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல் காதலார் கண்ணே உள.

*(மதியுடம்பட்ட தோழி தன்னுள்ளே சொல்லியது.)*

**(இ–ரை.)** ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல் – முன்னறியாதார் போல ஒருவரையொருவர் பொதுநோக்கால் நோக்குதல்; காதலார் கண்ணே உள – இவ் விரு காதலரிடத்தேயே உள்ளன.

பொதுநோக்கு யாவரையும் ஒருதன்மைத்தா- நோக்கும் நோக்கு. நோக்குவார் பன்மையாலும் நோக்க நுண்வேறுபாட்டாலும் நோக்கும் பல வாயிற்று. 'நோக்குதல்' பால்பகா வஃறிணைப் பெயர். இருவரும் உள்ளத்துள் மகிழ்தலைத் தன் நுண்மதியாற் கண்டாளாதலின் 'காதலார்' என்றும். அதை வெளிப்படையா-க் காட்டாமையால் 'ஏதிலார் போல்' என்றும் கூறினாள். ஏகாரம் பிரிநிலை.

**"ஏனல் காவல் இவளும் அல்லள்**
**மான்வழி வருகுவன் இவனும் அல்லன்**
**நரந்தங் கண்ணி யிவனோ டிவளிடைக்**
**கரந்த வுள்ளமொடு கருதியது பிறிதே**
**நம்முன் நாணுவர் போலத் தம்முள்**
**மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல**
**உள்ளத் துள்ளே மகிழ்ப**
**சொல்லு மாடுவ கண்ணி னானே."**

**(இறை. கள, 8ஆம் நூற்பாவுரை)**

***1100.* கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வா—ச்சொற்க ளென்ன பயனு மில.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** கண்ணொடு கண்இணை நோக்கு ஒக்கின் - காதலர் இருவருள் ஒருவர் கண்களோடு மற்றொருவர் கண்கள் சிறப்புப் பார்வையால் ஒன்று படின்; வா-ச்சொற்கள் என்ன பயனும் இல - அவர் வா-மைபோற் சொல்லுஞ் சொற்கள் ஒரு பொருளும் உடையன வாகா.

நோக்கொத்தல் காதல் நோக்கின வாதல். வா-ச்சொற்கள் மனத்தொடு பொருந்தாது வாயளவில் தோன்றுஞ் சொற்கள். இருவரிடத்துச் சிறப்பாக நிகழ்ந்த நிகழ்ச்சியைப் பொதுப்படுத்தி உலகின்மேல் வைத்துக் கூறியவாறு. சிறப்பு நிகழ்ச்சியாவது, காதலன் வேட்டையாடுதல்மேலும் காதலி புனங்காவல் மேலும் கருத்தூன்றி யிருந்ததாகச் சொன்ன செ-தி. அவர் சொன்னவை பொ- யாதலின் பொருளற்றவை யென்பதாம். இவை புணர்தல் ஏது (நிமித்தம்).

மற்றோருரை:

கண்ணொடு கண் இணை நோக்கு ஒக்கின் - ஓர் இளைஞனும் ஓர் இளைஞையுமாகிய இருவர் கண்ணிணைகளும் பார்வையாலொன்றிக் காத லைச் செ-யுமாயின்; வா-ச்சொற்கள் என்ன பயனும் இல - அதன்மேற்பட்டு வாயினால் சொல்லுஞ் சொற்கள் சிறப்பாக ஒரு பயனும் படாதவையாதலின், முற்றுந் தேவையற்றனவாம்.

காதற்குக் கண்ணோக் கொன்றே போதும் என்றவாறு. வா-ச்சொற்கள் என்பது எழுத்துச் சொற்களையும் உளப்படுத்தும்.

## அதி. 111 - புணர்ச்சி மகிழ்தல்

*அதாவது, தலைமகள் குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் கழிபெரு மகிழ்ச்சியுற்று அப் புணர்ச்சி யின்பத்தினை யெடுத்துக் கூறல். அதிகார முறை மையும் இதனால் விளங்கும்.*

*இஃது இயற்கைப் புணர்ச்சி. கொடுப்பாரும் அடுப்பாருமின்றியும் முன் னறிவும் முயற்சியுமின்றியும், காதலரிருவரும் தாமே தமியரா- எதிர்ப்பட்டு இயற்கையாகப் புணரும் புணர்ச்சியாதலின், இப் பெயர்பெற்றது. இது தெ- வத்தா லேற்படுவதால் தெ-வப் புணர்ச்சியென்றும், காதலால் நிகழ்வதாற் காமப் புணர்ச்சி யென்றும், முதன் முதலாகப் புணர்தலால் முன்னுறு புணர்ச்சி யென்றும் பெயர்பெறும்.*

*நாகரிகம் முதிர்ந்த நிலையில் நிகழ்ந்த இப் பேரின்பக் களவொழுக்கத்தை, பிறழவுணர்ந்த புல்லறிவாளரும், காக்கை வெளிதென்னுங் காட்டிக் கொடுக்கியரும், கட்டுப்பாடாகத் தமிழைப் பழிக்குங் கடும் பகைவரும். மேனோக்காகத் தமிழைக் கற்ற மேலையறிஞரும், இல்லற வாழ்க்கை யேற் படாத தொன்மைக் காலத்தில் அநாகரிக மாந்தர் ஆடுமாடுகள்போற் கண்ட கண்ட விடத்திற் காமத்தாற் புணர்ந்து திரிந்ததாகக் கருதுவர். அரையாடை யுமின்றி அடவியில் தன்னந்தனியா-த் திரிபவன், கூர் வேலிளைஞர் ஆயிரவர் புடைசூழத் தேரூர்ந்து செல்வனோ? தன் னுணவிற்குந் தானே இயற்கை விளைவைத் தேடித் திரிபவள், நற்றாயொடு செவிலித்தாயும் பேண ஆயிழைத்தோழியர் ஆயிரவரொடு கூடி வாழ்வளோ? கண்ணிற் கினிய வண்ணமும் வடிவுமின்றிக் கருங்காலிக் கட்டைபோல் தோன்றுங் காட்டுப் பெண்ணையுங் கண்டவன். அணங்கு கொல்! ஆ-மயில் கொல்! என்று வியப்பனோ? களவொழுக்கம் கற்பாக மாறுவதும், கற்பு வாழ்க்கையிற் கணவர் காவலுந் தூதும் போரும் வாணிகமும்பற்றி, காலினுங் கலத்தினும் சேணெடுந் தேயமும் செல்லுதல் அநாகரிகக் காலத்திலுண்டோ? இனி அகப்பொருள்பற்றிய தனித்துறைச் செ-யுள்களும் கோவைப் பனுவல் களும், காதல் வாழ்க்கையைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் அறிவியல் முறையிலும் அழகிய பாவடிவிலுங் கூறுவதும், அநாகரிக நிலையைக் காட்டுமோ? இத்தகைய மடமைக்கருத்துகள் இக்காலத்தும் எழுந்து பரவற்கு, இற்றைத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியரே முதற் கரணியம் என அறிக.*

*இனி, தமிழ்க் களவிற்கும் ஆரியக் காந்தருவத்திற்கு முள்ள மறைவென் னும் ஒருபுடை யொப்புமைபற்றி,*

**"அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக் கூட்டங் காணுங் காலை**
**மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள்**
**துறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே"** **(களவு.1)**

*என்று தொல்காப்பியர் கூறியுள்ளது கொண்டு, தமிழ்நூற் காதல் முறைகளை ஆரியநூல் மணமுறைகளொடு தொடர்புபடுத்தி, களவொழுக்கமுங் காந்தருவமும் ஒன்றென்று கூறுவர் உரையாசிரியன்மார். கந்தருவரை வானவர் வகையினரென்று வடநூல்கள் குறிப்பதனாலும்,*

**"கந்தருவர்க்குக் கற்பின்றியமையவும் பெறும். ஈண்டுக்**
**கற்பின்றிக் களவே யமையாது"** **(தொல்.களவு. 1, உரை)**

*என்று நச்சினார்க்கினியர் கூறியிருப்பதனாலும், காந்தருவ வொழுக்கம் நெறிப் படாததும் காமவின்ப மொன்றையே கருதியதும் மக்க ளைந்திணைக் கள வொழுக்கத்தினின்றும் வேறுபட்டது மாகுமென்று துணியப்படும். வெம்பாவி யிலும் (mist) மஞ்சிலும் தோன்றும் நகர நிழலை (mirage) கந்தருப்ப நகரம் என்பதனாலும், காந்தருவ வொழுக்கத்தின் கருதியற்றன்மை அறியப்படும்.*

**1101. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு**
**மொண்டொடி கண்ணே யுள.**

*(இயற்கைப் புணர்ச்சி யிறுதிக்கண் தலைமகன் சொல்லியது.)*

**(இ-ரை.)** கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் - கண்ணாற் கண்டும் காதாற் கேட்டும் நாவாற் சுவைத்தும் மூக்கால் முகர்ந்தும் உடம்பால் தீண்டியும் நுகரப்படும் ஐம்புலவின்பங்களும், ஒண்டொடி கண்ணே உள - இவ் வொளிபொருந்திய வளையலை யணிந்தாளிடத்தேயே ஒருங் கமைந்திருக்கின்றன.

வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு பொருளால் நுகரப்படும் ஐம்புல வின்பமும், ஒரே காலத்து இவளிடம் நுகரப்பட்டன என்று பாராட்டிக் கூறியவாறு. இது சின்றின்பத்திற் பெண்ணின்ப மொழிந்த பிறவின்பங்களு முண்டே யென்று சொல்வாரை யுட்கொண்டு கூறியதாகும். கேட்ட லின்பம் இன்குரற் பேச்சால் மட்டுமன்றிப் பாட்டாலும் நிகழ்வதாம். உம்மை முற்றும்மை. 'ஒண் டொடி' அன்மொழித் தொகை. ஏகாரம் பிரிநிலை. "வடநூலார் இடர்க்கர்ப் பொருளவாகச் சொல்லிய புணர்ச்சித் தொழில் களும் ஈண்டடக்கிக் கூறப் பட்டன" என்று பரிமேலழகர் ஆரிய அநாகரிகத்தை ஒப்புக்கொண்டிருப்பது பாராட்டத்தக்கதே.

**1102. பிணிக்கு மருந்து பிறம னணியிழை**
**தன்னோ-க்குத் தானே மருந்து.**

*(தலைமகன் இடந்தலைப்பாட்டின்கட் சொல்லியது.)*

**(இ-ரை.)** பிணிக்கு மருந்து மன் பிற - ஊதை (வாதம்) முதலிய நோ- கட்கு மருந்தாவன, பெரும்பாலும் அவற்றிற்கு மாறான இயல்புள்ள பிற பொருள்களாம்; அணியிழை தன் நோ-க்கு மருந்து தானே - ஆனால் இவ் வழகிய கலன்களை யணிந்தவளோ, தன்னாலுண்டான நோ-க்கு மருந்து தானே யாயினாள். இஃதொரு வியப்பே!

சேடா என்னும் சலங்கைப்பூரான் கடித்தால் அதன் விளைவைத் தடுக்க, அப் பூரானையே கொன்று உலர்த்தித் தூளாக்கி வெற்றிலையில் மடித்துண்ணக் கொடுப்பர். இங்ஙனம் சில நோ-கட்கு நோயுண்டாக்கிய பொருள்களையே மருந்தாகக் கொடுப்பது வழக்கம். ஆதலால், 'மன்' பெரும்பான்மை குறித்த இடைச்சொல்லாகும். 'அணியிழை' அன்மொழித் தொகை. ஏகாரம் பிரிநிலை. இடந்தலைப்பாடாவது, இயற்கைப் புணர்ச்சிக்கு மறுநாளும் தலைமகன் தானே சென்று முன் கூடிய இடத்தில் தலைமகளைக் கூடியது.

### *1103.* தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
### றாமரைக் கண்ணா னுலகு.

*(நிலையான பேரின்பத்தைப் பெறற்குரிய நீ இச் சிற்றின்பத்திற்கு*
*இங்ஙனம் நைவது தகாதென்று கழறிய பாங்கற்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** தாமரைக் கண்ணான் உலகு - நீ மிகச் சிறந்ததாக வுயர்த்திக் கூறும் செங்கண்மாலின் வீட்டுலகம்; தாம் வீழ்வார் மெல்தோள் துயிலின் இனிதுகொல் - ஐம்புலவின்பம் நுகர்வார்க்குத் தாம் விரும்பும் மகளிர் தோளிடத்துத் து-க்கும் துயில்போல இன்பஞ் சிறந்ததோ?

இஃது ஒரு பெண்ணின்பப் பித்தன் கூற்று;

**"தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்**
**இகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ**
**நகலின் இனிதாயிற் காண்பா மகல்வானத்**
**தும்ப ருறைவார் பதி"** **(நாலடி. 137)**

என்னும் போங்கில் அமைந்தது. ஐம்புல வின்பம் நுகர்வார் என்னும் பெயர் "கண்டுகேட் டுண்டுயிர்த்து" என்னுங் குறளினின்றமைக்கப்பட்டது. தாமரைக் கண்ணா னுலகை "இந்திரனது சுவர்க்கம்" என்பர் மணக்குடவ பரிப்பெரு மாளர். இந்திரனுக்குத் தாமரைக்கண்ணான் என்னும் பெயரின்மையானும்; திருவள்ளுவர் சிவனுந் திருமாலும் ஒன்றென்னும் கடவுண் மதத்தாராதலின், சிவனடியார்க்கும் திருமாலடியார்க்கும் பொதுவாக ஒரே வீட்டுலகங் கொண்டா ராதலானும்; பெண்ணின்பச் சிறப்பை உயர்வுநவிற்சியாகக் கூறுதற்கு வீட்டுலகத் தின்பத்தோடுறழ்வதே யேற்குமாதலானும்; அவ் வுரை பொருந் தாதென்க. இனி, இதனாலே, சிவ வீட்டுலகமும் திருமால் வீட்டுலகமும் வெவ்வேறென்று கொண்டு ஏற்றத்தாழ்வு கூறும் குறுநோக்காளர் கூற்றும் பொருந்தாமை காண்க.

இனி, ஆரியச் சூழ்ச்சியான முத்திருமேனிக் கொள் கையையும் நான்முகன் என்னும் படைப்புத் தெ-வத்தையும் தமிழவறிஞர் ஏற்காமையால், "ஆயிரம் வேள்வியின் எ-துவா ராக அருமறை கூறும் அய னுலகு" என்றும், "தாமரைக் கண்ணான் என்பது தாமரையிடத்தான் என்றது" என்றும், காலிங்கர் கூறியதும் பெருந் தவறாம். இனி, 'இனிது' என்பதற்கு 'எளிது' என்று பரிமேலழகர் பொருள் கொண்டதும் தவறாம். 'தோட்டுயில்' என்பது இடக்கரடக்கல். 'கொல்' வினாவிடைச் சொல். திருமாலுக்குத் தாமரைக் கண்ணான் என்னும் பெயர் கண்ணன் தோற்றரவினின்று தோன்றியதாகும்.

**1104. நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றா ளிவள்.**

*(தலைமகன் கூட்டத் திறுதிக்கட் சொல்லியது.)*

**(இ-ரை.)** நீங்கின் தெறும் குறுகுங்கால் தண்ணென்னும் தீ - தன்னை விட்டு அகன்றாற் சுடுவதும் தனக்கு நெருங்கினாற் குளிர்வதுமான புதுமைத் தீயை; இவள் யாண்டுப் பெற்றாள் - இவள் எங்கிருந்து பெற்றாள்?

பாங்கற் கூட்டமாவது, மூன்றாம் நாள் தலைமகள் இருக்குமிடத்தைத் தலைமகன் தோழன் வாயிலாக அறிந்து சென்று கூடியது. கூடுமுன்னும் பிரி யும்போதும் துன்புறுதலால் 'நீங்கிற் றெறூஉம்' என்றும், நெருங்கும்போதும் கூடும்போதும் இன்புறுதலாற் 'குறுகுங்காற் றண்ணென்னும்' என்றும், இத்தகைய தீ உலகத்தி லில்லையாதலால் 'யாண்டுப் பெற்றாள்' என்றும் கூறினான்.

**1105. வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள்.**

*(தலைமகன் பாங்கியிற் கூட்டத் திறுதிக்கண் சொல்லியது.)*

**(இ-ரை.)** தோடு ஆர் கதுப்பினாள் தோள் - அழகிய இதழுள்ள பூவை யணிந்த கூந்தலியாகிய இவள் தோள்கள்; வேட்டபொழுதின் அவை அவை போலுமே - விரும்பிய போதெல்லாம் ஆசைப்பட்ட அரும்பொருள்கள் தாமே வந்து சேர்ந்து இன்பஞ்செ-தாற்போல, நான் வேண்டிய போதெல்லாம் எனக்கு எளிதாகக் கிடைத்து இன்பஞ் செ-தன.

பாங்கியிற் கூட்டமாவது, முந்தின முந்நாளும்போல் நாலாம் நாள் தலை மகள் தனித்திராது தோழிமாரொடு கூடியிருந்ததினால், தலைமைத் தோழி யைத் துணைக்கொண்ட தலைமகன் தலைமகளைக் குறித்த இடத்திற் கூடியது.

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் ஆகிய நால்வகைக் கூட்டங்களாலும், தலைமகன் தொடர்ந்து இன்பம் பெற்றமையால் 'வேட்டபொழுதி னவையவை போலுமே' யென்றான். 'தோடு' ஆகுபெயர். ஏகாரம் தேற்றம். 'தோள்' இடக்கரடக்கல். உவமை இன்பஞ் செ–தல் பற்றியதாதலின் வினையுவமை.

**1106. உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்.**

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** உறுதோறு உயிர் தளிர்ப்பத் தீண்டலால் - நான் இவளைத் தழுவும் போதெல்லாம் என் உயிர் தழைக்குமாறு தீண்டுதலால்; பேதைக்குத் தோள் அமிழ்தின் இயன்றன - இவ் விளம்பெண்ணிற்குத் தோள்கள் அமிழ் தினால் அமைக்கப்பெற்றனவா யிருக்கின்றன.

மென்மையுந் தண்மையும் இன்பமும்பற்றி 'அமிழ்தி னியன்றன' என்றான். பேதை என்னுஞ் சொல் பருவங் குறியாது இளமை குறித்து நின்றது. 'தோள்' பால்பகா வஃறிணைப் பெயர். தழைத்தல் கிளர்ச்சியும் உரமும் பெறுதல்.

**1107. தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றா
லம்மா வரிவை முயக்கு.**

*(நீ இவளை வரைந்துகொண்டு தம்மில்லிருந்து தமது பாத்துண்ணும் இல்லறத்தில் ஈடுபடல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.)*

**(இ–ரை.)** அம்மா அரிவை முயக்கு - அழகிய மாநிறத்தையுடைய இப் பெண்ணின் தழுவல்; தம் இல் இருந்து தமது பாத்து உண்ட அற்று - தமக் குரிய தனி மனையிற் குடியிருந்து, தம் முயற்சியாற் பெற்ற பொருளைத் தென் புலத்தார் தெ–வம் விருந்தொக்க லரசுகட்குப் பகுத்து, எஞ்சியதைத் தாம் உண்டாற் போல்வதே.

இல்லறஞ்செ–தார் பெறும் விண்ணின்பம் போன்ற இன்பத்தை இக் களவொழுக்கத்தாலேயே பெறுகின்றே னென்று, தலைமகன் வரைவுடம் படாது கூறியவாறு. வரைவாவது இல்லறம் தொடங்கும் கற்புச்சடங்கு. "எலி வளையுந் தனிவளை, தனிவளையுந் தன்வளை" என்னும் உரிமை யுணர்ச்சி பற்றித் 'தம் இல்' என்றும் "தாள்தந்த துண்ணலி னூங்கினிய தில்" (குறள். 1065)

என்பதுபற்றித் தமது என்றும், "ஐம்புலத் தாறோம்பல்" (குறள். 43) பற்றிப் 'பாத்து' என்றும், வரைவாற் சிறந்த பேறில்லையென்பது தோன்ற 'அற்று' என்றும் கூறினான். 'ஆல்' அசைநிலை. 'அரிவை' என்பது இங்குப் பருவங் குறியாது பெண்மைமட்டும் குறித்து நின்றது.

***1108.* வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு.**

*(இருவர்க்கும் இடையீடு படாத முயக்கு இல்லறத்திலேயே இயலுமென்று வரைவுகடாவின தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** (நீ சொல்வ தொக்கும்) வளி இடை போழப்படா முயக்கு - ஒருடம் பென்னுமாறு இறுக ஒன்றியமையால் காற்றா லிடையறுக்கப்படாத தழுவல்; வீழும் இருவர்க்கு இனிதே - ஒருவரை யொருவர் விழையும் இருவர்க்கும் இன்பந் தருவதே.

தோழி நாளிடையீடு குறித்துச் சொன்னதற்கு மாறாகத் தலைமகன் காற்றிடையீடு குறித்துச் சொல்லியும் அவள் உடம்புபற்றி இருவர் எனக் கொண்டதை அவன் காதல்பற்றி உயிரால் ஒருவர் எனக் கொண்டு மறுத்தும் கோணையுறழ் (வாதம்) செ-தவாறு. இதனால் வரைவுடம்படாமை தெரிவித்தான். முற்றும்மை செ-யுளால் தொக்கது. ஏகாரம் தேற்றம். 'படாஅ' இசைநிறையளபெடை. வரைவு கடாதலாவது வெளிப்படையான கரணச் சடங்கொடு இல்லற வாழ்க்கை தொடங்குமாறு வேண்டுதல்.

***1109.* ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன்.**

*(மறைத்தல் வேண்டாமையின் அச்சமின்றியும் நாள்தோறுங் கூடுங் கூட்டமே இன்பஞ் சிறக்குமென வரைவுகடாவியவட்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** ஊடல் உணர்தல் புணர்தல் இவை - பழகப் பழகப் பாலும் புளித்தல்போல நாளடைவில் இன்பங் குன்றிய புணர்ச்சி யினிதாதற் பொருட்டு வேண்டுவதான ஊடலும், அது முதிர்ந்து உள்ளதையுங் கெடுக்காவாறு அளவறிந்து நீக்கலும், அதன்பின் கூடலும் ஆகிய இவையன்றோ; காமம் கூடியார் பெற்ற பயன் - வரைந்துகொண்டு காமவின்பஞ் சிறந்தவர் பெற்ற பயன்கள்.

ஆடவர் தத்தம் தொழில்பற்றிப் பிரிந்துபோதலும், அவர் வரவு குறித்த காலங் கடந்தவிடத்துப் பெண்டிர் வருந்துதலும், வந்த பின்பும் ஏதேனு மொன்று கருதிக்கொண்டு ஊடுதலும், அதைக் கணவர் பல்வேறு வகையில் நீக்குதலும், அதன்பின் கணவன் மனைவியர் கூடுதலும் ஆகிய இவைதானே, வரைந்து கொண்ட கற்பொழுக்கத்தார் பெற்ற பயன்! வரையாமையால் அருமைப் படுவதும், மறைவால் இன்பஞ் சிறப்பதும், மேன்மேலும் ஆராமை மீதூர்ந்து இரண்டறக் கலப்பதுமான, இக் களவொழுக்கப் பேரின்பத்திற்கு அக் கற் பொழுக்க வூடலின்பம் எவ்வகையிலும் ஈடாகுமோ? அதை நான் வேண்டேன் என்று அதை இகழ்ந்தவாறு.

**1110. அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்**
**செறிதோறுஞ் சேயிழை மாட்டு.**

*(உடன்போக்கில் தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.)*

**(இ-ரை.)** சேயிழை மாட்டுச் செறிதோறும் காமம் - இச்செம்மையான அணிகலன்களை யுடையாளொடு கூடுந்தோறும் நான் பெறுங் காமவின்பம்; அறிதோறு அறியாமை கண்ட அற்று - நூல்களாலும் நுண்மதியாலும் பொருள்களை அறியவறிய முன்னை யறியாமை விளங்கித் தோன்றினாற் போலத் தோன்றுகின்றது.

உடன்போக்காவது தலைமகள் பெற்றோர் அவளைத் தர இசையாத போது, தலைமகன் அவளைக் கூட்டிக்கொண்டு தன்னூர்க்கேனும் வேற் றூர்க்கேனுஞ் செல்லுதல். அறிவிற் கெல்லையின்மையின் மேன்மேலறிய வறிய முன்னை யறியாமை மிகுந்து தோன்றுவது போல, இன்பத்திற்கும் எல்லையின்மையின் தன் காதலியொடு மேன்மேற் கூடக்கூட முன்னை யின்ப நுகர்ச்சிக்குறைவு விளங்கித் தோன்றுகின்றதென்று, அவள் சிறப்புக் கூறிய வாறு. களவொழுக்கத்திற் பல்வேறு தடைகளால் பன்னாள் தலைமகளைக் கூடப்பெறாது துன்புற்ற தலைமகன் இன்று அத் தடைகள் முற்றும் நீங்கியமை தோன்றச் ‘செறிதோறும்’ என்றான். ‘சேயிழை’ அன்மொழித்தொகை. ‘ஆல்’ அசைநிலை. இப் புணர்ச்சி மகிழ்தல் தலைமகட்கு முண்டேனும், அது அவள் நாணம்பற்றிக் குறிப்பாக நிகழ்வதல்லது கூற்றாக நிகழாதென அறிக.

## அதி. 112. - நலம்புனைந் துரைத்தல்

*அதாவது, தலைமகன், தலைமகள் அழகைப் பாராட்டிக் கூறுதல். இது புணர்ச்சி யின்பம் பெற்ற பின்பு அளவில்லா மகிழ்ச்சியொடும் அடக்க வொண்ணா*

*வுணர்ச்சியொடும் நிகழ்வதாகலின், புணர்ச்சிமகிழ்தலின் பின் வைக்கப்பட்டது.*

**1111. நன்னீரை வாழி யனிச்சமே நின்னினு**
**மென்னீரள் யாம்வீழ் பவள்.**

*(இயற்கைப் புணர்ச்சி யிறுதிக்கட் சொல்லியது.)*

**(இ-ரை.)** அனிச்சமே நன்னீரை - அனிச்சப் பூவே! நீ மோப்பப் குழையும் நாணமுடைமையால் மற்றெல்லாப் பூவினும் நல்ல தன்மையையுடையை; வாழி - ஆதலால் நீ நீடுவாழ்க! யாம் வீழ்பவள் நின்னினும் மெல்நீரள் - ஆனால், எம்மால் விரும்பப்பட்டவளோ உன்னைவிட மெல்லிய தன்மையுடையவள். இதை இன்றறிந்துகொள்.

இது காமவின்பத்தின் மகிழ்ச்சி மயக்கத்தால், கேட்குந போலவுங் கிளக்குந போலவும் அஃறிணை மருங்கின் அறைந்தது. இதுபோற் பின் வருவனவற்றிற்கும் ஈதொக்கும். 'அனிச்சம்' ஆகுபெயர். இவ் வுலகில் யானே மென்மையிற் சிறந்தேன் என்னும் செருக்கை யினி யொழிவாயாக என்பது குறிப்பு. தழுவலால் ஊற்றினிமையைச் சற்று முன்பு அறிந்தானாகலின், அதைப் பாராட்டினான். இன்னீரள் என்னும் பாடம் சிறந்ததன்று.

**1112. மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்**
**பலர்காணும் பூவொக்கு மென்று.**

*(இடந்தலைப்பாட்டின்கட் சொல்லியது.)*

**(இ-ரை.)** நெஞ்சே - என் நெஞ்சமே! மலர்காணின் - தாமரை, குவளை முதலிய மலர்களை நீ கண்டால்; இவள் கண் - யான் ஒருவனே காணப்பெற்ற இவள் கண்களை; பலர் காணும் பூ ஒக்கும் என்று மையாத்தி - எல்லாராலும் எளிதா-க் காணப்படும் பொதுவகையான அப் பூக்கள் ஒக்குமென்று கருதி மயங்கி நிற்கின்றா-, உன் அறிவிருந்தவாறு என்னே!

இது நெஞ்சொடு கிளத்தல். இயற்கைப் புணர்ச்சியின் பின் தலைமகள் கண்களை ஒருபுடையொத்த மலர்களைக் காணும் போதெல்லாம் அவற்றின் கண் காதல் செ-துவந்த தலைமகன், இதுபோது அவள் கண்களை மீண்டும் கண்டு அவற்றின் அழகைச் செவ்வையா யறிந்தானாதலின், அம் மலர்களின் ஒவ்வாமை கண்டு ஒத்தனவாகக் கருதிய நெஞ்சை யிகழ்ந்து கூறியவாறு. மை - மயக்கம். யாத்தல் - பொருந்துதல்.

**1113. முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வே–த்தோ ளவட்கு.**

*(கூட்டுதற் குடம்பட்ட பாங்கற்குத் தலைமகன் தலைமகள தியல்பு கூறியது.)*

**(இ–ரை.)** வே–த்தோளவட்கு - பசுமூங்கில் போலுந் தோளினை யுடையவட்கு; மேனி முறி - உடம்பு மாந்தளிர் நிறமாயிருக்கும்; நாற்றம் வெறி - இயல்பான மணம் நறுமணமாயிருக்கும்; உண்கண் வேல் - மையூட்டிய கண்கள் வேல்போற் கூராயிருக்கும்.

பெயராலும் ஓர் இயல்பு கூறப்பட்டது. 'முறி', 'முறுவல்' ஆகுபெயர்கள். உவமைகள் உருவக வடிவிற் கூறப்பட்டன. இத் துறை உன்னாற் கருதப்பட்ட வளை அறியேனென்று சேட்படுத்திய தோழிக்குத் தலைமகன் சொன்னது மாம்.

**1114. காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கு
மாணிழை கண்ணொவ்வே மென்று.**

*(பாங்கற் கூட்டத்துச் சென்று சார்வான் கூறியது.)*

**(இ–ரை.)** குவளை - குவளைப் பூக்கள் தாம்; காணின் - காணுந் தொழிலை யுடையனவாயின்; மாண் இழை கண் ஒவ்வேம் என்று - வினைத்திறத்தால் மாட்சியமைப்பட்ட அணிகலன்களையுடைய இவள் கண்களை யாம் ஒவ்வேமென்று கருதி; கவிழ்ந்து நிலன் நோக்கும் - அந் நாணத்தினாற் குனிந்து நிலத்தை நோக்கும்.

பண்பாலன்றித் தொழிலாலும் ஒவ்வாமையாற் 'காணின்' என்றும், கண் டால் நாணும் என்பது தோன்றக் 'கவிழ்ந்து' என்றும் கூறினான். காட்சியும் நாணமுமின்மையாற் செம்மாந்து மேல்நோக்கின என்பது தற்குறிப்பேற்றம். 'மாணிழை' அன்மொழித்தொகை.

**1115. அனிச்சப்பூக் கால்களையாள் பெ–தா ணுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.**

*(பகற்குறிக்கட் பூவணிகண்டு சொல்லியது.)*

**(இ–ரை.)** அனிச்சப்பூக் கால்களையாள் பெ–தாள் - இவள் தன் இடை மென்மையை நோக்காது அனிச்சப்பூவைக் காம்பு கிள்ளாமல் தன் தலைக் கணிந்தாள்; நுசுப்பிற்கு நல்ல பறை படா - ஆதலால், இனி இவளி டைக்கு மங்கலப் பறைகள் முழங்கா, அமங்கலப் பறைகளே முழங்கும்.

அக் காம்பின் கனத்தைத் தாங்கமாட்டாமல் இவள் கொடியிடை ஒடியும்; ஒடிந்தாற் சாவு நேரும்; அன்று அமங்கலப் பறைதான் முழங்கும். சாவு இடைமுறிவால் நேர்வதால், சாப்பறை முழக்கம் இடையை நோக்கிய தாகச் சொல்லப்பட்டது. இடையொடுக்கத்தை மிகுத்துக் காட்டியதால் இஃது உயர்வு நவிற்சியணி. 'படா அ' இசைநிறை யளபெடை. 'பறை' பால்பகா வஃறிணைப் பெயர். பகற்குறியாவது பாங்கியிற் கூட்டக் காலத்திற் பகல் வேளையில் தலைமகனுந் தலைமகளுங் கூடுதற்குக் குறித்த இடம்.

***1116. மதியும் மடந்தை முகனு மறியா***
***பதியிற் கலங்கிய மீன்.***

*(இரவுக்குறிக்கண் நிலாவைக் கண்டு சொல்லியது)*

**(இ-ரை.)** மீன் - விண்மீன்கள்; மதியும் மடந்தை முகனும் அறியா - தம் தலைமைச் சுடராகிய மதிக்கும் எம் காதலி முகத்திற்கும் வேறுபாடு பெரிதா யிருந்தும் அதனை அறியமாட்டாது; பதியின் கலங்கிய - மயங்கித் தம் நிலையி னின்றும் பெயர்ந்து அங்குமிங்குந் திரிகின்றன.

இரவுக்குறியாவது, பாங்கியிற் கூட்டக் காலத்தில் தலைமகனுந் தலை மகளும் இரவிற் கூடுதற்குக் குறித்த இடம். ஓரிடத்து நிலைத்து நில்லாது எப் போதும் இயங்குதல்பற்றிப் 'பதியிற் கலங்கிய' என்றான். இதற்கு மதிமுக வேறு பாடறியாமைக் கரணியங் காட்டியது தற்குறிப்பேற்றம். இக் குறட்கு "இனி இரண்டனையும் பதியிற் கலங்காத மீன்களறியு மல்லது கலங்கின மீன்க ளறியா வென்றுரைப்பினு மமையும்" என்று பரிமேலழகர் கூறிய மற்றோருரை அத் துணைச் சிறந்ததன்று.

***1117. அறுவா— நிறைந்த வவிர்மதிக்குப் போல***
***மறுவுண்டோ மாதர் முகத்து.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** அறுவா- நிறைந்த அவிர்மதிக்குப் போல - முன் குறைந்த விடம் நிரம்பிய விளங்கும் மதியத்திற்குப்போல; மாதர் முகத்து மறு உண்டோ - இப் பெண்ணின் முகத்தில் ஏதேனுங் களங்கமுண்டோ? இல்லையே! அங் ஙனமிருந்தும் அவ் விண்மீன்கள் வேறுபாடறியாது கலங்கித் திரிவானேன்?

அறுவா- கரும்பக்கம், மதியம் முழுநிலா. தே-தலும் வளர்தலுந் தோன்ற 'அறுவா- நிறைந்த' என்றான். தே-வு வளர்ச்சிகளும் மறுவுடைமை யும் வேறுபாடறிவிக்கவும், அறிந்தில என இகழ்ந்து கூறியவாறு.

**1118. மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்**
**காதலை வாழி மதி.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** மதி - வெண்ணிலாவே! மாதர் முகம்போல் ஒளிவிட வல்லை யேல் - இப் பெண்ணின் முகம்போலத் தே-தல் வளர்தலின்றியும் களங்க மின்றியும் என்றும் ஒருதன்மைத்தா- விளங்க உனக்கு இயலுமாயின்; வாழி - நீ நீடு வாழ்வாயாக!; காதலை - அன்று நீயும் என் காதலை யுடையையா யிருப்பா-.

நீ அங்ஙனம் விளங்கமாட்டாயாதலின், என் வாழ்த்திற்கும் காதற்கும் உரியையல்லை யென்பதாம்.

**1119. மலரன்ன கண்ணாண் முகமொத்தி யாயிற்**
**பலர்காணத் தோன்றன் மதி.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** மதி - திங்களே! மலர் அன்ன கண்ணாள் முகம் ஒத்தியாயின் - இத் தாமரை மலர் போலுங் கண்ணையுடையாளின் முகத்தையொக்க நீ விரும்புவாயானால்; பலர் காணத் தோன்றல் - இனியாகிலும் எல்லாருங் காணத் தோன்றாதே, நான்மட்டுங் காணத் தோன்று.

ஏற்கெனவேயுள்ள வடிவு நிலையின்மையுங் களங்கமுமாகிய குற்றங் களுடன், பொதுமகள் முகம்போலப் பலருங்கண் டின்புறுதற் கேதுவான பரத்தைமையுங் கூறியவாறு. பலர் காணத் தோன்றாமை கூடாமையின் முக மொத்த லில்லை யென்பதாம்.

**1120. அனிச்சமு மன்னத்தின் றூவியு மாத**
**ரடிக்கு நெருஞ்சிப் பழம்.**

*(உடன்போக்குரைத்த தோழிக்கு அதனருமை கூறி மறுத்தது.)*

**(இ-ரை.)** அனிச்சமும் அன்னத்தின் தூவியும் - அறிஞரால் மென்மைக் குச் சிறந்ததாகக் கொள்ளப்பெற்ற அனிச்ச மலரும் ஓதிமத்தின் நொ-ய து- முடியும் கூட; மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம் - என் காதலியின் மெல்லிய உள்ளங்கால்களை முற்றிய நெருஞ்சி முட்போற் குத்தித் துன்புறுத்துமே.

இத்தகைய மென்பாதத்தினள் கூர்ம்பருக்கைக் கற்களும் நீள்வேல் முள்ளும் நெடுகலும் பரவிக் கிடக்கும் வெஞ்சுரத்தை எங்ஙனங் கடப்பாள்? ஆதலால் அக் கருத்தை விட்டுவிடு என்பது குறிப்பு. இது உடன்போக்கு மறுத் தலாயினும், தலைமகளின் அடிநலத்தை யெடுத்துக் கூறுதலால், இதுவும் நலம் புனைந்துரைத்தலேயாம். பெருநெருஞ்சி முதிர்ந்த நிலையில் நெல்லிக்கனி போலப் பசுமஞ்சள் நிறங்கொள்ளுமாதலின் பழம் என்றார். இக் குறளிலுள்ள அணி உயர்வுநவிற்சி.

## அதி. 113 - காதற் சிறப்புரைத்தல்

*அதாவது, தலைமகன் தன் காதன் மிகுதி கூறுதலும், தலைமகள் தன் காதன் மிகுதி கூறுதலுமாம். இது புணர்ச்சியும் உறுப்புநலனும்பற்றி நிகழ்வதாகலின் புணர்ச்சி மகிழ்தல், நலம்புனைந் துரைத்தல் என்பவற்றின் பின் வைக்கப்பட்டது. இவ் வதிகாரக் குறள்களுள் முன்னைந்தும் தலைமகன் கூற்றும், பின்னைந்தும் தலைமகள் கூற்றுமாகும்.*

***1121.*** **பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி**
**வாலெயி றூறிய நீர்.**

*(இயற்கைப் புணர்ச்சி யிறுதிக்கண் தலைமகன் சொல்லியது.)*

**(இ-ரை.)** பணிமொழி வால் எயிறு ஊறிய நீர் - இம் மென்மொழியாளின் வெண்பல்லில் ஊறிய நீர்; பாலொடு தேன் கலந்தது அற்று - பாலுந் தேனுங் கலந்த கலவை போலும்.

பருகக் கூடிய பாலின் குறைந்த இனிமையும், பருகக் கூடாத தேனின் நிறைந்த இனிமையும் கலந்தாற் பருகக் கூடிய சிறந்த இனிமை பெறப்படு தலின் அதை 'வாலெயிற்று நீர்க்கு' உவமமாக்கினான். கலந்ததற்று என்பது கலந்தற்று எனத் தொக்கது. ஏகாரம் தேற்றம், 'பணிமொழி' அன்மொழித் தொகை. 'எயிறூறிய' இடவேற்றுமைத் தொகை.

***1122.*** **உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன**
**மடந்தையொ டெம்மிடை நட்பு.**

*(பிரிவச்சந் தவிர்த்தது.)*

**(இ-ரை.)** உடம்பொடு உயிர்இடை என்ன - உடம்போடு உயிருக்குள்ள தொடர்புகள் எத்தன்மையன; அன்ன மடந்தையொடு எம் இடை நட்பு - அத் தன்மையனவே இப் பெண்ணோடு எனக்குள்ள தொடர்புகளும்.

தொடர்புகளாவன: தொன்றுதொட்டு வேற்றுமையின்றிக் கலந்து வருதல், பிரிந்து கூடல், இன்பதுன்பங்கள் ஒக்க நுகர்தல், ஒன்றை (ஒருவரை) விட்டு ஒன்று (ஒருவர்) இன்றியமையாமை என்பன. தெ-வப் புணர்ச்சியால் மயங்கியிருந்த தலைமகள் பின்பு தெளிவுபெற்று இவன் யாவனோவெனவும், இன்று பிரிகின்றவன் மீண்டும் வருவனோவெனவும், இன்னும் இவனொடு கூடுதல் வா-க்குமோவெனவும் பலவாறெண்ணிக் கவல்வாள். அதைக் குறிப்பா லறிந்த தலைமகன், உன்னிற் பிரியேன்; பிரியின் உயிர் தாங்கேன் என்னுங் கருத்துப்படக் கூறித் தேற்றியவாறு. 'உடம்பு', 'நட்பு' என்பன வகுப்பொருமை. பல பிறவிகளில் தொடர்ந்து வந்த உழுவலன்பால் ஏற்பட்ட தொடர்பாதலின். வாழ்நாள் முழுதுந் தொடரும் என்பதாம். 'என்னை' யென்பது காலிங்கர் பாடம்.

**1123. கருமணியிற் பாவா—நீ போதாயாம் வீழுந்**
**திருநுதற் கில்லை யிடம்.**

*(இடந்தலைப்பாட்டின்கண் தலைமகள் நீக்கத்துச் சொல்லியது.)*

**(இ-ரை.)** கருமணியில் பாவா- - என் கண்ணின் கருமணியின்கண் தங்கும் பாவையே; நீ போதா- - நீ அவ்விடத்தை விட்டுப் போவாயாக; யாம் வீழும் திருநுதற்கு இடம் இல்லை - ஏனெனின், எம்மால் விரும்பப்படும் அழகிய நெற்றியை யுடையாட்கு இருக்க வேறிடமில்லை.

யான் இவளைக் காணாதிருத்தல் கூடாமையின், என்றும் என் கண்ணிற் குள்ளேயே இருக்கத்தக்காள். அதற்குள் இருவர் இருக்க இடமின்மையின், உன்னினுஞ் சிறந்த இவட்கு அவ் விடத்தைக் கொடுத்துவிட்டு நீ வெளியேறி விடுவாயாக என்று, தன் மறவாக் காதலைத் தெரிவித்தவாறாம். 'யாம்' பெருமிதப் பன்மை அல்லது அரசப்பன்மை. 'திருநுதல்' அன்மொழித் தொகை.

**1124. வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத**
**லதற்கன்ன ணீங்கு மிடத்து.**

*(பகற்குறிக்கட் புணர்ந்து நீங்குவான் சொல்லியது.)*

**(இ-ரை.)** ஆயிழை உயிர்க்கு வாழ்தல் அன்னள் - ஆ-ந்தெடுத்த அணிகலன்களை யுடையாள் என்னோடு கூடுமிடத்து எனக்கு உயிருக்கு உடம்போடு கூடி வாழ்தல் போலும்; நீங்குமிடத்து அதற்குச் சாதல் அன்னள் - என்னை விட்டுப் பிரியுமிடத்து அதற்கு அதினின்று நீங்கிச் சாதல் போலும்.

வாழ்தலின் இனியதும் சாதலின் இன்னாததும் இல்லையாதலின், கூடுதல் வாழ்தலும் நீங்குதல் சாதலும் போல்வன என்றான். கூடுமிடத்து என்பதும் எனக்கு என்பதும் அவா-நிலையான் வந்தன. 'ஆயிழை' அன்மொழித் தொகை.

**1125. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே
னொள்ளமர்க் கண்ணாள் குணம்.**

*(ஒருவழித் தணந்துவந்த தலைமகன், நீயிர் தணந்த ஞான்று
எம்மை நினைத்தீரோ என்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** ஒள் அமர்க் கண்ணாள் குணம் யான் மறப்பின் உள்ளுவன் - ஒளிபொருந்தியவா- அமர் செ-யுங் கண்ணையுடையாளின் குணங்களை யான் என்றேனும் மறந்தேனாயின் நினைத்திருப்பேன்; மறப்பு அறியேன் - ஆயின், யான் ஒருபோதும் மறந்ததில்லை ஆதலால் நினைத்ததுமில்லை.

குணங்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, அன்பு, கற்பு என்பன. 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. இதுவரையுந் தலைமகன் கூற்று; இனி வருவன தலைமகள் கூற்று. ஒருவழித் தணத்தலாவது, இரவுக்குறிக் காலத்திறுதியில் அலரெழுந்தபின் அது அடங்கும்வரை தலைமகன் சில நாள் தன் ஊரின்கண் தங்கியிருத்தல்.

**1126. கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர்.**

*(ஒருவழித் தணப்பின்கண் தலைமகளைத் தோழி இயற்பழிப்பா
ளென்றஞ்சி அவள் கேட்பத் தன்னுள்ளே சொல்லியது.)*

**(இ-ரை.)** எம் காதலர் கண்ணுள்ளின் போகார் - எம்முடைய காதலர் ஒரு போதும் கண்ணகத்து நின்றும் நீங்கார்; இமைப்பின் பருவரார் - யாம் அதை மறந்து ஒருகால் இமைத்தோமாயினும் அதனால் வருத்தமுறார். நுண்ணியர் - அத்துணைக் கட்புலனாகாத நுண்மையுடையவர் அவர்.

தாம் காணாமைபற்றிச் சே-மைக்கண் சென்றாரெனக் கருதுவார் கருதுக; ஆயின், யான் இடைவிடாது காணுதலின் அங்ஙனங் கருதேன் என்றவாறு. இடையறாத நினைவு முதிர்ச்சியால் என்றுங் கண்முன் நிற்றல் போல் தோன்றலாற் 'கண்ணுள்ளிற் போகார்' என்றும், இமைத்த போதும் அது நீங்காமையால் 'இமைப்பிற் பருவரார்' என்றும் கூறினாள்.

**1127. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு
மெழுதேங் கரப்பாக் கறிந்து.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** காதலர் கண் உள்ளாராக - எம் காதலர் எப்போதும் எம் கண்ணுள் ளிருக்கின்றாராதலால்; கரப்பாக்கு அறிந்து - அவர் மறைவதை யறிந்து; கண்ணும் எழுதேம் - கண்ணிற்கு மையிடுதலுஞ் செ-யேம்.

இடைவிடாது காணப்படுகின்றவரைப் பிரிந்தாரென்று கருதுவது எங் ஙனந் தகும் என்பதாம். 'கரப்பாக்கு' தொழிற்பெயர். 'பாக்கு' தொழிற்பெய ரீறு. இழிவுசிறப்பும்மை இடமாற்றப்பட்டது.

**1128. நெஞ்சத்தார் காத லவராக வெ-துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து.**

*(இதுவுமது.)*

**(இ-ரை)** காதலவர் நெஞ்சத்தாராக - எம் காதலர் எப்போதும் எம் நெஞ்சினுள் ளிருக்கின்றாராதலால்; வேபாக்கு அறிந்து - அவர் சூடுறுதலை யறிந்து; வெ-து உண்டல் அஞ்சுதும் - வெம்மையாக வுண்ணுவதற்கு அஞ்சு கின்றேம்.

எப்போதும் எம் நெஞ்சிலிருக்கின்றவரைப் பிரிந்தாரென்று கருதுவ தென்னை என்பது குறிப்பெச்சம். 'வேபாக்கு' தொழிற்பெயர்; 'பாக்கு' தொழிற் பெய ரீறு.

**1129. இமைப்பிற் கரப்பாக் கறிவ லனைத்திற்கே
யேதில ரென்னுமிவ் வூர்.**

*(வரைவிடை வைத்துப் பிரிவின்கண் தலைமகள் ஆற்றுதற்பொருட்டுத் தோழி தலைமகனை இயற்பழித்தவிடத்து, அவள் இயற்பட மொழிந்தது.)*

**(இ-ரை.)** இமைப்பின் கரப்பாக்கு அறிவல் - என் கண் இமைக்கு மாயின் உள்ளிருக்குங் காதலர் மறைவையறிந்து சிறிது நேரம் இமையாதே யிருப்பேன்; அனைத்திற்கே ஏதிலர் என்னும் இவ்வூர் - அவ்வளவிற்கே, என் காதலர் அன்பிலரென்றும், என்னைத் துயிலா நோயுறுத்தினாரென்றும், பழி தூற்றும் இவ் வூர்.

தன் கருத்தறியாமைபற்றித் தோழியொடு புலந்து கூறுகின்றாளாதலின், அவளை வேறுபடுத்து, 'இவ்வூர்' என்றாள். ஒருபோதும் உள்ளத்திற் பிரியாத

வரைப் பிரிந்தாரென்று நீ பழித்தல் தகாது என்பதாம். 'ஊர்' வரையறுத்த ஆகு பெயர்.

**1130. உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவ**
**ரேதில ரென்னுமிவ் வூர்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** என்றும் உள்ளத்துள் உவந்து உறைவர் - என் காதலர் எப் போதும் என் உள்ளத்துள் மகிழ்ந்து வதிகின்றார்; ஏதிலர் இகந்து உறைவர் என்னும் இவ் வூர் - இதனையறியாது. அவர் அன்பிலரென்றும், பிரிந்து வேறி டத்து வதிகின்றாரென்றும், பழித்துரைக்கும் இவ் வூர்.

## அதி. 114 - நாணுத்துறவுரைத்தல்

*அதாவது, சேட்படுத்தப்பட்டு ஆற்றானாகிய தலைமகன் தோழிக்குத் தன் நாண்டுறவுரைத்தலும், தோழியை அறத்தொடு நிற்பிக்கலுற்ற தலைமகள் அவளுக்குத் தன் நாண்டுறவுரைத்தலுமாம். இது காதல் மிகுந்தவிடத்து நிகழ்வதாகலின், காதற் சிறப்புரைத்தலின் பின் வைக்கப்பட்டது. இவ் வதிகா ரத்தின் முதலேழ் குறளும் தலைமகன் கூற்று; இறுதி மூன்றும் தலைமகள் கூற்று.*

*அறத்தொடு நிற்றலாவது, களவொழுக்கம் தடைப்பட்டவிடத்தும், தலை மகளின் காமநோயை அவள் பெற்றோர் பிறழவுணர்ந்து வேலன் வெறியாட்டு நிகழ்த்துமிடத்தும், மணம் பேச வந்த தலைமகன் பெற்றோர்க்கு மகட்கொடை மறுத்த விடத்தும், தலைமகள் தோழிக்கும் தோழி செவிலிக்கும் செவிலி நற்றா-க்கும் நற்றா- தந்தைக்குமாக, தலைமக்கள் காதலொழுக்கம் பற்றி நடந்த வுண்மையைக் குறிப்பாகக் கூறுதல். கற்பாகிய அறத்தைக் காத்து நிற்ற லால் இது அறத்தொடு நிற்றல் எனப் பெயர் பெற்றது.*

**1131. காம முழந்து வருந்தினார்க் கேம**
**மடலல்ல தில்லை வலி.**

*(சேட்படுக்கப்பட்டு ஆற்றானாகிய தலைமகன் சொல்லியது.)*

**(இ-ரை.)** காமம் உழந்து வருந்தினார்க்கு - பெறற்கரிய மகளிரொடு காம வின்பம் நுகர்ந்து பின்பு அது பெறாது துன்புற்ற ஆடவர்க்கு; ஏமம் மடல் அல்லது வலி இல்லை - தொன்றுதொட்டுக் காப்பாக இருந்து வருகின்ற மடலேற்றமன்றி வேறொரு வலிமையுமில்லை.

ஏமமாதல் அத் துன்பம் நீங்குமாறு அந் நுகர்ச்சியை மீளத்தருதல். பண்டை நாளிலும் என்போன்ற ஆடவர் இம் முறையே கையாண்டு வந் திருக்கவும், நான் உன்னை நம்பி அதைப் புறக்கணித்தேன். இன்று நீ எனக்குத் துணையில்லாமையை அறிந்தேனாதலின், அவ் வழியையே கடைப்பிடித்து இன்பம் நுகரக் கருதுகின்றேன் என்றவாறு. 'வலி' ஆகு பொருளது.

### *மடலேறும் வகை வருமாறு:*

தன் காதலியைப் பெறாத காதலன் ஆடை களைந்து நீர்ச்சீலை யணிந்து, உடம்பெல்லாம் சாம்பரைப் பூசி, எருக்கமாலை யணிந்து, தன் காதலியின் உருவம் எழுதிய படத்தைக் கையி லேந்திக்கொண்டு, அதையே நோக்கி, அவளிருக்கும் ஊர் நடுவே எல்லாருங் காணத் தவநிலையிலிருப்பன். அவ்வூர்த் தலைவர் அவனைக் கண்டு காதலா–விற்கு அவன் உடம்பட்ட பின், அவனைப் பனங்கருக்கு மட்டையாற் செ–த குதிரைமேலேற்றிப் பெருந்தெருவூடிழுத்துச் செல்வர். கருக்குப் பட்டவிடமெல்லாம் அரத்தந் தோன்றாது விந்துநீர் தோன்றின், அவன் காதலியை அவனொடு கூட்டிவைப்பர்; இன்றேல் வையார். இது அநாகரிகமும் பேதைமையும் மிக்க முந்துகால வழக்காதலின், தமிழிலக்கியத்திற் குறித்திருப்பதெல்லாம் அதை நினைவுறுத்தலேயன்றி வேறன்றென்க.

### *1132. நோனா வுடம்பு முயிரு மடலேறு*
### *நாணினை நீக்கி நிறுத்து.*

*(நாணுடைய நுமக்கு அது முடியாதென மடல் விலக்கிய*
*தோழிக்குத் தலைமகன் சொல்லியது.)*

**(இ–ரை.)** நோனா உடம்பும் உயிரும் மடல் ஏறும் – அத் துன்பத்தைப் பொறாதவுடம்பும் உயிரும் தமக்குக் காப்பான மடற்குதிரையை ஏறக் கருது கின்றன; நாணினை நீக்கி நிறுத்து – அதற்குத் தடையான நாணத்தை நீக்கி வைப்பது.

அறிவு நிறையோர்ப்புக் கடைப்பிடி யென்னும் ஆண்மைக்குணம் நான் கும் முன்னரே நீங்கிவிட்டன. எஞ்சியிருக்கும் நாணம் என்னும் இருபாற் பொதுக் குணமும், மடலேற்றத்தின் பொருட்டு நீக்கப்பட்டுவிடும். அல்லாக் கால் உயிரும் உடம்பும் துன்பம் பொறுத்துக்கொண்டு உடனிற்கு மாறில்லை யென்பான். 'நோனா வுடம்பு முயிரும் மடலேறும்' என்றான். 'உழந்து'

வருந்தி னார்க்கு என மேற்குறளில் வந்தமையின், இங்கு 'நோனா' என்றுமட்டுங் கூறி னார். 'மடலேறும்' என்றது தோழி தன் ஆற்றாமை யறிந்து விரைந்து குறை முடிப்பாள் என்று கருதி. 'மடல்' ஆகுபெயர்.

***1133.* நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்**
**காமுற்றா ரேறு மடல்.**

*(நாண்மட்டுமன்றி நல்லாண்மையு முடையையாதலின்*
*மடலேற முடியாதென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.)*

**(இ-ரை.)** நாணொடு நல் ஆண்மை பண்டு உடையேன் - நாணும் சிறந்த ஆண்டகைமையும் பண்டை நாளிற் கொண்டுதானிருந்தேன்; காமுற்றார் ஏறும் மடல் இன்று உடையேன் - ஆயின் அவை காமத்தால் நீங்கிவிட்டமை யால், காமம் மிக்கார் ஏறும் மடலினையே இன்று உடையவனாயிருக்கின்றேன்.

என் உயிர் உடலோடு நிற்கவேண்டுமாயின் மடலேறுவதல்லது வேறு வழியில்லை யென்றானாம். 'நாண்' என்பது இழிசெயலைத் தடுக்கும் மானம். 'ஆண்மை'யென்பது ஒன்றற்குந் தளராத உரம்.

***1134.* காமக் கடும்புன லு—க்குமே நாணொடு**
**நல்லாண்மை யென்னும் புணை.**

*(நாணும் நல்லாண்மையுங் காமவெள்ளத்திற்குப் புணையாகலின், அதனால்*
*அவை நீங்குவனவல்ல என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.)*

**(இ-ரை.)** நாணொடு நல் ஆண்மை என்னும் புணை - நான் தன்னைக் கடத்தற்குக் கொண்ட நாணும் நல்லாண்மையுமாகிய புணைகளை; காமக் கடும்புனல் உ-க்குமே - காமமாகிய பெருவெள்ளம் அடித்துக்கொண்டு போகின்றதே! நான் என் செ-வேன்!

'புணை'யென்றது மிதவையும் கட்டுமரமும் பரிசலுந் தெப்பமும் போன்ற கடத்தக் கருவிகளை. அவற்றை என்னோடு அடித்துக்கொண்டு போகுமளவு வெள்ளம் பெருக்கும் வேகமுங் கொண்டதென்பது தோன்றக் 'கடும்புனல்' என்றான். ஏகாரம் இரங்கற் பொருட்டு.

***1135.* தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு**
**மாலை யுழக்குந் துயர்.**

*(இவ் வாற்றாமையும் மடலேறுங் கருத்தும் நுமக்கெவ்வாறு*
*வந்தன என்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** மாலை உழக்கும் துயர் மடலொடு - நான் மாலை வேளையிற் படுங் காமத்துயரினையும் அதற்கு மருந்தாகிய மடலேற்றம்பற்றிய எண்ணத்தை யும்; தொடலைக் குறுந்தொடி தந்தாள் - மாலைபோல் கையை வளைந்த சிறு வளையல்களையுடைய உன் தலைவி தந்தாள்.

காமநோ- ஏனை வேளைகளிலு முளதேனும் மாலைக் காலத்தி லேயே மிகுதியாகத் தாக்குவதால், 'மாலை யுழக்குந் துயர்' என்றும், அந் நோயின் முதிர்ச்சிபற்றியே மடலேற்றத் துணிவும் வந்ததனால் 'மடலொடு' என்றும், நோயைத் தணிக்கும் ஆற்றலுள்ளவளாயிருந்தும் அதைத் தானாகச் செ-யத் தக்க பருவமும் உரிமையும் இல்லாத இளமையள் என்பது தோன்ற 'தொட லைக் குறுந்தொடி' என்றும் கூறினான். அவள் நின் பொறுப்பிலும் ஆட்சியிலும் உள்ளமையால், நீயே என் துயரை நீக்க வேண்டுமென்பது கருத்து. 'குறுந் தொடி' அன்மொழித் தொகை.

### *1136. மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற*
### *படலொல்லா பேதைக்கென் கண்.*

*(மடலூரும் நேரம் இன்றைக்குக் கழிந்துவிட்டதென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** பேதைக்கு என் கண் படல் ஒல்லா - பேதைத் தன்மையுள்ள உன் தலைவி கரணியமாக எனக்கு இராமுழுதுங் கண்ணடைப்பதே யில்லை; யாமத்தும் மடல் ஊர்தல் உள்ளுவேன் மன்ற - அதனால் எல்லாரும் உறங்கும் நள்ளிரவிலும் நான் மடலேறக் கருதுவது உறுதி.

இனி, நாளைக் குறைமுடிப்பேனென்று கடத்தி வைக்க வேண்டா வென்ப தாம். 'பேதை' யென்பது இங்குப் பருவங்குறியாது இளமையும் மடமையுங் குறித்து நின்றது. 'மன்ற' தேற்றப்பொரு ளிடைச்சொல்.

### *1137. கடலன்ன காம முழந்து மடலேறாப்*
### *பெண்ணிற் பெருந்தக்க தில்.*

*(அறிவிலராய மகளிரினும் அதனையுடைய ஆடவரன்றோ காமநோயால் வருந்துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளற்பாலர் என்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** கடல் அன்ன காமம் உழந்தும் - கடல் போலக் கரையற்ற காம நோயால் வருந்தியும்; மடல் ஏறாப் பெண்ணின் பெருந்தக்கது இல் - அதை

நீக்குதற்கு மடலேறாது ஆற்றியிருக்கும் பெண்பிறப்புப் போலப் பெருந்தகுதி யுடைய பிறப்பு இவ் வுலகத்தில் வேறொன்று மில்லை.

அத் தகுதி ஆடவர்க்கு இயற்கையாக இன்மையை நீ அறிந்திலை போலும் என்பதாம். இதுவரையுந் தலைமகன் கூற்று. உம்மை உயர்வுசிறப்பு.

***1138. நிறையரியர் மன்னளிய ரென்னாது காம***
***மறையிறந்து மன்று படும்.***

*(காப்புச் சிறைமிக்குக் காமம் பெருகியவழித் தலைமகள் சொல்லியது.)*

**(இ-ரை.)** நிறை அரியர் (என்னாது) - இவர் நிறையென்னும் அடக்கப் பண்புடைமையால் இவரை நாம் மேற்கொள்வது அரிது என்று அஞ்சுதல் செ-யாது; மன் அளியர் என்னாது - மிகவும் அளிக்கத்தக்கார் என்று இரங்கு தலுஞ் செ-யாது; காமம் மறை இறந்து மன்றுபடும் - மகளிர் காமமும் அவர் மறைத்தலைக் கடந்து அம்பலத்திற்கு வருவதாயிற்று.

உலகத்துப் பெண்பாலார் காமத்தியல்பு கூறுவாள் போன்று, தன் காமம் பெருகியவாறும் இனி அறத்தொடு நிற்றல் வேண்டுமென்பதும் குறிப்பாற் கூறியவாறு. 'என்னாது' என்பது முன்னும் கூட்டி மகளிர் என்பது வருவித் துரைக்கப்பட்டது. இது அம்பலின் பிற்பட்ட போதுநிலை, காப்புச்சிறையாவது தலைமகள்மீது ஐயுற்ற செவிலியும் நற்றாயும் அவளை வீட்டைவிட்டு வெளி யேறாவாறு காவல் செ-தல்.

***1139. அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காம***
***மறுகின் மறுகு மருண்டு.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** என் காமம் - எனது காமம்; எல்லாரும் அறிகிலார் என்று - யான் இதுவரை அடங்கி நின்றதால் எல்லாரும் என்னை அறிந்திலர், இனிமேல் அவ்வாறிராது நானே வெளிப்பட் டறிவிப்பேனென்று எண்ணி; மறுகில் மருண்டு மறுகும் - இவ்வூர்ப் பெருந்தெருவெல்லாம் மயங்கிச் சுழலும்.

மயங்குதல் அலரத் தொடங்குதல்; மறுகுதல் அலராதல். இனி அறத் தொடு நிற்றல் வேண்டும் என்பது குறிப்பு. அறிவிலார் என்பதும் பாடம்.

**1140. யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.**

*(செவிலிக் கறத்தொடு நின்றுவைத்து, யான் அறத்தொடு நிற்குமாறு எங்ஙனமென்று நகையாடிய தோழியொடு புலந்து, தலைமகள் சொல்லியது.)*

**(இ-ரை.)** அறிவு இல்லார் - அறிவிலாதார்; யாம் பட்ட தாம் படா ஆறு - யாம் பட்ட நோ-களைத் தாம்பட்டு அறியாமையால்; யாம் கண்ணின் காண நகுப - யாம் காதாற் கேட்குமாறு மட்டுமன்றிக் கண்ணாலுங் காணுமாறு எம்மை நகையாடுவர்.

தோழி அறத்தொடு நின்றமையை அறியாது புலக்கின்றாளாதலின், அவளை அயலாளாக்கிக் கூறினாள். 'கண்ணிற் காண' என்றது முன் கண்டறியாமை யுணர்த்தி நின்றது. இது சேட்படுத்தி நகையாடிய தோழிக்குத் தலைமகன் கூறியதாகவுங் கொள்வர். தலைமகன் கூற்று முன்னரே ஏழாங் குறளொடு முடிந்துவிட்டமையாலும், தோழியின் துணையை இன்றியமையாத தாகக் கொண்ட தலைமகன் அவளை அறிவில்லாளென்று பழித்தல் இயல்பன்மை யானும், அது பொருந்தாதென்க.

## அதி. 115 - அலரறிவுறுத்தல்

*அதாவது, களவொழுக்கத்தை விரும்பிய தலைமகன் பிறர் கூறும் அலர் தனக்கு நன்மையாக முடிவதைத் தோழிக்கு அறிவுறுத்தலும் வரைவேனும் உடன்போக்கேனும் வேண்டிய தலைமகளும் தோழியும் அவ் வலரைத் தலைமகனுக்கு அறிவுறுத்தலுமாம். இது நாணுத் துறந்தவிடத்து நிகழ்வதாகலின் நாணுத் துறவுரைத்தலின் பின் வைக்கப்பட்டது.*

**1141. அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாக்கியத் தால்.**

*(அல்லகுறிப் பட்டபின் வந்த தலைமகனைத் தோழி அலரறிவுறுத்தி வரைவு கடாயவிடத்து, அவன் சொல்லியது.)*

**(இ-ரை.)** அலர் எழ ஆருயிர் நிற்கும் - என் காதலியோடு எனக்குள்ள தொடர்பு அலரா யெழுகின்றதனால், அவளைப் பெறாது வருந்தும் என் அருமை யான வுயிர் அவளைப் பெற்றது போன்று மகிழ்ந்து நிலைபெறும்; அதனைப் பாக்கியத்தால் பலர் அறியார் - அவ் வுண்மையை என் நற்பேற்றி னால் அலர் கூறும் பலரும் அறியார்.

அல்லகுறிப் படுதலாவது, இரவுக்குறிக் காலத்தில் தலைமகன் வரவறிவிக் குங் குறி தற்செயலாக நிகழ்ந்து, தோழியுந் தலைமகளுஞ் சென்று தலை மகனைக் காணாது திரும்புதல்.

உயிரினுஞ் சிறந்ததொன் றின்மையான் 'ஆருயிர்' என்றும்; தன் காத லியைப் பெறாமையால் அவ் வாருயிர் மிகத் துன்புற்று நீங்கும் நிலையி லிருந்தபோது, அலரெழுந்து பெறற்கரியவளை எளியளாக்கி அவளைப் பெறு தற்குத் துணையாக நின்றமையின், 'அலரெழ வாருயிர் நிற்கும்' என்றும்; அதை அலர் கூறுவார் அறிந்திருப்பின் அது கூறாராதலானும், அதனால் உயிர்போ மாதலானும் அங்ஙனம் போகாது தடுக்கின்ற அவரறியாமை தனக்கு நற்பே றாக (Blessing in disguise) வா-ந்ததென்றும்; கூறினான். முற்றும்மை செ-யுளால் தொக்கது.

***1142. மலரன்ன கண்ணா ளருமை யறியா***
***தலரெமக் கீந்ததிவ் வூர்.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** மலர் அன்ன கண்ணாள் அருமை அறியாது - குவளை மலர் போலுங் கண்ணையுடையாளைப் பெறுதற் கருமையை அறியாது; இவ்வூர் எமக்கு அலர் ஈந்தது - இவ் வூரார் அவளை எளியளாக்கி என்னொடு தொடர்பு படுத்தும் அலரை எனக்கு அளித்துதவினர்.

'அருமை' அல்லகுறிப் பாட்டாலும் பல்வேறு இடையீடுகளாலும் தடைகளாலும் நேர்ந்தது. ஆருயிரளித்த பேருதவிபற்றி 'ஈந்தது' என்றான். 'ஊர்' வரையறுத்த ஆகுபெயர்.

***1143. உறாஅதோ வூரறிந்த கௌவை யதனைப்***
***பெறாஅது பெற்றன்ன நீர்த்து.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** ஊர் அறிந்த கௌவை உறாதோ - யானும் என் காதலியு மாகிய எங்கட்குக் கூட்டமுண்மை இவ் வூரார் அறிதலால் விளைந்த அலர் எனக்கு ஏற்ற தொன்றன்றோ! அதனைப் பெறாது பெற்ற அன்ன நீர்த்து - அதைக் கேட்ட நான், அக் கூட்டத்தை இன்று பெறாதிருந்தும், பெற்றாற் போல இன்புறு தற் கேதுவான தன்மையை அவ் வலர் உடைத்தாகலான்.

கௌவை நீர்த்து என இசையும். பரிமேலழகர் போல் மனமென்னும் வினைமுதலை வருவிக்கத் தேவையில்லை. 'உறா அதோ', 'பெறா அது' இசை நிறை யளபெடைகள்.

**1144. கவ்வையாற் கவ்விது காம மதுவின்றேற்
றவ்வென்னுந் தன்மை யிழந்து.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** காமம் கவ்வையால் கவ்விது - என் காமம் இவ் வூரார் எடுத்த அலராலே அலர்தலைக் கொண்டுள்ளது; அது இன்றேல் தன்மையிழந்து தவ்வென்னும் - அவ் வலரில்லையாயின் சுவையிழந்து சப்பென்றிருக்கும்.

கவை - கவ்வை = பிளப்பு, பிரிவு, மலர்வு, அலர். கவ்வை - கவ்விது. அலர்தல் அலர்க் கூற்றுப் பரவுதலும் காமம் வளர்தலும். 'தன்மை' இன்பம் பயத்தல். தவ்வுதல் - தாழ்தல். ஏதேனுமொரு பாடத்துறையில் மாணவர் தாழ்வாயிருப்பதைத் தவ்வல் என்பது நெல்லைநாட்டு வழக்கு.

**1145. களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** களித்தொறும் கள் உண்டல் வேட்ட அற்று - கட்குடியர்க்குக் கள்ளுண்டு வெறிக்குந்தோறும் அக் கள் விருப்பமாதல் போல; காமம் வெளிப் படுந்தோறும் இனிது - காமவின்பர்க்கு அலர் பரவுந்தோறும் அக் காமம் இனிதாகின்றது.

வேட்டற்று என்பது வேட்கப்பட்டற்று என்னும் செயப்பாட்டு வினைப் பொருளது. 'ஆல்' அசைநிலை. காமமிகுதியால் அலரும் இன்பந்தருகின்றது என்பதாம்.

**1146. கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று.**

*(அல்ல குறியாலும் இடையீடுகளாலும் தலைமகனைத் தலைக்கூடப் பெறாத தலைமகள், அவன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளா- அலரறிவுறுத்தி வரைவு கடாயது.)*

**(இ-ரை.)** கண்டது ஒரு நாள் - யான் என் காதலரைக் கண்ணுறப் பெற் றது ஒரு வேளையே; அலர் திங்களைப் பாம்பு கொண்ட அற்று - ஆனால் உண்டான அலரோ, நிலாவைக் கரும்பாம்பு கௌவின செ-தி போல, உலக மெங்கும் பரவியுள்ளது.

காட்சிக்கும் இடமில்லாதபோது இங்ஙனம் வீணாக அலர் பரவும் இக் களவொழுக்கத்தை உடனே விட்டுவிட்டு, வரைந்து கொள்ளுதல் வேண்டும் என்பதாம். 'பாம்புகொண்டற்று' எனக் கருமியத்தைக் கரணியமாகச் சார்த்திக் கூறினாள். கதிரவன் மறைவைக் கேது என்னும் செம்பாம்பு கௌவலாகவும், திங்கள் மறைவை இராகு என்னும் கரும்பாம்பு கௌவலாகவும், கருதியது பண்டைக் குருட்டு நம்பிக்கை. சே - சேது - கேது. இர் - இரா - இராவு - இராகு. மன்னும் உம்மும் ஈரிடத்தும் அசைநிலை யென்பர். இடையீடுகள் நிலா வெளிப்படுதலும் நா-குரைத்தலும் ஊரார் விழாக்கொண்டாடுதலும் போல் வனவற்றால் நிகழ்வன. சிறைப்புறம் வேலிக்கு வெளிப்பக்கம்.

**1147. ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொன்**
**னீராக நீளுமிந் நோ-.**

*(தலைமகன் சிறைப்புறத்தானாத லறிந்த தோழி, வரைவு காலந்தாழ்த்தலை ஆற்றாளான தலைமகளிடம் ஊரார் அலரும் அன்னை சொல்லும் நோக்கி ஆற்றல் வேண்டுமென்று சொன்னவிடத்து, அவள் சொல்லியது.)*

**(இ-ரை.)** இந் நோ- - இக் காம நோயாகிய பயிர்; ஊரவர் கௌவை எரு வாக அன்னை சொல் நீராக நீளும் ... இவ் வூர்மகளிர் எடுக்கின்ற அலரை எரு வாகவும், அது கேட்டு அன்னை கடிந்து கூறும் வெஞ்சொல்லை நீராகவும் கொண்டு வளர்கின்றது.

நோயைத் தணிக்க வேண்டிய ஏதுக்கள் அதை வளர்த்தே வருகின்றன என்பதாம். தலைமகன் விரைந்து வரைவானாதல் கருதிய பயன். 'ஊரவர்' இங்கு ஆணொழி பொதுச் சொல். நோயைப் பயிரென்று உருவகியாமையால் இது ஒருமருங் குருவகம்.

**1148. நெ-யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற்**
**காம நுதுப்பே மெனல்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** கௌவையால் காமம் நுதுப்பேம் எனல் - அயலாரும் பகை வரும் எடுக்கின்ற அலரால் நாம் காமத்தை அவித்துவிடுமோமென்று கருதுதல்;

நெ-யால் எரி நுதுப்பேம் என்ற அற்று - நெ-யை வார்த்து நெருப்பை அவிப்போமென்று கருதுவதை யொக்கும்.

வளர்க்குங் கரணம் தளர்க்குங் கரணமாகாது என்பதாம். 'ஆல்' அசை நிலை.

**1149. அலர்நாண வொல்வதோ வஞ்சலோம் பென்றார்**
**பலர்நாண நீத்தக் கடை.**

*(வரைவிடை வைத்துப் பிரிவின்கண் ணாற்றாளாகிய தலைமகள்*
*அவன் வந்து சிறைப்புறத்தானாத லறிந்து, அலரஞ்சி யாற்றல்*
*வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது,*

**(இ-ரை.)** அஞ்சல் ஓம்பு என்றார் பலர் நாண நீத்தக் கடை - தலைநாளில் தம்மை எதிர்ப்பட்ட போதே, நான் உன்னைவிட்டு ஒரு போதும் பிரியேன்; ஆதலால் நீ அஞ்சுதலை விட்டுவிடு என்று தேற்றியவர் தாமே, இன்று கண்டார் பலரும் நாணும்வகை நம்மைத் துறந்தபின்; அலர்நாண ஒல்வதோ - அய லார் கூறும் அலருக்கு நாம் நாணக் கூடுமோ? கூடாதே!

கண்டார் நாணும் நிலைமையிலுள்ள நாம் நாணுதற்கு வழியேது என்ப தாம்.

**1150. தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டுங்**
**கௌவை யெடுக்குமிவ் வூர்.**

*(தமைகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச்*
*சொல்லுவாளா- அலரறிவுறுத்தி, அவன் வரைந்துகொள்ளவேனும்*
*உடன்போக்கு உடம்படவேனும் சொல்லியது.)*

**(இ-ரை.)** யாம் வேண்டும் கௌவை இவ் வூர் எடுக்கும் - வரைவிற்கு அல்லது, உடன்போக்கிற்கு ஏதுவாதல் நோக்கி நாம் முன்பே விரும்பிய அலரை இவ்வூர் இன்று தானே எடுத்துள்ளது; காதலர் தாம் வேண்டின் நல் குவர் - இனி நாம் நம் காதலரை வேண்டின், அவரும் வரைந்து கொள்ள வேனும் உடன்கொண்டு செல்லவேனும் மகிழ்ந்து உடன்படுவர்.

நம்பாற் காதலுடைமையின் மறார் என்பது தோன்றக் 'காதலர்' என்றார். எச்சவும்மை செ-யுள் நடையால் தொக்கது. 'ஊர்' ஆகுபெயர். இதனாற் கற் பொழுக்க வாழ்க்கைக்குத் தோற்றுவா- செ-யப்பட்டது.

நள்ளிரவில் தலைமகன் தன்னந்தனியாகக் காட்டுவழியா-த் தலைமகளூர்க்கு வந்து மீள்தல் பல்வகையில் உயிரச்சமுடையதாதலாலும், தற்செயலாக நேரும் பல்வேறு தடைகளால் கூட்டம் நிகழாது துன்பம் மிகுதலாலும், ஆடவன் வினைசெ-யாது நீண்ட காலம் காமவின் பத்திலேயே கழித்தல் இயலாதாகையாலும், பெண்ணின் கருப்பையிற் கருவுற்றுவிடின், அதை மறைத்தல் கூடாமையாலும், அலரெழுந்து, பரவுவதைத் தடுக்க முடியா தாகையாலும், களவொழுக்கக் காலம் சிற்றெல்லை ஒருநாளும் பேரெல்லை (பகற்குறி ஒரு மாதமும் இரவுக்குறி ஒரு மாதமுமாக) இரு மாதமுமாகவே யிருக்க முடியும். அதன் முடிவில் தலைமகன் தன் பெற்றோரைக் கொண்டு மணம் பேசுவித்துத் தன் காதலியை வரைந்து கொள்வன். அதற்கு அவள் பெற்றோர் இசையாவிடின் அவளை உடன்கொண்டு சென்று மணப்பன். இது அவ் விருவர்க்கும் கற்பறமாம். இதுவே தமிழப் பண்பாடு.

“வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீ ரிவ்விடை
யென்மக ளொருத்தியும் பிறண்மக னொருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய
ரன்னா ரிருவரைக் காணீரோ பெரும!
காணே மல்லேங் கண்டனங் கடத்திடை
யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
மாணிழை மடவரல் தாயிர்நீர் போறீர்;

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதா மென்செ—யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே;

சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செ—யுந்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே

ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பானும் யாழ்க்கவைதா மென்செ—யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே;
எனவாங்கு,
இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலை பிரியா வாறுமற் றதுவே” (கலித். 8)

என்னுஞ் செ-யுளினின்று தமிழ்க் கற்பின் தன்மையை அறிந்துகொள்க.

ஒருமனை மணமே (Monogamy) தமிழர் பண்பாடாதலானும், களவுக் கூட்டம் எத்துணை யின்பஞ் சிறப்பினும் பின்னர்க் கற்பாக மாறவேண்டியிருத் தலானும், நெடுகலுங் களவைக் கையாளக் கூடாமைபற்றியே "களவுங் கற்று மற" என்னும் பழமொழியும் எழுந்ததென்க.

***களவியல் முற்றிற்று.***

## 2

# கற்பியல்

கற்பியலாவது, களவொழுக்கம் ஒழுகிய மெ-யுறு புணர்ச்சியரும் அஃதில்லா உள்ளப் புணர்ச்சியரும், வெளிப்படையாகக் கூடிவாழும் இல்லற வாழ்க்கையைப்பற்றிக் கூறும் பாற்பகுதி. கற்பாவது ஒருவரையுங் காதலி யாமையும் காதலிப்பின் எதிர்ப்பாலருள் ஒருவரையே காதலிப்பதும் ஆகும். அது கற்போல் திண்ணிய பண்பாதலின் கற்பெனப்பட்டது.

*"கற்பென்னுந் – திண்மையுண் டாகப் பெறின்"* **(குறள். 54)**

*"கல்லொடு தொடர்ந்த நெஞ்சங்*
*கற்பின்மேற் கண்ட துண்டோ"* **(கம்பரா. சுந்தர. நிந்தனை. 39)**

*"கற்பு றுத்திய கற்புடை யாடனை"* **(மேற்படி அயோத்தி. நகர்நீங்கு. 16)**

என்று கம்பர் கூறுதல் காண்க. கற்பென்பது இருபாற்கும் பொதுவாதலாலும் மணஞ்செ-யு முன்பே அமைந்திருத்தலாலும் 'கொண்டானிற் சிறந்த தெ-வம் இன்றெனவும் அவனை இன்னவாறே வழிபடுக'வெனவும் இருமுது குரவர் கற்பித்தலானும், 'அந்தணர் திறத்துஞ் சான்றோர் தேஎத்தும்', "ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்" (தொல். பொருள். 146) ஒழுகும் ஒழுக்கந் தலைமகன் கற்பித்த லாலுங் கற்பாயிற்று. இனித் தலைவனுங் களவின்கண் ஒரையும் நாளுந் தீதென்றதனைத் துறந்தொழுகினாற்போல ஒழுகாது ஒத்தினுங் கரணத்தினும் யாத்த சிறப்பிலக்கணங்களைக் கற்பித்துக்கொண்டு துறவறத்திற் செல்லுந் துணையும் இல்லற நிகழ்த்துதலிற் கற்பாயிற்று." (தொல்.கற்பு. உரை) என்று நச்சினார்க்கினியர் கூறியிருப்பது ஆரியக் கருத்தேயன்றித் தமிழக் கருத்தன்று. மணமகளுக்குப் பணிவிடைபற்றிக் கற்பிப்பதெல்லாம் அறிவுரையேயன்றிக் கற்புரையன்று. இல்லறத்தாரெல்லாரும் இறுதியில் துறவறஞ் செல்லவேண்டு மென்பதும் தமிழர்க் குரியதன்று.

கற்பொழுக்கம் என்னும் இல்லற வாழ்க்கை களவின்வழிப் பட்டதும் வழிப்படாததும் எனும் இருதிறத்தது. களவின்வழிப் பட்டதும், காதலியை வரைந்துகொண்டதும் உடன்கொண்டு சென்றதும் என இருவகைத்து. வரைந்துகொண்டதும், வெளிப்படுமுன் வரைந்ததும் வெளிப்பட்டபின் வரைந்ததும் என இரு நிலைமைத்து. இனி, இல்லற வாழ்க்கையும், கரணம் என்னும் ஒப்பந்த அல்லது வாழ்த்துச் சடங்கொடு தொடங்குவதும் அஃதின்றித் தொடங்குவதும் என இரு மரபினதாம். கரணச் சடங்கு அவரவர் பொரு ளாட்சி நிலைமைக்கேற்ப விழாவொடு கூடியதும் கூடாததுமாக விருக்கும். இவற்றுள் முன்னது கொட்டுத் திருமணம் என்றும், பின்னது கட்டுத்தாலி யென்றும் சொல்லப்பெறும்.

*"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்*
*கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்*
*கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே"* **(தொல். கற்பு. 1)**

*"கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே*
*புணர்ந்துடன் போகிய காலை யான."* **(தொல். கற்பு. 2)**

திருவள்ளுவர் சொற்களை மட்டுமன்றிப் பொருள்களையுஞ் சுருங்கச் சொல்கின்றாராதலின், பெற்றோர்க்குச் சிறிது காலம் பெருந்துயர் விளைக்கும் உடன்போக்கையும், இடைவகுப்பார்க்கும் எளியார்க்கும் கைக்கு மிஞ்சிய செலவையுங் கடனையும் நேர்விக்குங் கரணவிழாவையும், ஆங்காங்குக் குறிப்பாகவன்றி வெளிப்படையாகச் சொல்லியிலர்.

இனி, தமிழ்க் களவுமணம் ஆரியக் காந்தருவத்தை யொக்குமென்று தொல்காப்பியர் கூறியதைப் பற்றுக்கோடாகக் கொண்டு,

*"முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே*
*பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே"* **(தொல். களவு. 14)**

என்னுந் தொல்காப்பிய நூற்பாவிற் குறிக்கப்பட்டுள்ள 'முன்னைய மூன்றும்' அசுரம் இராக்கதம் பைசாசம் என்றும், 'பின்னர் நான்கும்' பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெ-வம் என்றும், உரையாசிரியரெல்லாரும் மயங்கியுரைப்பா ராயினர். அசுரம் என்பது கைக்கிளையாகத் தொடங்கினும் இருதலைக் காம மாகவும், மாறலாமாதலானும், இராக்கதமும் பைசாசமும் பெருந்திணையாத லானும் பிரமம் முதலிய நான்கும் கைக்கிளையாகவோ இருதலைக் காம மாகவோ தானிருக்க

*முடியுமாதலின் ஒருவகையினும் பெருந்திணையாகாமை யானும், தமிழ மணமுறையை ஆரிய மணமுறையொடு ஒப்பு நோக்குவது ஒருசிறிதும் பொருந்தாதெனக் கூறி விடுக்க.*

*இக் கற்பியலை ஆசிரியர் பதினெண் ணதிகாரத்தாற் கூறத்தொடங்கி, முதற்கண் பிரிவாற்றாமை கூறுகின்றார்.*

## அதி. 116 - பிரிவாற்றாமை

*அதாவது, காதலன் காதலியை வரைந்துகொண்ட பின், தலைமகள் இல்லத்திலிருக்கத் தலைமகன் அறம்பொருள்பற்றித் தன் தொழிற்கேற்ப ஒரு வினைமேற்கொண்டு ஆயிடையுஞ் சேயிடையும் பிரிந்து செல்லுங்கால், அவள் அப் பிரிவைப் பொறாதிருத்தல். அது பிரிவுணர்த்திய தலைமகனுக்குத் தோழி கூறல், அவளுக்குத் தலைமகள் தானே அவன் குறிப்பறிந்து கூறல், பிரிவுணர்த்திய விடத்துக் கூறல். பின் ஆற்றுவிக்குந் தோழிக்குத் தலைமகள் மறத்துக்கூறல் என நால்வகையாற் கூறப்படும்.*

*இஃது அறநூலாதலால், இலக்கண நூல்களிலுங் கோவைகளிலுங் கூறப் படும் பரத்தையிற் பிரிவு இங்கு விலக்கப்பட்டதாம். இதையறியாது “அறம் பொரு ளின்பங்களின் பொருட்டு” என இன்பத்தையுஞ் சேர்த்துக் கூறினார் பரிமேலழகர். கற்பொடு பொருந்தாத பிறனில் விழைதல் அறத்துப் பாலிலும், வரைவின் மகளிர் தொடர்பு பொருட்பாலிலும், கூறி விலக்கப் பட்டமை காண்க. புலவிமுதலிய மூன்றதிகாரங்களிலுங் கூறப்பட்டுள்ள பரத்தைமைக் குறிப்புக ளெல்லாம், தலைமகள் தன் மடமையால் தலைமகன்மீது ஏற்றிக்கூறிய இட் டேற்றமேயன்றி வேறல்லவென்க.*

*பிரிவு தூது, போர், சந்துசெ-தல், நாடுகாவல், பொருளீட்டல் என நோக்கம்பற்றிப் பலதிறப்படும். ஆரிய வேதமும் அதன் வழிப்பட்ட நூல் களுங் கற்கச்செல்லும் ஓதற்பிரிவு தமிழருக்குரியதன்று. ‘வேந்தற் குற்றுழி’ என் னும் வேளாண் தலைவர் வேளிர் பிரிவும், ‘வேந்துவிடு தொழில்’ என்னும் வேளாளர் பிரிவும், போருள் அடங்கும்.*

***1151.*** **செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க் குரை.**

*(பிரிந்து கடிதில் வருவேனென்ற தலைமகனுக்குத் தோழி சொல்லியது.)*

**(இ-ரை.)** செல்லாமை உண்டேல் எனக்கு உரை - தலைவ! நீ எம்மை விட்டுப் பிரியாமை யுண்டாயின் எனக்கு அதைமட்டும் சொல்; மற்றுநின் வல்

வரவு வாழ்வார்க்கு உரை - இனி, நீ பிரிந்துபோ- விரைந்து வருதல் சொல்வா யாயின், அதை நீ வரும்வரை ஆற்றியிருந்து உயிர் வாழ்வார்க்குச் சொல்.

தலைமகள் நீ திரும்பி வரும்வரை ஆற்றியிருப்பவ ளல்லள், நீ பிரிந்த பொழுதே இறந்துவிடுவாள் என்பதாம். இதனாற் செலவழுங்குவித்தல் பயன். அஃதாவது தலைமகளை யாற்றுவித்து ஓரிரு நாள் கழித்துப் பிரியச் செ-தல். தலைமகளொடு தனக்குத் தான் அவள் என்னும் வேற்றுமையின்மையால் 'எனக்கு' என்றாள். இது இல்லறத்தில் முதன்முதல் நிகழ்ந்த பிரிவாதலால், தலைமகளின் மென்மை நோக்கி நேர்முகமா-க் கூறானாயினன். இது தலை மகள் தோழிக்குக் கூறிய கூற்றாக வுரைப்பர் மணக்குடவ காலிங்க பரிதிபரிப் பெருமாளர். இது முன்ன விலக்கு.

### *1152.* இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு.

*(தலைமகனது குறிப்பாற் பிரிவுணர்ந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** அவர் பார்வல் இன்கண் உடைத்து - களவொழுக்கக் காலத்தில் நம் காதலர் தழையுங் கண்ணியுங் கொண்டு வந்து நம்மைக் குறை யிரந்த பொழுது, அவர் பார்வைகூடப் புணர்ச்சி குறித்தமையால் நமக்கு இன்பந் தருவதா யிருந்தது; புணர்வு பிரிவு அஞ்சும் புன்கண் உடைத்து - ஆனால் இன்று அப் புணர்ச்சியே நிகழ்ந்து வரவும், அது பிரிவர் என்னும் அச்சத்தைத் தருவதாக வுள்ளது. என்னே காமவின்பத்தின் நிலைமாற்றம்!

'பார்வல்' என்றதனால் பாங்கியிற் கூட்டத்திற்குமுன்பு இரந்து பின்னின்ற நிலையென்பது பெறப்பட்டது. புன்கண் துன்பம். அது இங்கு அதனால் விளையும் அச்சத்தைக் குறித்தது. அச்சத்தை யுடைத்தாதலாவது முன்னினுஞ் சிறப்பாக அன்பு பாராட்டிப் பிரிவுக் குறிப்பைக் காட்டுதல் அது.

**"முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறுந் தீநீரைக்**
**கள்ளினு மகிழ்செ-யு மெனவுரைத்து மமையாரென்**
**னொள்ளிழை திருத்தும்"** **(கலித். 3)**

என்றாற் போல்வது. 'ஆல்' அசைநிலை.

### *1153.* அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்.

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** அறிவு உடையார் கண்ணும் - உன்னிற் பிரியேனென்று தாம் உரைத்த சொல்லை மறவாதும், நம் பிரிவாற்றாத் தன்மையை நன்றாக அறிந்துமுள்ள காதலரிடத்தும்; ஓர் இடத்துப் பிரிவு உண்மையான் - ஒரொரு சமையத்துப் பிரிவு நிகழ்தலால்; தேற்றம் அரிது - அவர் இன்சொல்லும் பேரன்புச் செயலும்பற்றி, நம்பாற் பிரியாத அன்புடையரெனத் தெளியும் உறுதி அரிதா யிருந்தது.

'அரோ' அசைநிலை. உம்மை உயர்வுசிறப்பு.

***1154.*** ***அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்***
***றேறியார்க் குண்டோ தவறு.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** அளித்து அஞ்சல் என்றவர் நீப்பின் - தலைநாளில் எதிர்ப் பட்டபோதே பேரன்பு செ-து, நின்னிற் பிரியேன், அஞ்சேல் என்று தேற்றி யவர் தாமே பின் மாறாகப் பிரிவராயின்; தெளித்த சொல் தேறியார்க்குத் தவறு உண்டோ - அவரிடத்தன்றி அவர் தெளிவித்த சொல்லை மெ-யென்று நம்பியவரிடத்துக் குற்றமுண்டோ?

சொன்னதை நிறைவேற்றாமைக் குற்றம் அவரிடத்துத் தங்காவாறு செல வழுங்குவி என்பது கருத்து. 'தேறியார்' என்பது தன்னைப் பிறர்போற் கூறிய தன்மைப் படர்க்கை. ஓகாரவினா எதிர்மறைக் குறிப்பினது.

***1155.*** ***ஓம்பி னமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்***
***நீங்கி னரிதாற் புணர்வு.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** ஓம்பின் அமைந்தார் பிரிவு ஓம்பல் - தோழீ! நீ என்னுயிரைப் பேணிக் காப்பாயாயின், அதற்கு இன்றியமையாத் துணைவராக அமைந்த வரின் பிரிவு நேராமற் காப்பாயாக; மற்று அவர் நீங்கின் புணர்வு அரிது - பின்பு அவர் செலவழுங்குவாரின்றிச் சென்றுவிடின், என் உயிருஞ் சென்றுவிடும்; அதன் பின் அவரைக் கூடுதல் எனக்கு அரிதாம்.

'அமைந்தார்' என்னுஞ் சொல் இறைவன் ஏற்பாட்டின்படி அமைந்தவர் என்னுங் குறிப்பினது. (ஒ.நோ: "Marriages are made in Heaven.") 'மற்று' பின்மை அல்லது வினைமாற்றுப் பொருளில் வந்தது.

### *1156. பிரிவுரைக்கும் வன்கண்ண ராயி னரிதவர்*
### *நல்குவ ரென்னும் நசை.*

*(தலைமகன் பிரிவுணர்த்தியதைத் தெரிவித்த தோழிக்குத் தலைமகள் சொல்லியது.)*

**(இ-ரை.)** அவர் பிரிவு உரைக்கும் வன்கண்ணராயின் - என் காதற் பெருக்கையுங் கவவுக்கை யிறுக்கையும் கண்டறிந்த தலைவர் தாமே, நம் முன் நின்று தம் பிரிவையுணர்த்தும் வன்னெஞ்சராயின்; நல்குவர் என்னும் நசை அரிது - அத் தன்மையர் பின்பு நம் ஆற்றாமையறிந்து வந்து பேரன்பு செ-வரென்னும் ஆசையை விட்டுவிட வேண்டியதுதான்.

இது தலைமகள் தன் இளமையினாலும் இல்லறத் தொடக்க நிலையினாலும், பொருளின் இன்றியமையாமையையும் ஆடவர் கடமையையும் உணராது காதலொன்றையே கருதிக் கூறிய கூற்றாகும். அருமை பெரும்பாலும் நிறைவேறாமை. செலவழுங்குவித்தல் பயன்.

### *1157. துறைவன் றுறந்தமை தூற்றாகொன் முன்கை*
### *யிறையிறவா நின்ற வளை.*

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** துறைவன் துறந்தமை - தலைவன் என்னைவிட்டுப் பிரிந்தமையை; முன்கை இறை இறவா நின்ற வளை தூற்றாகொல் - அவனுணர்த் தாமல் தாமே யுணர்ந்து என் முன்கையின் வளைவினின்று கழன்று நின்ற வளையல்களே எனக்கு அறிவியாவோ? நீ அவன் வா-ச்சொல்லால் அறிவிக்க அறிந்து வந்து எனக்கு அறிவிக்க வேண்டுமோ?

பிரிந்து செல்ல முன்னமே தீர்மானித்துவிட்டமையால் 'துறந்தமை' யென்றும், குறிப்பாலறிந்து வாடிய வாட்டத்தால் வளை கழன்றமையால் 'இறவா நின்ற வளை' யென்றும், பலரறிய வெளிப்படையா- நிகழ்ந்தமையால் 'தூற்றா கொல்' என்றுங் கூறினாள். செலவழுங்குவித்து எனக்குத் துணையா யிராது, செலவு நிகழ்ந்ததைக் கூறித் துன்பஞ் செ-தா- என்று புலந்து கூறிய வாறு. 'வளை' பால்பகா அஃறிணைப் பெயர்.

### *1158. இன்னா தினனில்லூர் வாழ்த லதனினு*
### *மின்னா தினியார்ப் பிரிவு.*

**(இ-ரை.)** இனன் இல்லா ஊர் வாழ்தல் இன்னாது - மகளிர்க்குக் குறிப் பறிந்துதவும் உறவினர் போன்ற தோழியர் இல்லாத வேற்றூரில் வாழ்தல் துன்பந்தருவதாம்; இனியார்ப் பிரிவு அதனினும் இன்னாது - இனி, தமக்கு இனிய காதலரைவிட்டுப் பிரிவதோ, அதனினும் மிகத் துன்பந் தருவதாம்.

தலைவனைச் செலவழுங்குவியாது செலவுடம்பட்டு வந்தமைபற்றித் தோழியொடு புலக்கின்றாளாதலின், 'இனனில்லூர்' என்றாள். இருவகைத் துன்ப முந் தனக்குண்மையை உலகியல்மேல் வைத்துக் கூறியவாறு.

***1159. தொடிற்சுடி னல்லது காமநோ- போல***
***விடிற்சுட லாற்றுமோ தீ.***

*(காமம் தீப்போன்று தான் நின்ற விடத்தைச் சுடுமாதலால்*
*நீ ஆற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** தீத் தொடிற் சுடின் அல்லது - தீத் தன்னைத் தொட்டாற் சுடுமே யல்லது; காமநோ- போல விடின் சுடல் ஆற்றுமோ - காமநோ- போலத் தன்னைவிட்டு நீங்கினுஞ் சுடவல்லதோ? இல்லையே!

பரிமேலழகர் "தீத் தொடிற் சுடலல்லது" எனச் சுடல் என்பதை முன்னுங் கூட்டி, "தீத் தன்னைத் தொட்டாற் சுடுமாயிற் சுடுதல்லது" என்று உரையும், "சுடுமாயி னென்பது மந்திர மருந்துகளாற் றம்பிக்கப்படாதாயி னென்றவாறு. காமத்திற் கதுவுமில்லையென்பாள் வாளா 'சுடல்' என்றாள்" என்று சிறப்புங் கூறினார். தீவலிகட்டல் செயற்கையாதலானும், காமநோயையும் ஓகத்துயிலால் (யோகநித்திரையால்) கட்டலாமாதலானும், அது அத்துணைச் சிறந்ததன்று. விடுதல் கருதாமை. தீயினுங் கொடியதை எங்ஙனம் ஆற்றவொண்ணு மென்பதாம்.

***1160. அரிதாற்றி யல்லனோ- நீக்கிப் பிரிவாற்றிப்***
***பின்னிருந்து வாழ்வார் பலர்.***

*(பிரிவாற்றியிருக்குந் தலைவியரும் பலருளர்; நீ அது*
*செ-கின்றிலை யென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** (ஆம். நீ சொல்லுவ துண்மைதான்.) அரிது ஆற்றி - பிரி வுணர்த்திய போது அதற்குடம்பட்டு; அல்லல் நோ- நீக்கி - பிரியுங்கால் நிகழும்

துன்பநோயைப் பொருட்படுத்தாது; பிரிவு ஆற்றி - பிரிவு நிகழ்ந்தால் அப் பிரிவையும் பொறுத்துக்கொண்டு; பின் இருந்து வாழ்வார் பலர் - அதன் பின்னும் உயிர் வாழும் மகளிர் உலகத்துப் பலராவர்.

முன்னும் பன்மடங்கு சிறப்பாகத் தலைமகன் பேரன்பு செ-யும் நிலைமைக்கண், அதையிழந்து துன்புறுதற் குடம்படுதல் அரியதொன்றாகலின், 'அரிதாற்றி' என்றும்; செல்லும் வழியிலும் நாட்டிலும் தலைவருக்கு என்ன தீங்கு நேருமோவென்றும், அவர் வருமளவும் யாம் ஆற்றியிருப்பதெவ்வா றென்றும், அவ் வரவுதான் என்று நிகழுமோவென்றும், மனத்திலெழுங் கவலை நீங்கா தாகலின் 'அல்லனோ- நீக்கி' யென்றும், பிரிந்தபின் வருமளவும் உள்ளத்து நிகழுங் காமநோயையும், அதை வளர்க்கும் யாழிசை வெண்ணிலா தென்றல் வீச்சு முதலியவற்றையும். தாங்குதல் அரிதாகலின் 'பிரிவாற்றி'யென்றும் தம் காதலரையின்றியமையா மகளிருள், இவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு பின்னுமிருந்து உயிர்வாழ்வார் ஒருவருமிரார் என்பது தோன்றப் பகடிக் குறிப்பாகக் 'பின்னிருந்து வாழ்வார் பலர்' என்றுங் கூறினாள். 'ஆற்றி', 'நீக்கி', 'ஆற்றி' என்னும் எச்சங்கள், துன்பத் தொடர் நீட்சியையும் அதன் கடுமையை யும் உணர்த்தி நின்றன. சிறப்பும்மையும் எச்சவும்மையும் செ-யுள் நடையால் தொக்கன.

## அதி. 117 - படர்மெலிந்திரங்கல்

*அதாவது, பிரிவாற்றாளாகிய தலைமகள், தானுறுகின்ற துன்பத்தை இடைவிடாது நினைத்துக்கொண்டிருத்தலால் மெலிந்து வருந்துதல். படர்தல் உள்ளுதல்.*

***"படரே யுள்ளல் செலவு மாகும்."*** **(தொல். உரி. 42)**

***1161. மறைப்பேன்மன் யானிஃதோ நோயை யிறைப்பவர்க்
கூற்றுநீர் போல மிகும்.***

*(காமநோயை வெளிப்படுத்தல் நின் நாணுக்குத் தகாதென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** நோயை யான் மறைப்பேன் - இக் காமநோயைப் பிறர் அறியா வாறு யான் மறைப்பேன்; இஃதோ இறைப்பவர்க்கு ஊற்றுநீர் போல மிகும் - ஆயின், இதுவோ நான் மறைக்க மறைக்க என் நாண்வரை நில்லாது இறைப்பவர் இறைக்க இறைக்க ஊறும் ஊற்றுநீர்போல மிகுந்து வெளிப்படும்.

இனி அதற்குத் தக்கது நீ செ-தல் வேண்டும் என்பதாம். 'இஃதோ', என்பது சுட்டுப்பெயர் ஈறு திரிந்தது அன்று. மறைத்து என்ன பயன் என்பதுபட நின்றமையின் 'மன்' ஒழியிசை. 'இஃதோர் நோயை' என்னும் பாடம் சரியானதன்று.

***1162.*** **கரத்தலு மாற்றேனிந் நோயைநோ— செ—தார்க்**
**குரைத்தலு நாணுத் தரும்.**

*(ஈண்டையா ரறியாமல் மறைத்தல், ஆண்டையார்க்குத் தூதுவிடல் என்னும் இரண்டனுள் ஒன்று செ-யவேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** இந் நோயைக் கரத்தலும் ஆற்றேன் - இக் காமநோயை அக்கம் பக்கத்தார் அறியாவாறு மறைக்கவும் என்னால் முடியவில்லை; நோ- செ- தார்க்கு உரைத்தலும் நாணுத் தரும் - இனி, இந் நோயை நீக்குமாறு இதைத் தந்த காதலர்க்கு அறிவிக்கவும் வெட்கமாயிருக்கின்றது. என் செ-வேன்?

நோ- மேன்மேலும் மிகுதலாற் 'கரத்தலு மாற்றேன்' என்றும், பிரிந்து போனது அண்மைக் காலமே யாதலானும் இன்பவாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளீட்டுதலைத் தடைசெ-வது அறிவுடைமை யாகாமையானும் 'நாணுத் தரும்' என்றும் கூறினாள்.

***1163.*** **காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்**
**னோனா வுடம்பி னகத்து.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** காமமும் நாணும் - என் காமநோயும் அதை யுண்டாக்கியவர்க்கு உரைப்பதைத் தடுக்கும் நாணமும்; நோனா என் உடம்பின் அகத்து - அவற்றைத் தாங்காது வருந்தும் என் உடம்பினிடத்து; உயிர் காவாத் தூங்கும் - என் உயிரைக் காவாட்டுத் தண்டாகக் கொண்டு அதன் இரு கடையிலுந் தொங்குகின்றன.

காமமும் நாணமும் ஒத்த இருதலைச் சுமைகளாக வருத்துவது தோன்றக் 'காவாத் தூங்கும்' என்றும், உயிரிருப்பதனாலேயே காமமும் நாணமுந் தோன் றுவதால் 'உயிர் காவா' என்றும், காவாட்டுச் சுமையைத் தாங்கும் வலிமை நோயால் மெலிந்துள்ள உடம்பிற் கின்மையால் 'நோனா வுடம்பி னகத்து' என் றும் கூறினாள். நோயும் நீங்காது

நோ- நீக்கும் வழித்தடையும் நீக்காது இரு தலைக்கொள்ளி யெறும்புபோல் இடர்ப்படுகின்றேன் என்பதாம். உடம்பைக் காவுவோனாக உருவகியாமையால் இது ஒருமருங் குருவகம்.

**1164. காம கடன்மன்னு முண்டே யதுநீந்து**
**மேமப் புணைமன்னு மில்.**

*(தலைவியர் காமக்கடற் படார்; படினும் அதனைத் தக்க புணையால் நீந்திக் கடப்பர் என்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** காமக் கடல் உண்டே - காமக்கடல் எனக்கு இருக்கவே யிருக்கின்றது; அது நீந்தும் ஏமப்புணை இல் - ஆனால், அதை நீந்திக் கடக்கும் பாதுகாப்பான மரக்கலந்தான் எனக்கில்லை.

தூதுவிடுத்து எனக்குத் துணையாதற்குரிய நீயும் ஆனாயல்லையென் பதாம். 'மன்', 'உம்' ஈரிடத்தும் அசைநிலை. இனி, மிகுதிப்பொருள் எனினுமாம். இதில் வந்துளது உருவகவணி.

**1165. துப்பி னெவனாவர் மற்கொ றுயர்வரவு**
**நட்பினு ளாற்று பவர்.**

*(தூதுவிடாமைபற்றித் தோழியொடு புலந்து சொல்லியது.)*

**(இ-ரை.)** நட்பினுள் துயர்வரவு ஆற்றுபவர் - இன்பந் தருதற்குரிய நட்பு நிலைமையிலேயே துன்புறுதலை வருவிப்பவர்; துப்பின் எவன் ஆவர் கொல் - துன்பமே தருதற்குரிய பகைமை நிலைமையில் எத்தகையராவரோ? தெரிகிலது.

துயர்வரவை நீக்கலாயிருக்கவும் அது செ-கின்றிலையெனத் தோழி யொடு புலக்கின்றமையின், அவளைத் துயர் வரவு செ-தாளாக்கியும் பிறத்தி யாக்கியுங் கூறினாள். துப்பு என்பது வலிய பகை. "துப்பெதிர்ந் தோர்க்கே யுள்ளாச் சே-மையன்" (புறம். 380). 'எவன்' அஃறிணைச் சொல். 'மன்' அசைநிலை. 'கொல்' ஐயம்.

**1166. இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற்**
**றுன்ப மதனிற் பெரிது.**

*(காமத்தால் இன்பம் நுகர்ந்தவர் அதனால் வருந் துன்பத்தையும் பொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** காமம் இன்பம் கடல் - காமம் புணர்வால் இன்பஞ் செ-யும் போது, அவ் வின்பம் கடல்போற் பெரிதாம்; மற்று அஃது அடுங்கால் துன்பம் அதனின் பெரிது - பின்பு அதுதானே பிரிவால் துன்பஞ் செ-யும்போது, அத் துன்பம் அக் கடலினும் பெரிதாம்.

காமத்தால் வரும் இன்பமுந் துன்பமும் அளவொத்திருப்பின் ஆற்ற லாம். துன்பம் இன்பத்தினும் மிகுந்திருப்பதால் ஆற்றுமாறில்லை யென்பதாம். 'மற்று' வினைமாற்று அல்லது பின்மைப் பொருளில் வந்தது. 'அடுங்கால்' என்று பின்றொடரில் வந்தமையால், அதன் மறுதலை யெச்சம் முன்றொடர்க்கு வரு விக்கப்பட்டது.

***1167.*** **காமக் கடும்புன னீந்திக் கரைகாணேன்**
**யாமத்தும் யானே யுளேன்.**

*(காமக்கடலை நிறைபுணையாக நீந்தல் கூடுமென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** காமக் கடும்புனல் நீந்திக் கரை காணேன் - காமம் என்னுங் கடலை நிறைபுணையாக நான் நீந்தாமலில்லை, நீந்தத்தான் செ-தேன், நீந்தி யுங் கரை காணவில்லை; யாமத்தும் யானே உளேன் - அதனால் மற்றெல்லாருந் தூங்கும் நள்ளிரவிலும் நடுக்கடுலில் தானே தன்னந்தனியாக விருந்து அலை சடிப்படுகின்றேன்.

நிறைபுணை காமப் பெருங்கடலைக் கடத்தற்குப் போதிய வலிமை யுள்ளதா யில்லையென்பது கருத்து. 'யானே யுளேன்' என்பது நீ துணையா யில்லை யென்னுங் குறிப்பினது. கடுமை இங்கு மிகுதி குறித்து நின்றது. எச்ச வும்மை முன்னுங் கூட்டப்பட்டது. புணை குறிக்கப்படாமையால் இஃது ஒரு மருங் குருவகம்.

***1168.*** **மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா**
**வென்னல்ல தில்லை துணை.**

*(இரவின் கொடுமை கூறி வருந்தியது.)*

**(இ-ரை.)** இரா அளித்து - இவ் விரவு இரங்கத்தக்கதாயிருந்தது; மன் உயிர் எல்லாம் துயிற்றி என் அல்லது துணை இல்லை - இவ் வுலகத்து மற்றெல்லா வுயிர்களையுந் தூங்கவைத்துவிட்டதனால், இராமுழுதுந் தூங்காத என்னைத் தவிர வேறொரு துணையும் இல்லாதிருந்தது.

நிலைபெற்ற வுயிர் இவ் வுலகத்தின்மையாலும், மாந்தரேயன்றி மற்ற வுயிர்களுளும் இரவில் தூங்குவதாலும், மன் என்னுஞ் சொற்கு மற்றுப் பொருள் இங்குக் கொள்ளப்பட்டது. ஆயினும், சில வுயிரினங்கள், இரவிலேயே வழங்கு வதனாலும், சில மாந்தர் இரவிலேயே அல்லது இரவிலுந் தொழில் செ–வத னாலும், எல்லாம் என்னுஞ் சொல் பெரும்பான்மை பற்றியதென்று கொள்ளப்படும். பொதுவாக இராக்காலமே தூங்கும் வேளையாதலாலும், பகலுழைப் பாளிகட்கு இரவில் தானாகத் தூக்கம் வந்துவிடுவதனாலும், இரவே தூங்க வைப்பதாகச் சொல்லப்பட்டது. துணையொடு கூடி இன்புறும் உயிர்களை யெல்லாந் தூங்கவைத்துவிட்டு, துணையின்றி வருந்தும் என்னைமட்டும் தூங்கவையாது தனக்குத் துணையாகக் கொண்டது, இக் கொடிய இரா என்னுங் கருத்தினளாதலால், 'அளித்து' எதிர்மறைக் குறிப்பாம்.

***1169.*** **கொடியார் கொடுமையிற் றாங்கொடிய விந்நா**
**ணெடிய கழியு மிரா.**

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** இரா இந் நாள் நெடிய கழியும் – முன்பு நம் காதலரொடு கூடியின் புற்ற நாள்களிலெல்லாம் குறியவாயிருந்த இரவுகள், இன்று அவரினின்று பிரிந்து துன்புறுங் காலத்தில் மிக நீண்டு செல்கின்றனவா யுள்ளன; கொடியார் கொடுமையின் தாம் கொடிய – ஆதலால், அக் கொடியார் கொடுமையினும் மிஞ்சிய கொடுமை செ–வனவாகும்.

தன் ஆற்றாமை கருதாது பிரிந்தமையின் 'கொடியார்' என்றும், வரவு நீட்டித்தமையின் 'கொடுமை' என்றும், தன் துன்பங் கண்டிரங்காமை யானும் முன்னினும் நெடியவா–க் கழிந்தமையானும் 'கொடுமையிற் றாங்கொடிய' என்றும் கூறினாள்.

***1170.*** **உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்**
**நீந்தல மன்னோவென் கண்.**

*(நின் கண்களின் பேரழகு கெடுகின்றமையின்*
*அழத்தகாதென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ–ரை.)** உள்ளம் போன்று உள்வழிச் செல்கிற்பின் – என் அகக்கண் போன்றே காதலருள்ள நாட்டிற்குக் கடுகிச் செல்ல வல்லனவாயின்; என் கண்

வெள்ள நீர் நீந்தல – என் புறக்கண்கள் இங்ஙனம் வெள்ளம்போலக் கண்ணீர் வடித்து அதில் நீந்தா.

அகக்கண்ணிற்குச் செலவு உள்ளுதலே யாதலின் 'உள்ளம்' என்றும், புறக்கண்கள் அங்ஙனஞ் செல்ல வியலாமையின் 'செல்கிற்பின்' என்றும் கூறி னாள். 'மன்னோ' பிற்காலத்து ஈரசைநிலைகளும் (மன், ஓ) முற்காலத்து ஆடூஉ முன்னிலையும் (அரசே!) ஆகும். "அது (செல்வது) மாட்டாமையின், இனி அவற்றிற்கு நீந்துதலேயுள்ள தென்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசைக் கண் வந்தது" என்பர் பரிமேலழகர். 'கில்' ஆற்றலுணர்த்தும் இடைநிலை. இக் குறளால் வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவா– செ–யப்பட்டது.

## அதி. 118 - கண்விதுப்பழிதல்

*அதாவது, தலைமகளின் கண்கள் தலைமகனை விரைந்து காணும் விருப்பத்தால் வருந்துதல், விதுப்புக் காண்டற்கு விரைதல். இது இடைவிடாது நினைத்து மெலிந்தவிடத்து நிகழ்வதாகலின், படர்மெலிந் திரங்கலின் பின் வைக்கப்பட்டது.*

***1171.*** **கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோ–**
**தாங்காட்ட யாங்கண் டது.**

*(நின் கண்கள் கலங்கித் தம் அழகிழக்கின்றன. ஆதலால்*
*நீ அழுதல் கூடாதென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ–ரை.)** தாம் காட்ட தண்டாநோ– யாம் கண்டது – தாம் அன்று எம் காதலரை எமக்கு வலியக் காட்டினதினாலன்றோ இத் தணியா நோயை யாம் அடைந்தது; கண் தாம் கலுழ்வது எவன் கொல் – அங்ஙனமிருக்கவும், இன்று தமக்கு அவரைக் காட்டச் சொல்லி என் கண்கள் என்னை வேண்டி யழுவது என்ன கருத்தொடு? எமக்குத் தெரியவில்லையே!

இன்றும் அன்றுபோல் தாமே காட்டுவதல்லது யாம் காட்டுவது எங்ஙனம் என்பதாம். 'காட்ட' என்பதற்குரிய செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. 'கொல்' ஐயம். 'ஓ' அசைநிலை.

***1172.*** **தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப்**
**பைதல் லுழப்ப தெவன்.**

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** தெரிந்து உணரா நோக்கிய உண்கண் – மேல் விளைவதை ஆரா–ந்தறியாது அன்று காதலரைக் காதலொடு நோக்கி நின்ற என் மையுண்ட கண்கள்; பரிந்து உணராப் பைதல் உழப்பது எவன் – இன்று இது நம்மால் வந்தது தானே! ஆதலாற் பொறுத்துக்கொள்ளல் வேண்டுமென்று அன்போடு கூறு படுத்துணராது, துன்புற்று வருந்துவது ஏன்?

துன்பம் வருமுன் காவாதார் அது வந்தபின் வருந்துவது வீண் மடச் செ–கை யென்பதாம். மேல் விளைவாவது பிரிவினால் நேரும் ஆற்றாமைத் துன்பம்.

***1173. கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழு
மிதுநகத் தக்க துடைத்து.***

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** தாம் கதுமென நோக்கித் தாமே கலுழும் இது – இக் கண்கள் அன்று எண்ணிப்பாராது தாமே காதலரைத் திடுமென்று நோக்கி விட்டு, இன்றும் அவரைக் காணவில்லையென்று தாமே யிருந்தழுகின்ற செ–தி; நகத்தக்கது உடைத்து – சிரிக்கத்தக்க தன்மையையுடையது.

தாம் ஒன்றை விரும்பிச் செ–துவிட்டுத் தாமே அதன் விளைவுபற்றி யழுவது பகுத்தறிவாளர் நகையாடத்தக்க செ–தியாதலின், 'நகத்தக்க துடைத்து' என்றாள். கண்கள் என்பது அதிகாரத்தால் வந்தது. ஏகாரம் பிரிநிலை.

***1174. பெயலாற்றா நீருலந்த வுண்க ணுயலாற்றா
வு–வினோ யென்க ணிறுத்து.***

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** உண்கண் – என் மையுண்ட கண்கள்; உயல் ஆற்றா உ–வு இல் நோ– என் கண் நிறுத்து – நான் தப்பமுடியாமைக்கேதுவான ஒழியாத காம நோயை என்னிடம் நிறுத்திவிட்டு; பெயல் ஆற்றா நீர் உலந்த – தாமும் தொடர்ந்து அழமுடியா வண்ணம் நீர் வற்றிவிட்டன.

உ–வில் நோ– நிறுத்தலாவது, பிரிதலும் பின் விரைந்து கூடாமையு முடையாரைக் காட்டி, அதனா னுண்டாகும் ஆற்றாமை நோயை நீடுநிற்கச் செ–தல். என்னை நெடிது வருந்தச்செ–த தீவினையால் தாமும் வற்றி வறண்டு போயின என்பதாம்.

**_1175._** **படலாற்றா பைத லுழக்குங் கடலாற்றாக்**
**காமநோ— செ—தவென் கண்.**

*(இதுவுமது.)*

**(இ—ரை.)** கடல் ஆற்றாக் காமநோ- செ-த என் கண் - கடலுஞ் சிறிதாம் வண்ணம் பேரளவுள்ள காமநோயை எனக்குச் செ-த என் கண்கள்; படல் ஆற்றா பைதல் உழக்கும் - அத் தீவினையால் தாமும் தூக்கம் பெறாதனவா-த் துன்பப்படுகின்றன.

வினை விதைத்தவன் வினையறுப்பா னாதலால், என்னைத் துன்புறுத்திய கண்கள் தாமும் துன்புறுகின்றன என்றாள்; காமநோ- காட்சியால் வந்த தனால், கண்ணே அந் நோயைத் தந்ததாகக் கூறினாள். கண் துன்புறுதலாவது அழுதலும் எரிச்சல் கொள்ளுதலும்.

**_1176._** **ஓஒ வினிதே யெமக்கிந்நோ— செ—தகண்**
**டாஅ மிதற்பட் டது.**

*(இதுவுமது.)*

**(இ—ரை.)** எமக்கு இந் நோ- செ-த கண் தாம் இதற்பட்டது - எமக்கு இக் காமநோயை வருவித்த கண்கள் தாமும் இத் துன்பத்துள் அகப்பட்டுக் கொண்டது; ஓஒ இனிதே - மிகவும் இனிதாவதே.

துன்பமென்றது தூங்கா தழுதலை. எம்மைத் துன்புறுத்தினார் துன்புறுவது எம் துன்பந் தீர்ந்தாற்போல்வதென்பதாம். 'ஓ' மிகுதிப்பொருட் குறிப்புச்சொல். 'ஓ ஒ', 'தா அம்' இசைநிறை யளபெடைகள். ஏகாரம் தேற்றம்.

**_1177._** **உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து**
**வேண்டி யவர்க்கண்ட கண்.**

*(இதுவுமது.)*

**(இ—ரை.)** விழைந்து இழைந்து வேண்டிய அவர்க் கண்ட கண் - அன்று விரும்பி உண்ணெகிழ்ந்து மேன்மேலுங் காதலித்து அவரைக் கண்ட கண்கள்; உழந்து உழந்து உள்நீர் அறுக - இன்று தூக்கமின்றி யழுந்துன்பத்தால் வருந்தி வருந்தித் தம்மகத்துள்ள நீரெல்லாம் வற்றிப்போக!

அடுக்கு இடைவிடாமைபற்றி வந்தது. சினைவினை முதல்மேல் நின்றது போல, அறுதலாகிய இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது.

***1178. பேணாது பெட்டா ருளர்மன்னோ மற்றவர்க்
காணா தமைவில கண்.***

*(காதலர் பிரிந்து போனாரல்லர், அவர் உடலால் ஆங்கிருப்பினும் உள்ளத்தால் ஈங்குளர். அவரைக் காணுமளவும் ஆற்றியிரு என்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** பேணாது பெட்டார் உளர்- (ஆம். நீ சொல்வது உண்மைதான்.) நெஞ்சத்தில் நேயங்கொள்ளாது வா-ச்சொல்லால் மட்டும் நம்மை விரும்பி யவர் இங்கேயுள்ளார்; மற்று அவர்க் காணாது கண் அமைவு இல - ஆயின் அவ் வுண்மைக்கு மாறாக, என் கண்கள் அவரைக் காணாமையால் அமைதி யில்லாதிருக்கின்றன.

பிரிவாற்றாமை யறிந்தும் பிரிந்துபோனமையாற் 'பேணாது' என்றும், முன்னர் நலம் பாராட்டிப் "பிரியேன், அஞ்சேல்" என்று வன்புறையுங் கூறினா ராகலின் 'பெட்டார்' என்றும் கூறினாள். யான் ஆற்றியிருக்கவும் என் கண்கள் அவரைக் காணும் வேட்கை மிகுதியால் ஆற்றாதிருக்கின்றன என்பதாம். 'மன்' ஒழியிசைக்கண் வந்தது என்றும், 'ஓகாரம்' அசைநிலை யென்றுங் கூறுவர். அவர் உண்மையில் இங்கிருந்தால் என் கண்கள் அவரைக் கண்டு அமைதியுற் றிருக்கும் என்பதை ஒழியிசையாகக் கொள்க, 'மற்று' மாற்றுப் பொருளில் வந்தது. 'கொண்கனை' என்பது காலிங்கர் கொண்ட பாடம்.

"இனிக் கொண்கனை யென்று பாடமாயின், என் கண்கள் தம்மைக் காணா தமைகின்ற கொண்கனைத் தாங் காணாதமைகின்றன வில்லை. இவ் வாறே தம்மையொருவர் விழையாதிருக்கத் தாமவரை விழைந்தார் உலகத் துளரோ வென்றுரைக்க" என்னும் பரிமேலழகருரை கொள்ளக்கத் தக்கதே. இதற்கு 'மன்' அசைநிலை யென்பர் அவர்.

***1179. வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்.***

*(நீயும் ஆற்றி நின் கண்களுந் தூங்குதல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** வாராக்கால் துஞ்சா - காதலர் வராதிருக்கும்போது அவர் வரவு நோக்கி வழிமேல் விழிவைத்துத் தூங்கா; வரின் துஞ்சா - அவர் வந்த பின்போ

மீண்டும் பிரிதலஞ்சித் தூங்கா; ஆயிடைக் கண் ஆரஞர் உற்றன - இங்ஙனம் அவ்விரு நிலைமையிலும் என் கண்கள் பொறுத்தற்கரிய துன்பத்தை யடைகின்றன.

என் கண்கள் ஒருபோதும் தூங்கும் நிலைமையில்லை யென்பதாம்.

**1180. மறைபெற லூரார்க் கரிதன்றா லெம்போ
லறைபறை கண்ணா ரகத்து.**

*(காதலரை இவ்வூர் இயற்பழியாவாறு அவர் குற்றத்தை
மறைக்க வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** எம் போல் அறை பறை கண்ணார் அகத்து மறை பெறல் - எம்மைப் போலப் பறையறையுங் கண்ணையுடையார் தம் நெஞ்சிலடக்கிய மறைபொருளை யறிதல்; ஊரார்க்கு அரிது அன்று - இவ் வூர் வாழ்நர்க்கு எளிதாகும்.

யான் மறைக்கவும் என் கண்கள் வெளிப்படுத்தலின் மறைத்துப் பயனில்லை யென்பதாம். மறைக்கப்படும் பொருள் மறை; ஆகுபெயர். பறை யறைந் தறிவித்தாற் போலப் பலர்க்குந் தெரிவித்தலின் ‘அறைபறை கண்’ என்றாள். “இங்ஙனஞ் செ-யுள் விகார மாக்காது, அறைபறை கண்ணாரென்று பாடமோதுவாரு முளர்” என்றார் பரிமேலழகர். இனி, ‘எம்போற் பறையறை கண்ணார்’ என்று பாடமோதின், எதுகை கெடாதும் இன்னோசை குன்றாதும் மரபு திரியாதும் இலக்கணம் வழாதும் இருத்தல் காண்க. மோனை கெடுமேயெனின், அதனா லிழுக்கில்லையென்றும், மோனையில்லா ஈற்றடியே திருக்குறளிற் பெருவழக்கென்றும், கூறிவிடுக்க. ‘ஆல்’ அசைநிலை.

## அதி. 119 - பசப்புறு பருவரல்

*அதாவது, பிரிவாற்றாமையால் தலைமகளின் மேனியிற் பசலை யென்னும் நிறவேறுபாடு தோன்றற் கேதுவாகிய வருத்தம். இது தலைமகனை நீண்ட நாளாகக் காணப்பெறாவிடத்து நிகழ்வதாகலின், கண்விதுப் பழிதலின் பின் வைக்கப்பட்டது.*

*பசப்பு அல்லது பசலையென்பது பைம்பொன்னொத்த பசு மஞ்சள் நிறம் கொண்டது. அது சுணங்கு, தேமல் என்றும் பெயர் பெறும். மேனியழகி னாலும் தேமல் படர்வதுண்டு. அது அழகுதேமல் எனப்படும்.*

**1181. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்**
**பண்பியார்க் குரைக்கோ பிற.**

*(முன்பு பிரிவுடம்பட்ட தலைமகள் அஃதாற்றாது பசந்தவழித் தன்னுள்ளே சொல்லியது.)*

**(இ-ரை.)** நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் - என்னை விரும்பிய வர்க்கு அன்று பிரிவையுடம்பட்ட நான்; பசந்த என் பண்பு யார்க்கு உரைக்கோ - அதனை ஆற்றாது இன்று பசந்த என் இயல்பை யார்க்கு எடுத்துச் சொல்வேன்!

உடம்பாடு பெற்றே பிரிந்தமையின் 'நயந்தவர்' என்றும், பிரிவுக் காலத்திற் கூடுதலில்லையாதலின் 'நல்காமை' யென்றும், முன்ன ருடம்பட்டமையும் பின்னர் ஆற்றாது பசந்தமையும் தன் செயலே யென்பாள் 'பசந்தவென் பண்பு' என்றும், தன் குற்றத்தை எவரிடமுங் கூறி முறையிட முடியாதாகலின் 'யார்க் குரைக்கோ' என்றும் கூறினாள். 'உரைக்கு' செ-கு என்னும் வா-பாட்டுத் தன்மையொருமை யெதிர்கால வினைமுற்று. 'ஓ', 'பிற' அசைநிலைகள்.

**1182. அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென்**
**மேனிமே லூரும் பசப்பு.**

*(ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பது படச் சொல்லியது..)*

**(இ-ரை.)** (யான் ஆற்றியிருக்கவும்) பசப்பு - இப் பசலைதான்; தந்தார் அவர் என்னும் தகையால் - என்னை யுருவாக்கினவர் அவர் (காதலர்) என் னும் பெருமிதத்தால்; என் மேனிமேல் இவர்தந்து ஊரும் - என் உடம்பின் மேல் ஏறி என்னைச் செலுத்துகின்றது.

இப் பசலை தன்னை என் தலைவர் தோற்றுவித்தார் என்னும் உரிமை பற்றி என்மீது ஊர்கின்றது. இதற்கு நீ கவல வேண்டா என்பதாம். ஊர்தல் பசலை படர்தல். இப் படர்ச்சி குதிரையேற்றம்போற் கூறப்பட்டிருப்பது குறிப் புருவகம்.

**1183. சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறா**
**நோயும் பசலையுந் தந்து.**

*(அழகும் நாணும் அழியாமல் நீ யாற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** நோயும் பசலையும் கைம்மாறாத் தந்து - நம் காதலர் நம்மை விட்டுப் பிரியும்போதே இக் காமநோயையும் பசலையையும் எதிரீடாகத் தந்து விட்டு;

சாயலும் நாணும் அவர்கொண்டார் - என் மேனியழகையும் நாணை யும் தம்முடன் கொண்டுபோ-விட்டார்.

அவர் திரும்பி வந்தாலொழிய என் மேனியழகும் நாணும் திரும்பா வென்பதாம். சாயலுக்குப் பசலையும் நாணுக்கு நோயும் ஈடாதலால் எதிர் நிரனிறை.

***1184. உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு.***

*(காதலர் தெளிவித்த சொற்களையும் அவர் நற்றிறங்களையும் அறிதி யாதலின் அவர் வரும்வரை ஆற்றியிரு என்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** யான் மன் உள்ளுவன் - காதலர் சொற்களை யான் மிகுதியும் நினைப்பேன்; உரைப்பது அவர் திறம் - யாரிடத்திலும் சொல்லுவதும் அவர் நற்றிறங்களையே; பசப்புக் கள்ளம் - அங்ஙன மிருந்தும் எப்படியோ இப் பசலை கள்ளத்தனமாக வந்துள்ளது.

முக்கரணங்களுள் மெ- ஏனை யிரண்டின் வழிப்பட்டதாகலின், நினைவு சொல் வழியாக வராது நேரே மெ-வழியாக வந்தது மாயமாயுள்ளது என்பதாம். 'ஆல்', 'பிற', 'ஓ' அசைநிலைகள்.

***1185. உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென்
மேனி பசப்பூர் வது.***

*(காதலர் பிரிந்தணித்தா யிருக்கவுங் ஆற்றுகின்றிலை யென்ற தோழிக்கு முன் நிகழ்ந்தது கூறியது.)*

**(இ-ரை.)** எம் காதலர் உவக்காண் செல்வார் - முன்புறம் காதலர் உதோ உந்த இடத்திற்குத்தான் செல்வார்; இவக்காண் என் மேனி பசப்பு ஊர்வது - அதற்குள் இங்கே என் உடம்பெல்லாம் பசலை படர்ந்துவிடும்.

இங்ஙனம் ஒருசில அடித்தொலைவே நம் காதலர் நடந்து செல்லினும், அடுத்தது காட்டும் பளிங்குபோலப் பளிச்சென்று பசலை படரும் என் மேனி, அவர் பல நாள்வழி அல்லது நாழிகைவழித் தொலைவிலேயே இருப்பினும், ஆற்றியிருக்குமோ என்றவாறாம். 'உவ', 'இவ' சுட்டிடைச் சொற்கள். 'காண்' முன்னிலையசை. 'உவ' என்றது ஒருசில அடித்தொலைவே யுள்ள முன்னிலை யிடத்தை. இம் முன்மைச் சுட்டு இற்றைத் தமிழகத்தில் வழக்கிறந்தது.

**1186. விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன்**
**முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** விளக்கு அற்றம் பார்க்கும் இருளேபோல் - விளக்கின் அவிவு பார்த்து உடனே வரக் காத்திருக்கும் இருளைப்போலவே; கொண்கன் முயக்கு அற்றம் பார்க்கும் பசப்பு - தலைவரின் தழுவல் நெகிழ்வு பார்த்து உடனே வரக் காத்திருக்கும் இப் பசலை.

காதலர் உடனிருந்து தழுவல் நெகிழினும் உடனே வரும் பசலை அவர் பிரிந்து தொலைவிற்குச் சென்றபின் வராதிருக்குமோ என்றவாறாம். பார்த்தல் பார்த்து வருதல். கொண்கன் கொண்டவன். கொள் - கொண்கு - கொண்கன். ஏகாரம் பிரிநிலை.

**1187. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி**
**லள்ளிக்கொள் வற்றே பசப்பு.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் - முன்பொருநாள் காதலரைத் தழுவிக் கிடந்த நான் அறியாது ஒருசிறிது தள்ளிப் படுத்தேன்; அவ்வளவில் பசப்பு அள்ளிக் கொள்வு அற்று - அங்ஙனம் படுத்த அளவில் அள்ளிக்கொள்ளும் அளவாகப் பசலை வந்து திரண்டுவிட்டது.

அப் புடைபெயர்ச்சிக்கே அவ்வாறான பசலை, இப் பிரிவின்கண் எவ்வா றாகுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ என்பதாம். ஏகாரம் தேற்றம்.

**1188. பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்**
**துறந்தா ரவரென்பா ரில்.**

*(நீ யிங்ஙனம் பசத்தல் கூடாதென்ற தோழியொடு புலந்து சொல்லியது.)*

**(இ-ரை.)** இவள் பசந்தாள் என்பது அல்லால் - இவள் காதலர் வரும்வரை ஆற்றியிராது பசலை கொண்டாள் என்று என்னைப் பழிப்பதல்லது; இவளை அவர் துறந்தார் என்பார் இல் - இவளை அவர் கைவிட்டுவிட்டுப் போ- விட்டாரென்று அவரைக் குறைகூறுவார் இவ் வுலகத்து ஒருவருமில்லை.

தன்னையே கடிதல்பற்றிப் புலக்கின்றாளாதலின், ‘என்பார்’ என அயன் மைப்படுத்திக் கூறினாள்.

**_1189._ பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலைய ராவ ரெனின்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** நயப்பித்தார் நல் நிலையர் ஆவர் எனின் - இப் பிரிவிற்கு யான் உடம்படும்வகை பசப்பியவர் இன்று உன் கருத்துப்படி குற்றமற்றவராயின்; என் மேனி பட்ட ஆங்கு பசக்க - என் மேனி இன்று பசந்தபடியே பசக்க.

இப் பிரிவின் கொடுமையை இதற்குமுன் பட்டறியாத என்னை இதற் குடன்படுத்திப் பிரிந்தவர், எவ்வகையிலுங் குற்றமற்றவரென்று நாட்டுவது தானே உன் விருப்பம்! அங்ஙனமாயின், என் மேனியையும் பசலையையுங் கவனிப்பானேன்? அவை எங்ஙன மிருந்தால்தானென்ன என்பதுபட நின்றமை யின் ‘மன்’ ஒழியிசைபற்றி வந்தது.

**_1190._ பசப்பெனப் பேர்பெறுத னன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றா ரெனின்.**

*(தலைமகளை யாற்றுவித்தற்பொருட்டுத் தோழி தலைமகனை
இயற்பழித்தவிடத்து அவள் இயற்பட மொழிந்தது.)*

**(இ-ரை.)** நயப்பித்தார் நல்காமை தூற்றார் எனின் - பிரிவிற்கு உடம்படச் செ-த காதலர் இன்றுவந்து கூடாமையை நட்டோர் பழியாராயின்; பசப்பு எனப் பேர் பெறுதல் நன்றே - பசலையடைந்தாள் என்று வேற்றுமைப் படச் சொல்லப் படாது, பசலையே யானாள் என்று ஒற்றுமைப்படச் சொல்லப் பெறுதலும் நல்லதேயாம்.

பசலையடைதல் மேனிமட்டும் பசப்புநிறம் பெறுதல். பசலையாதல் உடம்பு முழுவதும் பசப்பாக மாறுதல். நட்டோர் என்பது அவா-நிலையால் வந்தது; இகழ்ச்சிக் குறிப்பு. ஏகாரம் தேற்றம்.

## அதி. 120 - தனிப்படர் மிகுதி

*அதாவது, பிரிவின்கண் தனித்திருந்து நினைதல் மிகுதியைத் தலைமகள் தன்கண்ணதேயாகக் கூறுதல். தலைமகன் அறமும் பொருளும் நோக்கிப்*

*பிரிதலின், அவன்கண் அஃது இல்லாதாயிற்று. இது பசப்புற்று வருந்தியவட் குரியதாதலின் பசப்புறுபருவரலின்பின் வைக்கப்பட்டது.*

***1191. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே***
***காமத்துக் காழில் கனி.***

*(காதலரும் ஆற்றாரா-க் கடிதின் வருவர். நீ அவரொடு பேரின்பந் து-ப்பா- என்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** தாம் வீழ்வார் தம் வீழப் பெற்றவர் - தம்மாற் காதலிக்கப்படுங் கணவர் தம்மைக் காதலிக்கப் பெற்ற மகளிர்; பெற்றாரே காமத்துக் காழ் இல் கனி - பெற்றாரன்றோ கொட்டையில்லா நறுமண இன்சுவைச் செழுஞ்சதைக் காமவின்பக் கனி நுகர்ச்சி!

பெறுதலருமை நோக்கிப் ‘பெற்றவர்’ என்றும், பேரின்பமாதல்பற்றிக் ‘காழில் கனி’ என்றும் கூறினாள். நம் காதலர் பிரிந்துபோனதொடு திரும்பி வராமலுமிருத்தலின், யாம் அக் கனியைப் பெற்றிலேம் என்பதாம். காமம் என் பதை மரத்தின் பெயராகக் கொள்ளின், அத்துச்சாரியை வேற்றுமை வழியில் வந்ததேயாம். ஏகாரம் தேற்றம்.

***1192. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு***
***வீழ்வா ரளிக்கு மளி.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி - அறமும் பொருளும் நோக்கிப் பிரிந்துபோன கணவர் தம்மை யின்றியமையாத மகளிர்க்கு, கால மறிந்து வந்து இன்புறுத்தும் பேரன்புக் கூட்டம்; வாழ் வார்க்கு வானம் பயந்த அற்று - தன்னையே நோக்கி வாழும் மாந்தருக்கு முகில் காலம் அறிந்து பெருமழை பொழிந்தாற் போலும்.

நம் காதலர் நம்மீது அன்புகொள்ளாமையால் அவர் வந்து கூடப் பெறாது, மழையின்றி வாடும் மாந்தர் போல வாடுகின்றோம் என்பதாம், ‘ஆல்’ அசைநிலை.

***1193. வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே***
***வாழுந மென்னுஞ் செருக்கு.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** வாழுநம் என்னும் செருக்கு - நம் காதலர் பிரிந்தாராயினும் நம்மை நினைந்து விரைந்து வருவர், அதன்பின் இன்புற்று வாழ்வோ மென் னும் மிடுக்கு; வீழுநர் வீழப்படுவார்க்கே அமையும் - தாம் காதலிக்குங் கணவ ராற் காதலிக்கப் பெறும் மகளிர்க்கே அமைவதாம்.

நாம் அவராற் காதலிக்கப் பெறாமையின் நமக்கு அஃதில்லை யென்பதாம். ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது.

***1194.	வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்***
***வீழப் படாஅ ரெனின்.***

*(காதலரை யியற்பழித்த லஞ்சி அவரது அருளின்மையை மறைத்த நீ தெ-வக் கற்பினையாதலின், கற்புடை மகளிரால் நன்கு மதிக்கப்படுவா- என்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** வீழப்படுவார் - கற்புடை மகளிரால் நன்கு மதிக்கப் படுவாரும்; தாம் வீழ்வார் வீழப்படார் எனின் கெழீஇயிலர் - தாம் காதலிக்குங் கணவராற் காதலிக்கப் படாராயின் தீவினையாட்டியரே.

தீவினையேற்கு அந் நன்குமதிப்பாற் பயனில்லை யென்பதாம். கெழீஇ யின்மை நல்வினையின்மை. 'கெழீஇ' இன்னிசை யளபெடை 'படாஅர்' இசை நிறை யளபெடை. சிறப்பும்மை தொக்கது.

***1195.	நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செ—பவோ***
***தாங்காதல் கொள்ளாக் கடை.***

*(அவர்மேற் காதலுடைமையின் அவர் கருத்தறிந்தாற்றினா- என்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** நாம் காதல் கொண்டார் - நம்மாற் காதல் செ-யப்பட்டவர்; தாம் காதல் கொள்ளாக்கடை - அவ்வாறே தாமும் நம்மிடத்துக் காதல் செ-யா விடத்து; நமக்கு எவன் செ-ப - நமக்கு என்ன இன்பத்தைச் செ-வர்?

அக் காதலால் நாம் பெற்றது துன்பமே யென்பதாம். எச்சவும்மை தொக்கது. 'ஓ' அசைநிலை.

***1196.	ஒருதலையா னின்னாது காமங்காப் போல***
***இருதலை யானு மினிது.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** காமம் ஒருதலையான் இன்னாது - ஆடவன் பெண்டு என்னும் இருபாலுள் காதல் ஒருதலைக்கண் மட்டுமிருப்பின் அது துன்பந் தருவதே யாம்; காப்போல் இருதலையானும் இனிது - காவாட்டுச்சுமை போலே இரு தலையும் அது ஒத்திருந்தவிடத்தே இன்பந்தருவதாம்.

என்னிடத்துள்ள காதல் அவரிடத்து மிருப்பின் இவ்வாறு துன்புறேன் என்பதாம். மூன்றாம் வேற்றுமை ஆனுருபுகள் ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்தது வேற்றுமை மயக்கம்.

***1197.*** **பருவரலும் பைதலுங் காணான்கொல் காம**
**னொருவர்க ணின்றொழுகு வான்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** காமன் ஒருவர்கண் நின்று ஒழுகுவான் - காமத்தேவன் காம வின்பம் நுகர்தற்குரிய இருபாலாரிடத்தும் ஒப்பநில்லாது, பெண் பாலாரிடத்து மட்டும் நின்று காதலை யுண்டுபண்ணுவான்; பருவரலும் பைதலும் காணான் கொல் - அவர் பசலையுற்றும் படர் மிகுந்தும் துன்புறுதலையும் மனம் நோதலையும் கண்டறியானோ?

எல்லாரிடத்தும் ஒப்பநின்று ஒழுகவேண்டியவன் நடுநிலை திறம்பி யும், காமவினைக்குத் தலைமை பூண்டவன் காம நுகர்ச்சிக்குரிய இருவரிடத்து மன்றி ஒருவரிடத்து மட்டும் காதலை யுண்டுபண்ணிக் கடமை தவறியும் வினையறியாதும், ஆடவரை விட்டுவிட்டு மெல்லியலாரையே இரக்கமின்றி வருத்தியும், கொடுமை செ-து திரிபவனும் ஒரு தெ-வமோ? மாந்தரும் தெ-வமும் ஒருசேரக் கைவிட்டபின் நான் உ-யுமாறென்னை யென்பதாம்.

***1198.*** **வீழ்வாரி னின்சொற் பெறாஅ துலகத்து**
**வாழ்வாரின் வன்கணா ரில்.**

*(தலைமகனிடத்தினின்று தூதுவராமைபற்றித் தலைமகள் வருந்தியது.)*

**(இ-ரை.)** வீழ்வாரின் இன்சொல் பெறாது வாழ்வாரின் - தம்மால் விரும்பப்படும் காதலரிடத்து நின்றும் ஓரின்சொல்லளவும் வரப்பெறாதே பிரி வாற்றி உயிர்வாழ்கின்ற மகளிர்போல; வன்கணாளர் உலகத்து இல் - வன் னெஞ்சர் இவ் வுலகத்தில் வேறொருவரு மில்லை.

தொலைவிலுள்ள காதலரிடத்தினின்று வருந் தூதெல்லாம் இக்காலத் தஞ்சல்போலப் பொதுவாக இன்பம் பயக்குமாதலின் 'இன்சொல்' என்றும், பிரிவாற்றுதலோடு தூதின்மை யாற்றுதலுஞ் செ-தலால் 'வாழ்வாரின் வன்கணா ரில்' என்றுங் கூறினாள். 'பெறாஅ' இசைநிறை யளபெடை. இழிவுசிறப்பும்மை தொக்கது.

***1199.*** ***நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்***
***டிசையு மினிய செவிக்கு.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** நசைஇயார் நல்கார் எனினும் - என்னால் விரும்பப்பட்ட காதலர் என்பால் அன்பில்லாதவரே யாயினும்; அவர்மாட்டு இசையும் செவிக்கு இனிய - அவரிடத்தினின்று வரும் எத்தகைச் செ-திகளும் என் செவிக்கு இன்பந்தருவனவாம்.

இழிவுசிறப்பும்மை, அவர் அண்மையில் வருகின்றிலர் என்னும் செ-தி யானும் என்பது படநின்றது. அதுவும் பெற்றிலேன் என்பது கருத்து. 'நசைஇ' சொல்லிசை யளபெடை. 'இசை' ஆகுபெயர்.

***1200.*** ***உறாஅர்க் குறுநோ யுரைப்பா- கடலைச்***
***செறாஅஅ- வாழிய நெஞ்சு.***

*(தலைமகன் தூதுவரப்பெறாது தான் தூதுவிடக் கருதியாள் நெஞ்சொடு சொல்லியது.)*

**(இ-ரை.)** உறாஅர்க்கு உறுநோ- உரைப்பா- நெஞ்சு - உன்னோடு உறவு கொள்ளாதார்க்கு நீ உற்ற நோயைச் சொல்லக்கருதும் நெஞ்சே! கடலைச் செறா- - அவ் வருஞ்செயலை விட்டுவிட்டு உனக்குத் துயர் விளைக்குங் கடலைத் தூர்க்க முயல்வாயாக. அது உனக்கு எளிது; வாழிய - நீ நீடுவாழ்க!

நீ சொல்லக் கருதிய செ-தி நீள்பெரு நோயாதலானும், அதைக் கேட்பார் உறவிலராதலானும் உன் தூது செயற்கரியதும் பயனில் முயற்சியு மாகும். ஆதலால், அதை விட்டுவிட்டுப் பயனுள்ள வேறுவினை ஏதேனும் மேற்கொள்க என்பதாம். நீடு வாழும் நிலைமையில்லாததாகக் கருதி 'வாழிய' என வாழ்த்தி னாள். 'உறா அர்' 'செறா அஅ-' இசைநிறை யளபெடைகள்.

ஆசிரியர் வாழ்நாள் முழுதும் பிரியாத ஒருமனைவி வாழ்க்கையையே இங்கெடுத்துக் கூறுவதாலும், கற்பியலை ஊடலுவகையில் முடிப்பதாலும், இவ்

வதிகாரத்திற் கணவனை அன்பிலியாகக் கூறியிருப்பதெல்லாம், பெண் பாலின் மென்மையும் மடமையும்பற்றிய உயர்வுநவிற்சியே என அறிந்து கொள்க.

## அதி. 121- நினைந்தவர் புலம்பல்

*அதாவது, முன் கூடிப்பெற்ற இன்பத்தால் ஒருவரையொருவர் நினைந்து தலைமகள் தன் இல்லத்திலும் தலைமகன் தொலைவான அயலிடத்திலும் தனித்தனி கூற்று நிகழ்த்துதல். இஃது இருவர்க்கும் பொதுவாதலாற் பலர் பாலாற் கூறப்பட்டது; தலைமகள் தன்கண்ணதாகக் கருதிய படர்மிகுதியின் தொடர்ச்சியாதலின், தனிப்படர் மிகுதியின் பின் வைக்கப்பட்டது.*

**1201. உள்ளினுந் தீராப் பெருமகிழ் செ—தலாற்**
**கள்ளினுங் காம மினிது.**

*(தூதா-ச் சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது.)*

**(இ-ரை.)** உள்ளினும் தீராப் பெருமகிழ் செ-தலால் - முன்பு கூடி நுகர்ந்த இன்பத்தைப் பின்பு பிரிந்தவிடத்து நினைத்தாலும் அன்றே பெற்றாற்போல நீங்காத பெருமகிழ்ச்சியைத் தருதலால்; கள்ளினும் காமம் இனிது - உண்ட விடத்தல்லது மகிழ்ச்சி செ-யாத கள்ளினுங் காமம் இன்பந்தருவதா யுள்ளது.

தலைமகளை மறவாமை கூறியவாறு. முன்பு கண்டார் மகிழ்செ-யும் (குறள். 1090) என்ற காமம் இங்குக் கருதினாலும் மகிழ்செ-யும் என்று கூறப்பட்டது.

**1202. எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்**
**நினைப்ப வருவதொன் றில்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** தாம் வீழ்வார் நினைப்ப வருவது ஒன்று இல் - தம்மாற் காத லிக்கப்படுவாரைப் பிரிவின்கண் நினைத்தால் அந் நினைத்தவர்க்குப் பிரி வினால் வரக்கூடிய துன்பமொன்றும் இல்லாமற் போ-விடுகின்றது; காமம் எனைத்து இனிது ஒன்றே காண் - அதனாற் காமம் எத்துணையேனும் இன்பந் தருவதொன்றே காண்.

புணர்ந்தவிடத்தும் பிரிந்தவிடத்தும் ஒப்ப வினிதென்பான் ‘எனைத்து மினி’தென்றான், தான் ஆற்றிய வகை கூறியவாறு. ஏகாரம் தேற்றம். ‘காண்’ முன்னிலை யசை.

***1203. நினைப்பவர் போன்று நினையார்கொ றும்மல்***
***சினைப்பது போன்று கெடும்.***

*(தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** தும்மல் சினைப்பது போன்று கெடும் - எனக்குத் தும்மல் எழுவது போன்று தோன்றி அடங்கிவிடுகின்றது; நினைப்பவர் போன்று நினை யார் கொல் - ஆதலால், காதலர் என்னை நினைப்பவர் போலிருந்து நினையாது விட்டுவிடுன்றார் போலும்!

வேற்றிடத்திலுள்ள அன்பு கெழுமிய உறவினரால் நினைக்கப்பட்ட வர்க்குத் தும்மலெழுமென்பது, பொதுவான உலகியற்கொள்கை. கணவன் மனைவியரினுஞ் சிறந்த வுறவின்மையால், வினைபற்றிப் பிரிந்து வேற்று நாடு சென்ற கணவன் தன் மனைவியை நினைப்பது இயல்பே. ஆயின், இடைவிடாது வினை கெடுமாதலின், வினை முடிந்த பின்னரே மனைவியை நினைத்து மீளுவதாகக் கூறுவது புலனெறி வழக்கம். அதற்கேற்ப, தலைமகள் தனக்குத் தும்மல் தோன்றி யடங்கியதினின்று, தலைமகன்மேற் கொண்ட வினை முடிவது போன்று தோன்றி முடியாமையை யுணர்ந்தாளாகக் கொள்ளப் பெறும். சினைத்தல் அரும்புதல். ‘கொல்’ ஐயம்.

***1204. யாமு முளேங்கொ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்***
***தோஒ வுளரே யவர்.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** எம் நெஞ்சத்து அவர் ஓ உளரே - எம்முடைய உள்ளத்தில் அவர் எப்போதும் இருக்கின்றாரே! அவர் நெஞ்சத்து யாமும் உளேங் கொல் - அதுபோல யாமும் அவர் உள்ளத்தில் இருக்கின்றேமோ; இல்லேமோ? தெரிய வில்லையே!

யாம் அவர் உள்ளத்திலிருந்தும் வினை முடியாமையால் வரவில் லையோ, அது முடிந்தும் யாம் அவர் உள்ளத்தில் இல்லாமையால் வரவில்லையோ, என்பது கருத்து. ஓகாரம் ஈண்டுச் சிறப்புப்பற்றி இடை

விடாமை யுணர்த்தி நின்றது. இனி, வியப்புக் குறிப்பினது என்றுமாம். 'ஓஒ' இசைநிறை யளபெடை. 'கொல்' ஐயம் ஏகாரம் தேற்றம்.

**1205. தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொ
லெந்நெஞ்சத் தோவா வரல்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** தம் நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் - தம்முடைய உள்ளத் தின்கண் எம்மைச் செல்லவிடாது அதைக் காவல் செ-து கொண்ட காதலர்; எம் நெஞ்சத்து ஓவா வரல் நாணார் கொல் - தாம் மட்டும் எம்முடைய உள்ளத்தின்கண் இடைவிடாது வருதற்கு நாணாரா?

ஒருவரைத் தம்மிடத்திற்கு ஒருபோதும் வரவிடாது தடுத்துவிட்டுத் தாம் மட்டும் அவரிடத்திற்கு ஓயாது செல்லுதல், நாணுடையார் செயலன்மையின் 'நாணார் கொல்' என்றாள். 'கடி' காவலுணர்த்தும் உரிச்சொல்; இனி, விலக்குப் பொருளது எனினுமாம். 'கொல்' ஐயம்.

**1206. மற்றியா னென்னுளேன் மன்னோ வவரொடியா
னுற்றநா ளுள்ள வுளேன்.**

*(அவரொடு கூடி நுகர்ந்தகாலை யின்பத்தை நினைந்து இறந்துபடுநிலை யடைகின்றா-. அதை மறத்தல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** யான் அவரோடு உற்ற நாள் உள்ள உளேன் - யான் அவரோடு கூடியகாலை யின்பத்தை இடைவிடாது நினைத்தலாலேயே இன்று இறந்து படாதிருக்கின்றேன்; மற்று யான் என் உளேன் - வேறு எவ்வகையில் நான் உயிர்வாழ முடியும்?

நான் உயிர் வாழ்தற்குக் காதலர் தூது வருதல், நம் தூது அவரிடம் சேர்தல் முதலிய பிற வழிகளும் உளவேனும், யான் அவை பெற்றிலேன் என்பதுபட நின்றமையின் 'மன்' ஒழியிசைக்கண் வந்தது என்பர் பரிமேலழகர். 'நாள்' ஆகுபொருள்.

**1207. மறப்பி னெவனாவன் மற்கொன் மறப்பறியே
னுள்ளினு முள்ளஞ் சுடும்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** மறப்பு அறியேன் உள்ளினும் உள்ளம் சுடும் - அக் கூட்டக் காலை யின்பத்தை ஒருபோதும் மறத்தலறியேனா- இன்று அதை நினைக்கும் போது கூட, பிரிவுத் துன்பம் என் உள்ளத்தைச் சுடுகின்றதே! மறப்பின் எவன் ஆவன் - இனி, அதை அடியோடு மறந்துவிடின் நான் என்ன நிலைமையடை வேனோ? இறைவன்தான் அறிவான்.

மறத்தற்கும் உள்ளுதற்கும் செயப்படுபொருள் அதிகாரத்தாலும் மேற் குறளினின்றும் வந்தது. 'மன்' நான் உயிர்வாழ வேறொரு வழியும் பெற்றிலேன் என்பது பட நின்றமையின் ஒழியிசைக்கண் வந்தது. 'கொல்' அசைநிலை.

***1208. எனைத்து நினைப்பினுங் காயா ரனைத்தன்றோ***
***காதலர் செ-யுஞ் சிறப்பு.***

*(இப் பிரிவுத் துன்பமறிந்து வந்து காதலர் உனக்குச் சிறந்த இன்பஞ் செ-வர் என்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** எனைத்து நினைப்பினும் காயார் - யான் தம்மை எவ்வளவு நினைத்தாலும் அதுபற்றிச் சினங்கொள்ளார்; அனைத்து அன்றோ காதலர் செ-யும் சிறப்பு - அவ்வளவு பெரிதன்றோ காதலர் எனக்குச் செ-யுஞ் சிறந்த இன்பம்!

தனக்கு அற்றை நிலையில் அந் நினைப்பினும் சிறந்த இன்பமின்மை யின் அதனைச் 'சிறப்பு' என்றாள், காயாமை அந் நினைவிற் குடம்பட்டு நெஞ் சின்கண் நிற்றல். தோழி கூற்றைக் குறிப்பாற் பழித்துப் பகடி செ-தவாறு. 'காதலர் நம்மாட்டருள்' என்றும், 'செ-யுங் குணம்' என்றும் ஓதும் பாட வேறுபாடுகள் சிறந்தனவல்ல.

***1209. விளியுமெ னின்னுயிர் வேறல்ல மென்பா***
***ரளியின்மை யாற்ற நினைந்து.***

*(தலைமகன் தூதுவரக் காணாது வருந்துந் தலைமகள் வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** வேறு அல்லம் என்பார் அளியின்மை ஆற்ற நினைந்து - முன் பெல்லாம் நாமிருவரும் வேறல்லமென்று சொல்லுவாரின் அன்பின்மையை மிகவும் நினைந்து; என் இன் உயிர் விளியும் - எனது இனிய வுயிர் இன்று என் உடம்பைவிட்டுப் பெயர்கின்றது.

காதலர் தப்பாது வருவர். ஆதலால் வருந்தாதேகொள் என்று வற்புறுத்திய தோழிக்கு, என்னுயிர் கழிகின்றது பிரிவினாலன்று, அவரன்பின்மை பற்றியே யென்று எதிரழிந்து கூறியவாறு. 'அளியின்மை' பிரிதலும் பிரிந்து வரவு நீடலும் தூதுவிடாமையுமாம்.

**1210. விடாஅது சென்றாரைக் கண்ணினாற் காணப்**
**படாஅதி வாழி மதி.**

*(வன்புறை யெதிரழிந்த தலைமகளின் காமமிக்க கழிபடர் கிளவி.)*

**(இ-ரை.)** மதி - நிலாவே! விடாது சென்றாரைக் கண்ணினால் காணப் படாதி - என் நெஞ்சில் இடைவிடாதிருந்தே விட்டுப்போன என் காதலரை நான் என் கண்ணளவாலாயினுந் தலைக்கூடும் வகை, நீ மேற்றிசையில் மறையாதிருப்பாயாக; வாழி - நீ (அங்ஙனஞ் செ-யின்) நீடு வாழ்க!

கண்ணளவால் தலைக்கூடுதலாவது, மதி இருவராலும் நோக்கப்படும் போது இருவர் கண்ணும் அதன்கண் சேர்தல். முதலொடு சினைக் கொற்றுமையுண்மையால் 'சென்றாரைக் கண்ணினாற் காண' என்றும், குறையிரக்கின்றாளாதலின் 'வாழி' என்றும், கூறினாள். 'விடா அது', 'படா அதி' இசைநிறை யளபெடைகள்.

இனிப் படாது என்பது பாடமாயின் காதலரைக் கனவிற் கண்ணாற் காணுமாறு மதி படுகின்றதில்லையென, அதனால் தூக்கம்பெறாது வருந்தும் தலைமகள் கூற்றாகக் கொள்ளப்படும்.

## அதி. 122 - கனவுநிலையுரைத்தல்

*அதாவது, தலைமகள் தலைமகனைப்பற்றித் தான் கண்ட கனவுகளைத் தோழிக்குச் சொல்லுதல். கனவு பொதுவாக நனவின்கண் நிகழும் நினைவு மிகுதியாற் காண்பதாகலின், இது நினைந்தவர் புலம்பலின் பின் வைக்கப் பட்டது.*

**1211. காதலர் தூதொடு வந்த கனவினுக்**
**கியாதுசெ- வேன்கொல் விருந்து.**

*(தலைமகனிடமிருந்து தூதுவரக் கண்டாள் சொல்லியது.)*

**(இ-ரை.)** காதலர் தூதொடு வந்த கனவினுக்கு - யான் வருந்துத லறிந்து அது தீரக் காதலர் விடுத்த தூதைக் கொண்டுவந்து காட்டிய கனவிற்கு; விருந்து யாது செ-வேன் - விருந்தாக நான் எதனைச் செ-வேன்?

விருந்து என்னுஞ் சொல் விருந்தாளையும் விருந்துணவையுங் குறிக்கும். இங்கு விருந்தென்றது விருந்திற்குப் படைக்குஞ் சிறப்புணவை. கனவிற்குப் படைப்பதொன் றின்மையின் 'யாது செ-வேன்' என்றாள். 'கொல்' அசைநிலை.

***1212. கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன்.***

*(தூதுவிடக் கருதியாள் சொல்லியது.)*

**(இ-ரை.)** கயல் உண்கண் யான் இரப்பத் துஞ்சின் - தூக்கம் பெறாது வருந்துகின்ற என் கயல்மீன்போலும் மையுண்ட கண்கள் யான் வேண்டிக் கொண்டால் தூங்குமாயின்; கலந்தார்க்கு உயல் உண்மை சாற்றுவேன் - காத லரைக் கனவிற் கண்டு நான் பிரிவாற்றக் கூடிய தன்மையைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் எடுத்துச் சொல்வேன்.

தூதரிடம் சொல்லக் கூடாத மருமச் செ-திகள் உட்பட, எல்லாவற்றை யும் பறைசாற்றினாற்போலத் தெளியச் சொல்வேன் என்னும் கருத்தினாற் 'சாற்றுவேன்' என்றாள். என் கண்களுந் தூங்கா சாற்றலுங் கூடாது என்பதுபட நின்றமையின், 'மன்' ஒழியிசை. முன்னுங் கண்ட பட்டறிவால் சொன்னமையின், கனவுநிலை யுரைத்ததாயிற்று. 'கயலுண்கண்' என்றாள் தன் கணவனொடு கூடியிருந்த காலத்து நலம் அழிந்தமைக் கிரங்கி. கயல் என்பது சேல்கெண்டை. 'உயல்' இறந்துபடாமை.

***1213. நனவினா னல்கா தவரைக் கனவினாற்
காண்டலி னுண்டென் னுயிர்.***

*(ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவேன் என்பதுபடச் சொல்லியது.)*

**(இ-ரை.)** நனவினான் நல்காதவரை - நன்வின்கண் வந்து கூடியின்பந் தராதவரை; கனவினாற் காண்டலின் என் உயிர் உண்டு - யான் கனவின்கட் கண்ட காட்சியால் என் உயிர் தழைக்கின்றது.

அக் காட்சியால் யான் ஆற்றியுள்ளேன். நீ கவல வேண்டுவதில்லை என்பதாம். மூன்றாம் வேற்றுமை ஆனுருபுகள் ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்து மயங்கின.

***1214. கனவினா னுண்டாகுங் காம நனவினா***
***னல்காரை நாடித் தரற்கு.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** நனவினான் நல்காரை நாடித் தரற்கு - நனவின்கண் வந்து கூடி யின்பந்தராதவரை இருக்குமிடந் தேடிச்சென்று தூதர் அழைத்து வரற்கு; காமம் கனவினான் உண்டாகும் - ஏதுவான இன்ப நிகழ்ச்சிகள் கனவின்கண் நிகழ்கின்றன.

'காமம்' ஆகுபெயர்.

***1215. நனவினாற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்***
***கண்ட பொழுதே யினிது.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** நனவினாற் கண்டதும் ஆங்கே (இனிது) - முன்பு நனவின் கண் காதலரைக் கண்டு நுகர்ந்த இன்பமும் அப்பொழுதே இனிதாயிருந் தது; கனவும் தான் கண்டபொழுதே இனிது - இன்று கனவின்கண் அவரைக் கண்டு நுகர்ந்த இன்பமும் அக் கண்டபொழுதே இனிதா யிருந்தது. ஆதலால் இரண்டும் எனக்கு ஒத்தனவே.

முன்னும் யான் பெற்ற இன்பம் இவ்வளவே. அதை இன்னும் இங் ஙனமே பெற்று ஆற்றுவேன் என்பதாம். 'கண்டதூஉம்' இன்னிசை யளபெடை. ஏகாரங்கள் பிரிநிலை. 'கனவு' ஆகுபொருளி. 'இனிது' முன்னுங் கூட்டப்பட்டது. மூன்றாம் வேற்றுமை ஆனுருபு ஏழாம் வேற்றுமைப் பொருளில் மயங்கிற்று.

***1216. நனவென வொன்றில்லை யாயிற் கனவினாற்***
***காதலர் நீங்கலர் மன்.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** நனவு என ஒன்று இல்லையாயின் - நனவென்று சொல்லப் படுகின்ற ஒரு காலவேறுபாடு இல்லையாயின்; கனவினாற் காதலர் நீங்கலர் - கனவின்கண் வந்து கூடுங் காதலர் என்னைவிட்டு ஒருபோதும் பிரியார்.

இடைவிடாது கனவு காணலாமாதலின் 'நீங்கார்' என்றாள். 'ஒன்று' என்பது வேறுபாடு விளக்கி நின்றது. 'மன்' அந் நிலைமை யில்லை யென்பது பட நிற்றலின் ஒழியிசை.

**1217. நனவினா னல்காக் கொடியார் கனவினா**
**னென்னெம்மைப் பீழிப் பது.**

*(விழித்தபோது காதலரைக் காணாது கனவிற் கூட்ட*
*நினைந்து ஆற்றாளா-ச் சொல்லியது.)*

**(இ-ரை.)** நனவினான் நல்காக் கொடியார் - பிரிவுக் காலத்தில் ஒரு போதும் நனவின்கண் வந்து கூடி இன்பந்தராத கொடியவர்; கனவினான் எம்மைப் பீழிப்பது என் - கனவின்கண் மட்டும் வந்து நம்மை வருத்துவது ஏன்?

பிரிதலும் பிரிந்தபின் விரைந்து வராமையும் நோக்கிக் 'கொடியார்' என்றும், கனவில் உடனிருந்து இன்புறுத்திக் கொண்டிருக்கும் போதே விழிப் பால் திடுமென மறைதல் பெருந்துன்பந்தருதலின் 'பீழிப்பது' என்றும் கூறி னாள். இங்கும் மூன்றாம் வேற்றுமை யுருபுகள் இடப்பொருளனவே.

**1218. துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கா**
**னெஞ்சத்த ராவர் விரைந்து.**

*(தானாற்றுதற் பொருட்டுத் தலைமகனை யியற்பழித்த*
*தோழிக்கு இயற்பட மொழிந்தது.)*

**(இ-ரை.)** துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி - என் உள்ளத்தில் இடை விடா துறைகின்ற காதலர், யான் தூங்கும் பொழுது என் தோள்மே லமர்ந் திருந்து; விழிக்குங்கால் விரைந்து நெஞ்சத்தர் ஆவர் - பின்பு விழிக்கும்போது விரைந்து பழையபடி என் உள்ளத்திற் புகுவர்.

நாள்தோறும் கனவில் வந்து கூடுபவரை நீங்கினாரென்று பழித்தல் தகாது என்பதாம். 'தோள்மேல ராகி' இடக்கரடக்கல். விழிப்பின் திடுமைபற்றி 'விரைந்து' என்றாள்.

**1219. நனவினா னல்காரை நோவர் கனவினாற்**
**காதலர்க் காணா தவர்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** கனவினாற் காதலர்க் காணாதவர் - தமக்கொரு காதலரின்மை யால் அவரைக் கனவிற் கண்டறியாத மகளிர்; நனவினான் நல்காரை நோவர் - நனவின்கண் தாம் அறியவந்து கூடி யின்பந்தராத நம் காதலரை அன்பில ரென்று பழித்து நொந்துகொள்வர்.

இயற்பழித்தது பொறாது புலக்கின்றா ளாதலின், தோழியை அயன்மை தோன்றக் கூறினாள். இங்கும் மூன்றாம் வேற்றுமை யுருபுகள் மேற்கூறியனவே.

***1220. நனவினா னந்நீத்தா ரென்பர் கனவினாற்***
***காணார்கொ லிவ்வூ ரவர்.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** இவ் வூரவர் நனவினால் நம்நீத்தார் என்பர் - இவ்வூர் மகளிர் நனவின்கண் நம் காதலர் நம்மைக் கைவிட்டாரென்று கொடுமை கூறுவர்; கனவினாற் காணார் - ஆனால், அவர் கனவின்கண் தப்பாது வருதலை என் போலக் கண்டறியார்.

தன்னொடு தோழிக்குப் பிற செ-திகளிற் கருத்துவேற்றுமை யின்றேனும், அவள் தலைமகனைப் பழித்தலைச் சற்றும் பொறாளாதலின், ‘இவ் வூரவர்’ என அயன்மைப்படுத்திக் கூறினாள். ‘கொல்’ அசைநிலை. மூன்ற னுருபுகள் முற்கூறியனவே.

## அதி. 123 - பொழுதுகண்டிரங்கல்

*அதாவது, மாலைப்பொழுது வந்தவிடத்து அது துணையில்லா மக ளிர்க்குத் துன்பந் தருவது கண்டு வருந்துதல். மாலை என்பது இரவின் முதற் பத்து நாழிகை, கணவரைப் பிரிந்த மகளிர்க்குப் பிரிவுத்துன்பம் இரு வேளைக்கும் பொதுவேனும், பகலிற்போற் பல பொருள்களைக் கண்டும் பல வினைகளைச் செ-தும் பலரொடு பேசியும் காலம்போக்கும் வா-ப்பு இரவி லின்மையானும், மக்களைப்போன்றே விலங்கு பறவைகளும் அடங்கித் துணையொடு கண்படை கொள்ளுங் காட்சி துன்பந்தருதலானும், ஆயர் புல்லாங்குழலிசை அத் துன்பத்தை மிகுத்தலானும், மாலைப் பொழுது வருந்துவதற் கிடமாயிற்று. காதலரைப் பிரிந்த மகளிர்க்குப் பொதுவாக இரவில் தூக்கம் வராமையானும், அரிதில் வருந்தூக்கத்திற் காணுங் கனவும் மெ-யான இன்பந்தராமையானும், அப் போலியின்பக் கனவும் இடை விழிப்பால் துன்பத்தை மிகுத்தலானும், கனவு நிலையால் நீண்டகாலம்*

*பிரிவாற்றியிருக்க இயலாமையானும், அவற்றின் விளைவான பொழுது கண்டிரங்கல் கனவுநிலையுரைத்தலின் பின் வைக்கப் பட்டது.*

**1221. மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்**
**வேலைநீ வாழி பொழுது.**

*(பொழுதொடு புலந்தது.)*

**(இ-ரை.)** பொழுது - மாலைப்பொழுதே! நீ மாலையோ அல்லை - நீ முன்னாள்களில் வந்த மாலைப்பொழுதே யல்லை; மணந்தார் உயிர் உண்ணும் வேலை - காதலரை மணந்து பிரிந்த மகளிரைக் கொல்லும் இறுதிக் காலமாகவே யிருக்கின்றா-, இந்நாள்.

முன்னாள் காதலரொடு கூடியிருந்த நாள். தன்னைப்போற் காதலரைப் பிரிந்த பிறரையும் உளப்படுத்தி 'மணந்தார்' என்றாள். 'வாழி' யென்பது எதிர்மறைக் குறிப்பு. வேலை எல்லை; இங்கு வாழ்நாளெல்லையைக் குறித்தது. வேலை யென்பதற்கு வேலாயிருந்தா- என்றுரைப்பர் மணக்குடவ பரிதிபரிப் பெருமாளர்.

**1222. புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல்**
**வன்கண்ண தோநின் றுணை.**

*(தன் செயலறவை அதன்மேலேற்றிச் சொல்லியது.)*

**(இ-ரை.)** மருள்மாலை - மயங்கும் மாலையே! புன் கண்ணை - நீயும் என்னைப்போலத் துன்பமுடையையா யிருக்கின்றா-; நின் துணை எம் கேள்போல் வன்கண்ணதோ - உன்னுடைய துணையும் என்னுடைய துணை போல அன்பற்றதோ? சொல்வாயாக.

மருளுதல் அல்லது மயங்குதல் பகலும் இரவும் தம்முட் கலத்தல். அவை கலங்குதற் பொருளும் உணர்த்தும். புன்கண் அழகின்மையும் துன்பமும். மாலைப்பொழுது ஒளியின்றிப் பொலிவிழத்தலாலும். மயங்குதற்பொருட் சொல்லைப் பெயராகக் கொண்டிருப்பதாலும், தலைமகள் தன் செயலற்ற நிலையை அதன்மேலும் ஏற்றிக் கூறினாள். எமக்குத் துன்பஞ் செ-தா-; அதனால் நீயுங் கலங்கிப் பொலிவிழந்தா- என்னுங் குறிப்பால் 'வாழி' என்றாள்.

**1223. பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்**
**துன்பம் வளர வரும்.**

*(ஆற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** பனி அரும்பிப் பைதல் கொள் மாலை - காதலரோடு கூடியிருந்த நாளெல்லாம் குளிர்ச்சி தோன்றிப் பசந்துவந்த மாலை; துனி அரும்பித் துன்பம் வளர வரும் - இந்நாளில் எனக்கு உயிர்வாழ்க்கையில் வெறுப்புத் தோன்றித் துன்பம் மேன்மேலும் வளருமாறு வருகின்றது.

'பனியரும்பிப் பைதல்கொள்' என்னுந் தொடர், நடுக்கங்கொண்டு துன்பப்பட என்றொரு குறிப்புப் பொருளுந் தோன்றநின்றது.

**1224. காதல ரில்வழி மாலை கொலைக்களத்**
**தேதிலர் போல வரும்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** மாலை - காதலர் உடனிருந்த நாளெல்லாம் என் உயிர் தளிர்ப்புற வந்தமாலை; காதலர் இல் வழி - அவர் நீங்கியவிடத்து; கொலைக்களத்து ஏதிலர் போல வரும் - கொலைக்களத்திற் கொலைஞர் வருவது போல என்னுயிரைக் கவர வரும்.

இதனால் நான் ஆற்றுமா றெங்ஙனம் என்பது குறிப்பெச்சம். ஏதிலர் ஏதும் அன்பிலாதவர்.

**1225. காலைக்குச் செ—தநன் றென்கொ லெவன்கொல்யான்**
**மாலைக்குச் செ—த பகை.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** (காலையும் மாலையும் காதலர் உடனிருந்த நாள் போலாது இன்று நேர்மாறான இயல்பு கொண்டுள்ளன. அவற்றுள்) யான் காலைக்குச் செ-த நன்று என் - நான் காலைப் பொழுதிற்குச் செ-த நன்கு யாது? மாலைக்குச் செ-த பகை எவன் - மாலைப் பொழுதிற்குச் செ-த தீங்கு யாது?

முன்பெல்லாம் நடுங்கத்தக்க பிரிவச்சம் உண்டுபண்ணிய காலை, இன்று அஃதொழிந்து, இராவென்னும் துன்பக் கடலைக் கடந்தேறும் கரையாக மாறிற்று

என்னுங் கருத்தால் 'நன்றென் கொல்' என்றும், முன்னாளில் எல்லை யில்லா இன்பஞ் செ–து வந்த மாலை இன்று இறந்துபடுமளவு துன்பஞ் செ– கின்ற தென்னுங் கருத்தால் 'பகை யெவன்கொல்' என்றும் கூறினாள். 'கொல்' ஈரிடத்தும் அசைநிலை. 'பகை' ஆகுபொருளி.

**1226. மாலைநோ– செ–தன் மணந்தா ரகலாத**
**காலை யறிந்த திலேன்.**

*(இன்று இங்ஙனமாகின்ற நீ அவர் பிரிவிற் குடம்பட்ட*
*தெங்ஙனம் என்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ–ரை.)** மாலை நோ– செ–தல் - முன்பெல்லாம் எனக்கு இன்பஞ் செ–து வந்த மாலை, அதற்கு நேர்மாறாக இன்று துன்பஞ் செ–யு மென்பதை; மணந்தார் அகலாத காலை அறிந்தது இலேன் - காதலர் பிரிவிற்கு முன் நான் அறியவே யில்லை.

அறிந்திருந்தேனாயின் அவர் பிரிவிற்கு உடம்பட்டிரேன் என்பதாம்.

**1227. காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி**
**மாலை மலருமிந் நோ–.**

*(மாலைப்பொழுதில் நீ இங்ஙனமாதற்குக் கரணியம்*
*என்ன என்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ–ரை.)** இந் நோ– - இக் காமநோயாகிய பூ; காலை அரும்பி - காலைப் பொழுதில் மொக்கு விட்டு; பகல் எல்லாம் போது ஆகி - பகற்கால மெல்லாம் பேரரும்பாக முதிர்ந்து; மாலை மலரும் - மாலைப்பொழுதில் மலராக விரியும்.

படுக்கைவிட் டெழுந்த பொழுதாகலின் கனவில் நிகழ்ந்த கூட்டம் நினைந்தாற்றுதல்பற்றிக் 'காலை யரும்பி' யென்றும், பின்பு பொழுது செல்லச் செல்ல அதை மறந்து பிரிவை நினைத்து ஆற்றாளாதல்பற்றிப் 'பகலெல்லாம் போதாகி' யென்றும், பகல் முடிவில் மக்களும் விலங்கு பறவைகளும் தத்தம் துணையொடு அல்லது துணையை நினைந்து உறைவிடம் திரும்புவது கண்டு, முன்பு தான் நுகர்ந்த இன்பம் நினைந்து ஆற்றாமை மிகுதலின் 'மாலை மலரும்' என்றும், கூறினாள். நோயைப் பூவாக உருவகியாமையின் ஒருமருங் குருவகம்.

***1228. அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன்***
***குழல்போலுங் கொல்லும் படை.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** ஆயன் குழல் - முன்னெல்லாம் இனிதா- ஒலித்த இடையன் புல்லாங்குழல்; அழல் போலும் மாலைக்குத் தூதாகி - இதுபோது தீப்போலச் சுடும் மாலைப்பொழுதிற்கு முன் தூதாக வந்து; கொல்லும் படை - என்னைக் கொல்வது போலத் துன்புறுத்தும் படைக்கலமு மாயிற்று.

முன்னரே வருகை யுணர்த்தலின் முன் தூதாயிற்று; கொல்லுந் தொழிலாற் படைக்கலமாயிற்று. தானே எரிக்கவல்ல மாலை இத்துணைக் கருவிகளையும் பெற்றால் என்னதான் செ-யா தென்பதாம். பின்னின்ற 'போலும்' உரையசை.

இனி, ஆயன் குழல்போலுங் கொல்லும் படை மாலைக்குத் தூதாகி அழல்போலும் என்றுமாம்.

***1229. பதிமருண்டு பைத லுழக்கு மதிமருண்டு***
***மாலை படர்தரும் போழ்து.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** (இதற்கு முன்பு நானே மதிமயங்கி நோ-த்துன்புற்றேன்.) மதி மருண்டு மாலை படர் தரும் போழ்து - இன்று, கண்டாரெல்லாரும் மதிமயங்கும் வகை மாலை வரும்பொழுது; பதி மருண்டு பைதல் உழக்கும் - இந் நகர் முழுதும் மயங்கி நோ-த் துன்புறும்.

மதி மருள என்பது 'மதி மருண்டு' எனத் திரிந்து நின்றது. பதி முழுதும் துன்புறுவதால் யான் இறந்துபடுவேன் என்பதாம். மாலை மயங்கி வரும் போழ்து என் பதி நிலைகலங்கி நோயுழக்கும் என்றுரைப்பார் மணக்குடவ பரிப்பெருமாளர்.

***1230. பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை***
***மாயுமென் மாயா வுயிர்.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** மாயா என் உயிர் - இதுவரை காதலர் பிரிவைப் பொறுத்து இறந்துபடாதிருந்த என் உயிர்; பொருள் மாலையாளரை உள்ளி மருள் மாலை மாயும் - இன்று பொருளியல்பையே தமக்கு இயல்பாகவுடையவரை நினைந்து இம் மயங்கும் மாலைப் பொழுதில் இறந்துபடுவதாகும்.

குறித்த பருவங் கடந்தும் பொருண் முடிவு கருதி வராமையின், சொன்ன சொல்லை நிறைவேற்றுந் தம் மியல்பொழிந்து பொருளியல்பையே தம் மியல்பாகக் கொண்டவரை நினைந்து இனி யாற்றிப் பயனில்லை. ஆதலால், இனி நீ ஒன்றுஞ் சொல்ல வேண்டுவதில்லை யென்பதாம்.

## அதி. 124 - உறுப்பு நலனழிதல்

*அதாவது, பிரிவாற்றாத தலைமகளின் கண்ணும் தோளும் நெற்றியும் முதலிய உறுப்புகள் தம் அழகிழத்தல். இது மனவருத்தம் மிக்கவிடத்து நிகழ்வதாகலின், பொழுதுகண்டிரங்கலின் பின் வைக்கப்பட்டது.*

***1231.*** **சிறுமை நமக்கொழியச் சேட்சென்றா ருள்ளி**
**நறுமலர் நாணின கண்.**

*(ஆற்றாமை மிகுதியால் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.)*

**(இ-ரை.)** சிறுமை நமக்கு ஒழியச் சேண் சென்றார் உள்ளி - இவ் வாற்றாமை நம்மிடத்து நிற்கத் தாம் தொலைவிற்குச் சென்ற காதலரை நினைத்து நீ யழுதலால்; கண் நறுமலர் நாணின - உன் கண்கள் ஒளியும் அழகும் இழந்து, முன் தமக்கு நாணிய நன்மண மலர்கட்கு இன்று தாம் நாணிவிட்டன.

இவை கண்டார் காதலரைக் கொடுமை கூறுவர். ஆதலால் நீ யாற்றல் வேண்டுமென்பது கருத்து. நீ யுள்ளிக் கண் நாணின என்பது தனிநிலை முடிபாம் ( absolute construction).

***1232.*** **நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்**
**பசந்து பனிவாருங் கண்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** பசந்து பனிவாரும் கண் - பசலையடைதல் மேலும் நீர் வடியும் உன் கண்கள்; நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும் - நம்மால் விரும்பப் பட்டவர் அன்பு செ-யாமையைப் பிறருக்குச் சொல்வன போலாகின்றன. ஆதலால் நீ ஆற்றல் வேண்டும்.

சொல்லுவ போலுதல் அதனை அவரு-த்துணருமாறு நிலைமை கெடு தல். நயந்தவர்க்கு என்று பாடமோதுவாரு முளர்.

### *1233.* தணந்தமை சால வறிவிப்ப போலு மணந்தநாள் வீங்கிய தோள்.

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** மணந்த நாள் வீங்கிய தோள் - காதலர் மணந்த நாளில் மகிழ்ச்சி மிகுதியாற் பூரித்த உன் தோள்கள்; தணந்தமை சால அறிவிப்ப போலும் - இன்று அவர் பிரிந்தமையை விளக்கமாகப் பிறர்க்கு உணர்த்துவனபோல் மெலிவடைகின்றன இது கூடாது.

அன்று பூரித்ததும் இன்று மெலிந்ததும் ஆகிய இரண்டையும் கண்டவர், உண்மையுணர்ந்து தலைமகனைக் குறைகூறுவர் என்பதாம்.

### *1234.* பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித் தொல்கவின் வாடிய தோள்.

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** துணை நீங்கித் தொல் கவின் வாடிய தோள் - தம் துணைவர் நீங்கியதனால் அவராற் பெற்ற செயற்கையழகேயன்றிப் பழைய இயற்கை யழகு மிழந்த இத் தோள்கள்; பணை நீங்கிப் பைந்தொடி சோரும் - தம் பருமை குன்றியதனாற் பசும்பொன் வளையல்கள் கழலச் செ-யும்.

'சோரும்' என இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. முதலொடு சினைக்குள்ள ஒற்றுமைபற்றித் 'துணை நீங்கி' என்றாள். அன்று அவர் பிரிந்தாரென்று அவரது அன்பின்மையை உணர்த் தின; இன்று அவர் குறித்த பருவத்து வந்திலரென்று அவரது பொ-ம் மையை உணர்த்துகின்றன. இங்ஙனம் அவர்மேற் குறைகூறுதற்கு அவரே இடந்தந்துள்ளார் என்பதாம்.

### *1235.* கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு தொல்கவின் வாடிய தோள்.

*(இதுவுமது.)*

**(இ-ரை)**. தொடியொடு தொல் கவின் வாடிய தோள் - வளையல்களுங் கழன்று பழைய இயற்கை யழகையு மிழந்த இத் தோள்கள்; கொடியார் கொடுமை உரைக்கும் - கட்டியணைத்த கை சற்று நெகிழினும் ஆற்றாதவள் இத்துணைக் கால நீட்டியது என்னவாறென்று எண்ணாத கொடியவரின் கொடுமையைத் தாமே சொல்கின்றன.

அவரொடு கலந்த தோள்களே சொல்லுமாயின், கலவாத அயலார் சொல்வதைச் சொல்ல வேண்டுவதில்லை யென்பதாம். உரைத்தல் உரைப்பது போலத் தெரிவித்தல். 'ஒடு' வேறு வினைக்கண் வந்த உடனிகழ்ச்சி.

***1236.*** **தொடியொடு தோணெகிழ நோவ லவரைக்**
**கொடிய ரெனக்கூற னொந்து.**

*(தானாற்றுதற் பொருட்டுத் தலைமகனை இயற்பழித்த தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** தொடியொடு தோள்நெகிழ - யான் ஆற்றியிருக்கவும் என் வயப்படாது கடகங்கள் கழலுமாறு தோள்கள் மெலிய; அவரைக் கொடியர் எனக் கூறல் நொந்து நோவல் - நீ அவற்றைக் கண்டவளவில் காதலரைக் கொடியர் எனக் கூறுதலைப் பொறாது உள்ளே நோகின்றேன்.

யான் ஆற்றேனாகின்றது காதலர் வராததிற்கன்று; நீ அவரைக் குறை கூறுகின்றதற்கே யென்பதாம். 'ஒடு' மேற்கூறியதே.

***1237.*** **பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்**
**வாடுதோட் பூச லுரைத்து.**

*(அவ் வியற்பழிப்புப் பொறாது தன் நெஞ்சிற்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** நெஞ்சே - என் உள்ளமே! கொடியார்க்கு என் வாடுதோள் பூசல் உரைத்து - இவள் கொடியாரென்கிறவரிடம் நீ சென்று என் மெலிகின்ற தோள்களினால் ஏற்படும் ஆரவாரத்தைச் சொல்லி; பாடு பெறுதியோ - ஒரு மேம்பாடு பெறுவாயோ? பெறின் அதைப்போற் சிறந்த தொன்றில்லை.

'பாடுபெறுதியோ' என்னும் ஆர்வ வினா பெறுதல் கூடாமையை யுணர்த்திநின்றது. 'கொடியார்' என்றது இங்கு எதிர்மறைக் குறிப்பு. 'வாடுதோள்' என்பது அவை தாமே வாடுகின்றன என்பது தோன்ற நின்றது. 'பூசல்' என்றது தோழி இயற்பழித்தலும் தலைமகள் அதை மறுத்துரைத்தலும் முதலியவற்றை.

***1238.*** **முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது**
**பைந்தொடிப் பேதை நுதல்.**

*(வினைமுடித்து மீளுந் தலைமகன் முன்னிகழ்ந்தது*
*நினைந்து தன் னுள்ளே சொல்லியது.)*

**(இ-ரை.)** முயங்கிய கைகளை ஊக்க - தன்னை யிறுகக் கட்டித் தழுவிய கைகளை இவட்கு நோமென்று கருதி ஒருசிறிது தளர்த்தேனாக; பைந்தொடிப் பேதை நுதல் பசந்தது - அதற்குள், அச் சிறு தளர்ச்சியையும் பொறாது, பசும் பொன் வளையல்களை யணிந்த என் இளங்காதலியின் நெற்றி பசலை பா-ந்து விட்டது. அத்தகைய மெல்லியல் நெற்றி இப் பிரிவிற்கு யாதாகுமோ?

இனிக் கடுகிச் செல்லவேண்டு மென்பது கருத்து.

**1239. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற**
**பேதை பெருமழைக் கண்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** முயக்கிடைத் தண்வளி போழ - அங்ஙனம் கைகளைத் தளர்த்த போது எம் இருவர்க்குமிடையே ஒரு சிறு தென்றற் காற்று நுழைந்ததாக; பேதை பெருமழைக் கண் பசப்பு உற்ற - அத்துணைச் சிற்றிடையீடும் பொறாது, என் இளங்காதலியின் பெரிய குளிர்ந்த கண்கள் பசலையடைந்துவிட்டன. அத்தகைய கண்கள் நாடுங் காடும் ஆறும் மலை யுமாகிய மாபேரிடையீடு களையெல்லாம் எங்ஙனம் பொறுத்தனவோ!

'போழ' என்றது இருவருடம்பும் ஒன்றெனா ஒன்றியிருந்தமை தோன்ற நின்றது.

**1240. கண்ணின் பசப்போ பருவர லெ-தின்றே**
**யொண்ணுதல் செ-தது கண்டு.**

*(இதுவுமது)*

**(இ-ரை.)** கண்ணின் பசப்போ - தென்றற் காற்று இடையிற் புகுந்ததனால் வந்த கண்ணின் பசலையோ; ஒள் நுதல் செ-தது கண்டு - தனக்கு அயலி லுள்ள ஒளிபொருந்திய நெற்றி பசந்தது கண்டு; பருவரல் எ-தின்று - துன்ப மடைந்தது.

பொருள்களைக் காணுந் தன்மையில்லா நெற்றி கைகளைத் தளர்த்த வளவிற் பசந்துவிட்டது. ஆனால், அத் தன்மையுள்ள நானோ கைகளைத் தளர்த்த பின் சிறுகாற்று ஊடறுக்கு மளவும் பசவாது வெறுமனே கண்டு கொண்டிருந்தேன், எனத் தன் மென்மைக் கேலாத வன்மையையும் அதன்

வன்மைக் கேலாத மென்மையையும் ஒப்புநோக்கி வெட்கிப் போயிற்றென் பதாம். இங்ஙனம் அவளுறுப்புகள் ஒன்றினொன்று முற்பட்டு நலனழியும். ஆதலால், யாம் விரைந்து சென்று அவளை யடைதல் வேண்டுமென்பது கருத்து.

## அதி. 125 - நெஞ்சொடு கிளத்தல்

*அதாவது, ஆற்றாமை மீதூரத் தனக்கொரு பற்றுக்கோடு காணாத தலைமகள், செ–வதறியாது தன் நெஞ்சொடு பலவாறு சொல்லுதல். இது உறுப்புகள் தம் அழகிழந்தவிடத்து நிகழ்வதாகலின், உறுப்புநலனழிதலின் பின் வைக்கப் பட்டது.*

***1241.*** **நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சேயெனைத்தொன்று**
**மெவ்வநோ– தீர்க்கு மருந்து.**

*(தன் ஆற்றாமை தீருந் திறம் நாடியது.)*

**(இ–ரை.)** நெஞ்சே – என் உள்ளமே! எவ்வ நோ– தீர்க்கும் மருந்து ஒன்று – இத் துன்ப நோயைத் தீர்க்கும் மருந்தாவதொன்றை; எனைத்து ஒன்றும் நினைத்துச் சொல்லாயோ – எத்தன்மைய தாயினும் ஒரு முறையை எண்ணி எனக்குச் சொல்லமாட்டாயா?

பொதுவான மருந்தினால் தீரும் உடல்நோயன்றென்பாள் ‘எவ்வநோ–’ என்றும் , கற்புத் தவிர எதையும் இழக்கும் மருத்துவ முறையாயினும் என்பாள் ‘எனைத்தொன்றும்’ என்றும் கூறினாள்.

***1242.*** **காத லவரில ராகநீ நோவது**
**பேதைமை வாழியென் னெஞ்சு.**

*(தலைமகனைக் காணும் வேட்கை மிகுதியாற் சொல்லியது.)*

**(இ–ரை.)** என் நெஞ்சு வாழி – என் உள்ளமே நீ வாழ்வாயாக! அவர் காதல் இலராக நீ நோவது – அவர் நம்பாற் காதலில்லாதவராகவும் நீ யவர் வரவு நோக்கி வருந்துவது; பேதைமை – உன் பேதைமையின் விளைவே யன்றிப் பிறிதன்று.

விரைந்து மீளாமையானும் நம்பால் தூதுவிடாமையானும் அவர் நம்மை நினையாமை வெளியாகின்றது. இந்நிலையில் நீ அவர்பாற் செல்லாது அவர்

வரவுநோக்கி வருந்துகின்றா–. இது உன் அறியாமை என்னுங் கருத்தாற் 'பேதைமை' யென்றாள். 'வாழி' இகழ்ச்சிக்குறிப்பு.

**1243. இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பரிந்துள்ளல்**
**பைதனோ– செ–தார்க ணில்.**

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** நெஞ்சே இருந்து உள்ளிப் பரிதல் என் – என் உள்ளமே! நீ அவர்பாற் செல்வதுஞ் செ–யாது இறந்துபடுவதுஞ் செ–யாது, இங்கிருந்து கொண்டு அவர் வரவு நினைந்து வீணாக வருந்துவது ஏன்? பைதல் நோ– செ–தார்கண் பரிந்து உள்ளல் இல் – இத் துன்ப நோயை உண்டாக்கிய வரிடத்துத்தான் நம்மை அன்பாக நினைந்து நம்மிடம் வரக் கருதுதல் இல்லையே?

நம்பால் அருளிலராகலின் தாமாக வரார். நாம்தான் அவரிடத்துச் செல்ல வேண்டும் என்பதாம்.

**1244. கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்**
**தின்னு மவர்க்காண லுற்று.**

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** நெஞ்சே கண்ணும் கொளச் சேறி – என் உள்ளமே நீ என் காதலர்பாற் செல்லலுற்றாயாயின், இக் கண்களையும் உடன் கொண்டுசெல்; இவை அவர்க் காணல் உற்று என்னைத் தின்னும் – ஏனெனின், நீ தனியா–ச் செல்வாயாயின் இவை அவரைக் காண வேண்டுமென்னும் பேராவலினால், அவரைக் காட்டச் சொல்லி. என்னைப் பி–த்துத் தின்றுவிடும்.

தின்னுதல் என்பது தின்பதுபோலத் தொந்தரவு செ–தல்; ஆகுவினை; கொண்டு என்பது 'கொள்' எனத் திரிந்து நின்றது. காதலரிருக்குமிடஞ் சென்று அவரை ஆசை தீரக் காணவேண்டுமென்பதாம்.

**1245. செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா**
**முற்றா லுறாஅ தவர்.**

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** நெஞ்சே – என் உள்ளமே! யாம் உற்றால் உறாதவர் – யாம் அவர் பால் அன்புகொண்டாலும் தாம் எம்பால் அன்புகொள்ளாத நம் காதலரை;; செற்றார்

எனக் கைவிடல் உண்டோ - வெறுத்தாரென்று நாம் அவரை விட்டு விலகுதல் நமக்குத் தகுமோ? தகாதே!

உறுதல் அன்பாற் பொருந்துதல். அவர்பாற் செல்லுவதே நமக்குத் தகும் என்பதாம்.

### *1246.* கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணரா—
பொ—க்கா—வு கா—தியென் னெஞ்சு.

*(தலைமகன் கொடுமை நினைந்து செலவுடன்படாத நெஞ்சினைக் கழறியது.)*

**(இ—ரை.)** என் நெஞ்சு - என் உள்ளமே! கலந்து உணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்து உணரா- - யான் தம்மொடு புலந்தால் அப் புலவியைக் கலவி யின்பங் காட்டி நீக்கவல்ல காதலரைக் காணும்போது, வெளித் தோற்றத்திற் காகவேனும் சற்றுப் புலந்து பின்பு அது நீக்கமாட்டா-; பொ-க் கா-வு கா-தி - அது செ-யமாட்டாத நீ இன்று அவரைக் கொடியவர் எனக் கூறி வெறுப்பது போல நடிக்கின்றா-; இந் நடிப்பை விட்டுவிட்டு அவரிடஞ் செல்லத் துணிவாயாக.

கலந்துணர்த்தலென்றது கலவியின்ப ஆசை காட்டி அதனாற் புலவியை நீக்குதலை. பொ-க் கா-வு நிலையில்லாத வெறுப்பு. கண்டால் வெறுக்க முடியாது காணாதவிடத்தில் மட்டும் வெறுப்பதாற் பயனில்லை யென்பதாம்.

### *1247.* காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு.

*(நாண் தடுத்தலின் காதலரிடம் செலவொழிவாள் சொல்லியது.)*

**(இ—ரை.)** நல் நெஞ்சே - என் நன்மனமே! ஒன்று காமம் விடு - காமம் நாண் என்னும் இரண்டனுள் ஒன்று காமத்தை விட்டுவிடு, நாண் விடு - அல்லா விட்டால் நாணை விட்டுவிடு; இவ் விரண்டு யானோ பொறேன் - இவ் விரண்டையும் நீ வைத்துக்கொள்ள விரும்பின், அவ் விரண்டையும் தாங்கும் ஆற்றலோ எனக்கில்லை.

‘நன்னெஞ்சே’ என்றது, இன்பத்தையும் பெண்மையையும் ஒருங்கே நிலைபெறுத்தலால் நீ நல்லையென்று பாராட்டியவாறாம். இது நன்றேயெனி னும், இவ் விரண்டையும் ஒருங்கே தாங்குதல் உயிருக்கு இயலாமையின்,

உயிரைக் காக்க வேண்டின் இவ் விரண்டுள் ஒன்றை விட்டுவிடுதல் வேண்டும். இவற்றுள் நாணே சிறந்ததாதலின், காதலர் வரும்வரை ஆற்றியிருத்தலே தக்க தென்பதாம். 'ஒன்றோ' - ஒகாரம் அசைநிலை. 'யானோ' - ஒகாரம் பிரிநிலை.

முற்றும்மை தொக்கது.

***1248.*** **பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்**
**பின்செல்வா— பேதையென் நெஞ்சு.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** என் நெஞ்சு - என் உள்ளமே! அவர் பிரிந்து நல்கார் என்று - அவர் இவ் வாற்றாமையை அறியாமையின் இரங்கி வந்து இன்பந்தரார் என்று கருதி; பிரிந்தவர் பின் ஏங்கிச் செல்வா- - அதை அறிவித்தற் பொருட்டு நம்மைவிட்டுப் பிரிந்துபோனவர் பின் ஏக்கங்கொண்டு செல்கின்றா-; பேதை - நீ என் பேதையா யிருக்கின்றா-?

ஆற்றாமையைக் கண்ணாரக் கண்டும் இரங்காது பிரிந்துபோனவர் இதைச் சென்றறிவித்தவுடன் திரும்பி வந்து இன்பந் தருவாரென்று கருதினமையின், 'பேதை' என்றாள்.

***1249.*** **உள்ளத்தார் காத லவராக வுள்ளிநீ**
**யாருழைச் சேறியென் நெஞ்சு.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** என் நெஞ்சு - என் மனமே! காதலவர் உள்ளத்தாராக - காதலர் உன்னகத்தாராயிருக்கவும்; நீ உள்ளி யாருழைச் சேறி - நீ அவரைத் தேடி யாரிடத்துச் செல்கின்றா-?

உனக்குள்ளேயே யிருக்கின்றவரை நீ வெளியே தேடிச்செல்லுதல் ஒருவர் தன் இல்லத்திற்குள் ளிருப்பவரைத் தேடி வேறோ ரில்லம் செல்வது போலும் எள்ளி நகையாடத்தக்க செ-தியென்பதாம்.

"உள்ள மென்புழி அம்முப் பகுதிப்பொருள் விகுதி" என்றார் பரிமே லழகர். நெஞ்சும் உள்ளமும் ஒன்றேயாதலின், உள் என்றிருக்க வேண்டிய

இடப்பொருட்சொல் ‘அம்’ என்னும் முதனிலைப் பொருளீறு பெற்ற தென்று அவர் கொண்டது சரியே.

**1250. துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா**
**வின்னு மிழத்துங் கவின்.**

*(அவரை மறந்தாற்றல் வேண்டுமென்பது படச் சொல்லியது.)*

**(இ-ரை.)** துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா - எம்மைக் கூடா வண்ணம் பிரிந்து போனவரை எம் உள்ளத்து உடையேமாக; இன்னும் கவின் இழத்தும் - முன்னிழந்த புறவழகேயன்றி எஞ்சி நின்ற அகவழகும் இழப்பேம்.

அவர் நம்மைக் கூடாவாறு பிரிந்து போனமையாலும், நாம் அவரை மறக்க முடியாமையாலும், போன மேனியழகேயன்றி நின்ற நிறையும் இழப் பேம். ஆதலால், அவரை மறந்தாற்றுதலே நன்றென்பதாம்.

## அதி. 126 - நிறையழிதல்

*அதாவது, தலைமகள் தன் மனத்து அடக்கவேண்டிய பல செ-திகளைத் தன் வேட்கை மிகுதியால் வெளிவிட்டுச் சொல்லுதல். “நிறை யெனப்படுவது மறைபிற ரறியாமை” என்றார் நல்லந்துவனார் (கலித். 123): நிறையழிதற்குக் கரணியம் மேலதிகார ஈற்றுக் குறளிற் கூறப்பட்டதனால், இது நெஞ்சொடு கிளத்தலின் பின் வைக்கப்பட்டது.*

**1251. காமக் கணிச்சி யுடைக்கும் நிறையென்னு**
**நாணுத்தாழ் வீழ்த்த கதவு.**

*(நாணு நிறையு மழியாமை நீ யாற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** நாணுத் தாழ் வீழ்த்த நிறையென்னுங் கதவு - நாணாகிய தாழிட்டுப் பூட்டிய நிறையென்னுங் கதவை; காமக் கணிச்சி உடைக்கும் - காமவேட்கையாகிய கோடரி வெட்டிப் பிளக்கும்.

நாணுள்ள வரையும் நிறை அழியாதாகலின் அதைத் தாழாக்கியும், அகத்துள்ளவற்றைப் பிறர் கவராமற் காத்தலின் நிறையைக் கதவாக்கியும், வலிமையுள்ள இவ் விரு பண்புகளையும் ஒருங்கே நீக்கலின் காமவேட்கை யைக் கோடரியாக்கியும் கூறினாள். இஃது உருவக அணி.

**1252. காம மெனவொன்றோ கண்ணின்றென் னெஞ்சத்தை
யாமத்து மாளுந் தொழில்.**

*(நெஞ்சின்கண் தோன்றிய காமம் நெஞ்சாலடக்கப்படு
மென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** காமம் என ஒன்று கண் இன்று - காமமென்று சொல்லப்படுகின்ற ஒன்று கண்ணோட்ட மில்லதாயிருந்தது; யாமத்தும் என் நெஞ்சத்தைத் தொழில் ஆளும் - எல்லாருந் தொழில் நீங்கித் தூங்கும் நள்ளிரவிலும் என் உள்ளத்தை ஏவல் கொள்ளும்.

தன்னைத் தோற்றுவித்ததனால் தா-போலுள்ள நெஞ்சத்தையே ஏவல் கொள்ளும் துணிவுடைமைபற்றிக் 'காம மெனவொன்று' என்றும், தகாத நேரத்திலும் வேலை வாங்குதலால் 'கண்ணின்று' என்றுங் கூறினாள்; தொழிலாளு தலாவது தலைமகன்கண் செலவிடுத்தல். 'ஓ' இரக்கக் குறிப்பு.

**1253. மறைப்பேன்மற் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போற் றோன்றி விடும்.**

*(மகளிர் காமம் மறைக்கப்படுமென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** யான் காமத்தை மறைப்பேன் - யான் இக் காமத்தை என் னுள்ளே அடக்கிவைக்கக் கருதுவேன்; குறிப்பு இன்றித் தும்மல்போல் தோன்றிவிடும் - ஆனால், அது என் கருத்துவழி நிற்காமல் தும்மல் போலத் திடுமென்று வெளிப்பட்டு விடுகின்றது.

தும்மல்போலக் காமமும் அடங்குகின்றதில்லை யென்பதாம். 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் இரக்கக் குறிப்பு.

**1254. நிறையுடையே னென்பேன்மன் யானோவென் காம
மறையிறந்து மன்று படும்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** யான் நிறையுடையேன் என்பேன் - இதற்கு முன்பெல்லாம் யான் என்னை நிறையுடையேன் என்று கருதியிருந்தேன்; என் காமம் மறை இறந்து மன்றுபடும் - ஆனால், இன்று என் காமம் கட்டிற்கடங்காது அம்பலப் பட்டுவிட்டது.

இனி என் வயத்ததன்று என்பதாம். ‘மன்’ ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் இரக்கக் குறிப்பு. மன்றுபடுதல் பலருமறிதல்.

**1255. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ**
**யுற்றா ரறிவதொன் றன்று.**

*(நம்மை மறந்தாரை நாமும் மறத்தற்குரியோம் என்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை - தம்மைத் துன்புறுத்திப் பிரிந்து சென்றார் பின் செல்லாது தாமும் நீங்கி நிற்கும் நிறை யுடைமை; காமநோ- உற்றார் அறிவது ஒன்று அன்று - காமநோ-ப் படாதவர் அறிவ தொன்றேயன்றி அந் நோ-ப்பட்டவர் அறிவ தொன்றன்று.

காமநோ-ப்பட்டவர் மானமுடையவரல்லர். ஆதலால் ‘செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை’ அவர்க்கில்லை யென்பதாம். இன்பக் காலத்தைத் துன்பக்காலமாக மாற்றியதால் ‘செற்றார்’ என்றார். பின் செல்லுதல் மனத்தால் இடைவிடாது நினைத்தல். ‘பெருந்தகைமை’ இங்கு ஆகுபொருளி.

**1256. செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ**
**வெற்றென்னை யுற்ற துயர்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை)** செற்றவர் பின்சேறல் வேண்டி - என்னைத் துன்புறுத்திப் பிரிந்து சென்றவர் பின்னே யான் செல்லுதலை வேண்டுதலான்; என்னை உற்ற துயர் எற்று - என்னை யடைந்துள்ள காமநோ- எத்தகையது? அளித்து - ஐயோ! இரங்கத்தக்கது!

இக் காமநோ- என்னை அளவிறந்து இழிவுபடுத்துவதால் மிகக் கொடிது என்பதாம். ‘செற்றவர்’ என்றது மேற்குறளிற் ‘செற்றார்’ என்றது போன்றதே. ‘அளித்து’ எதிர்மறைக் குறிப்பு. ‘அரோ’ அசைநிலை.

**1257. நாணென வொன்றோ வறியலங் காமத்தாற்**
**பேணியார் பெட்ப செயின்.**

*(பரத்தையிற் பிரிந்துவந்தவனாகக் கருதப்பட்ட தலைமகனோடு நிறையழிவாற் கூடிய தலைமகளை நோக்கி, நீ புலவாமைக்குக் கரணியம் யாதென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** பேணியார் காமத்தால் பெட்ப செயின் - நம்மால் விரும்பப் பட்டவர் வந்து காமத்தால் நாம் விரும்பியவற்றைச் செ-யும்போது; நாண் என ஒன்றோ அறியலம் - நாண் என்று ஒன்றை அறியமாட்டாதிருந்தேம்.

ஆசிரியர் ஒருமனை(வி) மணத்தையே இவ் வின்பத்துப்பாலிற் கூறுவதாலும், இது தலைசிறந்த தமிழறநூலாதலாலும், கோவைகளிற் போலப் பரத்தை கூற்றாக இங்கு ஒன்றுங் கூறப்படாமையாலும், "பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனோடு" என்று பரிமேலழகர் கொளுவிற் கூறியிருப்பது பொருந்தாது. 'ஒன்று' என்பது ஒரு தனிப்பொருள் என்னும் பொருட்டு. ஓகாரம் பிரிநிலை. 'அறியலம்' என்பது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை யாயின், தன் குற்றத்தைக் குறைத்தற்குத் தோழியையும் உளப்படுத்திக் கொண்டதாகக் கொள்க. செயப்பாட்டு வினைமுதல் 'பேணியார்' எனச் செ-வினை முதல் வடிவில் நின்றது. 'நாண்' பரத்தையர் தோ-ந்ததாகக் கருதப்பட்ட மார்பைத் தோ-தற்கு நாணுதல். 'பெட்ப' வேட்கை மிகுதியாற் கருதியிருந்த கலவி வினைகள். 'அறியலர்', 'பெட்பச் செயின்' என்பன மணக்குடவ பரிப்பெரு மாளர் கொண்ட பாடம்.

***1258. பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்***
***பெண்மை யுடைக்கும் படை.***

*(இதுவுமது.)*

**(இ-ரை)** நம் பெண்மை உடைக்கும் படை - நம் நிறையாகிய அரணை யழிக்கும் படைக்கலம்; பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோ - பல நடிப்புச் செயல்களில் வல்ல கள்வராகிய நம் காதலரின் தாழ்மையான பேச்சன்றோ?

வந்தாற் புலக்கவேண்டுமென்றும், அப் புலவியை நீக்க அவர் சொல்லுஞ் சொற்களையும் செ- யுஞ் செயல்களையும் பொருட்படுத்தக் கூடாதென்றும் நான் கொண்டிருந்த தீர்மானத்தை அடியோடு மறந்து, கலவிக்கண் அவரினும் முற்படும் வகை பசப்பி மயக்கிவிட்டார் என்பாள், 'பன்மாயக் கள்வன்' என் றாள். 'பணிமொழி' எத்துணைக் கடுஞ்சினத்தையும் எளிதில் தணிக்கும் இனி மையும் தாழ்மையுங் கலந்த வசியச் சொற்கள். அத்தகைத் திறமையொடு அத் தகைச் சொற்களைச் சொல்லும்போது, என் நிறை யழியாது வேறென் செ-யும் என்பதாம். 'பெண்மை' இங்குத் தலைமைபற்றி நிறைமேல் நின்றது.

**1259. புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங்**
**கலத்த லுறுவது கண்டு.**

*(இதுவுமது.)*

**(இ-ரை)** புலப்பல் எனச் சென்றேன் - அவர் வந்தபொழுது உரை யாடாது ஊடவேண்டுமென்று கருதி அவர் முன்நில்லாது வேறோரிடத்திற்குப் போனேன்; நெஞ்சம் கலத்தல் உறுவது கண்டு புல்லினேன் - அங்ஙனம் போ-த்தான் என்ன? என் உள்ளம் நிறையில் நில்லாது அறைபோ- அவரோடு கலத்தல் தொடங்குதலை யறிந்து இனி இவ் வூடல் பயன்படா தென்று அவரைத் தழுவினேன்.

நிறையழிந்தவர்க்குக் கூடலேயன்றி ஊடலில்லை யென்பதாம்.

**1260. நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ**
**புணர்ந்தூடி நிற்பே மெனல்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை)** நிணம் தீயில் இட்டு அன்ன நெஞ்சினார்க்கு - கொழுப்பைத் தீயிலிட்டால் உருகுவதுபோலக் காதலரைக் கண்டவுடன் நிறையழிந் துருகும் உள்ளத்தையுடைய மகளிர்க்கு; புணர்ந்து ஊடி நிற்பேம் எனல் உண்டோ - அவர் அணுகி நிற்க யாம் ஊடி அந் நிலையிலேயே நிற்கக் கடவேம் என்று கருதுதல் உளதோ? இல்லையே!

யான் அத் தன்மையேனாகலின் அந் நிலைமை யில்லை யென்பதாம். புணர்தல் தலைக்கூடி நிற்றல். அவர் புணர்ந்து, யாம் ஊடிநிற்பேம் என்பது, மணியடித்து வண்டி புறப்பட்டது என்றாற்போன்ற தனிநிலைக் கிளவியச் சொல்லியமாம். (absolute clause) (sentence)

## அதி. 127 - அவர்வயின் விதும்பல்

*அதாவது, தொலைவிடைப் பிரிவின்கண் தலைமகனுந் தலைமகளும் வேட்கைமிகுதியினால் ஒருவரையொருவர் காண்டற்கு விரைதல். இதனுள் தலைமகள் கூற்று நிறையழிவால் நிகழ்ந்ததாகலின், நிறையழிதலின் பின் வைக்கப்பட்டது.*

*"தலைமகன் பிரிவும் தலைமக ளாற்றாமையும் அதிகாரப்பட்டு வருகின்றமையின், இருவரையுஞ் சுட்டிப் பொதுவாகிய பன்மைப் பாலாற் கூறினார். பிறரெல்லாம் இதனைத் தலைமகனை நினைந்து தலைமகள் விதுப்புறலென்றார். சுட்டுப்பெயர் சொல்லுவான் குறிப்பொடு கூடிய பொருளுணர்த்துவதல்லது தானொன்றற்குப் பெயராகாமையானும், கவிகூற்றாய அதிகாரத்துத் தலைமகன் உயர்த்தற் பன்மையாற் கூறப்படாமையானும், அஃதுரை யன்மை யறிக" என்று பரிமேலழகர் இவ் வதிகார முகவுரையிற் கூறியது சரியே. 'பிறர்' என்றது மணக்குடவ பரிப்பெருமாளரை. 'அவர்வயின் விரும்பல்' என்பது காலிங்கர் கொண்ட பாடம்.*

***1261.*** **வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற**
**நாளொற்றித் தேய்ந்த விரல்.**

*(தலைமகள் காண்டல் விதுப்பினாற் சொல்லியது.)*

**(இ-ரை.)** அவர் சென்ற நாள் ஒற்றி விரல் தேய்ந்த - அவர் எம்மை விட்டுப் பிரிந்துபோன நாள்களைச் சுவரிற் குறித்த குறிகளைத் தொட்டுத் தொட்டு எண்ணுதலால், என் விரல்கள் தேய்ந்து போயின; கண்ணும் வாள் அற்றுப் புற்கென்ற - அதுவுமன்றி என் கண்களும் அவர் வரும் வழியைப் பார்த்துப் பார்த்து ஒளியிழந்து பூத்துப்போயின. இவ்வாறாயும் இன்னும் அவர் வரக்காணேன்.

இனி, அவரைக் காணுமாறுண்டோ வென்பதாம். 'வாள்' உரிச்சொல். புற்கென்னுதல் பொலிவற்று நுண்பொருள்களைக் காணமுடியாமை. 'நாள்' ஆகுபொருளி. நாளெண்ணுதலும் வழிபார்த்தலும் இடைவிடாது நிகழ்தலின் விதும்பலாயிற்று.

***1262.*** **இலங்கிழா யின்று மறப்பினென் றோண்மேற்**
**கலங்கழியுங் காரிகை நீத்து.**

*(ஆற்றாமை மிகுதலின் இடையறாது நினைத்தல் தகாது.*
*சிறிது மறத்தல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** இலங்கு இழாஅய் - விளங்குகின்ற அணிகளை யணிந்த தோழியே! இன்று மறப்பின் - காதலரை இன்று மறப்பேனாயின்; காரிகை நீத்து - என் அழகு நீங்கி; என் தோள் மேல் கலங் கழியும் - என் தோள்களின் மேலுள்ள கடகங்கள் கழன்றுவிடும்.

'இலங்கிழா-' என்பது உன் அணிகள் போன்றனவல்ல என் அணிகள் என்னுங் குறிப்பினது. பரிமேலழகர் 'நீத்து' என்பதை 'நீப்ப' எனத் திரித்தும், 'மேல்' என்பதைக் 'காரிகை' என்னுஞ் சொற்கு முன் நிறுத்தியும், "காதலரை யானிறந்துபடுகின்ற, இன்று மறப்பேனாயின் மறுபிறப்பினுங் காரிகை யென்னை நீப்ப என்றோள்கள் வளை கழல்வனவாம். இவ் வெல்லைக்கண் நினைந்தால் மறுமைக்கண் அவரை யெ-தி யின்புறலாம்; அதனான் மறக்கற் பாலே னல்லேன்" என்று உரை கூறுவர். இங்ஙனம் வலிந்தும் நலிந்தும் கூறும் கொண்டுகூட்டுப் பொருள்கோளுரை அத்துணைச் சிறந்ததன்று.

***1263. உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்***
***வரனசைஇ யின்னு முளேன்.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** உரன் நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார் - இன்ப நுகர்ச் சியை விரும்பாது வலிமையாற் பெறும் போர் வெற்றியை விரும்பி, நம்மைத் துணையாகக் கொள்வதை யிகழ்ந்து ஊக்கத்தைத் துணையாகக் கொண்டு போனவர்; வரல் நசைஇ இன்னும் உளேன் - திரும்பி வருதலை விரும்பு தலால் இன்னும் உயிர் வாழ்ந்திருக்கின்றேன்.

அவ் விருப்பம் இல்லையாயின் இதற்குள் இறந்துபட்டிருப்பேன் என்பதாம். 'உரன்' ஆகுபொருளி. 'நசைஇ' சொல்லிசை யளபெடை.

***1264. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்***
***கோடுகொ டேறுமென் னெஞ்சு.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** பிரிந்தார் கூடிய காமம் வரவு உள்ளி - காமம் நீங்கியவரா- நம்மை விட்டுப் பிரிந்து சென்ற நம் காதலர் காமங் கூடியவரா- நம்மிடம் திரும்பி வருதலை நினைந்து; என் நெஞ்சு கோடு கொடு ஏறும் - என் உள்ளம் வருத்தம் நீங்கி மேன்மேற் பணைத் தெழுகின்றது.

அந் நினைவின்றேல் இறந்துபடுவேன் என்பதாம். வினைவயிற் பிரியு மிடத்து அதற்குக் தடையாகவுள்ள காமத்தை நோக்காது வினையையே நோக்குதலும், வினை முடிந்தவிடத்துக் காமத்தையே மிகுதியாக நோக்கு தலும், தலைமகனுக் கியல்பாதலின் 'கூடிய காமம்' என்றாள். இதில் ஒடுவுருபு

தொக்கது. கூடிய காமத்தொடு என விரியும். கோடு கிளை, கோடுகொண் டேறுதல் மேன்மேற் கிளைத்தெழுதல். மரத்தின் தொழில் நெஞ்சின்மேலேற்றப் பட்டது. 'கொடு' கொண்டு என்பதன் தொகுத்தல். இக் குறட்கு,

"கூடுதற்கு அரிய காமத்தைக் கூடப்பெற்றும் பிரிந்தவர் வருவாராக நினைந்தே, என்னெஞ்சம் மரத்தின் மேலேறிப் பாராநின்றது" என்பது மணக் குடவ பரிப்பெருமாளர் உரை.

"கூடிப் பிரிந்த நாயகர் வரும் வழி பார்த்து ஆசை என்னும் மலையில் என் நெஞ்சு ஏறிப் பார்க்கும்" என்பது பரிதியார் உரை. கோடு மலை. குவடு – கோடு.

## *1265.* காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபி னீங்குமென் மென்றோட் பசப்பு.

*(தலைமகன் வரவு கூறி, ஆற்றாயா-ப் பசக்கற்பாலை யல்லை யென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ–ரை.)** கண் ஆரக் கொண்கனைக் காண்க – என் கண்கள் நிறைவு பெறும் வகை என் காதலரை நான் காண்பேனாக; கண்ட பின் என் மெல் தோள் பசப்பு நீங்கும் – அங்ஙனங் கண்ட பின் என் மெல்லிய தோளின்கண் உள்ள பசலை தானே நீங்கிவிடும்.

நிறைவுபெறும் வகை காணுதலாவது ஆசை தீரக் காண்டல். காண்க என்னும் வியங்கோள் ஆர்வமிகுதி பற்றியது. 'மன்' இன்றியமையாத தென்னும் பொருள்பட நின்றமையின் ஒழியிசை. காதலர் வரவைக் கண்ணாற் கண்டாலன்றிக் காதாற் கேட்டதினால் மட்டும் பசலை நீங்கா தென்பதாம்.

## *1266.* வருகமற் கொண்க னொருநாட் பருகுவன் பைதனோ யெல்லாங் கெட.

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** கொண்கன் ஒரு நாள் வருக – நீண்ட நாளாக வராத என் காதலர் ஒரு நாள் தப்பாது என்னிடம் வருவாராக; பைதல் நோ- எல்லாம் கெடப் பருகுவன் – வந்தால், எனக்குத் துன்பஞ் செ-கின்ற இக் காமநோ- அடியோடு நீங்குமாறு, அவருடம்பாகிய அமிழ்தத்தை என் ஐம்புலனாலும் ஆசை தீரப் பருகி யின்புறுவேன்.

காதலர் வரின் இன்றுள்ள நோயும் இனிவரும் நோயும் ஒரே வேளையில் முற்றும் நீங்கிவிடும் என்பதாம். 'வருக', 'மன்' என்பவற்றிற்கு மேலுரைத்தவா றுரைக்க.

***1267.*** **புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்**
**கண்ணன்ன கேளிர் வரின்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** கண் அன்ன கேளிர் வரின் - என் கண்போற் சிறந்த காதலர் வருவாராயின்; புலப்பேன் கொல் - அவர் வரவு நீட்டித்தமைபற்றி ஊடுவேனோ; புல்லுவேன்கொல் - அல்லது, என் ஆற்றாமைபற்றி அவரைத் தழுவுவேனோ; கலப்பேன் கொல் - அல்லது, அவ் விரண்டும் வேண்டுதலால் இரு செயல்களையும் விரவுவேனோ, இம் மூன்றுள் எது செ-யக் கடவேன்?

கலத்தலாவது முன் சற்று ஊடிப் பின் தழுவுதல். ஊடல், புலவி, துனி என்னும் மூவகைச் சடைவுகளும் முறையே, தலைமகனால் தீர்வதும் வாயிலால் தீர்வதும் ஒருவகையாலும் தீராததுமாதலின், இங்குப் புலத்தலென்றது ஊடலையே என அறிக. வருமுன்பே புல்லுதலையுங் கலத்தலையுங் கருதியமையின் விதுப்பாயிற்று. "இனிக் கலப்பேன்கொ லென்பதற்கு ஒரு புதுமை செ-யாது பிரியாத நாட்போலக் கலந்தொழுகு வேனோ வென்றுரைப்பாருமுளர்" என்பது பரிமேலழகருரை. 'கொல்' ஐயம். 'ஓ' அசைநிலை. 'ஊடல்' முதலிய முச்சொல்லும் நுண்பொருள் வேறுபாடின்றியும் வழங்கப்படும்.

***1268.*** **வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து**
**மாலை யயர்கம் விருந்து.**

*(வேந்தற் குற்றுழிப் பிரிந்த தலைமகன் வினைமுடிவு நீட்டித்தவிடத்துத் தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.)*

**(இ-ரை.)** வேந்தன் வினை கலந்து வென்றீக - நம் வேந்தன் முனைந்து போர் புரிந்து வெல்வானாக; மனை கலந்து மாலை விருந்து அயர்கம் - யாமும் ஊர் சென்று மனைவியொடு கூடி அற்றை மாலைப் பொழுதின்கண் விருந் துண்டு மகிழ்வேம்.

வேந்தற் குற்றுழிப் பிரிவாவது, குறுநில வரசராகிய வேளிரும் மன்னரும் நம் தலைவராகிய வேந்தரென்னும் பெருநிலவரசர்க்குப் போர்வினை வந்த விடத்து, அவருக்குத் துணையாகச் செல்லுதல். 'மனை' ஆகுபெயர். வினை முடியுமுன் கூறிய கூற்றாதலின் விதும்பலாயிற்று. "பிறரெல்லாம் இதனைத் தலைமகள் கூற்றாக்கி யுரைத்தார். தலைமகனைக் கூறாது வேந்தன் வெல்க வென்றும் மனைகலந்தென்றும் மாலைப் பொழுதின்கண் விருந்தயர்க மென்றும், வந்த அவ் வுரைதானே அது கூடாமைக்குக் கரியாயிற்று" என்று பரிமேலழகர் கூறியிருப்பது சரியே. 'பிறரெல்லாம்' என்றது மணக்குடவ பரிதி காலிங்க பரிப்பெருமாளரை.

**1269. ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்**
**வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.**

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** சேண் சென்றார் வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு - நெடுந் தொலைவு சென்ற தம் காதலர் திரும்பி வருவதாகக் குறித்த நாளை மனத்துட் கொண்டு, அது வருமளவும் ஏக்கம் பிடித்து வருந்தும் மகளிர்க்கு; ஒரு நாள் எழு நாள் போல் செல்லும் - ஒரு நாளே பலநாள் போல் நெடிதாகத் தோன்றும்.

ஏழு என்னும் நிறைவெண் இங்குக் கழிபன்மை யுணர்த்தி நின்றது. முன்பு தலைமகள் பட்டறிவையறிந்த தலைமகன் அதைப் பொதுப்படுத்திக் கூறியவாறு. இருநாளென்று பாடமோதுவாரும் இருந்தமை பரிமேலழக ருரையால் தெரியவருகின்றது.

**1270. பெறினென்னாம் பெற்றக்கா லென்னா முறினென்னா**
**முள்ள முடைந்துக்கக் கால்.**

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** உள்ளம் உடைந்து உக்கக்கால் - காதலி நம் பிரிவை யாற்றாது உள்ளமுடைந்து இறந்துபட்டபின்; பெறின் என் ஆம் - நம்மைத் தப்பாது பெறக்கூடிய நிலைமைய ளானால்தான் என்ன பயன்? பெற்றக்கால் என் ஆம் - அதற்குமேல், உண்மையில் நம்மைப் பெற்றாலுந்தான் என்ன பயன்? உறின் என் ஆம் - இனி, அதற்கும்மேல், நம்மொடு உடம்பொன்றிக் கலந்தாலுந்தான் என்ன பயன்? இவையொன்றாலும் ஒரு பயனுமில்லையே?

அதற்குமுன் யான் விரைந்து செல்லவேண்டுமென்பது கருத்தாதலின், விதும்பலாயிற்று. "இது தலைமகள் கூற்றாயவழி இரங்கலாவதல்லது விதுப்பாகாமை யறிக" என்னும் பரிமேலழகர் மறுப்புப் பொருத்தமானதே. 'ஆம்' ஆகும் என்பதன் தொகுத்தல்.

## அதி. 128 - குறிப்பறிவுறுத்தல்

*அதாவது, தலைமகன், தலைமகள், தோழியாகிய மூவரும் ஒருவர் குறிப்பை யொருவர்க்குச் சொல்லுதல். இது பிரிந்துபோன தலைமகன் திரும்பி வந்தவிடத்து நிகழ்வதாகலின், அவர்வயின் விதும்பலின் பின் வைக்கப் பட்டது.*

### *1271.* கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்க
### ணுரைக்க லுறுவதொன் றுண்டு.

*(பிரிந்து கூடிய தலைமகன் வேட்கை மிகுதியினாற் புதுவது பன்னாளும் பாராட்டத் தலைமகள் இது வொன்றுடைத்தென அஞ்சியவழி, அதையவள் குறிப்பாலறிந்து அவன் அவட்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** கரப்பினும் - நீ சொல்லாது மறைத்தாலும்; ஒல்லா கை இகந்து - அதற்குடம்படாது உன் கட்டை மீறி; நின் உண்கண் உரைக்கல் உறுவது ஒன்று உண்டு - உன் மையுண்ட கண்கள் எனக்குக் குறிப்பாகச் சொல்லுவதொரு செ-தியுள்ளது. இனி அதை நீயே வெளிப்படையாகச் சொல்வாயாக.

தலைமகனின் வரையிறந்த பாராட்டில் மீண்டும் பிரிதற் குறிப்புள்ளதாகத் தலைமகள் கருதி வேறுபட்டதை, அவட் கெடுத்துச்சொல்லித் தன் பிரியாமையை யுணர்த்தியவாறு. கரத்தல் நாணாலடக்குதல்.

### *1272.* கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
### பெண்ணிறைந்த நீர்மை பெரிது.

*(நாணால் அவள் அது சொல்லாதவிடத்து, அவன் தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** கண் நிறைந்த காரிகைக் காம்பு ஏர் தோள் பேதைக்கு - என் கண்ணிற்கு நிறைந்த அழகையும் பச்சை மூங்கிலொத்த தோளையு முடைய என் இளங்காதலிக்கு; பெண் நிறைந்த நீர்மை பெரிது - பெண்மை நிறைந்த இயல்பு மிகுதியாக வுள்ளது.

பெண்ணிறைந்த நீர்மையென்றது அச்ச மட நாணங்களை. மீண்டும் பிரிவுண்டென்று அஞ்சியதால் அச்சமும், இல்லாத பிரிவை ஏற்றிக்கொண்டதால் மடமையும், அதை வெளிவிட்டுச் சொல்லாமையால் நாணமும் வெளிப்பட்டன.

***1273. மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை***
***யணியிற் றிகழ்வதொன் றுண்டு.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** மணியில் திகழ்தரும் நூல் போல் - கோக்கப்பட்ட பளிக்குமணி யகத்துக் கிடந்து புறத்து விளங்கித் தோன்றும் நூல்போல; மடந்தை அணியில் திகழ்வது ஒன்று உண்டு - இப் பெண்ணின் அழககத்துக் கிடந்து புறத்துப் புலனா கின்றதொரு குறிப்பு முண்டு.

அணி கலவியாலான அழகு. அதனகத்துக் கிடத்தலாவது அதனுடன் தோன்றுதல்.

***1274. முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை***
***நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு.***

*(இதுவுமது.)*

**(இ-ரை)** முகை மொக்குள் உள்ளது நாற்றம் போல் - மொட்டின் முகப்பிற் குள் அடங்கிக் கிடந்து வெளியிற் பரவாத மணம் போல; பேதை நகை மொக் குள் உள்ளது ஒன்று உண்டு - என் இளங்காதலியின் நகையரும்பும் முறு வலுக்குள் உள்ளதா- வெளியில் தோன்றாததொரு குறிப்புண்டு.

நகை புணர்ச்சி யின்பத்தால் தோன்றும் மகிழ்ச்சி வெளிப்பாடு.

***1275. செறிதொடி செ—திறந்த கள்ள முறுதுயர்***
***தீர்க்கு மருந்தொன் றுடைத்து.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** செறிதொடி செ-து இறந்த கள்ளம் - நெருங்கிய வளையல் களை யணிந்த என் காதலி, என்னிடத்தில்லாத தொன்றைக் கருதிக்கொண்டு அது கரணியமாக எனக்கு மறைத்து வைத்த குறிப்பு; உறு துயர் தீர்க்கும் மருந்து ஒன்று உடைத்து - என் பெருந்துயரைத் தீர்க்கும் மருந்தாவ தொன்றை உடையதா யிருக்கின்றது.

இல்லாததொன்று பிரிவு. ‘கள்ளம்’ ஆகுபெயர். மறைத்து வைத்தது உடன் போக் குட்கொண்டது. ‘உறுதுயர்’ பெருமகிழ்வுறுத்தற்குச் செ–த பாராட்டு வினைகளைப் பிரிவுக்குறிப்பாகக் கொண்டு அஞ்சியதால் உண்டான மனவருத் தம். ‘உறு’ உரிச்சொல். மருந்தாவது பிரிவின்மை தோழியால் தெரிவித்தல். அதை உடனே செ–தல் வேண்டுமென்பதாம். ‘செறிதொடி’ அன்மொழித் தொகை.

## 1276. பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
## யன்பின்மை சூழ்வ துடைத்து.

*(தலைமகன் குறிப்பறிந்த தலைமகள் அதனை அது தெளிவிக்கச் சென்ற தோழிக் கறிவுறுத்தது.)*

**(இ–ரை.)** பெரிது ஆற்றிப் பெட்பக் கலத்தல் – காதலர் வந்து தம் பிரிவினாலான துன்பத்தை மிகவும் ஆற்றி நாம் மகிழும் வண்ணங் கலக்கின்ற கலவி; அரிது ஆற்றி அன்பின்மை சூழ்வது உடைத்து – இருந்த நிலைமையை நோக்கின், மீண்டும் அத் துன்பத்தையே நீண்ட காலம் அரிதாக ஆற்றியிருந்து, அவரது அன்பின்மையையே நினைக்குந் தன்மையை யுடையதாகும்.

செ–யும் இன்பம் பிரிதற்குறிப்பொடு கூடியதா யிருத்தலின், முடிவில் துன்பமாகவே முடியும் என்பதாம்.

## 1277. தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினு
## முன்ன முணர்ந்த வளை.

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** தண்ணந் துறைவன் தணந்தமை – குளிர்ந்த துறையை யுடையவர் நம்மை உடம்பாற் கூடியிருந்தே உளத்தாற் பிரிந்தமையை; நம்மினும் முன்னம் வளை உணர்ந்த – அவர் குறிப்பாலறியக் கூடிய நம்மினும் முற்பட்டு இவ் வளையல்கள் நுணுகி யறிந்தன.

‘தணந்தமை’ என்று இறந்த காலத்திற் கூறியது கருத்து நிகழ்வுபற்றியும் தேற்றம்பற்றியும் வந்த கால வழுவமைதி. மனநோவால் தோள்மெலிவும் தோள் மெலிவால் வளை கழல்வும் நிகழ்ந்திருக்கவும், மனத்திற்கு முன்னம் வளைகள் அறிந்து கழன்றன வென்று அவற்றை அறிவுஞ் செயலு முடையன வாகக் கூறியிருப்பது, துயர் மடமையின் (Pathetic fallacy) பாற்படும்.

**1278. நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமு**
**மெழுநாளே மேனி பசந்து.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** எம் காதலர் நெருநற்றுச் சென்றார் - எம் காதலர் நேற்றுத்தான் பிரிந்து போனார்; யாமும் மேனி பசந்து எழுநாளேம் - அப் பிரிவிற்கு யாமும் மேனி பசலை யடைந்து எழுநாட் கழிந்த நிலையில் இருக்கின்றேம்.

நேற்றுச் செ-த பேரின்பக் கூட்டத்தால் பிரிவு துணியப்பட்ட தென்பாள் 'நெருநற்றுச் சென்றார்' என்றும், அதனை எழு நாட்கு முன்பே ஐயுற்றதனால் அன்றே மேனி பசந்த தென்பாள் 'மேனிபசந் தெழுநாளேம்' என்றும் கூறினாள். இதனால் தலைமகன் பிரிதற்குறிப் புணர்த்தப்பட்டது.

**1279. தொடிநோக்கி மென்றோளு நோக்கி யடிநோக்கி**
**யஃதாண் டவள்செ- தது.**

*(தலைமகள் குறிப்பறிந்த தோழி அதனைத் தலைமகற் கறிவித்தது.)*

**(இ-ரை.)** (யானது தெளிவித்தவழித் தெளியாது) தொடிநோக்கி - அவர் பிரிந்து செல்ல நான் இங்கிருப்பின் இவை நில்லாவென்னுங் குறிப்பில் தன் தோட்கடகங்களை நோக்கி; மெல் தோளும் நோக்கி - அதற்கேதுவாக இவை மெலியு மென்னும் குறிப்பில் தன் மெல்லிய தோள்களையும் நோக்கி; அடி நோக்கி - அதன்பின், இவ் விரண்டும் நிகழாமல் நீங்கள் காதலருடன் நடந்து சென்று காத்தல் வேண்டு மென்னுங் குறிப்பில் தன் பாதங்களையும் நோக்கி; அஃது ஆண்டு அவள் செ-தது - இங்ஙனம் உடன்போக்குக் குறித்த அச் செயலையே அன்று அவள் செ-தாள்.

பிரிவுக் குறிப்புண்டாயின் செலவழுங்குவித்தல் இதன் பயனாம்.

**1280. பெண்ணினாற் பெண்மை யுடைத்தென்ப கண்ணினாற்**
**காமநோ- சொல்லி யிரவு.**

*(தலைமகன் பிரியாமைக் குறிப்பைத் தோழிக் கறிவுறுத்தது.)*

**(இ-ரை.)** காமநோ- கண்ணினால் சொல்லி இரவு - மகளிர் தம் காம நோயைத் தம் உயிர்த்தோழியர்க்கும் வா-விட்டுச் சொல்லாது, கண்ணினாற் குறிப்பாக வுணர்த்தி அதைத் தீர்க்க வேண்டுமென்று இரப்பது; பெண்ணினால் பெண்மையுடைத்து என்ப - தமக்கு இயல்பாகவுள்ள பெண்டன்மை மேலும் ஒரு பெண்டன்மை யுடைமையாகும் என்பர் அறிந்தோர்.

'கண்ணினாற் காமநோ- சொல்லியிரவு' என்பதே மூலமாதலால் 'இரவு' என்பதற்கு "உடன்போதல் குறித்துத் தம் அடியினை யிரத்தல்" என்று பரி மேலழகர் உரைத்திருப்பது மிகையே யாம். தலைமகன் தன் பிரிவின்மைக் குறிப்பை அறிவுறுப்பான், தலைமகளின் நாணச் சிறப்பை வியந்து அதைப் பொதுப்படுத்திக் கூறியவாறு.

## அதி. 129 - புணர்ச்சி விதும்பல்

*அதாவது, தலைமகனும் தலைமகளும் கலவிக்கண் விரைதல். தலை மகள் பிரிவாற்றாது உடன்போக் குடம்பாட்டுக் குறிப்புணர்த்தலும், தலை மகன் பிரிவின்மைக் குறிப்புணர்த்தலும் புணர்ச்சிக் கேதுவாதலின், குறிப்பறி வுறுத்தலின் பின் வைக்கப்பட்டது.*

***1281.*** **உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்**
**கள்ளுக்கில் காமத்திற் குண்டு.**

*(பிரிதற் குறிப்பினனாகிய தலைமகனோடு நீ புலவாமைக்குக்*
*காரணம் யாதென நகையாடிய தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** உள்ளக் களித்தலும் - நினைத்த வளவிலேயே உள்ளங் கிளர்தலும்; காண மகிழ்தலும் - கண்ட வளவிலேயே இன்புறுதலும்; காமத் திற்கு உண்டு கள்ளுக்கு இல் - காம நுகர்ச்சிக்குரிய காதலன் (அல்லது காதலி) பற்றி யுண்டாகும், குடிப்பிற்குரிய கள்பற்றி யுண்டாகா.

ஆதலாற் காதலன் முன்பு புலப்ப தெங்ஙனம் என்பதாம். களித்தல் கள்ளுண்டு மகிழ்ச்சியடைதல்; மகிழ்தல் கள்ளுண்டு வெறித்து இன்புறுதல். இவ் விரண்டும் உண்டாலன்றி யின்மையின் 'கள்ளுக்கில்' என்றாள். 'உண்டு' என்பது முன்னுஞ் சென்றியைதலால் இறுதி விளக்கு. இதை ஓர் அணியாகக் கொள்வர்.

***1282.*** **தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையுங்**
**காம நிறைய வரின்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** காமம் பனைத் துணையும் நிறைய வரின் - மகளிர்க்குக் காமம் பனையளவாகவும் நிரம்ப வுண்டாகுமாயின்; தினைத்துணையும் ஊடாமை வேண்டும் - அவர் தம் காதலரொடு தினையளவும் ஊடுதலை மேற்கொள்ளா திருத்தல் வேண்டும்.

ஊடின் புணர்ச்சி தடைப்பட்டுக் காமநோ- அளவிறந்த துன்பந்தரு மென்று, பிறர்க்கு நல்லது சொல்வாள் போன்று தன் விதுப்புக் கூறியவாறு. தினை பனையென்னும் அளவுப்பெயர்கள் முறையே சிற்றளவும் பேரளவும் உணர்த்தி நின்றன. உம்மையிரண்டனுள் முன்னது இழிவுசிறப்பு; பின்னது உயர்வுசிறப்பு.

***1283. பேணாது பெட்பவே செ-யினுங் கொண்கனைக்***
***காணா தமையல கண்.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** பேணாது பெட்பவே செ-யினும் - நம்மைப் புறக்கணித்துத் தாம் விரும்பியவற்றையே செ-வாராயினும்; கொண்கனைக் காணாது கண் அமையல - காதலரைக் காணாது என் கண்கள் அமைகின்றன வல்ல.

அத்தகைய கண்களை வைத்துக்கொண்டு நான் புலப்பதெங்ஙனம் என்பதாம். தன் விதுப்புக் கண்மேலேற்றப்பட்டது. ஏகாரம் பிரிநிலை. எதிர் மறை யும்மை ஒத்துக்கொள்வுப் பொருளது.

***1284. ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து***
***கூடற்கட் சென்றதென் னெஞ்சு.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** தோழி - தோழீ! ஊடற்கண் சென்றேன் - காதலரைக் காணுமுன் அவர் செ-த தவற்றை நினைந்து அவரொடு ஊடுதலை மேற்கொண்டேன்; என் நெஞ்சு அது மறந்து கூடற்கண் சென்றது - ஆனால், அவரைக் கண்டவுடன் என் உள்ளமோ அதை மறந்து அவரொடு கூடுதலை மேற்கொண்டுவிட்டது.

அவரைக் கண்டவுடனேயே என் நெஞ்சு அறைபோனமையின் என் தீர்மானம் நிறைவேறவில்லை யென்பதாம். ஊடற்கண் சென்றதனால் என்ன பயன் என்பதுபட நின்றமையின் 'மன்' ஒழியிசை. ஊடற்கண் சென்றதும் நெஞ்சேயாதலின் 'அது மறந்து' என்றாள்.

***1285. எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்***
***பழிகாணேன் கண்ட விடத்து.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் - மற்ற நேரமெல் லாங் காணக்கூடியதா யிருந்தும், கண்ணிற்கு மைதீட்டும்போது மட்டும் தீட்டுக் கோலைக் காணமுடியாத கண்ணேபோல; கண்டவிடத்துக் கொண்கன் பழி காணேன் - கணவரைக் காணாத விடத்தெல்லாம் அவர் தவற்றைக் கண்டிருந்து, அவரைக் கண்டவிடத்து மட்டும் அதைக் காணவியலாது போகின்றேன்.

***1286.*** ***காணுங்காற் காணேன் றவறாய காணாக்காற்***
***காணேன் றவறல் லவை.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** காணுங்கால் தவறாய காணேன் - கணவரை யான் காணும் பொழுது அவர் தவறுகளை ஒருசிறிதுங் காண்கின்றிலேன்; காணாக்கால் தவறு அல்லவை காணேன் - அவரைக் காணாத பொழுதோ அத் தவறுகளை யல்லது பிறவற்றைக் காண்கின்றிலேன்.

முன்பு நான் சொன்ன அவருடைய தவறுகளை இதுபோது காணாமை யாற் புலந்திலேன் என்பதாம். கொண்கனை என்னுஞ் செயப்படுபொருள் அதி காரத்தால் வந்தது.

***1287.*** ***உ—த்த லறிந்து புனல்பா— பவரேபோற்***
***பொ—த்த லறிந்தென் புலந்து.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** உ–த்தல் அறிந்து புனல் பா–பவரேபோல் - தம்மை யிழுத்துக் கொண்டு போகுமென்பதை அறிந்திருந்தும் வேகமா யோடுகின்ற வெள்ளத் திற் பா–வார்போல்; பொ–த்தல் அறிந்து புலந்து என் - ஊடல் நீடு நில்லாமை யறிந்திருந்தும் கணவரோடு ஊடி என்ன பயன்?

புலத்தலால் துன்பமேயன்றி யின்பமில்லையென்பதாம். பா–வார்போற் புலந்து என இசையும். "பொ–த்தலறிந்தே னென்பது பாடமாயின், உ–த்தலறிய ஓடுநீருட் பா–வார்போல முடிவறியப் பண்டொருகாற் புலந்து முடியாமை யறிந்தேன்; இனி அது செ–தற்பாற் றன்றென வுரைக்க" என்று பரிமேலழகர் உரைத்திருப்பது பொருத்தமே. ஏகாரம் பிரிநிலை.

**1288. இளித்தக்க வின்னா செயினுங் களித்தார்க்குக்**
**கள்ளற்றே கள்ளநின் மார்பு.**

*(தலைமகள் புணர்ச்சி விதுப்பறிந்த தோழி தலைமகற்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** கள்வ - மாயக்காரரே! நின் மார்பு - எங்கட்கு உம்முடைய மார்பு; களித்தார்க்கு இளித்தக்க இன்னா செயினும் கள் அற்றே - தன்னை யுண்டு மகிழ்ந்தவர்க்கு இழிவு தரத்தக்க தீயவற்றைச் செ-யினும், அவரால் மேன் மேலும் விரும்பப்படுவதாகிய கள்ளுப் போன்றதே.

இன்னாதவை நாணின்மை, நிறையின்மை, உணர்வின்மை, ஒழுக்க மின்மை, துப்புரவின்மை முதலியன. எங்கட்கு நாணின்மை முதலிய வற்றை நீர் செ-யினும், எங்களால் மேன்மேலும் நீர் விரும்பப்படுவது வியப்பானதே யென்பதாம். அத்தகைய விருப்பமுண்டாமாறு மாயத்தொழில் வல்லீர் என்பாள் 'கள்வ' என்றாள். ஏகாரம் தேற்றம்.

**1289. மலரினு மெல்லிது காமஞ் சிலரதன்**
**செவ்வி தலைப்படு வார்.**

*(உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது.)*

**(இ-ரை.)** காமம் மலரினும் மெல்லிது - காமவின்பம் மலரினும் மெல்லிய தாகும்; அதன் செவ்வி தலைப்படுவார் சிலர் - அதையறிந்து அதன் மென்மை கெடாது நுண்ணிதாக நுகர்பவர் உலகத்துச் சிலரே.

காலமும் இடமும் அறிந்து, குறிப்பும் வேட்கையும் உடல்நிலையும் நோக்கி, கலவி வினைகட்கேற்ற துணைக்கருவிகளுடன் நூன்முறைப்படி நுகரவேண்டுதலின் 'சிலரதன் செவ்வி தலைப்படுவார்' என்றும், இவற்றுள் ஒன்று குறையினும் இன்பங் கெடுமாதலின் 'மலரினும் மெல்லிது காமம்' என்றும் கூறினான். தொடின் வாடுவதும் மோப்பக் குழைவதுமான எல்லாம் உட்பட 'மலர்' என்றான். உம்மை உயர்வுசிறப்பு. குறிப்பொவ்வாமையால் நான் காமச்செவ்வி பெற்றிலேன் என்பதாம். தலைமகள் ஊடல் தீர்தல் இதன் பயன்.

**1290. கண்ணிற் றுனித்தே கலங்கினாள் புல்லுத**
**லென்னினுந் தான்விதுப் புற்று.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** கண்ணின் துனித்தே - முன்னொரு நாள் தழுவல் விதுப் பினாற் சென்ற என்னொடு கண்ணளவாக மட்டும் காதலி யூடி; என்னினும் தான் புல்லுதல் விதுப்புற்றுக் கலங்கினாள் - என்னினும் தான் தழுவல் விதுப்புற்றதினால் அக் கண்ணள வூடலையும் மறந்து அப்பொழுதே கூடிவிட்டாள்.

அதனால், யான் இத்தன்மையேனா- ஏங்கிநிற்கவும் விதுப்பின்றி யூடி நிற்கின்ற இவள் அவளல்லள்.

கண்ணளவாக வூடுதல் சொல் நிகழ்ச்சியின்றிக் கண் சிவத்தல், அவ ளாயின் ஊடற்கண் நீடாமை பயன். ஏகாரம் பிரிநிலை.

## அதி. 130 - நெஞ்சொடு புலத்தல்

*அதாவது, கரணிய முண்டாய விடத்தும் புலக்கக் கருதாது புணர்ச்சி விதும்பும் நெஞ்சுடன் தலைமகன் புலத்தலும் தலைமகள் புலத்தலுமாம். அதி கார முறைமையும் இதனால் விளங்கும்.*

***1291.*** **அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே**
**நீயெமக் காகா தது.**

*(தலைமகன்கண் தவறுண்டாய விடத்தும் புலவி கருதாத நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.)*

**(இ-ரை.)** நெஞ்சே - என் உள்ளமே! அவர் நெஞ்சு அவர்க்கு ஆதல் கண்டும் - அவருடைய உள்ளம் நம்மை நினையாது அவருக்கே யுதவுதல் கண்டபின்பும்; நீ எமக்கு ஆகாதது எவன் - நீ எமக்கு உதவாது அவரையே நினைத்தற்குக் கரணியம் யாது?

பிறர் நமக்குதவாது எப்போதுந் தன்னலமாகவே யிருக்கும்போது, நீ மட்டும் ஏன் தன்னலம் பேணாது பிறர் நலத்தையே நோக்குகின்றா- என்பதாம். அவர்க்காதல் அவர் கருதியதற் குடம்படுதல். 'எமக்காகாதது' என்றது புலவிக் குடம்படாமையை.

***1292.*** **உறாஅ தவர்க்கண்ட கண்ணு மவரைச்**
**செறாஅரெனச் சேறியென் னெஞ்சு.**

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** என் நெஞ்சு – என் உள்ளமே! உறாதவர்க் கண்ட கண்ணும் – கணவர் இன்று நம்மாட்டு அன்பில்லாதவர் என்று அறிந்த பின்பும்; செறார் என அவரைச் சேறி – நாம் அவரிடஞ் சென்றால் சினவாமற் சேர்த்துக் கொள்வா ரென்று கருதி அவர்பாற் செல்லுகின்றா–; இதுபோலும் மடமை வேறுண்டோ?

பழங்காதல் நோக்கிச் செல்கின்றா–. நீ கருதியது நிறைவேறுமோ வென் பதாம். ‘அவரை’ வேற்றுமை மயக்கம்; இரண்டாவது ஏழாவதில் மயங்கிற்று. ‘உறாஅ’ இசைநிறை யளபெடை. செறாஅர்’ எதுகைபற்றி வந்த இன்னிசை யளபெடை.

***1293.* கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ**
**பெட்டாங் கவர்பின் செலல்.**

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** நெஞ்சே – என் உள்ளமே! நீ பெட்டாங்கு அவர் பின் செலல் – என்னிடத்து நில்லாது நீ விரும்பியவாறே அவரிடஞ் செல்லுதற்குக் கரணியம்; கெட்டார்க்கு நட்டார் இல் என்பதோ – நொடித்தவர்க்கு உறவில்லை என்னும் உலக நடப்போ, வேறோ? சொல்வாயாக.

என் கட்டிற் கடங்காது செல்கின்றா யென்பாள் ‘பெட்டாங்கு’ என்றும், தான் மான மிழந்தமையின் ‘கெட்டார்க்கு’ என்றும், தன்வயமின்றிப் பிறர் வயப் படுதல் அடிமைத்தனம் என்பாள் ‘பின் செலல்’ என்றும் கூறினாள். உடன் பிறந்து உடன் வாழும் உள்ளமும் உதவாதநிலையில் உள்ளேன் என்பதாம். பெட்ட ஆங்கு பெட்டாங்கு.

***1294.* இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே**
**துனிசெ–து துவ்வா–காண் மற்று.**

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** நெஞ்சே – என் உள்ளமே! துனிசெ–து மற்றுத் துவ்வா– – கணவரைக் கண்டால் அவர் தவறு நோக்கி முன்பு ஊடி அதை அளவறிந்து நீக்கி அதன் பின்பு கூடக் கருதா–, கண்டவுடன் இன்பம் நுகரக் கருதுகின்றா – ; இனி அன்ன நின்னொடு யார் சூழ்வார் – ஆதலால், இனி அத்தகைய செ –திகளை உன்னோடு கூடி யார் எண்ணுவார்? நான் இனி எண்ணேன்.

முன்னெல்லாம் புலப்பதாக விருந்து இன்று புணர்ச்சி விதும்புதலின் இவ்வாறு கூறினாள். 'அன்ன' என்றது ஊடும் அல்லது புலக்குந் திறங்களை, 'காண்' உரையசை. 'மற்று' பின்மைப் பொருளது.

**1295. பெறாஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சு
மறாஅ விடும்பைத்தென் நெஞ்சு.**

*(வாயிலாகச் சென்ற தோழிகேட்பத் தலைமகள் சொல்லியது.)*

**(இ-ரை.)** பெறாமை அஞ்சும் - காதலரைப் பெறாதபோது அப் பெறாமைக்கு அஞ்சுகின்றது; பெறின் பிரிவு அஞ்சும் - பெற்ற போதோ எதிர்காலத்தில் நேரக்கூடிய பிரிவைக் கருதிக்கொண்டு அதற்கு அஞ்சுகின்றது; என் நெஞ்சு அறா இடும்பைத்து - இங்ஙனம் என் உள்ளம் தீராத துன்பத்தையுடையதாயிருக்கின்றது.

பெறாதபோது கலவியின்மைபற்றியும் பெற்றபோது கலவி தொடராமை பற்றியும் அச்சம் உண்டாவதால், என் வாழ்க்கை எப்போதும் துன்பவாழ்க்கையே என்பதாம். அஞ்சுதல் அஞ்சி வருந்துதல். 'பெறா அமை', 'அறாஅ' இசைநிறை யளபெடைகள்.

**1296. தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்
தினிய விருந்ததென் னெஞ்சு.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** தனியே இருந்து நினைத்தக்கால் - காதலரைப் பிரிந்திருந்து அவர் செ-த கொடுமைகளை யான் தன்னொடு நினைத்தக்கால்; என்னைத் தினிய என் நெஞ்சு இருந்தது - என்னைப் பி-த்துத் தின்பதுபோல் துன்பஞ் செ-தற்கே என் உள்ளம் என்னொடு கூட இருந்தது.

என் நெஞ்சு என்னோடிருந்தது, அவர் செ-த கொடுமைகளை எண்ணி எனக்கு ஆற்றாமைமேலுந் துன்பஞ் செ-தற்கேயன்றி, இன்று அவைநோக்கி அவரொடு புலத்தற்கன் றென்பதாம்.

**1297. நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென்
மாணா மடநெஞ்சிற் பட்டு.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** அவர் மறக்கல்லா என் மாணா மடநெஞ்சிற் பட்டு - தன்னை மறந்த காதலரைத் தான் மறக்கமாட்டாத என் மாட்சிமையில்லா மடநெஞ்சின் சேர்க்கையினால்; நாணும் மறந்தேன் - என் உயிரினுஞ் சிறந்த நாணையும் மறந்துவிட்டேன்.

மாணாமை, மானத்தைக் காத்துக்கொள்ளாமை. மடமை, கண்டபோது நினைத்துக் காணாதபோது மறக்கவேண்டிய தவற்றைக் காணாதபோது நினைத்துக் கண்டபோது மறத்தல். நாண், பல்லாண்டு கூடியொழுகியபின்பும் அன்று கண்டாற்போல் உள்ளமும் உடம்பும் ஒடுங்குதல்.

**"எஞ்ஞான்று மெங்கணவ ரெந்தோள்மேற் சேர்ந்தெழினும்**
**அஞ்ஞான்று கண்டேம்போல் நாணுதுமால்"** **(நாலடி. 385)**

கண்டபொழுதே புணர்ச்சி விதும்பலால் 'நாணும் மறந்தேன்' என்றாள். உம்மை உயர்வுசிறப்பு.

### *1298.* எள்ளி னிளிவாமென் றெண்ணி யவர்திற
### முள்ளு முயிர்க்காத னெஞ்சு.

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** உயிர்க் காதல் நெஞ்சு - உயிர்மேற் காதலையுடைய என் உள்ளம்; எள்ளின் இளிவு ஆம் என்று எண்ணி - நம்மைப் பொருட்படுத்தாது சென்றாரென்று நம் கணவரை நாமும் பொருட்படுத்தா திருப்போமாயின் பின் நமக்கு இழிவாம் என்று கருதி; அவர் திறம் உள்ளும் - அவர் பக்கமே நினைக்கும்.

எள்ளுதல் வாயில் மறுத்தல். அஃதாவது தலைமகள் புலவியைத் தீர்க்குமாறு தலைமகன் விடுத்த தோழி, பாங்கன், பாணன், புலவன் முதலி யோரை ஏற்றுக்கொள்ளாது புறக்கணித்தல். இளிவு, பணியாமையாலும் பிரிவாற்றாமை யாலும் அழகும் நிறையும் நாணும் இழத்தலாலும் நேர்வது. திறம், வாயில் நேர்தலும் புலவி தீர்தலும் கூடலும் முதலியன. இளிவிற் கஞ்சுதலாலும் இறந்துபடமாட்டாமையாலும் கூடக் கருதுகின்ற தென்பதாம். இறந்துபட விரும்பாமை 'உயிர்க்காதல் நெஞ்சு' என்றதால் அறியப்படும்.

### *1299.* துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
### நெஞ்சந் துணையல் வழி.

*(உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது.)*

துன்பத்திற்கு - ஒருவர்க்குத் துன்பம் வந்தவிடத்து அதை நீக்கு தற்கு; தாம் உடைய நெஞ்சம் துணையல் வழி - தம்முடன் பிறந்து தம் முறுப்பாக இரண்டறக் கலந்திருப்பதும் தமக்குதவ முழுக்கடமைப் பட்டிருப்பதுமான உள்ளமே துணையாயிருந்து உதவாதவிடத்து; யாரே துணையாவார் - வேறு யார்தான் துணையாக வந்து உதவுவார்?

துன்பம் என்றது இங்கு உணர்ப்புவயின் வாரா ஊடலை. அஃதாவது தலைமகன் தெளிவிக்கவுந் தெளியாத தலைமகள் சடைவை. அதற்கு நெஞ்சந் துணையாகாமையாவது, அவளை யன்பிலளென்று விட்டு நீங்காது அவளொடு கூடற்கண் விதும்பல். வாழ்க்கைத்துணையும் எனக்குத் துணை யாகாது என் அந்தக் கரணமும் எனக்குத் துணையாகாது போனபின், நான் இத் துன்பத்தை எங்ஙனந் தாங்குவேன் என்பதாம். ஏகாரம் பிரிநிலை.

***1300.*** **தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய**
**நெஞ்சந் தமரல் வழி.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** தாம் உடைய நெஞ்சம் தமர் அல்வழி - தம் உறுப்பாகவுள்ள உள்ளமே ஒருவர்க்கு உறவல்லாத விடத்து; ஏதிலார் தமர் அல்லர் தஞ்சம் - அயலார் உறவல்லாதவராக இருத்தல் மிக எளிதாகக் காணக்கூடிய செ-தி யேயாகும்.

புறத்தி யொருத்தியைக் காதலியென்று கருதி என் உள்ளமே என்னை வருத்தும்போது, அப் புறத்தி புலக்கின்றதில் என்னை வியப்புள்ளது என்பதாம். 'தமர்' ஆகுபொருளி. 'தஞ்சம்' எளிமைப்பொரு ளிடைச்சொல். "தஞ்சக்கிளவி யெண்மைப் பொருட்டே" (தொல். சொல். இடை. 18.).

## அதி. 131 - புலவி

*அதாவது, தலைமகள் புணர்ச்சி விதும்பாது புலக்கக் கருதியவிடத் துப் புலத்தல். அதிகார முறைமையும் இதனால் விளங்கும்.*

*புலத்தல் தலைமகள் செயலேயாதலாலும், இவ் வதிகாரத் தலைப்புப் புலவியென்றே யிருத்தலாலும், உணர்ப்புவயின் வாரா வூடற்கண் தலைமகன் சொல்வதெல்லாம் கூடற்கியலாமைபற்றி நொந்துகொள்வதல்லது கூடல்*

*வேண்டாவென விலக்குதலன்மையாலும் "இருவர் நெஞ்சும் புணர்ச்சி விதும்பாது புலக்கக் கருதியவழி ஒருவரோடொருவர் புலத்தல்" எனப் பரிமேலழகர் கூறியிருப்பது பொருந்தாதென்க.*

***1301. புல்லா திராஅப் புலத்தை யவருறு***
***மல்லனோ– காண்கம் சிறிது.***

*(வாயிலாகச் சென்ற தோழி தலைமகள் வாயில்*
*நேர்தற்பொருட்டு அவளொடு நகையாடிச் சொல்லியது.)*

**(இ–ரை.)** புல்லாது இராப் புலத்தை – தலைவியே! நீ விரைந்து சென்று காதலரைத் தழுவாது இக் கரணியத்தை மேலிட்டுக் கொண்டு புலப்பாயாக; அவர் உறும் அல்லல் நோ– சிறிது காண்கம் – அங்ஙனம் புலந்தால் அவர் அடை யும் துன்பநோயைச் சற்றுக் கண்டுகளிப்போம்.

உன் ஆற்றாமை கண்டும் பிரிந்துபோ– நமக்குப் பெருந்துன்பத்தை விளைத்ததினால் நாமும் அவர்க்குச் சிறிது துன்பம் விளைத்து அவர் படும் பாட்டைக் காண்போம் என நகையாடி வாயில் நேர்வித்தவாறு. 'அல்லல் நோ–' துன்பத்தைச் செ–யுங் காமநோ–. புலவி நீளின் சுவையிழக்கு மாதலால் 'சிறிது' என்றாள். 'புலத்தை' – 'ஐ' ஏவலொருமை யீறு. 'புலத்தி' என்பதும் பாடம். 'இராஅ' இசைநிறை யளபெடை.

***1302. உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது***
***மிக்கற்றா னீள விடல்.***

*(புலவி தீர்ந்து வாயில் நேரும்வகை தோழி சொல்லியது.)*

**(இ–ரை.)** புலவி உப்பு அமைந்த அற்று – புலவி கலவி இன்பஞ் செ–தற்கு வேண்டிய அளவாயிருத்தல், உப்புச் சமைத்த உணவு இன்சுவை யாதற்கு வேண்டும் அளவினதாயிருத்தல் போலும்; சிறிது நீள விடல் அது மிக்க அற்று – இனி, அப் புலவியை அவ்வளவினுஞ் சிறிது மிகவிடுதல் அவ் வுப்பு அளவிற்கு மிஞ்சினாற் போலும்.

பழகப் பழகப் பாலும் புளிப்பதுபோல், நாள்தொறும் நுகர்ந்துவரும் கலவியின்பம் நாளடைவிற் சுவை குன்றியபோது அதற்குச் சுவையூட்டுதலின், புலவியை உப்பு என்றாள். ஆயினும், உப்பு மிக்கவிடத்து உணவுச்சுவை கெட்டாற்போல, புலவி அளவிற்குமேல் நீண்டவிடத்துக் கலவியின்பங்

கெடும் என்றவாறாம். புலவியை நீளவிடுதலாவது, கலவிமேலெழுந்த குறிப்பும் ஆசையும் அடங்குமளவு புலத்தல், வாயில் நேர்விக்கின்றாளா தலின், சிறிதும் நீளவிடலாகாது என்றாள். 'ஆல்' ஈரிடத்தும் அசைநிலை.

***1303. அலந்தாரை யல்லனோ– செ–தற்றாற் றம்மைப்***
***புலந்தாரைப் புல்லா விடல்.***

*(பரத்தையரிடத்து நின்றும் வந்ததாகக் கருதப்பட்ட*
*தலைமகனொடு தலைமகள் புலந்து சொல்லியது.)*

**(இ–ரை.)** தம்மைப் புலந்தாரைப் புல்லா விடல் - தம்மைப் பெறாது புலந்த மகளிரைப் புலவி நீக்கிக் கலவாது ஆடவர் விட்டுவிடுதல்; அலந்தாரை அல்லல் நோ- செ-த அற்று - முன்னமே துன்பமுற் றழிந்தாரை அதன் மேலுந் துன்புறுத்தினாற் போலும்.

நீர் பிறர்பாற் செல்லுதலின் நும்மைப் பெறாது புலந்திருக்கின்ற பரத்தை யரிடஞ் சென்று, அவர் புலவி நீக்கித் தழுவீராயின் அவர் ஆற்றார் என்பதாம். 'ஆல்' அசைநிலை.

***1304. ஊடி யவரை யுணராமை வாடிய***
***வள்ளி முதலரிந் தற்று.***

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** ஊடியவரை உணராமை - நும்மோ டூடிய பரத்தையரை ஊடல் தீர்த்துக் கூடாது விடுதல்; வாடிய வள்ளி முதல் அரிந்த அற்று - முன்பே நீர் பெறாது வாடிய கொடியை அடியில் அறுத்துவிட்டாற் போலும்.

நீர் பரத்தையரோடிருக்குங்கால் எம் புதல்வரைக்கொண் டாற்றி யிருக்கத் தக்கேமாகிய யாம், நும்மோ டூடுதற் குரியே மல்லேம். ஆதலால் எம்மை யுணர்த்தல் வேண்டேம். எம்மினும் நுமக்குரியாரா யூடிய பரத்தை யரையே யுணர்த்துதல் வேண்டும். ஆதலால் அங்கேயே சென்மின் என்பதாம்.

***1305. நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை***
***பூவன்ன கண்ணா ரகத்து.***

*(தலைமகளைப் புலவி நீக்கிக் கூடிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.)*

**(இ–ரை.)** நலத்தகை நல்லார்க்கு ஏர் - நற்குணங்களால் தகுதியுடைய நல்ல ஆடவர்க்கு அழகாவது; பூ அன்ன கண்ணார் அகத்துப் புலத்தகை - தம்

மலர்போலுங் கண்களையுடைய மகளிரின் நெஞ்சில் நிகழும் புலவிச் சிறப்பன்றோ?

தான் நுகர்ந்த சிறந்த இன்பத்திற் கேதுவாகிய புலவியை வியந்து கூறியவாறு. தவறில்லாதவர்க்கும் புலவி இனிதென்பான், “நலத்தகை நல்லவர்க்கு ஏஎர்” என்றான். அழகு இன்பப் பயனாகிய மனவெழுச்சி. சிறப்பும்மை தொக்கது. ‘ஏஎர்’ இசைநிறை யளபெடை.

***1306. துனியும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கருக்காயு மற்று.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** துனியும் புலவியும் இல்லாயின் - முதிர்ந்த சடைவாகிய துனி யும் அளவான சடைவாகிய புலவியும் இல்லாவிடின்; காமம் கனியும் கருக்கா யும் அற்று - காமவின்பம் முறையே நன்றாகப் பழுத்த பழமும் பழுக்காத கன்னற்காயும் போல்வதாம்.

காமவின்பம் ஊடல், புலவி, துனி என்னும் மூவகைச் சடைவு நிலை யிலும் முறையே கன்னற்கா-, பழம், அளியல் என்னும் மூவகைப் பதங் கொள்ளும். பழுக்காத கன்னற்கா-ப் பதமும் மிகப்பழுத்த அளியற் பதமும் சுவையின்றி வலுத்தும் சுவைகெட்டு அளிந்தும் இருக்குமாதலின், இடை நின்ற கனிப்பதமே மென்மையும் இனிமையுங் கொண்டு இன்பந் தருவதாம். ஆதலால், அளவாக வுப்பமைந்தது போன்ற புலவிநிலையே இனிதான கனிபோல் இன்பந்தருவதற் கேற்ற தென்பதாம்.

***1307. ஊடலினுண் டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** புணர்வது நீடுவது (கொல்) அன்று கொல் என்று - இனிப் புணர்ச்சி காலந்தாழ்க்குமோ தாழ்க்காதோ என்று கருதுதலால்; ஊடலின் ஓர் துன்பம் உண்டு - இன்பத்திற்கேதுவான ஊடலிலும் ஒரு துன்பமுள்ளதாம்.

விரைந்து கூடற்கேதுவான ஊடலே பயன் தருவதென்பதாம். கருது தலால் என்பது அவா-நிலையால் வந்தது. சிறப்பும்மை தொக்கது. ‘கொல்’ முன்னுங் கூட்டப்பட்டது. ‘ஆங்கு’ அசைநிலை.

***1308.*** **நோத லெவன்மற்று நொந்தாரென் றஃதறியுங்**
**காதல ரில்லா வழி.**

*(உணர்ப்புவயின் வாரா வூடற்கண் தலைமகன் நொந்து சொல்லியது.)*

**(இ-ரை.)** நொந்தார் என்று அஃது அறியும் காதலர் இல்லாவழி - இவர் நம் செயல்பற்றி நொந்தாரென்று அந் நோவினையறியும் அன்புடையார் இல் லாதவிடத்து; நோதல் எவன் - ஒருவர் நொந்து என்ன பயன்?

இவள் நம் காதலியல்லள். ஆதலால் நம் நோவறியாள். ஆகவே, நாம் நோவதாற் பயனில்லையெனத் தன் ஆற்றாமையுணர்த்தியவாறு. அறிதல் - அறிந்து ஊடல் தீர்தல். 'மற்று' அசைநிலை.

***1309.*** **நீரும் நிழல தினிதே புலவியும்**
**வீழுநர் கண்ணே யினிது.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** நீரும் நிழலதே இனிது - உயிர்வாழ்க்கைக் கின்றியமை யாத நீரும் நிழலடியுள்ளதே குளிர்ந்து இன்பந்தரும்; வெயிலிற் கா-ந்தது இன்பந் தராது; புலவியும் வீழுநர் கண்ணே இனிது - அதுபோலக் கலவியின்பத்தை மிகுக்கும் புலவியும் அன்புடையாரிடத்தே இன்பத்திற் கேதுவாகும்; அன்பி லாரிடத்தோ துன்பத்திற்கே யேதுவாகும்.

இது வெப்ப நாடாதலின் முதுவேனிற்கால நண்பகற் காட்டு வழிப் போக்கன் நீர்வேட்கை, நிலைமை நோக்கி 'நிழலதே இனிது' என்றான். தழைத்தடர்ந்த தண்கா நிழலில் தங்கிய நீர் பனிநீர்போற் குளிர்ச்சிமிக்குத் தாகமுங் களைப்புந் தணித்தலின் இனிதாயிற்று, "காவோ டறக்குளந் தொட் டானும்" (திரிகடு. 70) என்றதை இத் தொடர்பில் நோக்குக. 'வீழுநர்' காதலரின் ஆற்றாமைக்கு நோதலும் கலவியின்கண் வேட்கையுமுடையவர். இவளுக்கு அவ் விரண்டுமின்மையின் இப் புலவி இன்னாதாயிற்று என்பதாம். ஏகாரம் ஈரிடத்தும் பிரிநிலை. இவற்றுள் முன்னது பிரித்துக் கூட்டப்பட்டது.

***1310.*** **ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்**
**கூடுவே மென்ப தவா.**

*(புலவி நீங்கவேண்டுமென்ற தோழிக்குத் தலைமகள்*
*புலவி தீர்வாளா-ச் சொல்லியது.)*

**(இ-ரை.)** ஊடல் உணங்க விடுவாரோடு - ஊடல்கொண்ட போது உணர்த்தி மகிழ்விக்காமல் வாடவிடுகின்றவரோடு; என் நெஞ்சம் கூடுவேம் என்பது - என் உள்ளம் கூடி யின்புறுவேம் என்று கருதுகிறதற்குக் கரணியம்; அவா - அதன் ஆசையேயன்றி வேறன்று.

இதற்குப் பரிமேலழகருரை வருமாறு:

*(உணர்ப்புவயின் வாரா வூடற்கட் டலைமகன் தலைமகளோடு புலந்து சொல்லியது.)*

ஊடல் உணங்க - தானூடற்கண்ணே மெலியா நிற்கவும்; விடுவாரோடு கூடுவேம் என்பது என்னெஞ்சம் அவா - விட்டிருக்க வல்லாரோடு கூடக்கடவேமென்று என்னெஞ்சம் முயறற்கேது தன்னவாவே, பிறிதில்லை.

'என்பதற்கேது' என இருக்கவேண்டியது, 'என்பது' எனக் கருமகம் (காரியம்) கரணகமாக (காரணமாக)ச் சார்த்திக் கூறப்பட்டது.

## அதி. 132 - புலவிநுணுக்கம்

*அதாவது, நுண்புலவி. அது, தலைமகனும் தலைமகளும் ஓரமளிக்கண் கூடியிருந்தவிடத்து அவன்பாற் புலத்தற்குக் கரணகமான தவறில்லை யாகவும் தன் காதல் மிகுதியால் ஒரு நுண்ணிய தவறிருப்பதாக வுட்கொண்டு அவனொடு அவள் புலத்தல். இது புலவியின் நுணுக்க மாதலின் புலவியின் பின் வைக்கப்பட்டது. தவறு என்னும் கரணகத்தின் நுணுக்கம் புலவி என்னும் கருமகத்தின்மேல் நின்றது.*

***1311.*** **பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்**
**நண்ணேன் பரத்தநின் மார்பு.**

*(உலாப்போ- வந்த தலைமகன் பள்ளியிடத்தானாகத் தலைமகள் சொல்லியது.)*

**(இ-ரை.)** பரத்த - பரத்தமையுடையா-; பெண்ணியலார் எல்லாரும் கண் ணிற் பொது வுண்பர் - பெண்தன்மை யுடையவரெல்லாரும் தம் கண்ணாற் பொதுவாக நுகர்வர்; நின் மார்பு நண்ணேன் - ஆதலால், அவர் நுகர்ந்த எச்சி லாகிய உன் மார்பைப் பொருந்தேன்.

முடிசூட்டு நாளன்றும் வெற்றிவிழா நாளன்றும் அரசன் தேரேறித் தன் தலைநகரத் தேர்மறுகுகளில் உலாவரும்போது, பேதை முதலிய எழுவகைப் பருவமகளிரும் அவன்மீது காதல் கொள்வதாகப் பாடுவது உலா எனும் பனுவல்.

“ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப,” (தொல். 1013) பரத்தையர் கற்பு நிறை நாண் முதலிய நற்குணங்களின்றிப் பெண்வடிவு மட்டுங் கொண்டவர் என்னுங் கருத்தாற் ‘பெண்ணியலார்’ என்றாள். பொதுவுண்டல் ஒருங்கு நோக்குதல். இதனாற் பரத்தமை புலவிநுணுக்கத்தில் தலைமகன்மேல் ஏற்றிக் கூறப்படுவதல்லது, உண்மையாக நிகழ்வதன்றென்றும், திருவள்ளுவர் கூறும் இன்பத்துப்பாலிற் குரியதன்றென்றும் அறிந்துகொள்க.

***1312.*** **ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை**
**நீடுவாழ் கென்பாக் கறிந்து.**

*(தலைமகன் சென்றபின் வந்த தோழிக்குத் தலைமகள் பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது.)*

**(இ-ரை.)** ஊடி இருந்தேமாத் தும்மினார் - யாம் தம்மோடு உரையாடா திருந்தேமாகக் காதலர் தும்மினார்; யாம் தம்மை நீடு வாழ்க என்பாக்கு அறிந்து - அது எதற்கெனின், யாம் ஊடல் நீங்கித் தம்மை நீடுவாழ்க என்று வாழ்த்தி உரையாடுதற்கு.

இயல்பாக நிகழ்ந்த தும்மலை வேண்டுமென்று செ-ததாகக் கொண்டதால் (புலவி) நுணுக்கமாயிற்று. தும்மியபோது வாழ்த்துதல் மரபாகலால், உரையாடல் வேண்டியதாயிற்று என்பதாம். ‘யாம்’ என்றது அரசப் பன்மை (Royal ‘we’), அகரந் தொக்கது.

***1313.*** **கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக்**
**காட்டிய சூடினீ ரென்று.**

*(தலைமகள் புலவிக் குறிப்பைக் கண்டு நீவிர் கூடியொழுகி வரவும், இது நிகழ்தற்குக் கரணகம் யாதென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.)*

**(இ-ரை.)** கோட்டுப்பூச் சூடினும் - இம் மருதநிலத்து நீர்ப்பூவும் கொடிப் பூவுமன்றி வேற்று நிலத்துக் கோட்டுப்பூவைச் சூடினேனாயினும்; ஒருத்தியைக் காட்டிய சூடினீர் என்று காயும் - நும்மாற் காதலிக்கப்பட்ட வேறொருத்திக்கு இப் பூவணியைக் காட்டல் வேண்டிச் சூடினீரென்று சீற்றங்கொள்வாள் என் காதலி. இத்தகையாளுக்கு ஒரு கரணகமும் வேண்டுமோ?

கோட்டுப்பூ மரக்கிளைகளில் மலர்வது. கோடு கிளை. வேற்று நிலம் முல்லை குறிஞ்சி நெ-தல். கோட்டுப்பூவைக் கோடுதலைச் செ-யும் மாலை

என்றார் பரிமேலழகர். ஆசிரியர் மாலையென்னாது பூவென்றமையாலும், 'கோடுதலைச் செ-யும்' என்னுங் கருத்தில் ஒரு சிறப்பு மின்மையானும், அது உரையன்மை அறிக.

**1314. யாரினுங் காதல மென்றேனா வூடினாள்**
**யாரினும் யாரினு மென்று.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** யாரினும் காதலம் என்றேனா - காமவின்பம் நுகர்தற்குரிய இருவராகிய கணவன் மனைவியர் வேறு யாரினும் நாம் மிகுந்த காதலுடையோம் என்னும் பொருளில், "யாரினுங் காதலம்" என்று சொன்னேனாக; யாரினும் யாரினும் என்று ஊடினாள் - உன் தலைவி அப் பொருள் கொள்ளாது, என்னாற் காதலிக்கப்பட்ட மகளிர் பலருள்ளும் உன்பால் மிகுந்த காதலுடையேன் என்று நான் கூறியதாகக் கொண்டு, "யாரைவிட யாரைவிட" என்று வினவிப் புலந்தாள்.

யான் அன்பு மிகுதியால் நல்ல பொருளிற் கூறியதைத் தீய பொருளில் தவறாக உணர்ந்துகொண்டதல்லது, வேறு கரணகமில்லை யென்பதாம். தலைமகள் கொண்ட பொருட்கு 'யார்' உயர்வுப்பன்மை.

**1315. இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்**
**கண்ணிறை நீர்கொண் டனள்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனா - காதல் மிகுதியால். இப் பிறப்பில் நாம் ஒருபோதும் பிரியோம் என்று கூறினேனாக; கண் நிறைநீர் கொண்டனள் - அதனால் மறுபிறப்பில் நான் பிரிந்துபோவேனென்று குறித்த தாகக் கருதித் தன் கண் நிறையக் கண்ணீரைப் பெருக்கி விட்டாள்.

நான் சொன்ன வெளிப்படைச் சொல்லைக் குறிப்புச் சொல்லாகக் கொண்டதல்லது என்பால் தவறில்லை யென்பதாம்.

**1316. உள்ளினே னென்றேன்மற் றென்மறந்தீ ரென்றென்னைப்**
**புல்லாள் புலத்தக் கனள்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** உள்ளினேன் என்றேன் - பிரிந்து போயிருந்த காலத்தில் உன்னை ஒருபோதும் மறவாது நினைத்திருந்தேன் என்னுங் கருத்தில், "உள்ளி னேன்" என்றேன்; மற்று என் மறந்தீர் என்று என்னைப் புல்லாள் புலத்தக்கனள் - உடனே அதை ஒருகால் மறந்திருந்து பின்பு நினைத்துக்கொண்டேன் என்று நான் கூறியதாகக் கருதி, என்னை யிடையே மறந்துவிட்டீரென்று சொல்லி, அதற்கு முன்பு என்னைத் தழுவுதற்கிருந்தவள் அதைச் செ-யாது அன்றே புலவியை மேற்கொண்டுவிட்டாள்.

எதிர்நிலை யளவை வகையால் உள்ளுதலுக்கு மறுதலையான மறத் தலையும் உட்கொண்டு புலந்தாள் என்பதாம். 'மற்று' வினைமாற்றின்கண் வந்தது.

***1317. வழுத்தினா டும்மினே னாக வழித்தழுதாள்***
***யாருள்ளித் தும்மினீ ரென்று.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** தும்மினேனாக வழுத்தினாள் - என்னொடு கூட இருந்தவள் யான் தும்மினேனாக வழக்கம்போல் "நீடு வாழ்க" என்று வாழ்த்தினாள்; அழித்து யார் உள்ளித் தும்மினீர் என்று அழுதாள் - அங்ஙனம் வாழ்த்தியவளே தன் கருத்தை மாற்றி, நும்மாற் காதலிக்கப்பட்ட மகளிருள் யார் நினைத்ததனால் தும்மினீர் என்று சொல்லியழுதாள்.

அன்பரால் நினைக்கப்பட்டவர்க்குத் தும்மலெழும் என்பது மகளிர் குருட்டுக்கொள்கை. அதை மெ-ந்நெறிக் கொள்கையாகக் கொண்டு புலந் தாள் என்பதாம். வழுத்து என்னுஞ் சொல் வாழ்த்துதற் பொருளில் வந்தது. வாழ்த்துதலும் புலத்தலும் தம்முள் இயையாமையின், 'அழித்து' என்றான்.

***1318. தும்முச் செறுப்ப வழுதா ளுமருள்ள***
***லெம்மை மறைத்திரோ வென்று.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** தும்முச் செறுப்ப - எனக்குத் தும்மல் தோன்றியபோது, என் காதலி யாருள்ளித் தும்மினீரென்று புலத்தலஞ்சி, அதனை யடக்க; நுமர் உள்ளல் எம்மை மறைத்திரோ என்று அழுதாள் - நும் காதலியார் நும்மை நினைத்தலை எனக்கு மறைக்கின்றீரோ என்று சொல்லி யழுதாள்.

தும்மினுங் குற்றம், தும்மலை யடக்கினுங் குற்றமாயின் என் செ–வது என்பதாம். ‘தும்மு’ முதனிலைத் தொழிற்பெயர். பரத்தையரை ‘நுமர்’என்றதினால், ‘எம்மை’ யென்பது நும்மோடியையபில்லாத எம்மை யென்பதுபட நின்றது.

***1319. தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ***
***ரிந்நீர ராகுதி ரென்று.***

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** தன்னை உணர்த்தினும் – இவ்வகையிற் கரணகமின்றியூடிய தன்னை யான் பணிந்துரைத்து ஊடல் தீர்க்குங்காலும்; பிறர்க்கும் நீர் இந்நீரர் ஆகுதிர் என்று காயும் – பிற மகளிர்க்கும் நீர் அவரூடியவிடத்து இவ்வாறே பணிந்துணர்த்துந் தன்மையையுடையீ ராகுதிர் என்று சினங்கொள்வாள்.

இவள் நான் தெளிவித்த விடத்துந் தெளியாமைபற்றி, வேறுவழி யில்லாது என்மேல் இட்டேற்றிய பொ–யான தவற்றையும் உடம்பட்டுப் பணிந்தேன். ஆனால், நான் எதிர்பாராவண்ணம் அதுவும் புலத்தற் கேதுவா– முடிந்தது. இனி இவள்பாற் செ–யத்தக்க தென்னவென்று தெரியாது மயங்கித் தியங்குகின்றேன் என்பதாம்.

***1320. நினைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர்***
***யாருள்ளி நோக்கினீ ரென்று.***

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** நினைத்து இருந்து நோக்கினும் காயும் – நான் என்ன சொல்லி னும் என்ன செ–யினும் அவற்றிற் குற்றங்காணுதலால் அவற்றை ஒழிந் திருந்து, தன் உறுப்புகளின் ஒப்பிலா வழகை நினைந்து அவற்றையே வியந்து நோக்கினும், என்னைச் சினந்து கொள்வாள்; அனைத்தும் நீர் நோக்கினீர் யார் உள்ளி என்று – என் உறுப்புகளெல்லாவற்றையும் நோக்கினீர், அவற்றின் ஒப்புமையால் எம் மகளிரை நினைந்து என்று வினவி.

நான் எல்லா வுறுப்புகளாலும் ஒருத்தியை ஒத்திருத்தல் முடியாது. ஒவ்வோ ருறுப்போடும் ஒவ்வொருத்தியின் உறுப்பை ஒப்புநோக்கின், அத் தனை யுறுப்பிற்கும் அத்தனை மகளிர் வேண்டுமே! அவரெல்லாரையும் இன் னின்னாரென்று இன்னே எனக்குச் சொல்ல வேண்டும் என்னுங் கருத்தால்

'அனைத்து நோக்கினீர் யாருள்ளி' என்றாள். அவளையே பார்த்து மகிழ்தலுங் குற்றமாயிற் றென்பதாம்.

## அதி. 133 - ஊடலுவகை

*அதாவது, அத்தகைய வூடலால் தமக்குக் கூடலின்பஞ் சிறந்தவிடத்து, அச் சிறப்பிற் கேதுவான வூடலைத் தலைமகனுந் தலைமகளும் உவத்தல். உவத்தல் - விரும்பி மகிழ்தல். இவ் வதிகாரம் ஊடலுவகையென்று பெயர் பெற் றிருப்பினும்.*

**"துனியும் புலவியு மில்லாயிற் காமங்**
**கனியுங் கருக்காயு மற்று" (1306)**

என்றதனால், புலவிக்கு அடுத்திருப்பதும் துன்பத்திற் கேதுவானதுமான துனி யச்சம் எள்ளளவு மில்லாதிருத்தல் வேண்டுமென்பதுபற்றியே, புலவி யுவ கையை ஊடலுவகையென்று குறித்தாரெனக் கொள்ளலாம். இனி விரைந்து பழுத்துவிடும் பழக்கா-போலப் புலவிநிலை யடையும் ஊடல்முதிர்ச்சி யெனக் கொள்ளினுமாம்.

***1321. இல்லை தவறவர்க் காயினு மூடுதல்***
***வல்ல தவரளிக்கு மாறு.***

*(தலைமகள் காரணமின்றிப் புலக்கின்றமை கேட்ட தோழி, அங்ஙனம் நீ புலக்கின்ற தென்னை யென்றாட்கு அவள் சொல்லியது.)*

**(இ-ரை.)** அவர்க்குத் தவறு இல்லையாயினும் - காதலர்பால் தவறில்லை யாயினும்; அவர் அளிக்கும் ஆறு ஊடுதல் வல்லது - அவர் நம்மொடு செ-யும் பேரின்பக் கூட்டம் இங்ஙனம் அவரோ டூடுதலை விளைக்கும் வலிமை யுள்ளதாக விருக்கின்றது.

எல்லையில்லாத இன்பந்தருபவரா யிருத்தலின், யான் பெறும் இப் பேரின்பம் பிற மகளிரும் பெறுவரெனக் கருதி, அது பொறாமையால் இவ் வூடல் நிகழ்கின்ற தென்பதாம். 'அவர்க்கு' வேற்றுமை மயக்கம்; நாலாவது ஏழாவதில் மயங்கிற்று. உம்மை ஒத்துக்கொள்வுப் பொருளது.

***1322. ஊடலிற் றோன்றுஞ் சிறுதுனி நல்லளி***
***வாடினும் பாடு பெறும்.***

*(புலவாக்காலும் அத் தலையளி பெறலாயிருக்க, இப் புலவியால் வருந்துவ தென்னையென்ற தோழிக்கு அவள் சொல்லியது.)*

**(இ-ரை.)** ஊடலின் தோன்றும் சிறு துனி - ஊடல் கரணகமாக என்கண் தோன்றும் சிறு சடைவினால்; நல் அளி வாடினும் பாடு பெறும் - காதலர் செ-யும் நல்ல தலையளி சற்று வாடுமாயினும் பின்பு பெருமை பெறும்.

தவறில்லாவிடத்து நிகழ்கின்ற வூடல் விரைந்து நீங்குதலின் 'சிறுதுனி' யென்றும், ஆராமைபற்றி நிகழ்தலின் நல்லளி பெரும்பாலும் வாடாதென்பாள் 'வாடினும்' என்றும், ஒருகால் சற்று வாடினும் அதனாற் பேரின்பம் விளையுமென்பாள் 'பாடுபெறும்' என்றும் கூறினாள். சிறுதுனியாற் பெரும் பயன் விளைதலின் அது வருத்தமெனப்படாதென்பதாம். தலையளி யென்பது பேரின்பக் கலவிக் கூட்டம். எதிர்மறை யும்மை அருமைப் பொருளது.

***1323. புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு***
***நீரியைந் தன்னா ரகத்து.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** நிலத்தொடு நீர் இயைந்த அன்னாரகத்துப் புலத்தலின் - நிலத் தொடு நீர் கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலரொடு புலத்தல்போல்; புத்தேள் நாடு உண்டோ - நமக்கு இன்பந் தருவதொரு தேவருலகம் எங்கேனு முண்டோ? இல்லை.

நீர் தான் சேர்ந்த நிலத்தொடு கலத்தல் மட்டுமன்றி அதனியல்பால் திரிதலும் போல, காதலருந் தாம் கூடிய மகளி ரியல்பினராகலான் அதுபற்றி அவரொடு புலவி நிகழுமென்பாள் 'நிலத்தொடு நீரியைந் தன்னா ரகத்து' என்றும், அப் புலவி பின்னர்ப் பேரின்பம் பயக்குமென்பாள் 'புலத்தலிற் புத் தேணா டுண்டோ' என்றும், கூறினாள். கூடிய மகளி ரியல்பினராத லென்பது இங்குந் தலைமகள் கருதுகோளேயன்றி உண்மையாக நிகழும் நிகழ்ச்சி யன்றென வறிக.

***1324. புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்***
***னுள்ள முடைக்கும் படை.***

*(அப் புலவி இனி எதனால் நீங்குமென்ற தோழிக்குச் சொல்லியது.)*

**(இ-ரை.)** புல்லி விடாப் புலவியுள் - காதலரைத் தழுவிக்கொண்டு பின் விடாமைக் கேதுவாகிய அப் புலவிக்கண்ணே; என் உள்ளம் உடைக்கும் படை -

அதை மேற்கொண்ட என் உள்ளத்தைத் தகர்க்கும் படைக்கலம்; தோன்றும் - உண்டாகும்.

புலவி யென்றது அவ் வினைநிகழ்ச்சியை. படைக்கலம் என்றது காதலரின் பணிமொழியை. புலவி நீங்குந் திறங் கூறியவாறு. 'விடாஅ', இசைநிறையளபெடை.

***1325. தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோ***
***ளகறலி னாங்கொன் றுடைத்து.***

*(தலைமகளை யூடல் நீக்கிக் கூடிய தலைமகன் கழிபே*
*ருவகையனா-த் தன்னுள்ளே சொல்லியது.)*

**(இ-ரை.)** தவறு இலராயினும் தாம் வீழ்வார் மெல்தோள் அகறலின் - ஆடவர் தம்மிடத்துத் தவறில்லாதவராயினும் உடையார்போல ஊடப்பட்டுத் தாம் விரும்பும் மகளிருடைய மெல்லிய தோள்களினின்று சிறிதுபோழ்து நீங்கி யிருத்தலால்; ஆங்கு ஒன்று உடைத்து - அவ் வூடல் அவர்க்கு அத்தகையதோ ரின்பம் பயத்தலுடையது.

ஆடவர்பால் தவறிருப்பினும் இல்லாவிடினும் ஊடலெல்லாம் உணர்த் தப்பட்டுப் பேரின்பக் கூடலில் முடிவதால், அதனால் எவ்வகையிலுங் கேடில்லையென்பான் 'தவறில ராயினும்' என்றும், அதனாலுண்டாகும் இன்பம் சொல்லொணாது அளவிறத்தலின் 'ஆங்கொன்று' என்றும், கூறினான். தவறின்றி யூடியதும் எனக்கின்பமாயிற் றென்பதாம்.

***1326. உணலினு முண்ட தறலினிது காமம்***
***புணர்தலி னூட லினிது.***

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** உணலினும் உண்டது அறல் இனிது - மாந்தர்க்கு உணவுத் துறையில், பின் னுண்பதினும் முன்னுண்டது செரித்தல் இன்பந்தருவதாம்; காமம் புணர்தலின் ஊடல் இனிது - அதுபோல அவர்க்குக் காமவின்பத் துறையில், மேற்புணர்வதினும் முன்னைத் தவறுபற்றி மகளிரூடுதல் இன்பந் தருவதாம்.

பசித் துண்ணுமிடத்து இன்சுவைத்தும் மிகவுண்ணலுமா யிருத்தல் போல், ஊடலாற் பிரிந்து கூடுமிடத்துப் பேரின்பத்தும் ஆராமையுள்ளதுமா யிருக்குமென்று தன் பட்டறிவு கூறியவாறு.

**1327. ஊடலிற் றோற்றவர் வென்றா ரதுமன்னுங்
கூடலிற் காணப் படும்.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** ஊடலில் தோற்றவர் வென்றார் - ஊடலில் தோற்ற மகளிர் வென்றவ ராவர்; அது மன்னும் கூடலிற் காணப்படும் - அவ் வெற்றி மிகுதியும் பின்னர்ப் புணர்ச்சிக்கண் அவரால் அறியப்படும்.

தோற்றவர் ஊடலைக் கடைபோகக் கடைப்பிடிக்காது இடையில் விட்டு விட்டவர். அவர் கலவிக்கண் பேரின்பம் பெறுதலால் வென்றாராயினர். 'மன்' மிகுதிப் பொருளது. தலைமகன் கலவியால் தான் பேரின்பம் பெறும்போதே தலைமகளும் பெறுதல் கண்டானாதலாலும், அவள் ஊடல் நீங்கியபொழுது ஒருவகைத் தோல்வி மனப்பான்மை கொண்டிருந்த தனாலும், அவளைப் பாராட்டி ஊக்குமுகமாகத் 'தோற்றவர் வென்றார்' என்றான். ஊடல் ஆடவருக் கின்மையின், தலைமகன் ஊடலில் தோற்றா னென்று கூறுவது பெருந்திணை யாகுமேயன்றி அன்பி னைந்திணை யாகாதென அறிக. அடுத்த குறளையும் பார்க்க.

**1328. ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு.**

*(இதுவுமது.)*

**(இ-ரை.)** நுதல் வெயர்ப்பக் கூடலில் தோன்றிய வுப்பு - இதுபோது இவள் நெற்றி வெயர்க்குமளவு செ-த கலவியின்கண் உள்ள இனிமையை; ஊடிப் பெறுகுவமோ - இன்னுமொருகால் இவள் ஊடி யாம் பெற வொண்ணுமோ?

இனிமை ஒருங்கே நுகரும் ஐம்புலவின்பம். இனி அவ்வப்பேறு அரி தென்று பெற்றதன் சிறப்புக் கூறியவாறு. நுதல் வெயர்ப்பச் செ-தது ஒரு சிறந்த கலவிவகை யெனினுமாம். 'கொல்' அசைநிலை. 'ஓ' ஐயவினா, 'இவளூடி' என்பது தனிநிலை யமைப்பு.

**1329. ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ விரா.**

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** ஒளியிழை மன் ஊடுக – ஒளி வீசும் அணிகலங்களை யுடையாள் இன்னும் எம்மோடு மிகுதியும் ஊடுவாளாக; யாம் இரப்ப இரா மன் நீடுக – அவள் அங்ஙனம் ஊடுதற்கும் யாம் அதை யுணர்த்தும் பொருட்டு அவளை இரந்து நிற்றற்கும் போதிய அளவு காலமிருக்கும் வகை இவ் விரவு மிகுதியும் நீடுவதாக.

‘ஊடுக’, ‘நீடுக’ என்பன ஆர்வ வியங்கோள் வினைகள். ‘மன்’ மிகுதிப் பொருளது. ஓகாரங்கள் அசைநிலை. ‘ஒளியிழை’ அன்மொழித்தொகை. பின் னர்ப் பேரின்பம் பெறக்கூடுதல் உறுதியாதலின், இவ் விராமுழுதும் ஊடலே நிகழினும் நன்றே யென்பதாம்.

***1330.*** **ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்**
**கூடி முயங்கப் பெறின்.**

*(இதுவுமது.)*

**(இ–ரை.)** காமத்திற்கு இன்பம் ஊடுதல் – காம நுகர்ச்சிக் கின்பமாவது, நுகர்தற்குரிய காதலன் காதலியாகிய இருவருட் காதலி காதலன்பாற் குற்ற முள்ளவிடத்தும் இல்லாவிடத்தும் அவனொடு ஊடுதல்; அதற்கு இன்பம் கூடி முயங்கப் பெறின் – அவ் வூடுதற் கின்பமாவது அதனை அளவறிந்து நீக்கிக் காதலன் காதலி யிருவரும் தம்முட் கூடித் தழுவப் பெறின் அத் தழுவல்.

கூடுதல் கருத்தொத்தல், தழுவுதல் இங்குப் புணர்தல். துனி நிலையில் துன்பம் பயத்தலானும், ஊடல்நிலையில் இன்பம் பயவாமை யானும், இரண் டிற்கும் இடைப்பட்ட புலவிநிலையை நீளவிடாது அளவறிந்து நீக்கிக் கூடி, அளவில்லாத இன்பம் பெறுதல் அரிதென்பதுபற்றிக் ‘கூடி முயங்கப் பெறின்’ என்றான். அவ் வீரின்பமும் யான் பெற்றே னென்பதாம்.

ஈண்டுப் பிரிவினை வடநூன் மதம்பற்றிச் செலவு ஆற்றாமை விதுப்புப் புலவியென நால்வகைத் தாக்கிக் கூறினார். அவற்றுட் செலவு பிரிவாற்றாமை யுள்ளும், ஆற்றாமை படர்மெலிந் திரங்கன் முதல் நிறையழித லீறாயவற் றுள்ளும், விதுப்பு அவர்வயின் விதும்பன் முதற் புணர்ச்சி விதும்ப லீறாய வற்றுள்ளும், புலவி நெஞ்சொடு புலத்தன் முதல் ஊடலுவகை யீறாயவற் றுள்ளுங் கண்டுகொள்க. அஃதேல், வடநூலார் இவற்றுடனே சாபத்தினானாய நீக்கத்தினையுங் கூட்டிப் பிரிவினை ஐவகைத் தென்றாரா லெனின், அஃது

அறம்பொரு ளின்ப மென்னும் பயன்களுள் ஒன்றுபற்றிய பிரிவன்மையானும், முனிவ ராணையான் ஒரு காலத்தோர் குற்றத்துளதாவ தல்லது உலகியல்பா- வாராமையானும் ஈண்டொழிக்கப்பட்ட தென்க" என்று பரிமேலழகர் தம் உரைமுகத்துப் போன்றே அதன் புறத்திலும் ஆரிய நஞ்சைக் கொட்டி வைத்துள்ளார். இன்பத்துப்பாலின் இரண்டாம் இயல் கற்பியல் என்பதேயன்றிப் பிரிவியல் என்பதன்று. மேலும், திருவள்ளுவர் வட நூலைப் பின்பற்றவில்லை யென்பதை, அவர் வடநூலார் கூறும் சாபப்பிரிவினையைக் கூறவில்லையென்று பரிமேலழகரே தன்முரணாகக் கூறியிருப்பதினின்று தெளிந்துகொள்க.

**கற்பியல் முற்றிற்று.**

**இன்பத்துப்பால் முற்றிற்று.**

**திருக்குறள் தமிழ் மரபுரை முற்றுப்பெற்றது.**

# பின்னிணைப்பு

## 1. ''அகர முதல வெழுத்தெல்லாம்''

உலகில் முதன்முதல் தோன்றித் திருந்தி வளர்ச்சியுற்ற இலக்கிய மொழி தமிழே.

''எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை
முதலீ றிடைநிலை போலி யென்றா
பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே'' (நன். 2)

என்று நன்னூலார் கூறியவாறு, இன்றும் பன்னிருவகை எழுத்திலக்கணங் களைக் கொண்டுள்ளது தமிழே. பதம் என்னும் வடசொல்லாற் குறித்தது கிளவியை. குறுங்கணக்கின் எழுத்துமுறை போன்றே, உயிர்மெ-க்குத் தனிவடிவு கொண்ட நெடுங்கணக்கும் முதன்முதல் அமைந்தது தமிழே. அதைப் பின்பற்றியே சமற்கிருதத்திலும் பிற இந்தியமொழிகளிலும் வண்ணமாலைகள் எழுந்தன. திருவள்ளுவர் காலத்தில் தமிழகத்துத் தமிழைப் பின்பற்றித் தோன்றியிருந்த பிறமொழி யெழுத்து வடமொழிக் கிரந்தமே. இங்ஙனம் அகரத்தை முதலாகக் கொண்ட வண்ணமாலைகளே அக்காலத் தமிழகத்து வழங்கியமையாலும், அங்காத்தலால் மட்டும் தோன்றும் அகரம் அங்காத்த லொடு பிற முயற்சியும் கொண்ட பிறவெழுத் திற்கெல்லாம் மூலமாயிருத்தலாலும் 'அகர முதல வெழுத்தெல்லாம்' என்றார் திருவள்ளுவர். அங்காத்தல் வா-திறத்தல்.

## 2. திருக்குறள் வடசொற்கள்

திருக்குறளிலுள்ள வடசொற்கள் பின்வருமாறு நால்வகைப்பட்ட பதினேழாம்.

### *(1) வடநாட்டுச்சொல்*

**ஆதி, இந்திரன்.**

ஆதி என்பது தொடக்கம் என்று பொருள்படுவது; பெண்பாற் பெய ராயின் ஆதன் என்பதன் பெண்பால் வடிவாம். அது தூய தென்சொல். அதுவன்று இங்குள்ளது.

இந்திரன் என்பது வடஇந்தியத் திரவிடர் வேந்தன் என்னும் மருதநிலத் தமிழ்த் தெ-வத்திற்கு வழங்கிய பெயர். இத் தெ-வமும் இச் சொல்லும் மேலை யாரியத்தில் இல்லையென்று மாக்கசு முல்லர் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

## *(2) தமிழ்த் திரிசொல்*

**அமரர், காரணம், பாக்கியம், வித்தகர்.**

அல் – அ. மடி – மரி – மரன் – மரர். அ + மரர் = அமரர் (வ). மரி – L. mori, ம்ரு (இ. வே.),

கருத்தல் = கை கருக்குமாறு வினைசெ-தல். இவ் வினை இன்று வழக்கற்றது. கரு – கருவி. கரு – கரணம் = செ-கை, செ-யுங் கருவி. கரணம் – காரணம் (வ.)

பகு – பாகு – பாக்கு = பகுதி, நற்பகுதி, நற்பேறு. பாக்கு + இயம் (ஈறு) = பாக்கியம்.

விழித்தல் = கண் திறத்தல், பார்த்தல், காணுதல், அறிதல். விழி = பார்வை, கண், அறிவு, ஓதி (ஞானம்).

விழி – விடி (இலத்.) – வித் (வ.) – வித்தகம் – வித்தகன் – வித்தகர். சமற் கிருத அகரமுதலி விதக்த (vidagdha) என்று மூலங்காட்டும். இவற்றின் விரி வையும் விளக்கத்தையும் என் வடமொழி வரலாற்றுட் கண்டுகொள்க.

## *(3) மேலையாரியச்சொல்*

**அந்தம், அன்னம், நாமம்.**

OE. ende, E. end, OS. endi, OHG. enti, ON. endir, Goth. andeis, IA. அந்த OE. ganra, OHG. ganazzo,

RV. ஹம்ஸ – அன்னம். எகினம், ஓதிமம் என்பனவே தென்சொற்கள். மேலையாரியச் சொற்கள் முறையே பெரு வாத்தையும் அதற்கினமான ஒரு

கடற்பறவையையுங் குறிப்பன. அவற்றின் திரிபான ஹம்ஸ என்னும் கீழையாரியச் சொல்லே, ஓதிமத்தின் பெயராக வழங்கிவருவதாகத் தெரிகின்றது. swan என்பது ஆங்கிலச் சொல்.

ஒருசில சொற்கள் தூய தென்சொல்லாயினும், வடமொழி வெறியரான தமிழ்ப்பகைவரால் வடசொல்லொடு தொடர்புபடுத்தப்படுகின்றன.

**எ—டு.**

தானை = சேலை, துணி, துணிக்கொடி பிடித்துச்செல்லும் படை. ஒ. நோ: தூசு = துணி, துணிக்கொடி. தூசு – தூசி = கொடிப்படை. E. colour = flagi; colours = regiment.

**பார்ப்பான்** பார் – பார்ப்பான் = நூல்களைப் பார்ப்பவன், அந்தணர் என் னும் வகுப்பில் இல்லறத்தான், ஆசிரியன் அல்லது உவச்சனாகப் பணியாற்று பவன். இச் சொற்கும் பிராமணன் என்னும் சொற்கும் இடைப்பட்ட தொடர்பு இயேசு கிறித்து என்னும் பெயருக்கும் கேசவக் கிருட்டிணன் என்னும் பெய ருக்கும் இடைப்பட்டதே.

சிலர் பார்ப்பனன் என்னும் வடிவு பிராமணன் என்பதன் திரிபைக் காட்டு மென்பர். அவர் அறியார். அனன் என்னும் சாரியை கூடிய ஈறு, படர்க்கை ஐம் பால் மூவிடத்திற்கும் பொதுவானதே.

| எ—டு: | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| | பார்த்தனன் | பார்க்கின்றனன் | பார்ப்பனன் |
| | பார்த்தனள் | பார்க்கின்றனள் | பார்ப்பனள் |
| | பார்த்தனர் | பார்க்கின்றனர் | பார்ப்பனர் |
| | பார்த்தன்று | பார்க்கின்றது | (பார்ப்பனது) |
| | பார்த்தன | பார்க்கின்றன | பார்ப்பன |

பார்த்தன்று என்பது பார்த்தனது என்பதன் தொகுத்தல். பார்த்து + அன் + அது = பார்த்தனது . அனது – அன்று (அன் + து).

OE. nama, E. name, OS, OHG. namo, Goth. namo, L. nomen, நாம (இ.வே.)

### *(4) சமற்கிருதச்சொல்*

அவி (ஹவிஸ்), ஆகுலம், ஆசாரம், உல்கு, கணம் (க்ஷணம்), சலம் (வஞ்சனை), பாவம் - பாவி.

## 3. திருக்குறட்கு வடசொல் தேவையின்மை

இதுபொழுதுள்ள இலக்கிய நூல்களுள் முதலதான திருக்குறளிலும் ஒருசில வடசொற்களிருப்பதால், வரலாற்றாரா-ச்சியும் மொழியாரா-ச்சியும் இல்லாத சில புலவரும் துறவியரும், திருவள்ளுவரும் தம் நூற்கு வடசொற் றுணை வேண்டினரெனக் கருதுகின்றனர். தமிழ் குமரிநாட்டில் தோன்றிய உலகமுதற்றா யுயர்தனிச் செம்மொழியென்றும், திராவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமு மாகுமென்றும், சமற்கிருதத்தில் ஐந்தி லிருபகுதி தமிழென்றும், குமரிநாட்டு உலக வழக்குச் சொற்களுடன் முதலிரு கழகச் செ-யுள் வழக்குச் சொற்களும் அடியோடு அழியுண்டனவென்றும், இந் நொடித்த நிலையிலும் பிறமொழித் துணையின்றித் தமிழ் தனித்து வழங்க வும் தழைத்தோங்கவுங் கூடுமென்றும், இது ஏனைமொழிகட் கியலாதென் றும், தமிழிற் கலந்துள்ள வடசொற்களெல்லாம் அதைக் கெடுத்தற்கென்றே ஆரியராற் புகுத்தப்பட்டனவேயன்றி, தமிழறிஞர் அவற்றின் தேவை யுணர்ந்து விரும்பிக் கடன் கொண்டவை யல்லவென்றும், அவர் அறிந் திலர். அக்காலத்தில் மொழி யாரா-ச்சியின்மையாலும் வடசொற்கள் தமிழில் அருகியே வழங்கியமையாலும், அவற்றைத் திருவள்ளுவர் கண்டு விலக்க முடியாமற்போயிற்று. எது போலவெனின், ஆயிரக்கணக்கானவர் உண்ணும் ஒரு திருமண விருந்தில் ஒருசில அயலார் அமர்ந்திருப்பினும், பரிமாறிகள் அவரைக் கண்டு விலக்க முடியாதது போலவென்க.

திருக்குறட்கு வடசொல் தேவையின்மையை, அஃதின்றியும் கீழ்க் கண்டவாறு பொருள் கெடாது குறளமைதல் நோக்கித் தெளிக.

**அந்தம்**

**வெருவந்த செ-தொழுகும் வெங்கோல னாயின்**
**ஒருதலை யொல்லைக் கெடும். 563**

'வெருவருவ', 'ஒருதலையா' என்றும் அமையலாம்.

**ஆக்க மிழந்தேமென் றல்லாவா ளுக்கம்**
**உறுதியா—க் கைத்துடை யார்.** *593*

உறுதலைக் கைத்து என்றும் அமையலாம்.

அமரர்

**அடக்க முவணுல கு—க்கு மடங்காமை**
**யாரிரு ளு—த்து விடும்.** *121*

உவணுலகு தேவருலகம். உவணுலகம் என்றும் அமையலாம்.

அவி

**நெ—சொரிந் தாயிரம் வேட்டலி னோருயிர்**
**மெ—செகுத் துண்ணாமை நன்று.** *259*

**ஊண்சொரிந் தாயிரம் வேட்டலி னோருயிரின்**
**ஊன்செகுத் துண்ணாமை நன்று.**

அன்னம்

**அனிச்சமு மோதிமத் தூவியு மாத**
**ரடிக்கு நெருஞ்சிப் பழம்.** *1120*

ஆகுலம்

**மனத்துக்கண் மாசில னாத லனைத்தற**
**னாரவா ரத்த பிற.** *34*

ஆசாரம்

**அச்சமே கீழ்க ளொழுக்கமா மெச்ச**
**மவாவுண்டே லுண்டாஞ் சிறிது.** *1075*

ஆதி

**அகர முதல வெழுத்தெல்லா முன்னைப்**
**பகவன் முதற்றே யுலகு.** *1*

**அகர முதல வெழுத்தெல்லா மாங்குப்**
**பகவன் முதற்றே யுலகு.**

**அந்தணர் நூலோ டறத்திற் கடிப்படையா—**
**நின்றது மன்னவன் கோல்.** *543*

இந்திரன்

**ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோவாம்**
**வேந்தனே சாலுங் கரி. 25**

"வேந்தன் மேய தீம்புன லுலகமும்" (தொல். அகத். 5)

இந்திரன் என்னும் வடசொல்லும் அரசன் என்று பொருள்படுவதே.

எ-டு : இராசேந்திரன், கசேந்திரன், கவீந்திரன், நரேந்திரன், மிருகேந்திரன், ரவீந்திரன்.

ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோவாம்
மைந்தவனே சாலுங் கரி.
மைந்தவன் : வலிமையுடையோன்.

உல்கு

**உறுபொருளும் தீர்வைப் பொருளுந்தன் னொன்னார்த்**
**தெறுபொருளும் வேந்தன் பொருள். 756**

ஆயப்பொருளும் என்றும் அமையலாம்.

கணம்

**குணமென்னுங் குன்றேறி நின்ற முனிவர்**
**சினநொடியுங் காத்த லரிது. 29**

காரணம்

**இலர்பல ரான கரணியே நோற்பார்**
**சிலர்பலர் நோலா தவர். 270**

**தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்**
**கேதறத் தானே வரும். 529**

ஏதறுதல் காரணம் நீங்குதல். ஒ. நோ: ஏது + ஈடு = ஏதீடு.

**உழைப்பிரிந்து பின்பய னோக்கிவந் தானை**
**யிழைத்திருந் தெண்ணிக் கொளல். 530**

சலம்

**அல்வழியாற் செல்வஞ்செ— தேமாத்தல் பைம்மண்ணாங்**
**கொள்கலநீர் பெ—திரீஇ யற்று. 660**

**படிறுற்றுப் பண்பில செ—யார்மா சற்ற**
**குடிபற்றி வாழ்துமென் பார்.** **956**

நாமம்

**காம வெகுளி மயக்க மிவற்றின்பேர்**
**தாமுங் கெடக்கெடு நோ—.** **360**

பாக்கியம்

**அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்**
**பலரறியார் நற்பேற்றி னால்.** ***1141***

பாவம்

**பகைகரி சச்சம் பழியென நான்கு**
**மிகவாவா மில்லிறப்பான் கண்.** ***146***

பாவி

**அழுக்கா றெனுமோர் கரிசன் திருச்செற்றுத்**
**தீயுழி யு—த்து விடும்.** ***168***

**அழுக்கா றெனுமோ ரறங்கடையன் சொம்மழித்துத்**
**தீயுழி யு—த்து விடும்.**

**இன்மை யெனுமோர் கரிசன் மறுமையு**
**மிம்மையு மின்றி வரும்.**

வித்தகர்

**ஆதல்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்**
**மாதிறவோர்க் கல்லா லரிது.** **235**

### 4. திருக்குறளிலுள்ள, வடமொழிச்சென்ற தென்சொற்கள்

**அங்கணம்:** வணங்கு – வாங்கு – அங்கு. அங்குதல் = வளைதல், சா–தல். அங்கணம் = வாட்டசாட்டமாயுள்ள சா–கடை. அங்கணம் – அங்கண (வ.)

***அச்சு:***

அட்டு குறுக்கு. அட்டு – அச்சு = வண்டிக்கும் தேர்க்கும் சக்கரம் கோப்பதற்குக் குறுக்காக அமைக்கப்படும் கட்டை அல்லது உத்தரம். அச்சு – அக்ஷ (வ.)

***அதி:***

அதித்தல் = வீங்குதல், பருத்தல், மிகுதல், இவ் வினை இன்று வழக்கற்றது.

அதி + இகம் = அதிகம் – அதிகன் = மிக்கோன், இறைவன். அதி + அனம் – அதனம் = மிகுதி. அதி – அதை, அதைத்தல் வீங்குதல். அதி – அதி (வ.)

***அதிகாரம்:*** கடு – கடி – கரி – காரம் = மிகுதி, கடுமை, உறைப்பு, வலிமை. அதிகரித்தல் (மீமிசைச் சொல்) மிகப் பெருகுதல். அதிகரி – அதிகாரம் = மிகுதி, வலிமை, கையாளும் உரிமை, ஆளும் வலிமை, நூலின் பெரும்பகுதி. அதி, கரி, அதிகரி என்னும் மூவினைகளும் வடமொழியிலில்லை. அதி + க்ரு (செ–) என்று சொற்புணர்த்தித் தலைமையாயிருத்தல் என்று பொருள் புணர்ப்பர். அதிகாரம் – அதிகார (வ.)

***அமர்:***

அம்முதல் பொருந்துதல். அம் – அமர். அமர்தல் = பொருந்துதல். அமர் = பொருந்திச் செ–யும் போர். ஒ. நோ: பொருதல் = பொருந்துதல், போர் செ–தல். அமர்த்தல் = போர் செ–தல், வலிமை கொள்ளுதல், செருக்குதல். அம் – சம் – சமம் (போர்) – சமர் – சமரம் – ஸமர (வ.).

***அமரகம்:***

அமர் போர். அகம் இடம். அமரகம் போர்க்களம்.

***அமிழ்தம்:***

11 ஆம் 64ஆம் குறளுரைகளைப் பார்க்க.

***அமைச்சு:***

அமைத்தல் = பொருத்துதல், ஏற்பாடு செ–தல். அமை – அமைச்சு = அரசியல் முறையையும் வினைகளையும் செவ்வையாக அமைத்தல். 'சு' தொழிற்பெயரீறு. ஒ. நோ: விழை – விழைச்சு. அமைச்சு – அமைச்சன், வேந்தன் என்னும் பெயர் வேந்து என்று குறுகுவதுபோல, அமைச்சன் என்னும் பெயரும் அமைச்சு என்று குறுகி வழங்கும்.

இனி, அண்மையிலிருப்பவன் என்று பொருள்படும் அமாத்ய என்னும் வடசொல்லொடு தொடர்புடையதாகக் கொள்ளினும், அப் பொருளிலும் இச்

சொல் தென்சொல்லாதற்கு எத்துணையும் இழுக்கில்லை யென்க. அமைதல் நெருங்குதல், அமை நெருக்கம். அமை - அமைச்சன், ஒ. நோ: தலை - தலைச்சன், உழையிருந்தான் என்று திருவள்ளுவருங் கூறுதல் காண்க (638). அமைச்சன் - அமாத்ய (வ.)

***அரங்கு:***

அர் - அறு, அர் - அரை = அறுக்கப்பட்ட பகுதி (-பாதி), அர் - அரங்கு = அறுக்கப்பட்ட அறை, அறைவகுக்கப்பட்ட பாண்டி (சில்லாக்கு) விளையாட்டுக்கட்டம், சூதாட்டுக் கட்டம்.

அரங்கு - அரங்கம் - ரங்க(வ.),

104 ஆம் குறளுரையைப் பார்க்க.

***அரசு:***

உரம் - உரவு = வலிமை. உரவு - அரவு - அரசு = வலிமை, ஆளும் வலிமை.

ஒ. நோ: உகை - அகை, பரவு - பரசு.

அரசு - அரசன் = ஆள்வோன். வேந்தன் என்பது வேந்து என்றும், மன்னன் என்பது மன் என்றும், கோவன் (கோன்) என்பது கோ என்றும், குறும் பன் என்பது குறும்பு என்றும், குறுகி வழங்குவது போல், அரசன் என்பதும் அரசு என்று பாலீறு குன்றி வழங்கும். அரசன் - ராஜன் (வ.), L. rex, regis.

வடவர் ரஜ் என்றொரு செயற்கை முதனிலையைத் தோற்றுவித்து, அதற்கு ஒளிதற் பொருள் கூறி உலகை ஏமாற்றுவர்.

***அரண்:***

உரம் - அரம் - அரண் = வலிய காப்பு, காப்பான கோட்டை, காப்பான இடம். ஒ. நோ: பரம் - பரண்.

அரண் - அரணம் - சரண(வ.), சரண என்னும் வடசொற்குச் சார்தல் என்று பொருள்படும் சரி என்னுஞ் சொல்லை மூலமாகக் காட்டுவர். அது சார் என்னுந் தென்சொல்லின் திரிபே.

***அவம்:*** அவிதல் = வேதல், அழிதல், கெடுதல். அவி – அவம் = கேடு, வீண். அவம் – அவ – அப (வ.)

***அவை:*** அமைதல் = நெருங்குதல், கூடுதல். அமை = கூட்டம், அம்பலம். அமை – அவை. ஒ.நோ: அம்மை – அவ்வை, குமி – குவி.

அவை – சவை, ஒ.நோ: அமையம் – சமையம், இளை – சிளை, உதை – சுதை (உதைக்கும் ஆவு), எட்டி – செட்டி. அவை – அவையம். ‘அம்’ ஒரு பெருமைப்பொருட் பின்னொட்டு. எ –டு. நிலை – நிலையம், கம்பு – கம்பம், சவை – சபா (வ.)

***ஆணி:*** ஆழ் – ஆழி – ஆணி = ஆழ்ந்திறங்கும் முட்போன்ற கூர்ங் கருவி. ஆணிபோல் ஆழ்ந்தூன்றும் வேரை ஆணிவேர் என்றும் சுவரில் ஆணி பதிதலை ஆணியிறங்குதல் என்றும், கூறுவது காண்க. ழ – ண, போலி. ஒ.நோ: தழல் – தணல், நிழல் – நிணல், ஆணி – ஆணி (வ.).

***ஆயம்[1]:*** தா– – தாயம் = தா–வழி யுரிமை. முதற்காலத்திற் குடும்பத் தலைமை தாங்கியது தாயே. தாயம் – ஆயம் = உரிமை. தாயம் – தாய (வ.).

***ஆயம்[2]:*** வா – ஆ – ஆயம் = வருவா–, வரி, கட்டணம். ஓடிவா என்பது கொச்சை வழக்கில் ஓடியா என்று சொல்லப்படுதல் காண்க. வா என்னுஞ் சொல்லே ஆவ் என்று முன் பின்னாக முறைமாறி இந்தியில் வழங்கும். ஆயம் – ஆய (வ.).

***ஆயிரம்:*** அயிர் = நுண்மணல், அயிர் – அயிரம் – ஆயிரம்.

ஆற்று மணலும் கடற் கரை மணலும் ஏராளமாயிருப்பதால் மணற்பெயர் ஒரு பெருந்தொகைப் பெயராயிற்று. ஒ.நோ: நூறு = நீறு, தூள், நூறென்னும் எண்.

ஆயிரம் – ஆயிரம் (ம.) – ஆயிரெ (கு.) – ஹசார் (இ.) – ஸஹஸ்ர (வ.). வடசொல் வடிவத்தில் ‘ஸ’ என்பது முன்னொட்டு.

***இமை:*** இமை – நிமை – நிமி (வ.)

**இலக்கம்**: இலக்கு = இலை, எ–யுங்குறி, குறி, குறிக்கோள், குறித்த இடம். ஒரு குறித்த இடத்தை இலக்கு என்பது பாண்டிநாட்டு வழக்கு. இலக்கு – லக்ஷ (வ.).

இலக்கு - இலக்கம் - லக்ஷ (வ.).

**உரு:** உருத்தல் = தோன்றுதல். உரு = தோற்றம். வடிவம், வடிவுடைப் பொருள், தனிப்பொருள் (உருப்படி), வடிவம் போன்ற இயல்வரம்பு.

உரு - உருவு - உருவம் - ரூப (வ.).

உருவு - உருபு = வேற்றுமை வடிவம், அவ் வடிவு குறித்த எழுத்து அல்லது அசை அல்லது சொல்.

**உலகு:** உல் - உலா = சுற்றிவருதல். உல் - உல - உலவு - உலாவு. உலவுதல் = வளைதல், வட்டமாதல், சுற்றுதல், திரிதல், உலவு - உலகு = உருண்டை யாயிருப்பது, சுற்றிவருவது.

உலகு - உலகம் - லோக (வ.) வடமொழியில் லோக என்னும் சொற்குக் கூறப்படும் பொருட்கரணியம் பார்க்கப்படுவது என்பதே. அது look என்னும் ஆங்கிலச் சொல்லொடு தொடர்புடையது. அது வேறு; உலகத்தைக் குறிக்கும் தென்சொல்லின் திரிபு வேறு.

“காலம் உலகம் உயிரே யுடம்பே” (தொல். 541) என்று ஆசிரியர் எடுத் தோதுதலால் இவையெல்லாந் தென்சொல்லேயென்று நச்சினார்க்கினியருங் கூறுதல் காண்க.

**ஏதம்**: சிதைத்தல் = குலைத்தல், வெட்டுதல், அழித்தல். சிதை - சித் (வ.). சிதை - சேதம் - ஏதம் = கேடு, குற்றம். சேதம் - சேத (வ.).

**ஏது:** ஏ - ஏவு - ஏசு - ஏது.
ஏசுதல் = ஏவுதல், செலுத்துதல். “கொல்லம் பேசி” (தேவா. 380: 6)
ஏது = ஏவுகை, தூண்டுதல், கரணியம். ஏது - ஹேது (வ.).

**ஏமம்:** ஏ = உயர்ச்சி. மரம், கோபுரம், மலை முதலிய உயர்ந்த இடங்கள் கொடிய விலங்குகட்கும் பகைவர்க்கும் தப்பிப் பாதுகாப்போடிருத்தற்கு ஏற்றவையா யிருத்தலின், உயர்ச்சிக் கருத்திற் பாதுகாப்புக் கருத்துத் தோன்றிற்று.

ஏ - ஏம் = காப்பு, பாதுகாப்பு, இன்பம்.
ஏம் - ஏமா = ஏமாத்தல் = அரணாதல்.
ஏம் + மரு = ஏமரு. ஏமருதல் = காக்கப்படுதல்.
ஏம் + ஆர் = ஏமார். ஏமார்த்தல் = வலுப்படுத்தல்.
ஏம் - ஏமை - யாமை = பாதுகாப்பான ஓடுள்ளது.
ஒ.நோ: ஏன் - யான், ஏது - யாது.

யாமை - ஆமை, ஒ. நோ. யானை - ஆனை.

ஏம் - ஏமம் = பாதுகாப்பு. ஏமம் - யாமம் = பாதுகாப்பான மறைவிற்கேற்ற நள்ளிரவு.

ஏமம் - சேமம். ஒ.நோ: ஏண் - சேண். சேமம் - க்ஷேம (வ.).

***கசடு:*** கசளுதல் = கலத்தல், கலங்குதல், கலவையாதல், மண்டியாதல். கசள் - கசண்டு = அடிமண்டி. கசண்டு - கசடு = மண்டி, கோது, குற்றம். கசடு - கசட்ட (வ.).

***கணம்:*** கல் - கல, கல் - கள். கள்ளுதல் = கலத்தல். கள் - களம் = கூட்டம், அவை.

கள - கண - கணம் = கூட்டம். கணத்தல் = கூடுதல். கணம் - கண (வ.).

***கந்து:*** கும்முதல் = திரளுதல், கும் - கம் - கந்து = திரண்ட தூண். ஒ.நோ: உம் - உந்து. கந்து - ஸ்கந்த (வ.).

***கருமம்:*** கருத்தல் - கை கருக்குமாறு வினை செ-தல். இதற்கு எதிர் செ-தல். செ-தல் - கை சிவக்குமாறு வினைசெ-தல். கடுவுழைப்பால் கருப்பர் கை கருப்பதும் சிவப்பர் கை சிவப்பதும் இயற்கை. கரு - கருமம் - கர்மன் (வ.). கரு - க்ரு (வ.). கருத்தல் என்னும் வினை இன்று வழக்கற்றது. கருமம் என்னும் சொல்லொடு தொடர்புடையதும், கரு என்னும் வினைமுதனிலையைக் கொண்டதுமான கருவி என்னும் சொல், தூய தென்சொல்லா யிருத்தலை நோக்குக.

***கரை:*** கரைதல் = அழைத்தல், சொல்லுதல். விளம்புதல். கரை - க்ரு (வ.ஐ.) cry (E.)

***கவரி:*** கவரம் = சினம். கவரம் - கவரி = சினம் மிக்க காட்டெருமை, எருமை.

**"படிந்து சேடெறியுஞ் செங்கட் கவரியும்"** **(கல்லாடம்,53: 30)**

கவரி = நீண்ட மயிரடர்ந்த திபேத் தெருமை, கவரி மயிர்போல் அடர்ந்து வளரும் சம்பா நெற் பயிர்வகை.

கவரி - சவரி - சவரம் - சமரம் - சாமரம்.

சவரி - சமரீ (வ,). சாமரம் - சாமர (வ.).

***கவுள்:*** கவ்வு - கவுள் = குறடுபோற் கவ்வும் அலகு, கன்னம். வடவர் காட்டும் கரப் - கப் (இரங்கு) கன்னம் என்னும் மூலம் இம்மியும் பொருந்தாது.

***கனம்:*** கல் – கன் – கன. கனத்தல் = கற்போற் பளுவாத மிகுதியாதல், பருத்தல், தடித்தல், பெருமையுறுதல். கன – கனம் = பளு, பருமன், பெருமை, செறிவு, திரட்சி, உறுதி, மிகுதி, கூட்டம், மும்மான வடிவு. கனம் – கன (வ. gh),

***காண்:*** காணுதல் = பார்த்தல், அறிதல். காட்சி – பார்வை, அறிவு.

ON. kanna, kunna, LL. canna, OE. canne, ME. cun, con, E. ean, ON. kna, OE. cna, OHG. cna, E. know, L. gno, Gk. gno, Skt. gna (ஜ்ஞா),

***காக்கை:*** காகா – காக்கா – காக்கை. காகா – காகம். காக்கை – காக்க (வ.).

தமிழ் குமரிநாட்டில் மிக முந்தித் தோன்றிய இயன்மொழி. சமற்கிருதம், ஆரியம் பிராகிருதம் திரவிடம் தமிழ் ஆகிய நான்கினின்றும் பிந்தித் தோன்றிய திரிமொழி.

***காமம்:*** கவர்தல் = விரும்புதல். கவல் – கவ – கா – காதல். கா – காம் – காமம் – காமன் – காம (வ.).

***காரிகை:*** கரு – கார் = கருமை, கரிய முகில், மழை, நீர், அழகு. நீர்வளத்தினாலேயே கண்ணிற்கினிய காட்சியளிக்கும் மரஞ்செடி கொடிகள் தோன்றுவதால், நீரைக் குறிக்குஞ் சொற்கட்கு அழகு பொருள் தோன்றிற்று. ஒ.நோ: அம் = நீர், அழகு.

கார் – காரிகை = அழகு, அணி, பெண். காரிகை – காரிகா (வ.).

வடவர் காட்டும் பொருந்தாப் பொருட்கரணியம் வருமாறு:

க்ரு செ–. காரக (ஆ.பா.) = செ–பவன். காரிகா (பெ.பா.) செ–பவள், நடிப்பவள்.

***காலம்:*** கோல் – கால் = கம்பு, கம்பம், தூண், தூண்போல் உடம்பைத் தாங்கும் உறுப்பு. கால்போல் நீண்டு செல்லும் நீர்க்கால், நில்லாது நீண்டு செல்லும் காற்று, நீண்டு சென்றுகொண்டே யிருக்கும் நேரம் அல்லது காலம். கால் – காலம் – கால (வ.). வடமொழியில் இதற்கு வேரில்லை, கால் என்னும் மூலவடிவும் காலை என்னும் திரிசொல்லும் இல்லை.

**“கால முலகம் உயிரே யுடம்பே**
**பால்பிரிந் திசையா வுயர்திணை மேன”** **(தொல். 541)**

***குடங்கர்:*** குடம் – குடங்கு – குடங்கர் = குடம், குடம்போன்ற சிறுகுடிசை. குடங்கர் – குடங்கக (வ.).

***குடி:*** குடி – வளைவு, வட்டமான குடியிருப்பு. முதற்காலத்தில் குடியிருப் பெல்லாம் வட்டமாகக் கட்டப்பட்டிருந்ததால், வீடு குடியெனப்பட்டது.

குடி – குடி (வ.).

குடி = இல், இல்லத்தில் வாழும் மனைவி, மனைவியொடு கூடிய குடும் பம், கூட்டுக் குடும்பம், பல குடும்பஞ் சேர்ந்த இனம், பல தலைமுறையாக வந்த குடும்பத்தொடர்ச்சி, குடும்ப அல்லது இனமரபுப் பண்பு, பல வீடுகள் சேர்ந்த ஊர்.

***குணம்:*** கொள் – கொள்கை = கொண்ட கருத்து அல்லது நம்பிக்கை, கொண்டுள்ள இயல்பு. கொள் – கோள் = தன்மை. கொள் – (கொண்) – (கொணம்) – குணம் = கொண்ட தன்மை, தன்மை.

வடமொழியிற் கிரஹ் (பற்று) என்பதை மூலமாகக் காட்டுவர்.

***குதி:*** குத்து – குதி, குதித்தல் = நேராக மேலெழுதல், குதித்துத் தாண்டு தல், தாண்டிக் கடத்தல், வெல்லுதல். குதி – கூர்த் (வ.).

***கூத்து:*** குத்து – குதி – கூத்து – கூர்த்த (வ.).

***குலம்:*** குல் – குல – குலவு = குலவுதல், கூடுதல். குல் – குலம் = கூட்டம், இனம், குடி, குலம் – குல (வ.).

***குவளை:*** இது தமிழகத்து மலர். ஒரு பேரெண்ணையுங் குறிக்கும். குவளை – குவல (வ.).

***குழவி:*** குழ – குழவு = இளமை. குழவு – குழவி. குழ – குழந்தை, குழ – கொழுந்து. குழ – குட (வ.).

***கூகை:*** கூகூ – கூகை – கூக (வ.).

***கூழ்:*** குழை – கூழ் = குழைந்த பொருள், இழைந்த வுணவு. கூழ் – கூர(வ.).

***கோட்டி:*** 401 ஆம் குறளுரையைப் பார்க்க.

***கோடி:*** குடுமி = உச்சி. கோடி = கடைசி, முதற்காலத்துக் கடைசி யெண்.

**“ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப**
**கோடியு மல்ல பல.”** **(குறள். 337)**

**“அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செ–த லிலர்.”** **(குறள். 654)**

“ஐஅம் பல்என வரூஉம் இறுதி
அல்பெயர் எண்ணினும் ஆயியல் நிலையும்” **(தொல். 333)**

என்பவை, திருவள்ளுவர் காலத்திற்கு மட்டுமன்றித் தொல்காப்பியர் காலத்திற்கும் முன்பே, கோடியென்னும் எண்ணும் அடுக்கிய கோடிகளாகிய எண்களும் தமிழரால் வழங்கப்பட்டமையைத் தெரிவிக்கும். கோடி - கோடி (வ.).

***சமன்:*** அம்முதல் = பொருந்துதல், ஒத்தல். அம் - சம் - சமம் = ஒப்பு. சமம் - சமன் = துலைக்கோல், நிறுக்குமுன் இருபுறமும் ஒத்து நிற்கும் நிலை. சமம் -ஸம (வ.).

***சாகாடு:*** சருக்கு - சக்கு - சக்கடம் - சகடம் - சகடு - சாகாடு - சாடு. சகடு - சகடி - சகடிகை. சகடம் - சகட்ட (வ.).

***சிவிகை:*** சிவிதல் = சுருங்குதல், சிறுத்தல். சிவி - சிவிகை = சிறிய மூடு பல்லக்கு. சிவிகை - சிவிகா, சிபிகா (வ.).

***சுதை:*** சுதை = சுதசுத வென்றிருக்குஞ் சாந்து. சுதசுதவென்றிருத்தல் சேறுபோலிருத்தல். அது இன்று சொதசொத வென்றிருத்தல் என வழங்குகின்றது.

இனி, சுல் (வெள்ளி) - (சுலை) - சுதை = வெண் சாந்து எனினுமாம். சுதை - ஸுதா (வ.).

***சூது:*** இது ஒருவகைக் காயின் பெயர், சூது - சூத (வ.).

***தண்டம்:*** தள் - தளம் = கனம், கூட்டம், படை. தளம் - தடம் = பெருமை.

தள் - தாள் = அடித்தண்டு. தள் - தண்டு = திரண்ட அடித்தண்டு, திரண்ட ஊன்றுகோல். தண்டு - தண்டம். தண்டு - தண்டி - தண்டித்தல் = பருத்தல். தண்டி - தடி. தண்டித்தல் = தடியாலடித்தல், தண்டனை செ-தல். தண்டி - தண்டம், தண்டனம், தண்டனை. தண்டம் = தண்டனை. தண்டம் - தண்ட (வ.). தண்டனம் (தண்டனை ) = தண்டன (வ.).

***தவம்:*** ‘தவம்’ என்னும் அதிகார முகவுரையைக் காண்க. தவம் - தபஸ் (வ.).

***தா — தானம்:*** தள்ளுதல் = வாழை, தெங்கு முதலியன குலை தள்ளுதல், பயன்தருதல், தருதல். தள் – (தர்) – தரு – தா.

தா என்னும் சொல், ஒருவன் தனக்குச் சமமானவரிடமே ஒன்றை வேண்டும்போது பயன்படுத்தற் குரியதாம்.

**"தாஎன் கிளவி ஒப்போன் கூற்றே"** **(தொல். 626)**

இனி, இச் சொல் தன்மை முன்னிலை ஆகிய ஈரிடத்திற்கே யுரிய தென் றும் இலக்கண வரம்புள்ளது.

**"தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்**
**தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த."** **(தொல். 512)**

இதனால், தா என்னும் சொல் தமிழுக்கே யுரியதென்பது வெள்ளிடை மலை.

தா:– தா (வ.) L. do. Gk. (di) domi.

தா + அனம் = தானம். பொதுவாக, மதம்பற்றிக் கோவிற்கும் அடியார்க் கும் கொடுப்பது தானம் என்றும், கல்விபற்றிப் புலவர்க்கும் பாணர் முதலி யோர்க்குங் கொடுப்பது கொடையென்றும், அறம்பற்றி எளியார்க்கும் இரப்போர்க்குங் கொடுப்பது ஈகையென்றும், சொல்லப்படும்.

தானம் – தான (வ). L. donem.

***தாமரை:*** தும் – துமர் – துவர் = சிவப்பு. துவர் – துவரை = செம்பயறு. துமர் – தமர் (தமரை) – தாமரை = செந்நிற நீர்ப்பூவகை. இச் சொல் இன்று தன் சிறப்புப் பொருளிழந்து, அவ்வகையின் இருநிற மலர்க்கும் பொதுப்பெயராக வழங்குகின்றது. தாமரை – தாமரஸ (வ.).

***திரு:*** தில் – திர் – திரள். திர் – திரு = திரண்ட செல்வம், செல்வத்தின் தெ–வம். ஒ நோ: வெறுத்தல் செறிதல். வெறு – வெறுக்கை = செல்வம். திரு – ஸ்ரீ (வ) = ச்ரீ.

**"நிறையே அருளே உணர்வொடு திருவென"** **(தொல். 1219)**

என்று காதலர் ஒப்புமைக் கூறுகளுள் திருவும் ஒன்றாகத் தொன்றுதொட்டுச் சொல்லப்பட்டு வருதல் காண்க.

***தீ:*** தே-தல் = உரசிச் சிறுத்தல், உரசித் தீப்பிடித்தல், தே- - தே = நெருப்பு, நெருப்பாகிய தெ-வம், தெ-வம். தே- - தேயு = நெருப்பு (பிங்.).

தே - தீ = நெருப்பு. தீமை = தீயின் தன்மை, நன்மை யல்லாதது. தே- - தீ-. தீ -தல் = எரிதல், விளங்குதல். தீ- - தீ (வ). தீ - தீ (வ.).

***துலை:*** துல் - துன். துன்னுதல் = பொருந்துதல். துல் - துலை = ஒப்பு, இரு புறமும் ஒத்த நிறைகோல், துல் - துலம் = நிறைகோல், ஒரு நிறை. துல் - துலா = நிறைகோல், நிறைகோல் போன்ற ஏற்றமரம். துலா - துலாம் = ஒரு நிறை. துல் - துல்லியம் = ஒப்பு. துலை - துலா (வ.).

***தூண்:*** துன்னுதல் = பொருந்துதல், சேர்தல். துணை = சேர்க்கை, இரண்டு, ஒப்பு. துணர் = கொத்து. துன் - (துண்) - தூண் = பருத்த கம்பம், மண்டபக்கால். தூண் - தூணி. தூணித்தல் = பருத்தல். துண் (தொண்) - தொண்ணை = பருத்தது. தூண் = தூணம் = பெருந்தூண். தூணம் - ஸ்தூண, ஸ்தூணா (வ.).

***தூது:*** துது - துதி = யானையின் முன்னுள்ள கை (துதிக்கை), துது - தூது = அரசனுக்கு முன்சென்று அவன் வருகையை அறிவிப்பவன், அரசன் விடுத்த செ-தியை வேற்றரசரிடம் சென்று சொல்பவன், அரசன் விடுக்கும் செ-தி. தூது - தூதன் (ஆ. பா.). தூதி (பெ.பா.).

உது (உதழ் - உதடு), குது (தெ. கொத்த = புதிய ), நுது (நுதல் = மண்டையின் முன்னுள்ள நெற்றி. நுதலுதல் = முன் சொல்லித் தொடங்குதல்), புது, முது (முதல்) என ***உ, கு, நு, பு, மு*** என்னும் பிற சொன் முதலடிகளைக் கொண்டும் முன்மைக் கருத்துச் சொற்கள் தோன்றியிருத்தலைக் காண்க. தூது - தூத (வ.)

**தெ—வம்:** முதற்காலத்தில் தீயே தெ-வமாக வணங்கப்பட்டது. அத னால் தெ-வத்தின் பெயர்களுட் பழைமையானவை தீயின் பெயர்களி னின்றே தோன்றியுள்ளன.

தே-தல் = உரசுதல், மரங்கள் உரசித் தீப்பிடித்தல். தே- - தே = நெருப்பு, தெ- வம். தே-வு - தேவு = தெ-வம். தேவு - தேவன், தே-வு - தெ-வு - தெ-வம்.

தேவன் - தேவி (பெ. பா.), தேவர் (பலர்பால்),

**“தெ—வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்”** **(தொல். 487)**

**“பால்வரை தெ—வம் வினையே பூதம்”** **(தொல். 541)**

"தெ–வம் உணாவே மாமரம் புட்பறை" (தொல். 964)

என இற்றை முதுபழந் தொன்னூலில் யகரமெ-யடி கொண்ட தெ-வப் பெயரே குறிக்கப்பட்டிருத்தல் காண்க. தெ-வம் – தை (வ.). தேவன் – தேவ (வ.).

வடமொழியாளர் திவ்ய (தெ-வத் தன்மையுள்ள), த்யௌஸ் (ஒளியுள்ள வானம்) என்னும் திரிசொற்களினின்று திவ் (ஒளிர்) அல்லது த்யு என்னும் செயற்கையடிகளைத் தோற்றுவித்து அவற்றை மூலமாகக் காட்டுவர். அறிஞர் நடுநிலையா– ஆ–ந்து உண்மை காண்க.

தே (–)வு – தெ-வம். L. deus, Gk. theos.

***தேயம்:*** திகைதல் = முடிதல், திகை = முடிவு, எல்லை, திசை. திகை – திசை – தேசம் = ஒரு திசையிலுள்ள நாடு. தேசம் – தேயம் = நாடு, இடம், இடப் பொரு ளுருபு. தேயம் – தேம் = இடப்பொரு ளுருபு. தேம் – தே = தேவகை = இடப்பொரு ளுருபு, திசை – திசா (வ.) திகை – திக் (வ.).

வடமொழியில் திசா என்னும் சொற்குத் 'திச்' என்பதை மூலமாகக் காட்டு வர். திச் = காட்டு. Gk. deiknumi (to show).

இந்தியில் திக்கா என்னுஞ் சொல் காட்டுதலைக் குறிக்கின்றது. நோக்கு – தேக்கு (த. வி.) – திக்கா (பி.வி.) – இதற்கு மூலமான சூரசேனிச் சொல் கிரேக்க நாடு சென்று வேதமொழிக்கு வந்திருக்கலாம். வடமொழியிலுள்ள திக் என்னும் வடிவே திச் என்றும் திரிந்திருக்கலாம். அங்ஙனமாயின், தென்சொல்லும் வடசொல்லும் வெவ்வேறு வழியில் தோன்றினவாகும்.

***தோட்டி:*** துறடு – துறட்டி – தோட்டி.
தோட்டி – த்ரோட்டி, த்ரோத்ர, தோத்ர (வ.).
***தோணி:*** தொள்ளுதல் = தோண்டுதல், குடைதல்.

தொள் – தோள் – தோணி = குடையப்பட்ட மரக்கலம், அதுபோற் பலகை களாற் பொருத்திச் செ–த கலம். தோணி – த்ரோண (வ.).

***நயன்:*** நயம் – நயன் – நன்மை, நேர்த்தி, நேர்மை, நேர்பாடு.

வடவர் காட்டும் நீ என்னும் வேர் நீதி என்னும் வடசொற்குப் பொருந்துமேயன்றி, நயன் என்னும் தென்சொற்குப் பொருந்தாது.

***நாகரிகம்:*** நகர் – நகரகம் – நகரிகம் – நாகரிகம் – முதன்முதல் நகரத்துத் தோன்றிய திருந்திய வாழ்க்கை. நாகரிகம் – நாகரிக (வ.).

***நாடி:*** நுள் – நள் – நாள் – நாளம் = உட்டுளையுள்ள மூங்கில்.

நாளம் – நாளி – நாழி – நாடி = அரத்த அல்லது மூச்சுக்குழா–, ஊதை (வாத) பித்துக் கோழை நாடி, நாடித் துடிப்பு. நாடி – நாடி (வ.).

***நாவா–:*** நாவுதல் – கொழித்தல். நாவு = நவா– = கடல்நீரைக் கொழித்துச் செல்லும் பெருங்கலம். நாவா– – நௌ, நாவ (வ.), L. navis.

***நிச்சம்:*** நில் – நிற்றம் = நிலையானது. ஒ நோ: கொல் – கொற்றம். வெல் – வெற்றம்.

நிற்றம் – நித்தம். ஒ.நோ: முற்றகம் – முத்தகம்.

நித்தம் – நிச்சம். ஒ. நோ: அத்தன் – அச்சன், நத்து – நச்சு. நித்தம் – நித்ய (வ.). இதற்கு வடவர் காட்டும் மூலம் பொருந்தாப் பொ–த்தல்.

***நீர், நீர்மை:*** நீள் – நீர் = நீளும் பொருள். நீர் + நிலம். நில் – நிலம் = நிற்கும் பொருள்.

நீர் – நீர்மை = நீரின் தன்மை, குளிர்ந்த தன்மை,

இனிய அல்லது சிறந்த தன்மை, தன்மை.

நீர் – நீரம் – நீர (வ.). நீரம் – நார (வ.).

***பக்கம்:*** பகு – பக்கு – பக்கம் பக்ஷ– (வ.).

பகவன்: பகு – பகவு – பகவன் = அனைத்துயிர்க்கும் பகுத்தளித்துக் காப்பவன். பகவன் – பகவன் (வ. Bhagavan).

***பகு:*** பகு – பஜ் (வ. bhaj).

***படாம்:*** பட்டுதல் தட்டுதல். பட்டு – பட்டை = தட்டையாகத் தட்டப்பட்டது. பட்டு – பட்டம் = பட்டையான தகடு, பட்டையான துணி. பட்டம் – படம் = துணி, துணியிலெழுதிய ஓவியம், சித்திரச் சீலை, யானை முகபடாம். படம் – படாம். ஒ.நோ: கடம் – கடாம். படம் – பட (வ.). படம் (படாம்) – பட்ட (வ.).

***படிவம்:*** படுதல் விழுதல். படு = படி. படிதல் – ஒன்றின்மேல் இன்னொன்று விழுதல், விழுந்து பதிதல், பதிந்து உருவ வடிவம் அமைதல்.

படி - உருவம், உடம்பு, ஒப்பு. அப்படி = அதுபோல்.

படி - படிவு - படிவம். படி - படிமை - படிமம்.

படி - வடி, படிவு - வடிவு. படிவம் - வடிவம்.

படி - ப்ரதி (வ.). படிமை - ப்ரதிமா (வ.).

***பதம்:*** பதி - பதம் = பதிந்திருக்கும் நிலை அல்லது நிலைமை, பதவி. பதம் - பதவு - பதவி = பதவீ (வ.).

***பருவம்:*** பரு - பருமம் - பருவம், பருத்த நிலை, பயன்படுநிலை, தக்க காலம். இனி, பழு - பழுவம் - பருவம் என்றுமாம். பருவம் - பர்வன் (வ.).

***பள்ளி:*** பள் - பள்ளம் = நிலமட்டத்திற்குத் தாழ்வான இடம். பள்ளையன் = குள்ளன். பள்ளையாடு = தாழ்மட்டமான ஆடு.

பள் - பள்ளி = பள்ளம். பள்ளிக்கிருத்தல் = பள்ளத்திற் கிடத்தல்.

2. படுக்கை. நிற்றலிருத்தலினும் தாழ்மட்டமான நிலையடைதல். பள்ளி கொள்ளுதல் = படுத்தல். பள்ளியெழுச்சி = படுக்கைவிட் டெழுதல். 3. படுக்கை யறை, 4. படுக்கும் வீடு, 5. வீடு. மடைப்பள்ளி = சமையல் வீடு. 6. வீடுபோன்ற அமைப்பு. பள்ளியோடம், வீடுபோலமைத்த ஓடம். 7. அரசன் வீடாகிய அரண் மனை. 8. தெ-வ வீடாகிய கோயில், 9. துறவிகள் தங்கும் தவநிலையம். 10. பலர் பள்ளிகொள்ளும் ஊர் மடம்.

11. கோயிலிலும் மடத்திலும் அமைந்த கல்விக்கூடம். (பள்ளி, பள்ளிக் கூடம்). பள்ளிக்கு வைத்தல் = படிக்க வைத்தல், பள்ளிப்பிள்ளை, பள்ளிக் கணக்கு.

12. அரசன் அல்லது துறவி கல்லறை.

13. கோயில் அல்லது மடமுள்ள ஊர்.

14. பள்ளமான வயலில் வேலை செ-யும் வகுப்பான்.

இங்ஙனம் தொன்றுதொட்டு வழங்கிவரும் தூய தென்சொல்லை, பிற் காலத்திற் பள்ளிச்சந்தம் என்றும் பள்ளிவாசல் என்றும் பிற நாடுகளினின்று வந்த பிற மதச்சார்பாக வழங்கியமைபற்றி, அயன்மொழிச் சொல்லென்று ஆரா-ச்சியில்லார் அனைவரும் மயங்குவாராயினர். பள்ளி - பல்லி (வ.).

***பளிங்கு:*** பள் - பள: பளபள என்பது ஒளிர்தல் (பிரகாசித்தல்) குறிப்பு. பளிச்சு, பளீர் என்பன மின்னற் குறிப்புகள்.

பள் - பளி - பளிங்கு = பளிங்குக்கல், கண்ணாடி, கற்பூரம். பளி - பளிதம் = கற்பூரம். பள் - பட்டு = பளபளப்பான நூல் அல்லது துணி. பட்டுப்பட்டென்று நிலா அடிக்கிறது என்னும் வழக்கை நோக்குக. பளிங்கு = ஸ்படிக (வ.).

***பாகம்:*** பகு - பாகு - பாகம் - பாக (வ. bhaga).

***பாரி:*** பர - பார் - பாரி. பாரித்தல் = பரப்புதல், விரித்தல். பாரி - ஸ்பாரி (வ. sphar).

***பித்தர்:*** பிதற்று - பேத்து - பித்து = பிதற்றுநிலை, அறிவுமயக்கம், மயக்கம், மயக்கஞ் செ-யும் நீர், அந் நீர்ப்பை, மயங்கிய கோட்டித்தனம், கோட்டிபோன்ற பெருங்காதல், 'பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்'. பித்து - பித்தம் = மயக்க நீர், கோட்டித்தனம், பெருங்காதல், மதிகேடு. பித்தம் - பித்தன். பித்து - பிச்சு பித்தி (பெ. பா.) - பிச்சி. பித்தம் - பித்த (வ.).

***பீழி, பீழை:*** பிள்ளுதல் = பிடுங்குதல், துன்பஞ் செ-தல், தொல்லை கொடுத்தல், பி-த்துப் பிடுங்குதல் என்னும் வழக்கை நோக்குக. பிள் - பீள் - பீழ் - பீழி - பீழித்தல் = வருத்துதல், துன்பஞ் செ-தல். பீழி - பீடி - பீட் (வ.). பீழி - பீழை - பீடை - பீடா (வ.). பீடித்தல் - துன்பஞ் செ-தல். பீடை = துன்பம்.

***புருவம்:*** புரிதல் = வளைதல். புரி - புரிவு - புரிவம் - புருவம் = கண்ணிற்கு மேலுள்ள வளைவு. புருவம் - ப்ரூ (வ.), சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி வடசொல் வடிவைப் ப்ருவ (bh) என்ற வடிவிலேயே குறிக்கின்றது. OE. bru, E. brow.

***புர:*** புரத்தல் = காத்தல். புர - புரம் = காப்பு. புர - புரவு = காப்பு. புரவலன் = காவலன். புரந்தா - புறந்தா. புறந்தருதல் = பாதுகாப்பளித்தல், காத்தல். புரந்தா - புரந்தரன் = காவலன், அரசன். புரந்தரன் - புரந்தர (வ.). = இந்திரன், விண்ணோர் காவலன்.

***புரி:*** புரிதல் = விரும்புதல். புரி - ப்ரீ (வ.).

***புரை:*** புரை = துளை, அறை, வீடு, கோயில். துளைக்கருத்தினின்று குற்றமென்னுங் கருத்துந் தோன்றும். புரை - புர (வ.).

***பூசனை:*** 18 ஆம் குறளுரையைப் பார்க்க.

***பூதம்:*** பூத்தல் = தோன்றுதல்.

**“அவையஞ்சி மெ—விதிர்ப்பார் கல்வியுங் கல்லார்**
**அவையஞ்சா வாகுலச் சொல்லும் — நவையஞ்சி**
**ஈத்துண்ணார் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்**
**பூத்தலிற் பூவாமை நன்று.”** **(நீதிநெறி. 5)**

இப் பாவிலுள்ள பூத்தற்சொல் வேறு; மலர்தலைக் குறிக்கும் பூத்தற்சொல் வேறு. மலர்தலைக் குறிப்பது பொலிவையுணர்த்தும் பொல் என்னும் அடியி னின்று திரிந்ததாகும்.

புகு - (பொகு) - போகில் = அரும்பு.

புகு - பூ - போ - போத்து = வளார், இளங்கிளை. போத்துவெடித்தல் என்னும் வழக்கை நோக்குக.

***பூ:*** பூதம் = பெருவெளியில் தோன்றிய நால்வகை அல்லது ஐவகைப் பொருள்களுள் ஒன்று.

**“வளியென வரூஉம் பூதக் கிளவியும்”** **(தொல். 242)**

**“பால்வரை தெ—வம் வினையே பூதம்**
**பால்பிரிந் திசையா வுயர்திணை மேன”** **(தொல். 541)**

***பூ:*** பூ, (வ. bhu). இச் சொல்லினின்றே புவந, பூமி, பவி ய, பாவந முதலிய முன்னொட்டுப் பெறாச் சொற்களும், அநுபவ, அநுபூதி, உத்பவ, ஸ்வயம்பூ முதலிய முன்னொட்டுப் பெற்ற சொற்களுமாக நூற்றுக்கணக்கான வடசொற்கள் தோன்றுமென அறிக.

***பேதை:*** பிது - பெது - பெதும்பை. பெது - பேது - பேதை = மடமை மிக்க வன், மடமை மிக்க பெண் பேதை.

***பொறு:*** பொறுத்தல் = சுமத்தல்.

OE., OS., OHG., beran, ON. bera, Goth. bairan, E. bera, L. fer port, Gk. pher, Skt. bhar. பொறு - ப்ரு (வ.).

***மணி:*** மண்ணுதல் = கழுவுதல். மண் - மண்ணி - மணி = கழுவப்பெற்ற ஒளிக்கல்.

**“மண்ணி யறிப மணிநலம்”** **(நான்மணி. 5)**

மணி - மணி.

***மதி:*** முத்துதல் மெல்ல முட்டுதல். முட்டு - மட்டு = அளவு. முத்து - மத்து = அளவு. மத்து - மத்தி - மதி. மதித்தல் = அளவிடுதல். அளந்தறிதல். மதி = அளந்தறியும் அகக்கரணம், அளவிடப்படும் பொருள், பகுத்தறிவு, அறிவு. மதி - மதி, மிதி (வ.).

***மங்கலம்:*** மங்கு - மங்கல் - மஞ்சல் = மங்கலான (மஞ்சள்) நிறம், அந்நிறக் கிழங்கு, அக் கிழங்குப்பொடி அல்லது அரையல் அல்லது குழம்பு.

ஒ. நோ: பொங்கு - பொஞ்சு, இங்கே - இஞ்சே (கொச்சை).

மங்கல் - மங்கலம் = 1. மகளிர் மஞ்சள் தே-த்துக் குளிக்கும் அல்லது முகத்திற் பூசிக்கொள்ளும் கன்னி அல்லது கணவனொடு கூடிய நிலைமை.

2. மஞ்சளால் அல்லது மஞ்சள் நீராற் குறிக்கப் பெறும் நன்னிலைமை.

**"மங்கல மகளிரொடு மாலை சூட்டி."** **(புறம். 332)**

3. திருமணம். "மங்கல வாழ்த்துப் பாடல்" (சிலப்.)

4. திருமணத் தாலி.

**"மற்றைநல் லணிகள் காணுன் மங்கலங் காத்த மன்னோ"**

**(கம்பரா. உருக்காட்டு. 35)**

5. மங்கல நிகழ்ச்சி.

**"சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்."** **(தொல். 1037)**

6. மங்கலச் சின்னம். எண்மங்கலமும் மங்கலம் பதினாறும்.

7. மங்கல வழக்கு (நன். 267).

8. நன்மை. **"மங்கல மென்ப மனைமாட்சி"** **(குறள். 60)**

மங்கலம் - மங்களம். வடவர் காட்டும் மூலம். மங்க் = செல், இயங்கு. பகுத்தறிவுடையார் கண்டு தெளிக.

***மந்திரி:*** முன்னுதல் = கருதுதல், எண்ணுதல். முன் - மன். மன் = திரம் (திறம்) = மந்திரம் ஒ. நோ: மன்று - மந்து - மந்தை.

மந்திரம் = எண்ணத்தின் திண்மை, சூழ்வினை.

மந்திரம் - மந்திரி = மந்திரம் செ-பவன், அரசியல் வினைகளைச் சூழ்பவன்.

மந்திரம் - மந்த்ரம் (வ.). மந்திரி - மந்த்ரின் (வ.).

**"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப"** **(1336)**

என்று தொல்காப்பியம் கூறுவது மதவியல்பற்றிய மந்திரமேனும், சொல் வேறன்மை யறிக.

***மயிர்:*** மை = கருமை. மை - (ம-) - மயிர் = கரிய முடி. ஒ.நோ: ஐ - அயிர், பை - பயிர், உ- - உயிர், செ- - செயிர். செயிர்த்தல் = சிவத்தல், சினத்தல். மயிர் - மசிர் - ச்மச்ரு (வ.).

***மயில்:*** மை = கருமை, நீலம். மை + இல் - மயில் = நீலப் பீலிக்கண்களை யுடைய குறிஞ்சிநிலப் பறவை. இது குமரிநாட்டிலேயே குறிஞ்சிவாணரால் முருகனூர்தியாகக் கொள்ளப்பட்டுவிட்டது. மயில் - மயூர (வ.).

***மன்:*** முன்னுதல் = கருதுதல், எண்ணுதல், சூழ்தல். AS. munan = to think. முன் - மன்ப = பகுத்தறிவும் மதிநுட்பமுங் கொண்டு சிறப்பாகக் கருதி யறியும் மாந்தன். மன்பதை = மக்கட் கூட்டம்.

**"ஆறறி வதுவே யவற்றொடு மனனே"** **(தொல். 1526)**

**"மக்கள் தாமே யாறறி வுயிரே"** **(தொல். 153)**

மன் - மநு (வ.), OE. man, OS, OHG. man, E. man, Goth. manna.

***மனம்:*** முன்னுதல் கருதுதல். முன் - முன்னம் = மனம் (திவா.). முன்னம் - முனம் - மனம் - மனஸ் (வ.), L. mens, AS. munan - to think, OE., (ge) mynd, ME. mynd, E. mind.

***மாத்திரை:*** 406 ஆம் குறளுரையைப் பார்க்க.

***மாதர்:*** மா = அழகு. மா - மாது = அழகு, (அழகுள்ள) பெண், (பெரும் பாலும் பெண்மேற் கொள்ளும்) காதல். மாது - மாதர் = அழகு, பெண், காதல்.

மணந்த பெண்டிரெல்லாரும் பெரும்பாலும் பின்னர்த் தா-மாராதலாலும், பெண்தெ-வக் கருத்தில் தா-மைக் கருத்துங் கலந்திருப்பனாலும், மகள் என்னும் சொல் தாயையுங் குறித்தலாலும், மாதர் என்னும் சொல் ஆரிய மொழிகளில் தா -ப்பொருள் பெறலாயிற்று.

L. mater, Gk. mater, G. mutter, E. mother, வ. மாத்ரு.

***மாலை:*** முள் - முள்கு - முள்குதல் = முயங்குதல், கலத்தல். முள் - (மு-) - முய - முயங்கு - முயக்கு - முயக்கம். முயங்கு - மயங்கு - மயக்கு - மயக்கம். முய - மய. மயத்தல் = மயங்குதல், கலத்தல். மய - மயல் - மால் = மயக்கம், கலப்பு. மால் - மாலை = பூக்கள் கலந்த கோவை. பகலும் இரவுங் கலந்த வேளை, மாலை - மாலா (வ.).

***மானம்:*** மன் = பெருமை, பெரியோன், தலைவன், கணவன், அரசன். மன் - மான் - மானம் = பெருமை. மானம் - மான் (வ.).

***மீன்:*** மின் - மீன் - மின்னும் வெண்ணிற மீன், மின்னும் வெள்ளி அல்லது வான்சுடர்.

வெள்ளாட்டின் பெயர் அதன் இனமான காராட்டிற்கும் செவ்வாட்டிற்கும் பொதுப்பெயராக வழங்கினாற்போல, மின்னும் கெண்டைமீன் பெயர் அதன் இனமான பிறவகைகட்கும் வழங்கி வருகின்ற தென்க.

மீன் - மீனம் (பெருமீன்) - மீன (வ.).

***முகம்:*** முகு - முகிழ். முகிழ்தல் = தோன்றுதல்.

முகு - முகம். முகஞ்செ-தல் = தோன்றுதல்.

ஒரு பொருள் தோன்றும்போது அதன் முன்புறமே காண்பார்க்குத் தோன்றுமாதலால், தோற்றத்தைக் குறிக்கும் முகம் என்னுஞ் சொல் பொதுவாக முன்புறத்திற்கு அல்லது முன்னுறுப்பிற்குப் பெயராயிற்று. இயங்கு திணை யுயிரிகட்கெல்லாம் தனியடையாளமும் இனவகையுங் காட்டக்கூடியது தலையின் முன்புறமேயாதலால், அதனுக்கே முகம் என்னும் சொல் சிறப்பாகப் பெயராயிற்று.

முகம் - முக (வ. kh).

***முத்தம்:*** முட்டு - முத்து = முட்டைபோல் உருண்டு கிளிஞ்சிற்குள் சிறி தாக விளையும் ஒளிக்கல் வகை, உருண்டு திரண்ட சிறுவிதை.

முத்து - முத்தம் (பெருமுத்து) - முக்த (வ.).

வடவர் சிப்பியினின்று விடுதலை பெற்றதென்று பொருட்கரணியங் காட்டுவது பேதைகட்கே ஏற்கும்.

***யாமம்:*** இது முன்னரே கூறப்பட்டது. ஏமம் என்னும் சொல்லைப் பார்க்க.

***வஞ்சி:*** வங்குதல் = வளைதல். வங்கு - வஞ்சு - வஞ்சி. ஒ. நோ: அங்கு (வளை) - அஞ்சு, பொங்கு - பொஞ்சு.

ஒருவனை வஞ்சிப்பது அவன் தப்பமுடியாவாறு வட்டஞ்சுற்றி வளை வது போலிருத்தலால், வளைதற்கருத்தில் வஞ்சித்தற் கருத்துப் பிறந்தது. Cir- cumvent என்னும் ஆங்கிலச் சொல்லை நோக்குக.

வஞ்சி - வஞ்சம், வஞ்சகம், வஞ்சக (வ.), வஞ்சனம் - வஞ்சன (வ.).

***வட்டு:*** வள் - வட்டு = வட்டமான விளையாட்டு அல்லது சூதாட்டக்கருவி.

வட்டு - வட்டம் - வ்ருத்த(வ.).

***வண்ணம்:*** வள் - வளை. வளைத்தல் = வளைத்தெழுதுதல், எழுதுதல், வரைதல்.

**“உருவப் பல்பூ வொருகொடி வளைஇ”** **(நெடுநல். 113)**

வள் - வண் - வண்ணம் = 1. வளைத்தெழுதும் எழுத்து அல்லது ஓவியம். எழுத்திலும் ஓவியத்திலுமுள்ள கோடுகளெல்லாம் பெரும்பாலும் வளைந் திருப்பதையும், கோடு, வரி, வரை என்னுஞ் சொற்கள் வளைதற் கருத்தையே அடிப்படையாகக் கொண்டிருப்பதையும், நோக்குக.

2. எழுதும் மை அல்லது கலவைநீர்.
3. எழுதிய கலவைநீரின் நிறம்.
4. நிறவகை, வகை.
5. ஓவிய அழகு, அழகு.
6. செ-யுள் ஓசைவகை, சிறப்போசைச் செ-யுள், பாட்டு, மெட்டு, பண்.

வள் - (வர்) - வரி - வரணம் (வரி + அணம்) = நிறம், நிறம்பற்றிய குல வகை. வரிதல் = எழுதுதல். வரித்தல் = எழுதுதல். வண்ணம் - வண்ணி - வண்ணனை. வரணம் - வரணி - வரணனை. ஒ. நோ: திள் - திண் - திண்ணை. திள் - (திர்) - திரள் - திரளை - திரணை. திண்ணை திரணை என்பன போன்றே வண்ணம் வரணம் அல்லது வண்ணனை வரணனை என்பனவும், ஒரே வேரினவாயினும் வெவ்வே றடியினின்று கிளைத்திருத்தலை நோக்குக.

வரணம் - வர்ண (வ.), வரணி - வர்ண (வ.), வண்ணம் வண்ணி என்னும் முந்திய அடிச்சொற்கட்கு நேர்சொற்கள் வடமொழியிலின்மையும் கவனிக்கத் தக்கதே.

***வரன்:*** புரம் = உயர்ச்சி, உயரமான கட்டடம். கோபுரமுள்ள நகர். கோபுரம் = அரசனிருக்கும் உயரமான கட்டடம், உயரமான காவற் கூண்டு.

**"புரையுயர் பாகும்."** **(தொல். 785)**

புரம் - பரம் = மேலுலகம். பரம் - வரம் - வரன் = மேலான வீட்டுலகம்.

***வலம், வலி:*** வல், வலம், வலி. வலம் - பல (வ.), L. valere. வகரம் பகர மாகத் (b) திரிந்துள்ளது வடசொல்லின் பின்மையைக் காட்டும்.

***வாணிகம்:*** பண்ணுதல் = செ-தல், உண்டாகுதல், விளைவித்தல். பண் - பண்ணியம் = பல்வேறு விற்பனைப் பண்டம்.

பண்ணியம் - பண்ணியன் - பண்ணிகன் - பணிகன் - வணிகன் - வணி கம். வணிகன் - வாணிகன் - வாணிகம் - வாணிபம். வாணிகன் - வாணியன். வணிகன் - வணிகு. வணிகு - வணிஜ் (வ.), வணிகன் - வணிஜ (வ.).

***விக்குள்:*** விக்கு - விக்கல் - விக்குள் (ஒலிக்குறிப்புச்சொல்). விக்கல் - ஹிக்கா (வ.), E. hiccup. hiccough. இவ் வொலிக்குறிப்புச்சொல் குமரிநாட் டிலேயே தோன்றிவிட்டது. ஆதலால் அதன் திரிபே ஆங்கிலச் சொல்லும் வடசொல்லும்.

***வித்து:*** வித்து - விதை. விதை - வீஜ, பீஜ (வ.).

***வியம்:*** விள்ளுதல் = விரிதல். விள் - (வி-) - வியம் = விரிவு, வியம் - வியன் - வியல் = அகலம்.

**"வியலென் கிளவி யகலப் பொருட்டே."** **(தொல். 847)**

வியம் - வியத் (வ.).

***விழி:*** விழித்தல் = கண் திறத்தல், பார்த்தல், அறிதல். விழி = கண், பார்வை, அறிவு, ஓதி (ஞானம்). விழி.

L. vide, Gk. (W) oida, Skt. vid, OE.,OS., witan, OHG. wizzan, ON. vita, Goth. witan.

வெஃகு: விள் - விர் (விரு) - விரும்பு. விள் - வெள் - வெண்டு - வேண்டு. வெள் - வேள் - வேண் = விருப்பம். வேண்டுதல் = விரும்புதல், விரும்பியிரத்தல். வெள் - வெள்கு - வெஃகு, வெஃகுதல் = விரும்புதல், பேராசைகொள்ளுதல், பிறர் பொருளை விரும்புதல். வெஃகு - க. பேக்கு = வேண்டு E. beg.

பேக்கு - பிக்ஷ (வ.).

**வேலை:** வேல் - வேலி = வேலமுட் கிளையால் அமைத்த வளைசல், சுற்றெல்லை, எல்லை. வேல் - வேலை = எல்லை, காலவெல்லை, பொழுது. வேலை - வேளை - நேரம், அமையம், பொழுது. வேலை - வேலா(வ.).

இவற்றின் விளக்கத்தையெல்லாம் என் வடமொழி வரலாறு என்னும் நூலுட் காண்க.

இன்னும் இவைபோன்ற சொற்கள் பல உள. விரிவஞ்சி அவை இங்குக் கூறப்பட்டில.

## 5. திருக்குறட் சிறப்புச் சொற்கள்

அதி (நுட்பம்), அளறு (நரகம்), அறன்கடை, கஃசு, குறியெதிர்ப்பை, கோட்டிகொளல், சோகா, தீயுழி, தோல், நெடுநீர், வரன்.

தோல் என்பது தொல்காப்பியச் சொல்லா வேறா என்னும் ஐயுறவிற்கிடமானதாம். அளறு பொருள்பற்றியும் வரன் என்பது வடிவுபற்றியும் சிறப்பாம். கோட்டிகொளல், சோகா என்பன துணைவினைபற்றியே சிறப்பாம்.

## 6. திருவள்ளுவர் பெயரிலுள்ள தனிப்பாடல்கள் (தனிப்பாடற்றிரட்டு - முதற்பாகம்)

1. எவ்வுயிருங் காக்கவோ ரீசனுண்டோ இல்லையோ
அவ்வுயிரில் யானொருவ னல்லனோ – வவ்வி
அருகுவது கொண்டிங் கலைவதே னன்னே
வருகுவது தானே வரும்.

2. பூவி லயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி யளந்தோனுந் தாமிருக்க – நாவில்
இழைநக்கி நூனெருடு மேழை யறிவேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து.

3. ஐயரென் றுரைத்தீர் நாயேற் கடுக்குமோ வருளி லேனை
பொ–யொடு கனவு மற்றுப் புலன்களை யொடுக்கிக் கொண்டு
உ–யவே புலன்க ளைந்து முயர்பர வெளியுள் ளாக்கி
வெ–யவன் மதியம் போல விரவுவ ரைய ராவர்.

4. ஞானவா னென்று சொன்னீர் நாதவிந் துவுங்க டந்து
கானலை வரையுஞ் சுட்டுக் கடுவெளி பரமா நந்தந்
தானெனு மவையி ரண்டுந் தவிர்ந்துதன் வசமுங் கெட்டு
மோனமுங் கடந்தே யப்பான் முடிந்தவர் ஞானி யாவர்.

5. சாதியிலே தொண்ணூற்றொன் பானாஞ் சாதி
சமயத்திற் பதின்மூன்றாஞ் சமய மாகும்
நீதியிலே சிவனுடைய நீதி யாகும்
நிலைமையிலே வேதாந்த நிலைமை யாகும்
ஆதியிலே யெங்களூர் கருவூ ராகும்
அந்தத்திற் போயடைவோம் பேரூர் தன்னில்
சோதியிலே பரஞ்சோதிக் கூட்ட மாகும்
சொல்லுதற்கு மெங்குலஞ்சுக் கிலம தாமே.

6. எந்தவூ ரென்றீ ரிருந்தவூர் நீர்கேளீர்
அந்தவூர்ச் செ–தி யறியீரோ – அந்தவூர்
முப்பாழும் பாழா– முடிவிலொரு சூனியமா–
அப்பாலும் பாழென் றறி.

7. நில்லுநில் லென்று சொன்னீர் நேசபா சங்க ளைந்தும்
புல்லறி வோடும் வாங்காப் புலைகொலை களவு மற்றுச்
சொல்லுதற் கரிய ஞானச் சுழிமுனை முடியின் மீதில்
எல்லையுங் கடந்தே யப்பா லேகமா னவர்க ணிற்பார்.

8. இருமிரு மென்று சொன்னீ ரேற்குமோ வேழை யேற்குத்
தருபொரு ளுணர்ந்து சைவ சமயமு மனைத்து நீங்கி
மருடரு வினையு நீங்கி மாசிலா வுண்மை ஞானம்
பொருந்தின ரிருப்பர் பின்பு பொறாதவ ரிறப்பர் தாமே.

9. போமெ‌ன வுரைத்தீ ரென்னைப் பொறியொடு புலன்க ளைந்தும்
ஆமெனு மவிச்சை யோடு மங்ஙனே மதித்துக் கொண்டே
ஏமமுஞ் சாம மற்றே யிரவொடு பகலு மற்றுச்
சோமனார் பதியை விட்டுத் துறந்தவர் போவ ரன்றே.

10. அடிசிற் கினியாளே யன்புடை யாளே
படிசொற் கடவாத பாவா– – அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழூஉம் பேதையே போதியோ
என்றூங்கு மென்க ணிரா.

11. குறுமுனிவன் முத்தமிழு மென்குறளு நங்கை
சிறுமுனிவன் வா–மொழியின் சே–.

இவற்றுள், 'அடிசிற் கினியாளே' என்பது திருவள்ளுவரே பாடியதாக இருக்கலாம்.

## 7. திருவள்ளுவரையும் திருக்குறளையும்பற்றிய சிறப்புப்பாக்கள்

"குறுமுனிவன் கோத்தெடுத்த கொற்சேரி யூசி
உறுவிலைக்கு விற்றதனோ டொக்கும் – தெறுகலியைச்
செற்றவேன் மாற திருவள் ளுவர்வா–ச்
சொற்றகுமுப் பால்வாழ்த்துச் சொல்." (பெருந்தொகை, 1998)

"முப்பாலு முண்டோ முலைப்பா லினிநுகரோம்
அப்பாலுக் கப்பாலு மாயிருக்கும் – எப்பொருளும்
உள்ள படியுணர்ந்தோ மோதிக் குறைதீர்ந்தோம்
வள்ளுவனார் வைப்பெமக்கு வைத்து." (மேற்படி 1999)

"எப்பாலு மேத்துவா மின்பம் பொருளறமா
முப்பாலு மாயிரத்து முந்நூற்று முப்பதா
ஓரடி முக்கா லுரைத்திரு வள்ளுவனார்
ஈரடி முக்காலு மே." (மேற்படி 2000)

"அவனே புலவ னவனே யறிஞன்
அவனே தமிழை யறிந்தோன் – சிவனறிய
வள்ளுவ தேவன் வசனத்தை மெ–யாக
வுள்ளுவ தேவ னுளன்." (மேற்படி 2001)

"வாழிமழை யானினங்கள் வாழிமறை யாகமங்கள்
வாழிமனு நீதிமன்னர் மன்பதைகள் – வாழியரோ
வுள்ளுகுறட் செந்தேன் செவிகுளிரப் பெ–தமுகில்
வள்ளுவர் பாத மலர்." (மேற்படி 2002)

"மாயோன் வடிவம் போல வேள்வியின்
முன்னொரு குறளுரு வாகிப் பின்னது
மூவடி முறைமையிற் செல்லாது தாந்தம்
ஈரடி யியக்க நிரம்பா வளவையின்
உலக மூன்று மளந்தன
புலவன் வள்ளுவன் குறள்வெண் பாட்டே" (மேற்படி 3003)

"வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செ—தவுரை – ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்." (உமாபதி சிவாசாரியார்)

"நிழலருமை வெ—யிலிலே நின்றறிமின் ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின் – பழகுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டிற் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போ—." (ஔவையார்)

## 8. திருவள்ளுவ மாலை

இப் பாடற்றிரட்டு, கடைக்கழகப் புலவராற் பாடப்பட்டதன்று. பிற்காலத்து ஆரியச் சார்பான ஒருவரோ ஒருசிலரோ அவர் பெயரிற் பாடிவைத்ததாகும். இதற்குச் சான்றுகள்:

1. உடம்பிலி (அசரீரி) யுரையும் நாமகள் கூற்றும் இறைவன் பாராட்டும் என்று முப்பாக்கள் கலந்திருத்தல்.
2. இறையனா ரகப்பொருளுரைக் கட்டுக் கதையிற் கூறப்பட்டுள்ள உருத் திரன்சன்மன் என்னும் மூவாட்டை மூங்கைப் பிராமணச் சிறுவன், திருவள்ளுவரோடு ஒக்க விருக்கவென்று வானுரை யெழுந்ததாகக் கூறப்பட்டிருத்தல்.
3. இத் திருவள்ளுவமாலைப் பாடகராகக் குறிக்கப்பட்டவருட் பலர் திருவள்ளுவர் காலத்தவ ரல்லாதவராக இருத்தல்.
4. திருக்குறள் ஆரிய வேதவழிப் பட்டதாகப் பல பாட்டுகள் கூறுதல்.
5. பாக்களின் நடை பெரும்பாலும் பிற்காலத்ததாக விருத்தல்.
6. உருத்திரசன்மன் என்னும் இயற்பெயர் உயர்வுப்பன்மை வடிவிற் குறிக்கப்பட்டிருத்தல்.
7. நல்கூர்வேள்வியார் பெயரிலுள்ள பாவில் மாதாநுபங்கி என்னும் ஒரு பொருளற்ற வடசொல் ஆளப்பட்டிருத்தல்.
8. சில பாக்களில் திருவள்ளுவர் கருத்திற்கு மாறாகப் பிராமணரை அந்தண ரென்று குறித்திருத்தல்.

## உடம்பிலி (அசரீரி)

1. திருத்தகு தெ–வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க – விருக்க
வுருத்திர சன்ம ரெனவுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோர் சொல்.

**(பொழிப்புரை)** உருத்திரசன்மன் கழகப் பலகையிடத்துத் திருவள்ளு வருடன் ஒக்கவிருக்கவென்று வானில் ஓர் உரை யெழுந்தது.

## நாமகள்

2. நாடா முதனான் மறைநான் முகனாவிற்
பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன் – கூடாரை
யெள்ளிய வென்றி யிலங்கிலைவேன் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு.

(பொ–ரை..) பாண்டிய வேந்தே! நான் படைப்புக் காலத்தில் நான்முகன் நாவிலிருந்து நான்மறை பாடினேன்; இடைக்காலத்திற் பாரதம் பாடினேன்; இன்று வள்ளுவன் வாயது என் பாட்டு.

## இறையனார்

3. என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினு
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதா–க் – குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெ–வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன்வா–ச் சொல்.

(பொ–ரை.) திருவள்ளுவரின் திருக்குறள் நெடுங்காலஞ் செல்லினும் தேன்சொரியுந் தன்மையதான விண்ணக மலர்போலும்.

## உக்கிரப்பெருவழுதியார்

4. நான்மறையின் மெ–ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
றான்மறைந்து வள்ளுவனா–த் தந்துரைத்த – நூன்முறையை
வந்திக்க சென்னிவா– வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி.

(பொ–ரை.) நான்முகன் வள்ளுவனாகத் தோன்றிக் கூறிய முப்பால் நூலை, என் தலை வணங்குக; வா – வழுத்துக; மனம் ஊழ்குக (தியானிக்க); செவி கேட்க.

## கபிலர்

**5. தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட**
**பனையளவு காட்டும் படித்தால் – மனையளகு**
**வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்**
**வெள்ளைக் குறட்பா விரி.**

(பொ–ரை.) வீட்டுப் பறவைகள் வள்ளைப்பாட்டிற் குறங்கும் வளநாட் டரசே! திருவள்ளுவர் திருக்குறளின் சொற்சுருக்கப் பொருட்பெருக்கம், புல் நுனிப் பனித்துளி பனை வடிவைத் தன்னுள்ளடக்கிக் காட்டினாற் போலும்.

## பரணர்

**6. மாலுங் குறளா– வளர்ந்திரண்டு மாணடியான்**
**ஞால முழுது நயந்தளந்தான் – வாலறிவின்**
**வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தா**
**ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து.**

(பொ–ரை.) திருமால் குறளா–த் தோன்றித் தன் இருபேரடியால் உலகனைத்தையும் அளந்தான்; ஆனால், திருவள்ளுவர் தம் குறளின் இரு சிற்றடியால் மாந்தர் கருத்தனைத்தையும் அளந்தார்.

## நக்கீரர்

**7. தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா**
**லானா வறமுதலா வந்நான்கு – மேனோருக்**
**கூழி னுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்**
**வாழியுல கென்னாற்று மற்று.**

(பொ–ரை.) தாமே எல்லாவற்றையும் அறிந்து, நாற்பொருளையுங் குறள் வெண்பாவால் எல்லார்க்கும் எளிதாயறிவித்த திருவள்ளுவர்க்கும் மழை பொழியும் முகிலுக்கும் உலகம் என்ன கைம்மாறு செ–யவல்லதாம்?

## மாமூலனார்

**8. அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்**
**றிறந்தெரிந்து செப்பிய தேவை – மறந்தேயும்**
**வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வா–ச்சொற்**
**கொள்ளா ரறிவுடை யார்.**

(பொ-ரை.) அறமுதலிய நான்கையும் உள்ளவா றுலகிற் குணர்த்திய தெ-வப் புலவரை, மறந்தேனும் மாந்தனாகக் கொள்ளும் அறிவிலியின் கூற்றை அறிவுடையோர் கொள்ளார்.

### கல்லாடர்

**9. ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி**
**னன்றென்ப வாறு சமயத்தார் – நன்றென**
**வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்**
**முப்பான் மொழிந்த மொழி.**

(பொ-ரை.) அறுவகை மதத்தாரும், ஒரு பொருளின் இயல்பை இன்ன தென்று ஒரு மதத்தார் கூறின், அதை மறுத்து வேறாகக் காட்டுவர் ஏனை மதத்தாரெல்லாரும், ஆனால், திருவள்ளுவர் தம் முப்பாலிற் சொன்னவற்றையோ உண்மையென்று எல்லாரும் ஒத்துக்கொள்வர்.

### சீத்தலைச் சாத்தனார்

**10. மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு**
**மும்முரசு முத்தமிழு முக்கொடியு – மும்மாவுந்**
**தாமுடைய மன்னர் தடமுடிமேற் றாரன்றோ**
**பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.**

(பொ-ரை.) திருவள்ளுவரின் முப்பால் மலை, நாடு, ஆறு, நகர், முரசு, கொடி, குதிரை, தமிழ் ஆகியவற்றை மும்மூன்றாகக் கொண்ட மூவேந்தரின் முடிமாலை போல்வதாம்.

### மருத்துவன் தாமோதரனார்

**11. சீந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளா–**
**மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில் – காந்தி**
**மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாற்**
**றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.**

(பொ-ரை.) மலையைப் பகையென்று குத்தும் யானை போலும் அரசே! சீந்திற் சருக்கரையும் சுக்குப்பொடியும் தேனுங் கலந்து மோந்தால், யாருக்குந் தலைவலி நீங்கிவிடும். திருவள்ளுவர் திருக்குறளைப் பார்த்தபின் சீத்தலைச் சாத்தனார்க்குப் பிறர் பாடல்களால் ஏற்பட்ட தலைவலி நீங்கிற்று.

## நாகன்தேவனார்

**12.** தாளார் மலர்ப்பொ—கை தாங்குடைவார் தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று – வாளாதா
மப்பா லொருபாவை யா—பவோ வள்ளுவனார்
முப்பால் மொழிமூழ்கு வார்.

(பொ—ரை.) தாமரைக் குளத்திற் குளிப்பார் பிற குளத்தை விரும்பார். அது போல், திருவள்ளுவரின் திருக்குறளைக் கற்றார் பிற நூல்களை விரும்பார்.

## அரிசில்கிழார்

**13.** பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச் – சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

(பொ—ரை.) விரிவுபட்டுக் கிடக்கும் வெவ்வேறு பொருள்களை யெல்லாம் ஒழுங்காகக் கூறுபடுத்திச் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தலில் வல்ல வர்வள்ளுவரன்றி வேறு யார்?

## பொன்முடியார்

**14.** கானின்ற தொங்கலா— காசிபனார் தந்ததுமுன்
கூநின் றளந்த குறளென்ப – நூன்முறையான்
வானின்று மண்ணின் றளந்ததே வள்ளுவனார்
தாநின் றளந்த குறள்.

(பொ—ரை.) மாலையணிந்த அரசே! முன்பு காசிபன் தந்த குறள் மண்ணில் நின்று உலகத்தை அளந்தது; இன்று திருவள்ளுவர் தந்த குறள் மண்ணிலும் விண்ணிலும் நின்று உலகத்தை யளந்தது.

## கோதமனார்

**15.** ஆற்ற லழியுமென் றந்தணர்க ணான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா – ரேட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று.

(பொ—ரை.) பிராமணர் நால்வேதங்களையும் ஏட்டில் எழுதினால் அவற்றின் வலிமை கெடுமென்று வா—ப்பாடமாகவே சொல்லிக் காத்துவருவர்; திருவள்ளுவரின் திருக்குறளையோ ஏட்டிலெழுதினாலும் எவர் படித்தாலும் அதன் வலிமை குறைதலில்லை.

பிராமணர் ஆரிய வேதங்களை ஏட்டிலெழுதா திருந்தமைக்குக் கரணியங்கள்:

1. ஏட்டிலெழுதினால் அவற்றின் வெள்ளைக் கோட்டியும் பிள்ளைக்கருத் தும் வெளியாகிவிடுமென்னும் அச்சம்.

2. ஏட்டிலெழுதினால் எல்லாருங் கற்றுப் பூசாரித்தொழிலை மேற் கொண்டு பிராமணர்க்குப் பிழைப்பில்லாது செ-துவிடுவரென்னும் அச்சம்.

3. ஏட்டிலெழுதாதிருந்தால் மேன்மேலுங் காலத்திற்கேற்ற திருந்திய கருத்துகளைச் சேர்த்துக்கொள்ளும் வா-ப்புண்மை.

## நத்தத்தனார்

**16.** **ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்**
**பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் – போயொருத்தர்**
**வா–க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ**
**ரா–க்கேட்க வீற்றிருக்க லாம்.**

(பொ–ரை.) ஒருவர் திருக்குறள் முழுவதையுங் கற்றபின், பிறருக்கு ஆசிரியராகிக் கற்பிக்கலாம். ஆனால், ஒருவரிடம் மாணவராயமர்ந்து கற்க நூலில்லை.

## முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்

**17.** **உள்ளுத லுள்ளி யுரைத்த லுரைத்ததனைத்**
**தெள்ளுத லன்றே செயற்பால – வள்ளுவனார்**
**முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வா**
**ரெப்பா வலரினு மில்.**

(பொ–ரை.) திருக்குறளினுஞ் சிறந்த நூல் ஒன்றுண்டென்று எப் புலவருஞ் சொல்லார். ஆதலால் நாம் செ–யவேண்டுவது அதை யுள்ளஞ் செறாது உரைத்துத் தெளிதலே.

## ஆசிரியர் நல்லந்துவனார்

**18.** **சாற்றிய பல்கலையுந் தப்பா வருமறையும்**
**போற்றி யுரைத்த பொருளெல்லாந் – தோற்றவே**
**முப்பான் மொழிந்த முதற்பா வலரொப்பா**
**ரெப்பா வலரினு மில்.**

(பொ-ரை.) எல்லாக் கலைநூற் பொருள்களையும் எடுத்துக்கூறும் திருக் குறளை யியற்றிய, திருவள்ளுவரையொத்த புலவர் ஒருவருமில்லை.

### கீரந்தையார்

**19.** **தப்பா முதற்பாவாற் றாமாண்ட பாடலினான்**
**முப்பாலி னாற்பான் மொழிந்தவ – ரெப்பாலும்**
**வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்**
**தெ–வத் திருவள் ளுவர்.**

(பொ-ரை.) பாண்டியன் மனமகிழ நாற்பொருளையும் முப்பாலிற் குறள் வெண்பாவாற் கூறியவர் தெ-வப் புலமைத் திருவள்ளுவரே.

### சிறுமேதாவியார்

**20.** **வீடொன்று பாயிர நான்கு விளங்கற**
**நாடிய முப்பத்து மூன்றொன்றூழ் – கூடுபொரு**
**ளெள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்**
**வள்ளுவர் சொன்ன வகை.**

(பொ-ரை.) திருக்குறள் அதிகாரத்தொகை: பாயிரம் நான்கு; அறத்துப் பால் முப்பத்து மூன்று; ஊழ் ஒன்று; பொருட்பால் எழுபது; இன்பத்துப்பால் இருபத்தைந்து.

### நல்கூர்வேள்வியார்

**21.** **உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தா**
**னுத்தர மாமதுரைக் கச்சென்ப – இப்பக்க**
**மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்**
**போதார் புனற்கூடற் கச்சு.**

(பொ-ரை.) வடமதுரைக்குக் கண்ணனை நிலைக்களமாகக் கூறுவர்; வைகை மதுரையான தென்மதுரைக்குத் திருவள்ளுவர் நிலைக்களமாவர்.

### தொடித்தலை விழுத்தண்டினார்

**22.** **அறநான் கறிபொரு ளேழொன்று காமத்**
**திறமூன் றெனப்பகுதி செ–த – பெறலரிய**
**நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்**
**போலு மொழிந்த பொருள்.**

(பொ-ரை.) அறத்தைப் பாயிரம், இல்லறம், துறவறம், ஊழ் என நான்காக வும்; பொருளை அரசு, அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, குடி என

ஏழாகவும்; இன்பத்தை ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று, இருபாற் கூற்று என மூன்றாகவும் வகுத்து, நாற்பொருளையுங் கூறிய திருவள்ளுவரே வேறு பொருளிருப்பினும் அதையறிவார் போலும்!

நாடு அரணுள் அடக்கப்பட்டது.

## வெள்ளிவீதியார்

**23\. செ–யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த**
**பொ–யா மொழிக்கும் பொருளொன்றே – செ–யா**
**வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை**
**யிதற்குரிய ரல்லாதா ரில்.**

(பொ–ரை.) ஒருவராலும் இயற்றப்படாத வேதமும் திருவள்ளுவர் இயற் றிய திருக்குறளும் கூறும் பொருள் ஒன்றே. இவற்றுள் முன்னது பிராமணர்க்கே யுரியது; பின்னதோ எல்லார்க்கும் பொதுவாம்.

***குறிப்பு:*** ஆரிய வேதத்தைச் செ–யாமொழி யென்றது ஒரு துணிச்சல் மிக்க ஏமாற்று. அதற்கும் திருக்குறட்கும் பொருள் ஒன்றேயென்றது நெஞ்சழுத்தம் மிக்க பொ–. இவற்றை நம்பிய புலவரோ தமிழகத்தைக் கெடுத்த தசைப்பிண்டங்கள். திருக்குறளைப் பொ–யாமொழி யென்றமையின், வேதம் பொ–மொழியென்பது எதிர்நிலை யளவையாற் பெறப்படும்.

## மாங்குடி மருதனார்

**24\. ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி**
**வேதப் பொருளா– மிகவிளங்கித் – தீதற்றோ**
**ருள்ளுதோ றுள்ளுதோ றுள்ள முருக்குமே**
**வள்ளுவர் வா–மொழி மாண்பு.**

(பொ–ரை.) திருவள்ளுவரின் திருவா–மொழி, படிப்பதற்கெளிதாயும் பொருளுணர்தற் கரிதாயுமுள்ள மந்திரநூலாக விளங்கி, தூயவறிஞர் நினைக் குந்தோறும் அவருள்ளத்தை யுருக்கும்.

## எறிச்சலூர் மலாடனார்

**25\. பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே**
**தூய துறவறமொன் றூழாக – வாய**
**வறத்துப்பா னால்வகையா வா–ந்துரைத்தார் நூலின்**
**றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.**

(பொ-ரை.) திருவள்ளுவர் நன்றாக ஆ-ந்து பாயிரம் நான்கதிகாரமும் இல்லறவியல் இருபததிகாரமும் துறவறவியல் பதின்மூன்றதிகாரமும் ஊழ் ஓரதிகாரமுமாக, அறத்துப்பாலை நால்வகையாக வகுத்துரைத்தார்.

## போக்கியார்

**26.** **அரசிய லையைந் தமைச்சிய லீரைந்**
**துருவல் லரணிரண்டொன் றொண்கூ – ழிருவியல்**
**திண்படை நட்புப் பதினேழ் குடிபதிமூன்**
**றெண்பொரு ளேழா மிவை.**

(பொ-ரை.) திருக்குறளின் பொருட்பால், அரசியல் இருபத்தைந்ததிகார மும், அமைச்சியல் பத்ததிகாரமும், அரணியல் ஈரதிகாரமும், பொருளியல் ஓரதிகாரமும், படையியல் ஈரதிகாரமும், நட்பியல் பதினேழதிகாரமும், குடி யியல் பதின்மூன்றதிகாரமுமாக எழுபகுதிகளை யுடையதாம்.

## மோசிகீரனார்

**27.** **ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லடுத்தன்பு**
**பூண்பா லிருபாலோ ராறாக – மாண்பாய**
**காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்**
**நாமத்தின் வள்ளுவனார் நன்கு.**

(பொ-ரை.) திருவள்ளுவர் ஆண்பாற் கூற்று ஏழதிகாரமும் பெண்பாற் கூற்றுப் பன்னீரதிகாரமும் இருபாற் கூற்று ஆறதிகாரமுமாக, இன்பத்துப்பாலை மூன்றாக வகுத்துரைத்தார்.

## காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்

**28.** **ஐயாறு நூறு மதிகார மூன்றுமா**
**மெ–யாய வேதப் பொருள்விளங்கப் – பொ–யாது**
**தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனாகி**
**யந்தா மரைமே லயன்.**

(பொ-ரை.) நான்முகன் திருவள்ளுவனாகி வடமொழி வேதப் பொருளைத் தமிழில் 133 அதிகாரமாக விளக்கிக் கூறினான்.

## மதுரைத் தமிழ்நாகனார்

**29.** **எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பா**
**லில்லாத வெப்பொருளு மில்லையாற் – சொல்லாற்**
**பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்**
**சுரந்தபா வையத் துணை.**

(பொ-ரை.) எல்லாப் பொருளும் இதன்கண் உள. இதில் இல்லாத பொருள் ஒன்றுமில்லை. ஆதலால், உலகத்தார்க்கு இவ் வொருநூலே போதுமானதாம்.

## பாரதம் பாடிய பெருந்தேவனார்

**30.** **எப்பொருளும் யாரு மியல்பி னறிவுறச்**
**செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரு – முப்பாற்குப்**
**பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை**
**நேர்வனமற் றில்லை நிகர்.**

(பொ-ரை.) எல்லாப் பொருளையும் எல்லாரும் உள்ளவாறறியுமாறு திருவள்ளுவர் இயற்றிய திருக்குறட்குப் பாரதம், இராமாயணம், மனுதரும சாத்திரம், நால்வேதம் ஆகிய நான்கே ஒப்பாம்.

## உருத்திரசன்ம கண்ணர்

**31.** **மணற்கிளைக்க நீரூறு மைந்தர்கள் வா–வைத்**
**துணச்சுரக்குந் தா–முலை யொண்பால் – பிணக்கிலா**
**வா–மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்**
**கா–தொறு மூறு மறிவு.**

(பொ-ரை.) நீர்நிலை யடுத்த மணலைத் தோண்டுந்தோறும் நீரூறும். குழந்தை வா-வைத் துறிஞ்சுந்தோறும் தா-முலை சுரக்கும். அவைபோல், திருக்குறளை ஆராயுந்தோறும் அறிவு பெருகும்.

## பெருஞ்சித்திரனார்

**32.** **ஏதமில் வள்ளுவ ரின்குறள்வெண் பாவினா**
**லோதிய வொண்பொரு ளெல்லா – முரைத்ததனாற்**
**றாதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த**
**வேதமே மேதக் கன.**

(பொ-ரை.) மாலையணிந்த பாண்டிய வேந்தே! திருவள்ளுவர் வேதங்களின் சிறந்த பொருளையெல்லாம் குறள்வெண்பாவாற் கூறிவிட்டமையால், இவற்றுள் எவை மேம்பட்டவை?

## நரிவெரூஉத் தலையார்

**33.** **இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு**
**முன்பறியச் சொன்ன முதுமொழிநூன் – மன்பதைகட்**
**குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங்**
**கொள்ள மொழிந்தார் குறள்.**

(பொ-ரை.) நாற்பொருளையும் மக்கட்கு அறிவிக்கும்படி இயற்றப் பட்ட நால்வேதங்கள் அவரால் உணர்தற்கு அரியதாயிருந்ததனால், அவற்றை யெளிதாயுணருமாறு திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.

## மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார்

**34.** **புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்**
**சிலவர் புலவரெனச் செப்பல் – நிலவு**
**பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றுங்**
**கறங்கிருண்மா லைக்கும் பெயர்.**

(பொ-ரை.) திருவள்ளுவரையும் பிற புலவரையும் புலவரென்று சமமாகச் சொல்லுதல், முழுமதி மாலையையும் காருவா அமாவாசை மாலையையும் மாலையென்றே ஒரே சொல்லாற் குறிப்பது போலும்.

## மதுரை யறுவைவாணிகன் இளவேட்டனார்

**35.** **இன்பமுந் துன்பமு மென்னு மிவையிரண்டு**
**மன்பதைக் கெல்லா மனமகிழ – வன்பொழியா**
**துள்ளி யுணர வுரைத்தாரே யோதுசீர்**
**வள்ளுவர் வாயுறை வாழ்த்து.**

(பொ-ரை.) மக்களெல்லாரும் தமக்கு வரும் இன்ப துன்பக் கரணியங் களை யறிந்து துன்பத்தினின்று தப்பி யின்புறும்பொருட்டு, திருவள்ளுவர் திருக்குறளை வாயுறை வாழ்த்தாகப் பாடினார்.

வாயுறை வாழ்த்தாவது, முன்பு வெறுப்பை விளைப்பினும் பின்பு நலம் பயக்கும் நன்மருந்துபோற் பயன்படும் அறிவுரை வாயுறுத்தும் மருந்து.

## கவிசாகரப் பெருந்தேவனார்

**36.** **பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனத**
**மாவிற் கருமுனியா யானைக் – கமரரும்பல்**
**தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே**
**பாவிற்கு வள்ளுவர்வெண் பா.**

(பொ-ரை.) பூவிற்குத் தாமரையும், பொன்னிற்கு நாவற்சாறமும், ஆவிற்குக் காமதேனுவும் யானைக்கு ஐராவதமும். தேவிற்குத் திருமாலும், நூலிற்குத் திருக்குறளும் சிறந்தனவாம்.

## மதுரைப் பெருமருதனார்

**37.** அறமுப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
திறமிருபத் தைந்தாற் றெளிய – முறைமையால்
வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனா
ரோதவழுக் கற்ற துலகு.

(பொ-ரை.) திருவள்ளுவர், அறத்தை முப்பத்தெட் டதிகாரங்களாகவும் பொருளை எழுப ததிகாரங்களாகவும் இன்பத்தை இருபத்தைந் ததிகாரங் களாகவும் வகுத்து, வேதப் பொருளைக் குறள்வெண்பாவாற் கோவை படக் கூறியதால், உலகம் தீயொழுக்கத்தினின்றும் தீர்ந்தது.

## கோவூர்கிழார்

**38.** அறமுத னான்கு மகலிடத்தோ ரெல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளியக் – குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பான்முறைநே ரொவ்வாதே
முன்னை முதுவோர் மொழி.

(பொ-ரை.) நாற்பொருளையும் மக்கள் ஆ-ந்து தெளிதற்பொருட்டுத் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறட்கு முந்துநூல் ஒன்றும் நிகராது.

## உறையூர் முதுகூற்றனார்

**39.** தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண்
பாவிற் சிறந்திடுமுப் பால்பகரார் – நாவிற்
குயலில்லை சொற்சுவை யோர்வில்லை மற்றுஞ்
செயலில்லை யென்னுந் திரு.

(பொ-ரை.) தெ-வப் புலமைத் திருவள்ளுவரின் திருக்குறளை ஓதாதவரின் நாவிற்கு இன்சொற் சொலவில்லை; மனத்திற்குச் சொற்சுவை யுணர்ச்சி யில்லை; உடம்பிற்கு நல்வினையில்லை என்று கருதித் திருமகள் அவரிடஞ் சேராள்.

## இழிகட் பெருங்கண்ணனார்

**40.** இம்மை மறுமை யிரண்டு மெழுமைக்குஞ்
செம்மை நெறியிற் றெளிவுபெற – மும்மையின்
வீடவற்றி னான்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடின ரின்குறள் வெண்பா.

(பொ-ரை.) இம்மை மறுமைக்கும் எழுபிறப்பிற்கும் பயன்படவும் நாற் பொருளும் நடைபெறவும், திருவள்ளுவர் திருக்குற ளியற்றினர்.

## செயிர்க்காவிரியார் மகனார் சாத்தனார்

**41.** ஆவனவு மாகா தனவு மறிவுடையார்
யாவரும் வல்லா ரெடுத்தியம்பத் – தேவர்
திருவள் ளுவர்தாமுஞ் செப்பியவே செ—வார்
பொருவி லொழுக்கம்பூண் டார்.

(பொ-ரை.) மக்களுக்கு வேண்டியவற்றையும் வேண்டாத வற்றையும் அறிஞரும் எடுத்துச்சொல்லுமாறு, திருவள்ளுவர் இயற்றிய திருக்குறட் கூற்று களையே, ஒழுக்கத்தில் உயர்ந்தோர் கடைப்பிடிப்பர்.

## செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார்

**42.** வேதப் பொருளை விரகால் விரித்துலகோ
ரோதத் தமிழா லுரைசெ—தா – ராதலா
லுள்ளுந ருள்ளும் பொருளெல்லா முண்டென்ப
வள்ளுவர் வா—மொழி மாட்டு.

(பொ-ரை.) திருவள்ளுவர் ஆரிய வேதப்பொருளைத் தமிழுலகம் அறிதற்பொருட்டுத் தமிழில் விரித்துரைத்தார். ஆதலால், திருக்குறளில் மக்கள் கருதும் பொருள்களெல்லாம் உள்ளன.

## வண்ணக்கஞ் சாத்தனார்

**43.** ஆரியமுஞ் செந்தமிழு மாரா—ந் திதனினிது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதா – லாரியம்
வேத முடைத்து தமிழ்திரு வள்ளுவனா
ரோது குறட்பா வுடைத்து.

(பொ-ரை.) வடமொழியையும் தென்மொழியையும் ஒப்புநோக்கி இது சிறந்தது என்று ஒன்றைச் சொல்ல முடியாது. வடமொழியில் வேதமுள்ளது; தென்மொழியில் திருக்குறள் உள்ளது. ஆதலால், இரண்டும் சமமே.

## களத்தூர்கிழார்

**44.** ஒருவ ரிருகுறளே முப்பாலி னோதுந்
தரும முதனான்குஞ் சாலு – மருமறைக
ளைந்துஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள்.

(பொ-ரை.) இருக்குமுதல் பாரதம் ஈறான வேதங்கள் ஐந்தும், வேத வழிப்பட்ட சாத்திரங்கள் ஆறும், திருவள்ளுவர் நூலி லடங்கும்; ஆதலால் ஒருவர் உ-வதற்கு, ஓரெதுகையும் ஈரெதுகையுமாகிய இருவகைக் குறளாலு மமைந்த முப்பாலிற் சொல்லப்பட்ட நாற்பொருளையும் அறிந்தாற் போதும்.

### நச்சுமனார்

**45.** **எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு**
**வழுக்கில் வனப்பணி வண்ண – மிழுக்கின்றி**
**யென்றெவர் செ–தன வெல்லா மியம்பின**
**வின்றிவ ரின்குறள்வெண் பா.**

(பொ-ரை.) எழுத்து முதல் வண்ணம் ஈறாகச் சொல்லப்பட்ட எல்லாம் அழகாக எவ்வெக் காலத்தில் எவ்வெவராற் சொல்லப்பட்டனவோ, அவை யெல்லாம் இக்காலத்து இத் திருவள்ளுவரால் இயற்றப்பட்ட இனிய குறள் வெண்பாக்களிற் சொல்லப்பட்டுள்ளன.

### அக்காரக்கனி நச்சுமனார்

**46.** **கலைநிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணி**
**னிலைநிரம்பு நீர்மைத் தெளினுந் – தொலைவிலா**
**வானூர் மதியந் தனக்குண்டோ வள்ளுவர்முப்**
**பானூ னயத்தின் பயன்.**

(பொ-ரை.) முழுமதியும் முப்பால் நூலும் முறையே பதினாறு கலை களாலும் அறுபத்துநான்கு கலைகளாலும் நிறைந்து காண்பதற்கும் ஆரா-தற்கும் இனிதாகி, புறக்கண்ணிற்குத் தண்மையும் அகக்கண்ணிற்குப் பண்பும் உடைத்தாயினும், முப்பால் நூலால் விளையும் பயன் மதியினிடத் துண்டோ?

### நப்பாலத்தனார்

**47.** **அறந்தகளி யான்ற பொருடிரி யின்பு**
**சிறந்தநெ– செஞ்சொற்றீத் தண்டு – குறும்பாவா**
**வள்ளுவனா ரேற்றினார் வையத்து வாழ்வார்க**
**ளுள்ளிரு ணீக்கும் விளக்கு.**

(பொ-ரை.) திருவள்ளுவர் அறத்தை அகலாகவும், பொருளைத் திரியாகவும், இன்பத்தை நெ-யாகவும், சொல்லை நெருப்பாகவும், குறட்பாவைத் தண்டாகவும் கொண்டு, உலகத்தோரின் அகவிருளை நீக்கும் விளக் கேற்றினார்.

## குலபதி நாயனார்

48. உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரியவிரு டள்ளுதலால் – வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரு மொக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கண்டு.

(பொ–ரை.) நெஞ்சத் தாமரையை விரியச்செ–து அகவிருளை நீக்குந் திருக்குறளும், நீர்த்தாமரையை விரியச் செ–து புறவிருளை நீக்கும் கதிரவ னும், குணத்தால் ஒக்குமென்று கொள்ளத்தகும்.

## தேனீக்குடிக் கீரனார்

49. பொ–ப்பால பொ–யேயா–ப் போயினபொ– யல்லாத
மெ–ப்பால மெ–யா– விளங்கினவே – முப்பாலில்
தெ–வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.

(பொ–ரை.) தெ–வப் புலமைத் திருவள்ளுவனாரின் திருக்குறளைக் கற்று அல்லது கேட்டு அறிந்ததனால், மக்கள் மனத்தில் மெ–த்தன்மையான வெல் லாம் மெ–யாகவும் பொ–த்தன்மையான வெல்லாம் பொ–யாகவும் விளங்கி விட்டன.

## கொடிஞாழன் மாணிபூதனார்

50. அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம் – மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற்
கேளா தெனவெல்லாங் கேட்டு.

(பொ–ரை.) பகைவென்ற பாண்டிய! திருவள்ளுவர் வாயினின்று, இதற்கு முன் கேட்டிராதவை யெல்லாம் கேட்டு நாற்பொருளின் இயல்பையும் நன்றா – அறிந்தேம்.

## கவுணியனார்

51. சிந்தைக் கினிய செவிக்கினிய வா–க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து – முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய வின்குறள்வெண் பா.

(பொ-ரை.) நம் நல்லொழுக்க வழியை அறிதற்பொருட்டுப் புலமை மிக்க திருவள்ளுவர் இயற்றிய இனிய குறள்வெண்பாக்கள் ஆரா-ந்தால் மனத்திற்கும் கேட்டாற் செவிக்கும் ஓதினால் நாவிற்கும் இன்பந்தருவன; தொன்று தொட்டு வரும் இருவினைகளாகிய நோ-கட்குச் சிறந்த மருந்தாவன.

## மதுரைப் பாலாசிரியனார்

**52.** **வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள்**
**பொள்ளென நீக்கும் புறவிருளைத் – தெள்ளிய**
**வள்ளுவ ரின்குறள் வெண்பா வகிலத்தோ**
**ருள்ளிரு ணீக்கு மொளி.**

(பொ-ரை.) வெள்ளி வியாழன் கதிரவன் திங்கள் என்பன புறவிருளை நீக்கும் ஒளிகளாம். அவைபோலத் திருவள்ளுவரின் இனிய குறள்வெண்பா அகவிருள் நீக்கும் ஒளியாம்.

## ஆலங்குடி வங்கனார்

**53.** **வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வா–மடுக்குந்**
**தெள்ளமுதின் றீஞ்சுவையு மொவ்வாதால் – தெள்ளமுதம்**
**உண்டறிவார் தேவ ருலகடைய வுண்ணுமால்**
**வண்டமிழின் முப்பால் மகிழ்ந்து.**

(பொ-ரை.) திருவள்ளுவர் பாட்டின் தீஞ்சுவைக்குத் தெள்ளமுதமும் ஒவ் வாது. தெள்ளமுதைத் தேவர்மட்டும் உண்டு சுவைப்பர். முப்பாலமுதையோ உலகத்தா ரனைவரும் உண்டு சுவைப்பர்.

## இடைக்காடர்

**54.** **கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறித்த குறள்.**

(பொ-ரை.) திருக்குறளின் சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் நோக் கின், ஒவ்வொரு குறளும், கடுகின் நடுவில் துளைசெ-து அதில் எழுகடல் நீரையும் பா-ச்சி, மேலும் அது அளவிற் குறுகும் வண்ணம் சற்றுத் தறித்து வைத்தாற் போன்றதாம்.

## ஔவையார்

**55.** **அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறித்த குறள்.**

(பொ-ரை.) திருக்குறளின் சொற்சுருக்கத்தையும் பொருட் பெருக்கத்தை யும் நோக்கின், ஒவ்வொரு குறளும், கடுகினும் மிக நுண்ணிய அணுவைத் துளையிட்டு அதில் எழுகடல் நீரையும் பா-ச்சி, மேலும் அளவிற் குறுகும் வண்ணம் சற்றுத் தறித்து வைத்தாற் போன்றதாம்.

### *குறிப்புகள்*

1. இத்திருவள்ளுவ மாலை கடைக்கழகப் புலவராற் பாடப்பட்டதன் றாயினும். பல பாக்களிலுள்ள கருத்துகள் சிறந்தனவும் நடுநிலை யானவும் மேற்கோளாக ஆளத் தக்கனவுமாக உள்ளன.
2. சில பாக்கள் அவற்றைப் பாடியவரின் அளவிறந்த ஆரிய வெறியையோ அடிமைத்தனத்தையோ காட்டுவனவாகவுள்ளன.
3. சில பாக்கள் அளவிறந்த உயர்வுநவிற்சியாக வுள்ளன.
4. சில பாக்கள் நூலின் பாகுபாட்டையே எடுத்துக்கூறுவன.

## 9. திருவள்ளுவர் காலத் தமிழ்நூல்களும் கலையறிவியல்களும்

## பல்துறை நூல்கள்

தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவர்க்கு. **(313)**

கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக. **(361)**

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. **(397)**

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். **(401)**

பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பானூ லோர்க்குந் துணிவு. **(533)**

அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு. **(1110)**

### *சிறந்த நூல்கள்*

நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்த
னுண்மை யறிவே மிகும். **(373)**

விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். (410)

நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (783)

பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதல் மாணார்க் கரிது. (823)

## கலையறிவியல் நூல்கள்

கலை

அறுதொழில்: உழவு, நெசவு, ஓவியம், கட்டடம், வாணிகம், கல்வி

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின். (560)

இலக்கியம்

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. (392)

கட்டடமும் பொறிவினையும்

உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர ணென்றுரைக்கும் நூல். (743)

கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து. (496)

உருவம்

உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து. (667)

நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம்
மண்மாண் புனைபாவை யற்று. (407)

நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று. (1020)

மருத்துவம்

மிகினுங் குறையினு நோ–செ–யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று. (941)

இசை

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர். (66)

பண்ணென்னாம் பாடற் கியைபின்றேற் கண்ணென்னாங்
கண்ணோட்ட மில்லாத கண். (573)

நாடகம்

கூத்தாட்ட வைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று. (332)

மறம்

பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா
லூராண்மை மற்றத னெஃகு. (773)

அறிவியல் அறம்

பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை. (322)

கணிதம்

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. (392)

பொருள்நூல் (அரசியல்)

காதல காத லறியாமை யு—க்கிற்பின்
ஏதில வேதிலார் நூல். (440)

சொற்றொகை (நிகண்டு)

அவையறிந் தாரா—ந்து சொல்லுக சொல்லின்
றொகையறிந்த தூ—மை யவர். (711)

ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண். (581)

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை. (636)

நூலாருள் நூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு. (683)

அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியா—
நின்றது மன்னவன் கோல். (543)

மந்திரம் (மறை)

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். (28)

ஓகம் (யோகம்)

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு. (21)

ஏரணம்

ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு. (725)

மெ—ப்பொருள் நூல்

கற்றீண்டு மெ—ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. (356)

## 10. அரசுவகைகளும் திருக்குறள் அரசியலும்

### *1. ஒருவராட்சி*

அ. தாயாட்சி - Matriarchy
ஆ. தந்தையாட்சி - Patriarchy
இ. நாட்டாண்மை - City State
ஈ. தேவாட்சி - Theocracy
உ. கோவரசு - Monarchy
(1) தன்னரசு - Autocracy
(2) தன்மூப்பாட்சி - Dictatorship
(3) அமைச்சரசு - Limited Monarchy
(4) பாராளுமன்றக் கோவரசு - Parliamentary Monarchy

### *2. பலராட்சி*

அ. குருக்களாட்சி - Hierocracy
ஆ. சீரியோராட்சி - Aristocracy

1. சிலராட்சி - Oligarhcy
2. பலராட்சி - Polyarchy
இ. செல்வராட்சி - Plutocracy
ஈ. படையாட்சி - Stratocracy

**3. *குடியாட்சி* – Democracy**

அ. மக்களாட்சி - Republic
1. ஒற்றையாட்சி - Unitary Government
2. கூட்டாட்சி - Federal Government
ஆ. கூட்டுடைமை - Socialism
இ. பொதுவுடைமை - Communism
ஈ. கட்டுடைமை - Fascism
ஊ. உழைப்பாளராட்சி - Ergatocracy
ஊ. மன்பதாட்சி - Mobocracy,Ochlocracy
எ. அனைவராட்சி - Pantisocracy

அரசுகளெல்லாம் கீழ்வருமாறு வெவ்வேறு வகையில் இவ்விரு திறப்படும்.

1. செங்கோலாட்சி (Benign Govt) x. கொடுங்கோலாட்சி (Despotic Government)
2. தன்னாட்சி (Home Rule) x வேறாட்சி (Xenocrachy)
3. ஒருவராட்சி (Monocracy) x பலராட்சி (Polyarchy)
4. பேரரசு (Imperialism) x சிற்றரசு (Feudalism)
5. பாராளுமன்ற ஆட்சி (Parliamentary Govt.) x அல்லாட்சி (Non - Parliamentary Govt.)
6. ஆடவராட்சி (Androcracy) x பெண்டிராட்சி (Gynecocracy/ Gynocracy
7. முதலாளியர் ஆட்சி (Capitalistic Govt.) x தொழிலாளியர் ஆட்சி (Proletarian Govt.)

## திருக்குறள் அரசியல்

இக்காலத்தரசியல் அரசுள்ள ஒருநாட்டை (State) முதலாகவும், ஆள் நிலம் (Territory), குடிகள் (Population), அரசு (Government), கோன்மை (Sover eignty), ஒற்றுமை (Unity) என்னும் ஐந்தையும் சினையாகவும் கொண்டுள்ளது.

அக்காலத் தரசியலோ அரசனையே முதலாகவும், குடி, பொருள் (கூழ்), படை, அரண், அமைச்சு, நட்பு என்னும் ஆறையும் சினையாகவுங் கொண்டிருந்தது. ஆள்நிலம் குடியுள் அடக்கப்பட்டது. செங்கோலோ கொடுங் கோலோ ஒச்சும் அமைச்சுக் கோவரசே அற்றையரசு வகையாம்.

செங்கோலரசன் அமைச்சன், படைத்தலைவன், தூதன், ஒற்றன் ஆகி யோரை அறம்பொரு ளின்ப வுயிரச்சமென்னும் நால்வகைத் தேர்திறங் களால் தேர்ந்தெடுத்து, நாட்டுவளத்தையும் வருவாயையும் பெருக்கி வந்த பொருள் களை அறம்பொரு ளின்பங்கட்குச் செலவிட்டு, சிறந்த படையரண் அமைத்து, காட்சிக் கெளியனா-க் கடுஞ்சொல்ல னல்லனா- நடுநிலையாகக் குற்றவாளி யைத் தண்டித்து முறைசெ-து, சிற்றினஞ்சேராது பெரியாரைத் துணைக் கொண்டு சுற்றந்தழுவி நட்பிற் பிழைபொறுத்து, நால்வகை ஆம்புடைகளைக் கையாண்டு பிறவரசரொடு பழகி, பேதைப் பெண்வழிச் செல்லாது பொதுமகளி ரொடு கூடாது, கள்ளுண்ணாது, சூதாடாது, அளவறிந்துண்டு, நோ-வராமற் காத்து, தளர்ந்த குடிகளைக் கைதூக்கிச் சிறந்த அமைச்சர்க்கும் படைத்தலை வர்க்கும் பெருஞ்சிறப்புச் செ-து, ஐவகைத் துன்பமும் வராமல் அன்பாகக் குடிகளைக் காத்தல்வேண்டு மென்பதே திருக்குறள் அரசியலாம்.

இற்றை யரசு எவ்வெவ்வகையா யிருப்பினும், செங்கோன்மையைப் பொறுத்தமட்டில் திருக்குறள்முறையையே எல்லாவற்றிற்கும் ஏற்பதாம்.

இனி, நட்பு என்பது புறத்துறுப்பாயினும், ஈராயிரம் ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் வற்புறுத்தியவாறே இன்றும் அது வல்லரசுகட்கும் இன்றியமை யாத தாயிருப்பதை, அமெரிக்க ஒன்றிய நாடுகளும் இரசியாவும் ஏனை நாடு களைத் தம்வயப்படுத்துவதற்கு எல்லா முயற்சிகளும் இடைவிடாது செ-து வருதலால் அறிக.

## 11. நாற்பொருளும் முப்பாலும்

மக்கள் வாழ்க்கைக் குறிக்கோள் அறம்பொரு ளின்பம் வீடென்னும் நான் கென முதன்முதற் கண்டவர் தமிழரேயென்பதும், வீட்டைக் கண்டு திரும்பியவர் இங்கொருவரு மின்மையின் அது அறவொழுக்கமாகிய வாயில் வகையாலும் அகப்பொரு ளின்பமாகிய உவமைவகையாலு மன்றித் தனித்துக் கூறப்படாதென்பதும், அதனால் நாற்பொருளும் என்றும் அறம்பொரு ளின்ப மென்னும் முப்பாலாகவே யமையுமென்பதும், முன்னரே முன்னுரையிற் கூறப் பட்டுவிட்டன.

அறம் முதலிய நான்கும் திருக்குறள்போல் ஒருங்கேயன்றித் தனித் தனியே கூறும் நூல்களும் உள. அறத்திற்குப் பழமொழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம் முதலியனவும், இன்பத்திற்குக் கோவைநூல்களும், வீட்டிற்குத் திரு மந்திரம், மெ-கண்ட நூல் முதலியனவும் எடுத்துக்காட்டாம். பண்டைப் பொருள்நூல்களெல்லாம் அழிந்து போனவை.

**"ஏரண முருவம் யோகம் இசைகணக் கிரதஞ் சாலம்**
**தாரண மறமே சந்தந் தம்பநீர் நிலமு லோகம்**
**மாரணம் பொருளென் றின்ன மானநூல் யாவும் வாரி**
**வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரும் மாள"**

என்னுந் தனிப்பாடலால் அறியப்படும்.

இந் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பாலவநத்தம் வேள் பாண்டித்துரைத் தேவர் தொகுத்து வைத்திருந்த ஆயிரக் கணக்கான பழைய தமிழ் ஏட்டுச் சுவடிகளும் நூல்களும். மதுரைத் தமிழ்க்கழகத்தில் தமிழ்ப்பகைவரால் தீக் கிரையாக்கப்பட்டன. அவற்றுள் என்னென்ன நூல் இருந்தனவோ, இறைவன் தான் அறிவான்.

இன்று சமற்கிருதத்திலுள்ள பொருள்நூல்களெல்லாம், இறந்துபட்ட பழந்தமிழ் நூல்களின் வழிநூலும் மொழிபெயர்ப்புமே, மூலநூலில்லாக் காலத்தில் படிகளே மூலமாகக் காட்சியளிக்கின்றன. ஆரியர் தமிழைக் கெடுத்த அடிப்படை வகைகளுள் ஒன்று மூலநூலழிப்பாம். இற்றை வடமொழிப் பொருள் நூல்களுள் முதன்மையானவை பாருகற்பத்தியம், ஔசநசம், கௌடிலீயம் என்பன. இவற்றை இயற்றினோர் முறையே வியாழன் (பிருகற்பதி), வெள்ளி, (சுக்கிரன்), சாணக்கியர் என்போர். இவருள் தலைமையாக மதிக்கப்பட்டவர் சுக்கிரரே. இதை, சாணக்கியர் தம் நூற்றொடக்கத்தில் "சுக்கிரற்கும் பிருகற்பதிக்கும் வணக்கம்" என்றும், கம்பர் தம் இராமாயணத்தில் "வெள்ளியும் பொன்னும் என்போர் விதிமுறை" என்றும் சுக்கிரரை முன்வைத்துக் கூறியிருத்தலால் அறிக.

சுக்கிரர் அசுர குருவென்றும் பிருகற்பதி சுரகுரு அல்லது தேவகுரு என்றும் சொல்லப்படுவர். ஆரா-ந்து நோக்கின்; ஆரியத் தொல்கதை களில் (புராணங்களில்) அசுரர் என்பாரெல்லாம் தமிழ அல்லது திரவிட அரசரென் றும், தேவர் என்பாரெல்லாம் பிராமண ரென்றும், அறியப்படும். மாவலி என் னும் மாபெருஞ் சேரவேந்தன் மகாபலி என்னும் அசுரனாகக்

கூறப்பட்டிருப் பதே இதற்குப் போதிய சான்றாம். ஆரியர் இந்தியாவிற்குட் புகுமுன்னும், ஆரி யம் என்னும் பேரே உலகில் தோன்றுமுன்னும், தமிழகத்தை மூவேந்தரும் கணிப்பில்காலம் ஆண்டுவந்தனரென்பதும், அவருள் முன்னோன் பாண்டி யன் என்பதும் வெள்ளிடைமலையாம். ஆகவே, அரசியல் நூலான பொருள் நூல் குமரிநாட்டுப் பாண்டியரிடையே முதன்முதல் தோன்றினதாகும். அதனால் தமிழரிடத்தினின்றே சுக்கிரர் என்னும் ஆரிய அமைச்சர் பொருணூலைக் கற்றிருத்தல் வேண்டும். அவர் நூலின் வழிநூலாகவே பாருகற்பத்தியமும் அவ் விரண்டின் சார்பு நூலாகவே கௌடிலீயமும் தோன்றியிருத்தல் வேண்டும்.

## 12. திருக்குறளின் தன்னேரின்மை

எல்லா நாட்டார்க்கும் எக்காலத்திற்கும் ஏற்றவாறு, இல்லற வாழ்க்கை யும் செங்கோலாட்சியும் எடுத்துக் கூறுவது திருக்குறள் ஒன்றே. நால்வேத மும் பாரதமும் மனுதரும சாத்திரமும் திருக்குறட்கு ஒப்பாகுமென்று திரு வள்ளுவ மாலைச் செ-யுள்கள் கூறுவது அவற்றைப் பாடியவரின் அறியாமை, அடிமைத்தனம், ஒப்புநோக்குத் திறமின்மை ஆகியவற்றையே ஒருங்கே காட்டும்.

இனி, இக்காலத்தும் ஆரியருந் தமிழருமான பலர் பகவற்கீதையைத் திருக்குறட்கு ஒப்பாகக் கூறத் துணிகின்றனர். கண்ணபிரான் அருச்சுனனுக்கு அறிவுறுத்தியதெல்லாம், போர்க்களத்திற் பொருமறவன் பகைப்படையிலுள்ள உறவினரை நோக்காது ஊக்கமாகப் பொருது தன் கடமையைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டுமென்பதே. இதைப் பிற்காலத்து ஆரிய இனவெறிய னொருவன் பெரிதும் பயன்படுத்திக்கொண்டு, பிராமணன் சத்திரியன் வைசியன் சூத்திரன் என்னும் நால்வரணத்தையும் இறைவனே படைத்தா னென்னும் நச்சுக் கருத்தை, அதிற் சூழ்ச்சியாகப் புகுத்தியிருக்கின்றான்.

### நால்வரணம் இறைவன் படைப்பன்மைக்குச் சான்றுகள்

1. முதற்கால அநாகரிக மாந்தர் வகுப்பு வேறுபாடின்றியே யிருந்தமை.
2. இயற்கையான வகுப்புவேறுபாடு நிறத்தாலன்றித் தொழிலாலேயே ஒரு நாட்டில் ஏற்பட்டுள்ளமை.
3. தொழிலுக்குப் பிறப்பொடு தொடர்பின்மை.
4. தொழில் விருப்பப்படியும் திறமைப்படியும் மாற்றக்கூடியதா யிருத்தல்.
5. கல்வி ஒரே குலத்திற்குச் சிறப்புரிமையாகாது எல்லா வகுப்பார்க்கும் பொதுவாயிருத்தல்.

6. ஆரிய நால்வரணப் பகுப்பு உலகில் பிராமணருள்ள இந்தியாவில் மட்டு மிருத்தல்.
7. ஆரிய நால்வரணத்திற்கு மூலமான (அந்தணர் அரசர் வணிகர் வேளா ளர் என்னும்) தமிழ நாற்பாற் பகுப்புத் தொழிலையே அடிப்படையாகக் கொண்டிருந்தமை.
8. அறிவுவளர்ச்சியினால் நால்வரணப் பகுப்புப் படிப்படியாகச் சிதை யுண்டு வருதல்.

இங்ஙனமிருப்பதால், கண்ணபிரான் கடவுளின் தோற்றரவாயின் (அவதார மாயின்), நானே நால்வரணத்தையும் படைத்தேனென்று கூறியிருக்க முடியாது; கூறியிருப்பின் கடவுளின் தோற்றரவா யிருந்திருக்க முடியாது.

பகவற்கீதை பதினெண் ணதிகாரங்களையும் எழுநூறு சொலவங் களையும் (சுலோகங்களையும்) உடையது. இதிலடங்கியுள்ள விரிவான செ-தியை ஒரு மெ-ப்பொருளியல் மாநாட்டுத் தலைவர்கூடச் சொல்லி யிருக்க முடியாது. ஒரு மாபெரும் போர்க்களத்தில் இருதிறத்தும் நால் வகைப்படைகளும் அணியமாகிப் போருக்கு முனைந்து நிற்கும் வேளையில். இத்தகைய ஓதுவம் (உபதேசம்) ஒருபக்கப் படையின் முன்னணியில் நடை பெற்றதெனின். அதை நம்புபவன் பரமார்த்தகுரு மாணவனாகவே யிருத்தல் வேண்டும்.

மேலும், அருச்சுனனுக்கும் கண்ணபிரானுக்கும் இடையே நடைபெற்ற உரையாட்டைச் சஞ்சயன் கேட்டுத் திருதராட்டிரனுக்கு அவ்வப்போது அறி வித்தா னென்றிருப்பது, இக்காலத்து ஒலிபெருக்கியும் (Microphone), உரத் தொலிப்பான்களும் (Loudspeakers) நிறைந்த மாநாட்டுச் சொற் பொழி வொன்றை, அவைக்கோடியிலுள்ள ஒருவன் கேட்டு அருகிலுள்ள குருட்டுச் செவிடனுக்கு எடுத்துச் சொல்வது போன்றே இருக்கின்றது.

தமிழகத்து இருபெருமதங்களுள் மூத்ததான சிவனியம் (சைவம்) கண்ணபிரானின் தோற்றரவுத் தன்மையை ஒப்புக்கொள்ளவுமில்லை.

பகவற்கீதையின் செ-தி அமைப்பு நடை முதலியவற்றை நோக்கின், கார்பு (Garbe) கூறியுள்ளவாறு, அந் நூல் கி.மு. 2ஆம் நூற்றாண்டில் தோன்றிக் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் விரிவுபடுத்தப் பெற்றதென்று கொள் வதே பொருத்தமாம். அன்றி, கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் தோன்றியதெனக் கொள்வாரும், அதன்பின்

மேன்மேலும் விரிவும் திருத்தமும் பெற்று வந்துள்ளமையை மறுக்கமுடியாது. கி.மு. 10ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த ஒரு போரின் சிறுநிகழ்ச்சியைப் பிற்காலத்துப் பிராமணனொருவன் பயன் படுத்திக்கொண்டு, நால்வரணத்தை நிலைநாட்ட ஒரு பெருமுயற்சி செ-துள்ளான் என்பதே உண்மையான செ-தியாம். பகவற்கீதையிற் கூறப் பட்டுள்ள ஒழுக்கநெறிகளும் மெ-ப் பொருள் விளக்கங்களும் இறந்துபட்ட தமிழ் ஒத்துகளினின்று எடுத்தாண் டவையே என அறிக.

## 13. திருவள்ளுவரின் மெ-ப்பொருள் மேம்பாடு

திருவள்ளுவர் அறிவியலிலும் அரசியலிலும் மட்டுமன்றி, மெ-ப் பொருளியலிலும் மேம்பட்டவராவர், ஆயினும் தமிழர் அவரை அறியாதும் புறக்கணித்தும், இவ் விருபதாம் நூற்றாண்டில் அயலாரும் தமிழ்ப் பகைவரும் இறப்ப இழிந்தாருமான ஆரியரைப் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர்.

உலகத்தில் ஒப்புயர்வற்றவரென ஆரியர் பறைசாற்றிவரும் ஆதிசங் கராச்சாரியார் சிவனியம், மாலியம் குமரம், மூத்த பிள்ளையம் (காண பத்தியம்), காளியம், கதிரவம் என்னும் அறுமத நிறுவனராகப் பாராட்டப் படுகின்றார். திருவள்ளுவரின் கடவுள் மதத்தொடு அதை ஒப்புநோக்கின், விண்ணிற்கும் மண்ணிற்கும் இடைப்பட்ட வேற்றுமையாம். சங்கராச்சாரி யாரின் இரண்டன்மை (அத்துவித)க் கொள்கையில் பல்வேறு முரண்பாடு களைக் கொண்டுள்ளமையின், பேதையரே போற்றத்தக்கதாம்.

திருவள்ளுவரின் இருபத்தாறு மெ-ப்பொருட் கொள்கையும். அவர் உயர்வை விளக்கிக்காட்டும்.

## 14. திருவள்ளுவர் எம் மதத்தார்?

ஆரியத் தெ-வமாகிய நான்முகனை யுட்கொண்ட முத்திருமேனிக் கொள்கையைத் தழுவாமையின், திருவள்ளுவர் வைதிகரல்லர்.

கடவுளில்லையென்றும், பூதங்கள் நான்கேயென்றும், ஒருவர் கொன்ற வுயிரியின் ஊனை இன்னொருவர் உண்ணின் கரிசன்றென்றும் கூறும் பவுத்தக்கொள்கைகளை ஒப்புக்கொள்ளாமையால் திருவள்ளுவர் பவுத்தரல்லர்.

உலகிற்கு ஒரு முதல்வன் வேண்டுவதில்லை யென்றும், இல்லறத்தினும் துறவறம் சிறந்ததென்றும், மகளிர்க்கு வீடுபேறில்லையென்றும், மெ-யுணர் விற்கு இன்றியமையாத ‘சுக்கிலத் தியானம்’ என்னும் பரமவூழ்கம் இக்காலத்தில்

நிகழ்வதில்லையென்றும் கூறும் சமணக் கொள்கைகளை ஒப்புக்கொள் ளாமையால் திருவள்ளுவர் சைனரல்லர்.

கடவுளில்லையென்றும், மெ-ப்பொருள் இருபத்தைந்தேயென்றும், கூறும் சாங்கியக் கொள்கைகளை ஒப்புக்கொள்ளாமையால் திருவள்ளுவர் சாங்கியரல்லர்.

கடவுள் தோற்றரவு கொள்வாரென்பதையும் உருவ வழிபாட்டையும் ஒப்புக்கொள்ளாமையால், திருவள்ளுவர் மாலியர் (வைணவர்) அல்லர்.

மெ-ப்பொருள் முப்பத்தாறு என்பதையும் உருவ வழிபாட்டையும் ஆரியச் சார்பையும் ஒப்புக்கொள்ளாமையால், திருவள்ளுவர் சிவனியர் (சைவர்) அல்லர்.

**“ஓது மெழுத்தோ டுயிர்க்கலை மூவஞ்சு**
**மாதி யெழுத்தவை யைம்பத்தோ டொன்றென்பர்”** **(திருமந். 963)**

என்னும் ஒன்றே சிவனிய ஆரியச் சார்பைக் காட்டப் போதிய சான்றாம்.

இற்றைச் சிவனியம் மாலியத்தினும் ஆரியம் மிகுந்துள்ளமை, என் ‘தமிழர் மதம்’ என்னும் நூலில் விரிவாக விளக்கப் பெறும்.

இனி, திருவள்ளுவர் எம்மதத்தார்தானெனின், தாயுமானவர் ‘அங்கிங் கெனாதபடி’ யென்னும் கடவுள் வணக்கச் செ-யுளிற் கூறியுள்ளவாறு, கடவுள் மதத்தினர் என்று கூறிவிடுக்க.

## 15. வீடுபேற்று விளக்கம்

இல்லறத்தாலும் வீடுபெறலாமென்பது தமிழர் மதமும் திருவள்ளுவர் கொள்கையுமாகும்.

**வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்**
**வாழ்நாள் வழியடைக்குங் கல்,** **(38)**

**அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்**
**போஒ-ப் பெறுவ தெவன்,** **(46)**

**இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்**
**முயல்வாரு ளெல்லாந் தலை,** **(47)**

ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து (48)

என்னுங் குறள்களை நோக்குக.

துறவறமும் ஒரு குலத்தார்க்குமட்டும் உரியதன்றி எல்லார்க்கும் பொது வாம். அவாவும் செருக்கும் அடியோ டொழிந்தாலொழிய ஒருவன் வீட்டை யடைய முடியாது.

“பே—போல் திரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெல்லாம்
நா—போ லருந்தி நரிபோ லுழன்றுநன் மங்கையரைத்
தா—போற் கருதித் தமர்போ லெவருக்குந் தாழ்ச்சிசொல்லிச்
செ—போ லிருப்பர்கண் டீருண்மை ஞானந் தெரிந்தவரே.”

(பட்டினத்தார் பாடல்)

மனத்துக்கண் மாசில னாத லனைத்தறன்
ஆகுல நீர பிற. (34)

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை. (345)

“நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன நீமனமே
மாற்றிப் பிறக்க வகையறிந் தாயில்லை மாமறைநூல்
ஏற்றித் தொழூஉம் எழுகோடி மந்திரம் என்னகண்டா—
ஆற்றைக் கடக்கத் துறைதெரி யாம லலைகின்றையே.” (பட்டினத்தார் பாடல்)

இச் செ—யுள்களால், சிறுபிள்ளைபோல் மறுபடியும் பிறந்து செருக் கடங்கி ஆசைவே ரறுத்தவரன்றி, செல்வத் தொடர்புள்ளவரும், ஆரவாரமாக ஆடையணி யணிபவரும், தம்மைப் பிறப்பாற் சிறந்தவராகக் கருதுபவரும் மனமாறாது ஆரிய மந்திரங்களை யோதுபவரும், வடமொழியைத் தேவ மொழியென்றும் தென்மொழியைக் கீழோர்மொழி (நீசபாஷை) யென்றுங் கூறுபவரும், திருக்குறளை ஓதக்கூடாதென்பவரும், வீட்டுலகை யடைவது ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவதினும் அரிதா யிருக்கு மென்று அறிந்து கொள்க.

இனி, விருந்தோம்பாமையால் இல்லறவகையாலும் செருக்கடங் காமையால் துறவறவகையாலும், ஆரியர் வீட்டையடைவதும் இயலாதென அறிந்துகொள்க.

## 16. இன்பத்துப்பாலின் இருதிறம்

சில ஆரிய நூல்களைக் கற்ற துணையானே தம்மைச் சிறந்த அறிஞராகக் கருதிக்கொள்ளும் மடத்தலைவரும் போலித்துறவியரும், திருக் குறள் இன்பத்துப்பாலைக் கொண்டிருப்பதால் துறவியர் கற்கத்தக்க நூலன்றென்று துணிந்து கூறுவர். இறைவனுக்கும் ஆதனுக்கு மிடைப்பட்ட அன்பை உவமை வாயிலாக விளக்குதற்கு, கணவன் மனைவியரிடைப்பட்ட காதலினுஞ் சிறந்தது வேறின்மையானேயே, சிவனடியாருட் சிறந்த மாணிக்க வாசகர் சிற்றம்பலக் கோவையைப் பாடினாரென்றும், அதன் வெளிப்பொருள் உலகநெறியும் உட்பொருள் வீட்டுநெறியும் பற்றின வென்றும் அறிந்து கொள்க.

**"ஆரணங்கா ணென்ப ரந்தணர் யோகியர் ஆகமத்தின்**
**காரணங்கா ணென்பர் காமுகர் காமநன் னூலதென்பர்**
**ஏரணங்கா ணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்**
**சீரணங் காகிய சிற்றம் பலக்கோவை செப்பிடினே."** **(தனியன்)**

இத்தகையதே திருக்குற ளின்பத்துப்பாலு மென்க.

## 17. தமிழ ஆரியக் கருத்து வேறுபாடுகள்

| *தமிழக்கருத்து* | *ஆரியக்கருத்து* |
|---|---|
| பிறப்பாற் சிறப்பில்லை. | பிறப்பாற் சிறப்புண்டு. |
| தொழில்பற்றிக் குலம் | பிறப்புப்பற்றிக் குலம் |
| உழவுஉயிர்களை ஓம்பும் உயர்தொழில் | உழவு உயிர்களைக் கொல்லும் இழிதொழில் |
| நால்வரணம் மாந்தன் பாகுபாடு. | நால்வரணம் கடவுட் படைப்பு. |
| தமிழன் பிராமணனுக்குத் தாழ்ந்தவனல்லன். | தமிழன் பிராமணனுக்குத் தாழ்ந்தவன். |
| தென்புலத்தார் இறந்த முன்னோர். | தென்புலத்தார் படைப்புக் காலத்தில் நான்முகனாற் படைக்கப்பட்ட தேவ வகுப்பினர். |
| விருந்தோம்பல் குலமுறை பற்றாதது. | விருந்தோம்பல் குலமுறை பற்றியது. |
| கல்வி அனைவர்க்கும் பொது. | கல்வி பிராமணனுக்கே சிறப்பு. |
| குற்றத்தண்டனை நடுநிலைபற்றியது. | குற்றத்தண்டனை குலமுறைபற்றியது. |
| அறம் என்பது எல்லார்க்கும் பொதுவான நல்வினை. | தருமம் என்பது வருணாசிரம ஒழுக்க வேறுபாடு. |

| | |
|---|---|
| அறம்பெற ஏழைகளெல்லாரும் உரியர். | அறம்பெறப் பிராமணரே யுரியர். |
| தமிழே தேவமொழி. | வடமொழியே தேவமொழி. |
| கோயில் வழிபாடு தமிழில் இருத்தல் வேண்டும் | கோயில் வழிபாடு வடமொழியிலேயே நடைபெறல் வேண்டும். |
| இந்திய நாகரிகம் தமிழரது. | இந்திய நாகரிகம் ஆரியரது. |
| சிவமதமும் திருமால் மதமும் வேறுபட்ட தமிழர் மதம். | சிவ மதமும் திருமால் மதமும் ஆரிய இந்துமதக் கூறுகள். |
| தா- பசிப்பினும் பழிக்கத்தக்க செ-யலாகாது. | எது செ-தும் தாயைக் காக்கலாம். |
| இரப்பது இகழ்ச்சி. | இரப்பது இகழ்ச்சியன்று. |
| இல்லறத்தாலும் வீடுபெறலாம். | துறவறத்தால் மட்டும் வீடு பெறலாம். |
| இல்லறம் துறவறம் என வாழ்க்கை நிலை இரண்டு. | மாணவம், மனைவாழ்க்கை, காடுறைவு, துறவு என வாழ்க்கைநிலை நான்கு. |
| துறவறம் எல்லார்க்கும் பொது. | துறவறம் பிராமணர்க்கே சிறப்பு. |
| துறவுநிலை ஒன்றே. | துறவுநிலைகள் குடீசகம், பகூதகம், ஹம்ஸம் பரஹம்ஸம் என நான்கு. |

குடீசகன் புதல்வர் அல்லது உறவினரிடம் உண்டிபெற்று இலைக் குடிலில் வதிபவன். பகூதன் ஏழு வீடுகளில் இரந்துண்டு ஒழுங்குப்படி ஒழுகுபவன். ஹம்சன் பலர் வீடுகளில் இரந்துண்பவன். பரமஹம்ஸன் ஐம்புலன்களையும் அடக்கினவன்.

## 18. திருக்குறட் பொதுக்கூறுகள்

பாயிரத்தில் வான்சிறப்பு, அறத்துப்பாலில் இல்லறவியல், பொருட்பாலில் அரசியலொழிந்த பகுதிகள், இன்பத்துப்பாலிற் சில கற்பியலதிகாரங்கள் ஆகியவை எல்லார்க்கும் பொதுவாம்.

## 19. இக்காலத்தற் கேலாத் திருக்குறட் கருத்துகள்

**தெ–வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெ–யெனப் பெ–யு மழை. (55)**

**அறத்தா றிதுவென வேண்டா சிவிகை**
**பொறுத்தானோ டூர்ந்தா னிடை. (37)**

**படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு**
**முடையா னரசரு ளேறு. (381)**

**இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி**
**னிலமென்னு நல்லாள் நகும். (1040)**

வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேல் மேக பகை. (861)

## 20. வழக்கற்ற பண்டைப் பழக்கவழக்கங்கள்

புதிதாக வந்தவரையும் வழிச்செல்வோரையும் விருந்தோம்பல்.
காட்டிலிருந்து கடுந்தவங் செ–தல்.
குன்றேறி யானைப்போர் காண்டல்.
பெண்டிர் கண்ணிற்கு மைதீட்டல்.
காதலன் மடலேற்றம்.

## 21. திருக்குறளிற் குறிக்கப்பட்ட தொல் (புராணக்) கதைகள்

அருகன் பூமேல் நடந்தது.
வேந்தன் (இந்திரன்) முனிவனது ஆற்றலுக்குச் சான்றானது.
திருமால் மூவுலகும் ஈரடியா லளந்தது (?)

## 22. திருவள்ளுவர் திருவுள்ளம்

திருவள்ளுவர் ஈராயிரம் ஆட்குகட்கு முன்பு தமிழகத்துப் பிறந்து வாழ்ந் தவரே யாயினும், இவ்வுலக மெங்குமுள்ள அறுவகை யுயிரிகளும் எக்காலத் தும் இன்புற்று நீடுவாழவேண்டு மென்பதே அவர் திருவுள்ளமாம்.

## 23. திருவள்ளுவர் ஈராயிர வாட்டைவிழாச் செ.தி

தமிழினத் தீரே! தமிழினத் தீரே!
குமரிநன் னாட்டிற் குணிப்பில் காலமுன்
நுமருயர் நாக ரிகந்தனைக் கண்டும்
ஞமலியி னிழிந்த நிலைமைய ராகி
மாந்த னுண்ணியும் மதிகிளர் காலம்
தாழ்ந்து நின்றீர் தமிழினத் தீரே!
பகுத்தறி வடிப்படை பொருள்களைப் பகுத்தே
முதற்றனித் தா–மொழி வளர்த்தனர் யாரே?
பல்துறை யிலக்கியம் பாவி னியன்றபின்
பொருளிலக் கணமும் புணர்ந்தவர் யாரே?
முத்தமி ழெனவே இயலிசை கூத்துடன்
ஒத்தமும் மடிமொழி யுணர்த்தினர் யாரே?
சோவென் அரண்மேற் சொல்லரும் பல்பொறிக்
காவல் முதன்முதற் கண்டார் யாரே?
மகனைமுறை செ–தும் பகையைவிருந் தோம்பியும்

நடுநிலை சால்பு நாட்டினர் யாரே?
கையுங் காலுமா—க் கரவர் வந்தே
வெள்ளை நிறத்தினும் வெடிப்பொலிச் சொல்லினும்
விண்ணவர் நிலையை விளம்பியே மாற்ற
பகுத்தறி வைப்பயன் படுத்தாது வைத்தே
மதவியற் பித்தமும் மடவியற் கொடையும்
பழங்குடிப் பிறப்பொடு பேதைமை யூட்ட
நிலத்ததேவ ரென்னும் நெடும்பொ— நம்பி
அடிமைப் பட்டும் மிடிமைப் பட்டும்
அஃறிணை யாயினிர் அனைத்து மிழந்தீர்
எஞ்சி யிருப்பது செஞ்சொல் தமிழே!
அதனை யேனும் அழியாது காப்பீர்
முதலிரு கழக நூல்களு ளெதுவும்
இதுபோ துண்டோ ஏனிலை ஆ—மின்
ஆரிய மொழியில் அனைத்துமொழி பெயர்த்தபின்
அருந்தமிழ் முதனூல் அழியுண் டனவே
ஆங்கில வரசும் அம்மொழிக் கல்வியும்
நயன்மைக் கட்சியும் மறைமலை யடிகளும்
அறிவுறுத் தியபினுஞ் சிறிதுந் திருந்தீர்
அறுப்பானை நம்பும் ஆடுகள் போல
வெறுப்பானை யின்றும் விரும்பித் தொழுதீர்
புறநட் டகத்தே வேர்ப்பான் பகைமை
வெளியிட் டுடனே வேறாதல் வேண்டும்
இதுதமி ழகமே இதில்தலை தமிழே
ஆரிய மென்னும் பூரிய மொழியை
அகற்றித் தமிழை அரியணை யேற்றுவீர்!
கோயில் வழிபாடுங் கொண்டாடு மணமும்
வாயில் மொழிதமிழ் வழங்குதல் வேண்டும்
விண்ணக மொழியும் விண்ணக மாந்தரும்
மண்ணகம் வழங்கும் முறைமை யில்லை
சிவனியம் மாலியம் எனுமிரு மதங்களும்
செந்தமி ழோரே கண்ட நெறியாம்
என்ன பெயரும் இன்றமி ழாக்கிக்
கன்னித் தமிழின் கற்பைக் காமின்
உங்கள் போன்றே உடலும் உறுப்பும்
உள்ள அமெரிக்கர் வெள்ளிடை நீந்தித்

திங்கள் சென்று திரும்பினர் பன்முறை
அடுத்த மனையுளும் அடியிட லின்றி
அடிநிலைத் தாழ்வில் அமிழ்ந்துளீர் நீரே
முதன்முதற் பொறிவினை முகிழ்த்தனர் நும்முனோர்
மதிநீர் முதற்சென் றிருத்தல் வேண்டும்
திருவள் ளுவரீ ராயிர வாண்டைப்
பெருவிளம் பரமா—ப் பேணிக்கொண் டாடினிர்
அதனா லெதும்பய னானது முண்டோ?
எள்ளள வும்அவர் சொல்லேற் றீரோ!
பிறப்பொடு தொடுத்த குலப்பிரி வினையாற்
கூண்டுள் விலங்குகள் போன்றடை பட்டே
ஒற்றுமை குலைந்தும் உரனை யிழந்தும்
இனவுணர் வழிந்து மொழியுணர் வின்றிச்
சிறுமை நிலையிற் பெருமை கொண்டீர்
ஆரியன் பிறப்பா லுயர்ந்தா னல்லன்
அவனினும் வெள்ளையர் ஐரோப் பியரே
தட்ப வெப்பந் தன்னால் நாட்டு
மக்கள் நிறமும் மாறுவ தியற்கை
ஒன்றே குலமும் உடன்பிறப் பனைவரும்
நிலத்தேவ ரென்றொரு குலத்தோ நீங்கி
குடிமதிப் பிலும்பிற குறிப்பு களிலும்
தமிழன் என்றே தன்குலங் குறிக்க
வடமொழி தேவ மொழியு மன்றாம்.
அதனினும் மூச்சொலி யடைந்தது காளவா—
முழக்கும் மூச்சும் மொழியொலி பெறுகை
வழக்கில் நேர்ந்த வழிநிலைத் திரிபே
திரவிடத் தாயும் ஆரிய மூலமும்
தெரியிடத் தேநம் தென்மொழி யாகும்
இந்திய நாகரி கந்தமி ழாகும்
பகுத்தறி வைப்பயன் படுத்தி யின்னே
நிறந்துப் புரவு நிலைநீர் முத்திறம்
ஆயினும் ஓரின மாத லறிக
அரசியற் கட்சி பலவா யிருப்பினும்
ஆங்கிலர் போன்மொழி யணைமின் ஒருங்கே
தாழ்த்தப் பட்ட தம்மினத் தோரை
உயர்த்தப் பெற்றோர் உயர்த்தல் கடனே

பிரித்தா னியத்தினும் பிராம ணீயம்
பன்மடி கொடிதே பகரவுங் கொடிதே
முன்ன தொருவ னுடலையே பிணித்தது
பின்னதோ பிறங்கடை யுளத்தையும் பிணிக்கும்
கல்வியுஞ் செல்வமுங் கட்டாண் மையும்
கணக்கின் பெருமையுங் கரையற் றிருந்தும்
சூத்திரர் சற்சூத் திரரெனத் தம்மைத்
தாழ்த்திய தமிழர் வீழ்ச்சியை நோக்கின்
அரிமா வரிமா கரிமா வனைத்தும்
நீல நிறங்கொள் கோலங் கண்டே
நரிமா விற்கு நடுங்கிய தொக்கும்
உள்ளந் தமிழனுக் குயரா வாறு
பெருங்கலா யிருப்பது பிராமணர்க் கஞ்சுதல்
ஆரிய வடிமை யகன்றா லொழியத்
தேறும் வழியே தென்னவர்க் கில்லை
ஆரிய வேடரி னயர்ந்தனிர் மறந்தனிர்
சீரிய மொழிநூல் செம்மையி னுணர்ந்தே
ஓரின மாகி உலகத் துயர்க!
பசியும் பிணியும் பகையும் நீங்கி
இருதிற உடைமை ஆட்சியும்
ஒருகுடை நீழல் ஓங்குக உலகே!

**(முற்றும்)**

# திருக்குறள்
# அருஞ்சொற் பொருள் அகரவரிசை
### (எண், குறள் எண்ணைக் குறிக்கும்)

அகறலின் – சிறிது போழ்து நீங்கியிருத்த லால் – 1325
அசையியற்கு – அசையும் மெல்லியல்புடைய வளுக்கு – 1098
அஞர் – துயர் – 1086
அடுங்கால் – பிரிவால் – 1166
அட்டிய – வார்த்த – 1093
அணங்கு – தெய்வமகள் – 1081
அமர்த்தல் – மாறுபடுதல் – 1084
அமைந்தற்று – அளவாயிருத்தல் – 1302
அமையல – அமைகின்றனவல்ல – 1283
அமைவில – அமைதியிழந்தன – 1178
அயர்கம் – மகிழ்வேம் – 1268
அரிந்தற்று – அறுத்தாற் போலும் – 1304
அரும்பி – எய்தி, தோன்றி – 1223
அலந்தார் – துன்பமுற்றழிந்தார் – 1303
அல்வழி – உதவாதவிடத்து – 1299
அவிர் (தல்) – விளங்குதல் – 1117
அறுவாய் – குறைந்தவிடம் – 1117
ஆயிடை – அவ் விருவழியும் – 1179
இகந்து – பிரிந்து –1130
இருந்தேமா – இருந்தேமாக – 1321
இவர்தந்து – மேல்கொண்டு – 1182
இழத்தும் – இழப்பேம் – 1250
இழைந்து – உண்ணெகிழ்ந்து – 1177
இளித்தக்க – இழிவுதரத்தக்க – 1288
இன்கண் உடைத்து – இன்பமுடைத்தா யிருக்கும் – 1152
இன்னம் – இத்தன்மையம் –
ஈகலான் – இவறன்மாலையன் –
ஈந்தது – அளித்து உதவியது – 1142
உக்கக்கால் – இறந்துபட்ட பின் – 1270
உடையேமா – உடையேமாக – 1250
உணங்க – வாடவிடுகின்ற – 1310
உண்கண் – மையுண்ட கண் – 1091
உண்டற்று – உண்டாற்போலும் – 1107
உயிர்த்து – மூக்கான் மோந்து – 1101
உய்வில் – உய்யமாட்டாமைக் கேதுவாய – 1174
உரனசைஇ – இன்பநுகர்தலை விரும்பாது, போர்வெற்றியை விரும்பி – 1263
உலந்த – வற்றிவிட்டன – 1174
உவக்காண் – உங்கே – 1185
உழப்பிக்கும் – உறுவிக்கும் –
உறாஅதவர் – புறத்தில் அயலார் – 1096
உறாஇதோ – உறுவதொன்றன்றோ – 1143
உறுதோறு – தழுவும் போதெல்லாம் – 1106
உறைபதி – உறைவிடம் – 1015
ஊண்மாலையவர் – உண்டலை யியல்பாக வுடையார்
ஊதியம் – பயன்
ஊர – அடர
ஊராண்மை – உதவி செய்தல்
ஊறுபாடு – துன்பம் விளைதல் –
ஊற்றாம் – பற்றுக்கோடாம்
எய்தின்று – உற்றது – 1240
எவனாவர் – என்செய்வர் – 1165
எழுநாளேம் – ஏழுநாளுடைய மாயினேம் – 1278
என்றற்று – என்று கருதுதலோடொக்கும் – 1148
ஒள்ளமர்க்கண்ணாள் – ஒள்ளிய வாய் அமரைச் செய்யும் கண்ணையுடையாள் – 1125
ஒற்கம் – தளர்ச்சி –
ஒன்றல் – கூடுதல்
ஒன்றா – இணையின்றாக
ஓஒஇனிதே – மிகவும் இனிதாயிற்று – 1176
கடாஅக்களிறு – மதக்களிறு – 1087
கடாம் – மதம் – 1087

கடி – காவல் – **1205**
கட்படாம் – முகபடாம் – **1087**
கணிச்சி – கூந்தாலி – **1251**
கண்ணற – கண்ணோட்ட மற –
கண்ணிணை – ஒருவர் கண்களோடு ஒருவர் கண்கள் – **1100**
கதுப்பினாள் – தழைந்த கூந்த வினையுடையாள் – **1105**
கதுமென – விரைந்து – **1173**
கரப்பாக்கு அறிந்து – மறைதலை அறிந்து – **1127**
கருக்காய் – இளங்காய் – **1306**
கலந்தற்று – கலந்த கலவை போலும் – **1121**
கலுழ்வது – அழுகின்றது – **1171**
கவிழ்ந்து – இறைஞ்சி – **1114**
கவின் – அழகு – **1234**
கவ்வை – அலர் – **1143**
கள்ளற்று – கள்ளுப் போலும் – **1288**
காட்சி – காண்டல் – **1244**
காணலுற்ற – காண்டல் வேண்டி – **1301**
காண்கம் – காணக்கட வேம் –
காதலம் – காதலையுடையேம் – **1314**
காம்பு – வேய் – **1272**
காயார் – வெகுளார் – **1208**
காய்தி – காயாநின்றாய்
குறுங்குங்கால் – அணுகுழி – **1104**
கூன்கையர் – வளைந்த கையினை யுடையார் – **1077**
கையிகந்து – கைகடந்து – **1271**
கொண்டன்னது – கொண்டு வந்தாற்போலும் – **1082**
கொள்ளாக்கடை – செய்யாவழி – **1195**
கோடா – செப்பமுடையவராய் – **1086**
கோடுகொடேறும் – மேன்மேற் பணைத்தெழாநின்றது – **1264**
கோட்டுப்பூ – கோடுதலைச் செய்யும் மாலை – **1313**
கௌவை – அலர் – **1143**
சாயல் – மேனியழகு – **1183**
சாலப்படும் – பணைத்துவிளையும் – **1037**
சாற்றுவேன் – விரியச்சொல்லுவேன் – **1212**
சிறக்கணித்தாள் – சிறங்கணித்தாள் (சிறங்கணித்தல் – சுருங்குதல்) –
சினைப்பது – தோன்றுவது (சினைத்தல் – அரும்பல்) – **1206**
செம்பாகம் – பாதி அளவு – **1092**
செய்யல – செய்யமாட்டா – **1086**
செருக்கி – களித்து –
செல்கிற்பின் – செல்லவல்லன ஆயின் – **1170**
செல்லாமை – பிரியாமை – **1151**
செவ்வியான் – செம்மையுடையவன் –
செறாய் – தூர்க்கமுயல்வாயாக – **1200**
செறி – நெருங்கிய – **1275**
செறிதொடி – நெருங்கிய வளைகளை உடையாள் – **1275**
செறுப்ப – அடக்க – **1318**
சேண் – உயர்ந்த, தொலைவில் அமைந்த
சேயிழை – சிவந்த அணிகலன்களை உடையாள் – **1110**
சேறி – உடன்கொண்டு செல் – **1244**
சோர்விலாள் – பிறர்க்குச் செய்யும் அறவினைகளிலும் தளர்ச்சியில்லாதவள்
ஞாட்பு – போர்க்களம் – **1088**
தணந்தமை – பிரிந்தமை – **1233**
தண்டா – தணியா –
தண்ணம் – குளிர் – **1277**
தலைப்படுவார் – பெறுவர் – **1289**
தவ்வென்னும் – சுருங்கும் (தவ்வென்னும் என்பது ஒலிக்குறிப்பு) – **1144**
தறுகண் – பகைவர்மேற் கண்ணோடாது செய்யும் மறம் –
தற்று –ஆடைத் தற்றுக் கொண்டு (தற்றுதல் இறுக உடுத்தல்) – **1023**
தாமரைக்கண்ணான் – செங்கண்மால் – **1103**
திகழ்தரும் – புறத்துப் புலனாகும் – **1272**
துஞ்சா – துயிலா – **1129**
துணையல்வழி – துணையாகா வழி – **1299**
துப்பாயதூஉம் – உணவாய் நிற்பதும்
துப்பாயார் – பற்றுக்கோடாயினார்
துப்பார்க்கு – உண்பார்க்கு
துயிற்றி – துயிலப்பண்ணி – **1168**
துவ்வாய் – நுகரக்கருதாய் – **1294**
துவ்வான – வலியிலன் –
துனித்து – ஊடி – **1290**
தூங்கும் – தூங்காநின்றன ('தூங்கும்' என்பது ஒன்றினென்று மிகாது இரண்டும் ஒத்த மிகாது இரண்டும் ஒத்த சீர என்பது தோன்ற நின்றது.) – **1163**

தூவி – சிறகு – 1120
தெறூஉம் – சுடாநிற்கும் – 1104
தேறியார் – தெளிந்தார் – 1154
தேற்றுதல் – தெளிவித்தல் –
தொடலை – மாலை – 1135
தொடலைக்குறுந்தொடி – மாலைபோலத் தொடர்ந்த சிறு வளையினையுடையாள் – 1135
தோட்டார் – பூவினையணிந்த – 1105
நசைஇ – விரும்புதல் – 1263
நசைஇயார் – விரும்பப்பட்ட காதலர் – 1199
நநண்ணார் – பகைவர் – 1088
நயப்பித்தார் – உடம்படும் வகை சொல்லியவர் – 1189
நள்ளா – பொருந்தாது –
நுசுப்பு – இடை – 1115
நுதுப்பேம் – அவித்தும் – 1148
நோற்கிற்பவர் – பொறுப்பவர் –
நோனா – வருத்தம் பொறாத – 1132
படலாற்றா – தூக்கம் பெறாதனவாய் – 1175
படாஅதி – படாதொழிவாயாக – 1210
பட்டாங்கு – பட்டதுபட – 1189
பணை – பெருகை – 1234
பயந்தற்று – (வானம்) பெய்தாற் போலும் – 1192
பரத்த – பரத்தமையுடையாய் – 1311
பரிதல் – வருந்துகின்றது – 1243
பருவரார் – வருந்துவதுஞ் செய்யார் – 1326
பனி – நடுக்கம் – 1223
பனியரும்பி – நடுக்கமெய்தி – 1223
பனிவாரும் – நீர்வார்கின்ற – 1232
பன்மாயக்கள்வன் – பல பொய்களை வல்ல கள்வன் – 1258
பிரியலம் – பிரியேம் – 1315
புலத்தக்கனள் – பிலத்தற் கமைந்தாள் – 1316
புலப்பல் – புலக்கக்கடவேன் – 1259
புற்கென்ற – புல்லியவாயின – 1261
பெட்ப – விரும்பியவற்றை – 1257
பெரிதாற்றி – மிகவும் ஆற்றி – 1276
பைதல் – துன்பம் – 1172
பொருள்மாலையாளர் – பொருளியல்பே தமக்கியல்பாகவுடையார் – 1230
போதாகி – பேரரும்பாய் முதிர்ந்து – 1227
போதாய் – போதருவாயாக – 1123
போது – பேரரும்பு – 1227
போழப்படாஅ – அறுக்கப்படாத – 1108
மறக்கல்லா – மறக்கமாட்டாத – 1267
மறுகும் – சுழலாநின்றது – 1139
மிக்கற்று – அளவின் மிக்காற்போலும் – 1302
முறி – தளிர் – 1113
மென்னீரள் – மெல்லிய இயற்கையை யுடையள் – 1111
மையாத்தி – மயங்காநின்றாய் – 1112
வழுத்தினாள் – வாழ்த்தினாள் – 1317
வள்ளி – கொடி – 1304
வாழுநம் – வாழ்தும் – 1193
வாளற்று – ஒளியிழந்து – 1291
விதுப்புற்று – விதும்பலால் – 1290
வீங்கிய – பூரித்த – 1233
வெறி – நறுநாற்றம் – 1113
வென்றீக – வெல்வானாக – 1268
வேட்ட – விருப்பங்கூர்ந்த – 1105
வேபாக்கு – வெய்துறல் – 1128
வைகல் – நாடோறும்
வையகம் – உலகம்

# திருக்குறள்
## பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை
**(எண் குறள் எண்ணைக்குறிக்கும்)**


அசையியற் – 1098
அணங்குகொல் – 1081
அரிதரோ தேற்றம் – 1153
அரிதாற்றி – 1160
அருட்செல்வஞ் –
அலந்தாரை 1303
அலரெழ ஆருயிர் 1141
அலர்நாண 1149
அவர்தந்தார் 1182
அவர்நெஞ் 1291
அழல்போலும் 1228
அளித்தஞ்சல் 1154
அறிகிலார் 1139
அறிதோ றறியாமை 1110
அறுவாய் நிறைந்த 1117
அனிச்சப்பூக் 1115
அனிச்சமும் 1120
இமைப்பிற் கரப்பாக் 1129
இம்மைப் பிறப்பில் 1315
இருநோக் கிவளுண்கண் 1091
இருந்துள்ளி 1243
இலங்கிழாய் 1262
இல்லை தவறவர்க் 1321
இளித்தக்க 1288
இனியன்ன 1294
இன்கண் உடைத்தவர் 1152
இன்பங் கடல் 1166
இன்னா தினன்இல்லூர் 1158
உடம்பொ டுயிரிடை 1122
உணலினும் 1328
உண்டார்க ணல்ல 1090
உப்பமைந் 1302
உய்த்தல் அறிந்து 1287
உரன் நசைஇ 1263
உவக்காணெம் 1185
உவந்துறைவர் 1130
உழந்துழந் 1177
உள்ளக் களித்தலும் 1281
உள்ளத்தார் 1249
உள்ளம்போன் 1170
உள்ளினுந் 1201
உள்ளினேன் 1316
உள்ளுவன் – னுரைப்ப 1184
உள்ளுவன் மன்யான் 1125
உறாஅ தவர்க்கண்ட 1292
உறாஅ தவர்போற் 1096
உறாஅதோ 1143
உறாஅர்க் குறுநோய் 1200
உறுதோ றுயிர்தளிர்ப்பத் 1106
ஊடலின் தோற்றவர் 1327
ஊடலின் தோன்றும் 1322
ஊடலின் உண்டாங்கோர் 1307
ஊடல் உணங்க 1310
ஊடல் உணர்தல் 1109
ஊடற்கண் 1284
ஊடிப் பெறுகுவம் 1328
ஊடியவரை 1304
ஊடி இருந்தேமாத் 1312
ஊடுக மன்னோ 1329
ஊடுதல் 1330
ஊரவர் கௌவை 1147
எழுதுங்கால் 1285
எள்ளின் இளிவாமென் 1298
எனைத்து நினைப்பினும் 1208

| | |
|---|---|
| எனைத்தொன் | 1202 |
| ஏதிலார் போலப் | 1099 |
| ஒண்ணுகற் கோஒ | 1088 |
| ஒருதலையான் | 1196 |
| ஒருநாள் எழுநாள் | 1269 |
| ஓஒதல் வேண்டும் | 1176 |
| ஓம்பின் அமைந்தார் | 1155 |
| கடலன்ன | 1137 |
| கடாஅக் களிற்றின்மேற் | 1087 |
| கண்களவு | 1092 |
| கண்டது மன்னும் | 1146 |
| கண்டாம் கலுழ்வ | 1171 |
| கண்டார் உயிருண்ணும் | 1084 |
| கண்டுகேட் | 1101 |
| கண்ணிறைந்த | 1272 |
| கண்ணின் துனித்தே | 1290 |
| கண்ணின் பசப்போ | 1240 |
| கண்ணும் கொளச்சேறி | 1244 |
| கண்ணுள்ளார் | 1127 |
| கண்ணுள்ளிற் | 1126 |
| கண்ணொடு கண்இணை | 1100 |
| கதுமெனத் தாநோக்கித் | 1173 |
| கயலுண்கண் | 1212 |
| கரத்தலும் ஆற்றேன் இந் | 1162 |
| கரப்பினுங் | 1271 |
| கருமணியிற் | 1123 |
| கலந்துணர்த்தும் | 1246 |
| கவ்வையாற் | 1144 |
| களித்தொறும் | 1245 |
| கற்றதனால் ஆய | – |
| கனவினான் உண்டாகும் | 1214 |
| காணின் குவளை | 1114 |
| காணுங்கால் | 1256 |
| காண்கமன் | 1265 |
| காதலர் இல்வழி | 1224 |
| காதலர் தூதொடு | 1211 |
| காத லவரிலர் | 1242 |
| காமக் கடல்மன்னும் | 1169 |
| காமக் கடும்புனல் உய்க் | 1134 |
| காமக் கடும் – நீந்திக் | 1167 |
| காமக் கணிச்சி | 1251 |
| காமமும் நாணும் | 1163 |
| காமம் உழந்து | 1131 |
| காமம் எனவொன்றோ | 1252 |
| காமம் விடுவொன்றோ | 1247 |
| காலைக்குச் | 1225 |
| காலை அரும்பிப் | 1227 |
| குறிக்கொண்டு | 1095 |
| கூடிய காமம் | 1264 |
| கூற்றமோ | 1085 |
| கெட்டார்க்கு | 1293 |
| கொடியார்கொடுமையின் | 1169 |
| கொடியார் கொடுமை | 1235 |
| கொடும்புருவம் | 1086 |
| கோட்டுப்பூச் | 1313 |
| சாயலும் நாணும் | 1183 |
| சிறுமை நமக்கொழியச் | 1231 |
| செல்லாமை | 1151 |
| செறாஅச் சிறுசொல்லும் | 1097 |
| செறிதொடி | 1275 |
| செற்றவர் பின்சேறல் | 1256 |
| செற்றார் ஏனக்கை | 1245 |
| செற்றார்பின் | 1255 |
| தஞ்சம்தமரல்லர் | 1300 |
| தணந்தமை | 1233 |
| தண்ணந் துறைவன் | 1277 |
| தம்நெஞ்சத் | 1205 |
| தம்மில்இருந்து | 1107 |
| தவறிலர் ஆயினும் | 1325 |
| தனியே இருந்து | 1296 |
| தன்னை உணர்த்தினுங் | 1319 |
| தாம்வீழ்வார் தம்வீழப் | 1191 |
| தாம்வீழ்வார் மென்றோள் | 1103 |
| தாம்வேண்டின் | 1150 |
| தினைத்துணையாங் | 1282 |
| துஞ்சுங்கால் | 1218 |
| துப்பின் எவனாவர் | 1165 |
| தும்முச் செறுப்ப | 1381 |
| துறைவன் | 1157 |
| துனியும் புலவியும் | 1306 |
| துன்பத்திற் | 1299 |
| துன்னாத் துறந்தாரை | 1250 |

துதெரிந்துணரா 1172
தொடலைக் 1135
தொடிநோக்கி 1279
தொடியொடு 1236
தொடிற்சுடின் 1159
நசைஇயா 1199
நயந்தவர்க்கு 1181
நயந்தவர் நல்காமை 1232
நலத்தகை 1305
நனவினாற் 1215
நனவினான் நம்நீத்தார் 1220
நனவினான் நல்காக் 1217
நனவினான் நல்கா தவரை 1213
நனவினால் நல்காரை 1219
நனவென 1216
நன்னீரை வாழி 1111
நாம்காதல் 1195
நாணும் மறந்தேன் 1297
நாணென 1257
நாணொடு 1133
நிணந்தீயில் 1260
நிறையரியர் 1138
நிறையுடையேன் 1254
நினைத்திருந்து 1320
நினைத்தொன்று 1241
நினைப்பவர் 1203
நீங்கின் தெறூஉம் 1104
நீரும் நிழல 1309
நெஞ்சத்தார் 1128
நெய்யால் எரிநுதுப்பேம் 1148
நெருநற்றுச் 1278
நோக்கினாள் நோக்கி 1093
நோக்கினாள் நோக்கெதிர் 1082
நோதல் எவன்மற்று 1308
நோனா உடம்பும் 1132
பசக்கமற் 1159
பசந்தாள் இவளென்ப 1188
பசப்பெனப் 1190
படலாற்றா 1175
பணைநீங்கிப் 1234
பண்டறியேன் 1083
பதிமருண்டு 1229
பயனில பல்லார்முன் 1192
பரிந்தவர் நல்காரென் 1248
பருவரலும் 1197
பனியரும்பிப் 1223
பன்மாயக் கள்வன் 1258
பாடு பெறுதியோ 1237
பாலொடு 1121
பிணிக்கு மருந்து 1102
பிணையேர் 1089
பிரிவுரைக்கும் 1156
புலத்தலிற் 1323
புலப்பல் எனச் 1259
புலப்பேன்கொல் 1267
புல்லாதிராஅப் 1301
புல்லிக் கிடந்தேன் 1187
புல்லி விடாஅப் 1324
புறங்கூறிப்
புன்கண்ணை 1222
பெண்ணியலார் 1311
பெண்ணினாற் 1280
பெயலாற்றா 1174
பெரிதாற்றிப் 1276
பெறாஅமை யஞ்சும் 1295
பெறினென்னாம் 1270
பேணாது பெட்டார் 1178
பேணாது பெட்பவே 1283
பொருள்மாலை 1230
மடலூர்தல் 1136
மணியில் திகழ்தரு 1273
மலரன்ன கண்ணாள்முக 1119
மலரன்ன கண்ணாள் அருமை 1142
மலரினும் மெல்லிது 1289
மலர்காணின் 1112
மறப்பின் எவனாவன் 1207
மறைபெறல் ஊரார்க் 1180
மறைப்பேன்மன் 1253
மறைப்பேன்மன்யான் 1161
மற்றியான் 1206
மன்னுயிர் எல்லாம் 1168
மாதம் முகம்போல் 1118

| | |
|---|---|
| மாலைநோய் | 1226 |
| மாலையோ அல்லை | 1221 |
| முகைமொக்குள் | 1274 |
| முயக்கிடைத் | 1239 |
| முயங்கிய | 1238 |
| முறிமேனி | 1113 |
| யாம் கண்ணிற் | 1140 |
| யாமும் உளேங்கொல் | 1204 |
| யாரினும் காதலம் | 1314 |
| யானோக்கும் | 1094 |
| வருகமன் கொண்கன் | 1266 |
| வழுத்தினாள் தும்மினேன் | 1317 |
| வாராக்கால் | 1179 |
| வாழ்தல் உயிர்க்கன்னள் | 1124 |
| வாழ்வார்க்கு | 1192 |
| வாளற்றுப் | 1261 |
| விடாஅது | 1210 |
| விளக்கற்றம் | 1186 |
| விளியுமென் இன்னுயிர் | 1209 |
| வினைகலந்து | 1268 |
| வீழப்படுவார் | 1194 |
| வீழுநர் வீழப் | 1193 |
| வீழும் இருவர்க் | 1108 |
| வீழ்வாரின் இன்சொல் | 1198 |
| வெகுளி | |
| வேட்ட | 1105 |

# "மொழிஞாயிறு" தேவநேயப் பாவாணர் வாழ்க்கைச் சுவடுகள்

| | | |
|---|---|---|
| தி.பி. 1933 (1902) | : | திருநெல்வேலி மாவட்டம், சங்கரநயினார் கோயிலில் சுறவம் – 26ஆம் நாள் (7.2.1902) பிறந்தார். |
| தந்தை | : | ஞானமுத்து |
| தாய் | : | பரிபூரணம் |
| தி.பி. 1938 (1907) | : | வடார்க்காடு மாவட்டம், ஆம்பூர் மிசௌரி |
| தொடக்கக் கல்வி | : | நல்லஞ்சல் உலுத்தரின் விடையூழிய நடுநிலைப் பள்ளி. |
| உயர்நிலைக் கல்வி | : | திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, திருச்சபை விடையூழிய உயர்நிலைப் பள்ளி (9,10,11 – வகுப்பு) |
| தி.பி. 1950–52(1919–21) | : | முகவை மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், சீயோன் மலையிலுள்ள சீயோன் நடுநிலைப் பள்ளியில் முதற்படிவ ஆசிரியப் பணியிற் சேர்ந்தார். |
| தி.பி. 1952–53(1921–22) | : | வடார்க்காடு மாவட்டம், ஆம்பூர் நடுநிலைப் பள்ளியில் (தாம் பயின்ற பள்ளி) உதவி ஆசிரியராய்ப் பணியாற்றினார். |
| தி.பி. 1955 (1924) | : | மதிப்பு மிக்கதாகக் கருதப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதத் தேர்வில் வெற்றி பெற்றார். (இவ் வாண்டில் பாவாணரைத் தவிர வேறொருவரும் வெற்றி பெறவில்லை).<br>***"கிறித்தவக் கீர்த்தனம்"*** – நூல் வெளியீடு.<br>உதவித் தமிழாசிரியர், சென்னை, திருவல்லிக் கேணிக் கெல்லற்று உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினார். |
| தி.பி. 1956 (1925) | : | தமிழாசிரியர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினார்.<br>***"சிறுவர் பாடல் திரட்டு"*** நூல் வெளியீடு. |
| தி.பி. 1957 (1926) | : | திருநெல்வேலித் தென்னிந்தியத் தமிழ்ச் சங்கம் நடத்திய தனித்தமிழ்ப் புலவர் தேர்வில் இவர் ஒருவரே |

| | | |
|---|---|---|
| | | வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. |
| தி.பி. 1959 (1928) | : | தலைமைத் தமிழாசிரியர், மன்னார்குடி பின்லே கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினார். முதல் மனைவி எசுத்தர் அம்மையார் மறைவு. |
| தி.பி. 1961 (1930) | : | நேசமணி அம்மையாரை மணந்தார். |
| தி.பி. 1964 (1934) | : | தலைமைத் தமிழாசிரியர், பிசப்பு ஈபர் உயர்நிலைப் பள்ளி, புத்தூர், திருச்சிராப்பள்ளியில் பணியாற்றினார். |
| தி.பி. 1968 (1937) | : | முதல் இந்தி எதிர்ப்புப் போரை மையமாகக் கொண்டு – ***"செந்தமிழ்க்காஞ்சி"*** நூல் வெளி யீடு. இந்தி எதிர்ப்புக் கிழமை கொண்டாடினார். ***"கட்டுரைக் கசடறை"*** என்னும் ***வியாச விளக்கம்*** நூல் வெளியீடு. |
| தி.பி. 1971 (1940) | : | ***"ஒப்பியன் மொழிநூல்"*** முதற்பாகம் ***"இயற்றமிழ் இலக்கணம்"*** ஆகிய நூல்கள் வெளியீடு. ***"கட்டுரை வரைவியல்"*** என்னும் உரைநடை இலக்கண நூல் வெளியீடு. |
| தி.பி. 1972 (1941) | : | ***"தமிழர் சரித்திரச் சுருக்கம்"*** வெளியீடு : தமிழக இளைஞர் மன்றம், திருச்சிராப்பள்ளி. ***"தமிழன் எப்படிக் கெட்டான்"*** ஆகிய நூல்கள் வெளியிடல். |
| தி.பி. 1973 (1942) | : | தலைமைத் தமிழாசிரியர், சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினார். கீழைக்கலைத் (B.O.L.) தேர்வில் வெற்றி பெற்றார். |
| தி.பி. 1974 (1943) | : | ***"சுட்டு விளக்கம்"*** – நூல் வெளியீடு. – பண்டிதமணி கதிரேசனார் தலைமையில் நடை பெற்ற முதலாம் தமிழ் உணர்ச்சி மாநாட்டில் பங்கேற்று உரையாற்றினார். |
| தி.பி. 1975 (1944) | : | சென்னைப் பல்கலைக்கழகத்தில் கலைமுதுவர் (M.A.) பட்டம் பெற்றார். |

– தமிழ்த்துறைத் தலைவராகச் சேலம் நகராண்மைக் கல்லூரியில் பணியாற்றினார்.

– ***"திரவிடத்தாய்"*** – நூல் வெளியீடு.

தி.பி. 1980 (1949) : ***"சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்"*** – நூல் வெளியீடு.

பாவாணர்க்குத் தவத்திரு மறைமலையடிகளார் சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்தார்.

பெருஞ்சித்திரனார் அவர்கள் கி.பி. 1949ஆம் ஆண்டு பாவாணரின் தலைமாணாக்கராகச் சேலம் கல்லூரி யில் பயின்றார் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

தி.பி. 1981 (1950) : ***"உயர்தரக் கட்டுரை இலக்கணம்"*** (மு.பா.) – நூல் வெளியீடு.

தி.பி. 1982 (1951) : ***"உயர்தரக்கட்டுரை இலக்கணம்"*** (இ.பா.) – நூல் வெளியீடு.

தி.பி. 1983 (1952) : ***"பழந்தமிழாட்சி"*** – நூல் வெளியீடு.

தி.பி. 1984 (1953) : ***"முதற்றாய்மொழி அல்லது தமிழாக்க விளக்கம்"*** – நூல் வெளியீடு.

தி.பி. 1985 (1954) : ***"தமிழ்நாட்டு விளையாட்டுகள்"*** – நூல் வெளியீடு.

தி.பி. 1986 (1955) : பெரியார் ஈ.வே.ரா. தலைமையில் நடைபெற்ற சேலம் "தமிழ்ப் பேரவை" இவரின் தொண்டைப் பாராட்டித் 'திராவிட மொழிநூல் ஞாயிறு' எனும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

'***A Critical Survey of Madras University Lexicon***' என்னும் ஆங்கில நூல் வெளியிடப் பெற்றது.

தி.பி. 1987 (1956) : ***"தமிழர் திருமணம்"*** – நூல் வெளியீடு.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் விரிவுரை யாளராகப் பணியிற் சேர்ந்தார்.

தி.பி. 1988 (1957) : திசம்பர் 27, 28, 29–ல் தில்லியில் நடைபெற்ற அனைத்திந்தியக் கீழைக்கலை மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

தி.பி.1990 (1959) : மொழிஞாயிறு பாவாணர் அவர்களால் பெயர் சூட்டப்பட்ட 'தென்மொழி' இதழ் பாவலரேறு

பெருஞ்சித்திரனார் அவர்களால் தொடங்கப் பெற்றது. தனித்தமிழியக்க வளர்ச்சிக்கு இவ் விதழ் இன்றளவும் பெரும் பங்காற்றி வருகிறது.

தி.பி. 1991 (1960) : தமிழ்நாட்டு அரசின் ஆட்சித் துறையில் கலைச் சொல்லாக்கத் தொகுப்பில் பங்கேற்றுச் சிறப்பித் தமைக்காகத் தமிழ்நாட்டரசு சார்பில் தமிழ்நாட்டு ஆளுநரால் அவருக்குச் செப்புப் பட்டயம் வழங்கப் பட்டது.

தி.பி. 1992 (1961) : ***"சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதியின் சீர்கேடு"*** – நூல் வெளியீடு.

– அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட சிக்கலால் எனக்கு வறுமையும் உண்டு, மனைவியும், மக்களும் உண்டு – அதோடு எனக்கு மானமும் உண்டு – என்று கூறிவிட்டுப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து வெளியேறினார். என்னோடு தமிழும் வெளியேறியது என்று கூறினார்.

தி.பி. 1994 (1963) : துணைவியார் நேசமணி அம்மையார் மறைவு.

தி.பி. 1995 (1964) : முனைவர் சி.இலக்குவனார் தலைமையிலான மதுரைத் தமிழ்க் காப்புக் கழகம் – "தமிழ்ப் பெருங் காவலர்" என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

***"என் அண்ணாமலைநகர் வாழ்க்கை"*** என்னும் கட்டுரைத் தொடர் தென்மொழியில் வெளிவந்தது.

தி.பி. 1997 (1966) : ***"இசைத்தமிழ்க் கலம்பகம்"***
***"பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும்"***
***``The Primary Classical Language of the World"*** என்னும் நூல்கள் வெளியீடு.

தி.பி. 1998 (1967) : ***"தமிழ் வரலாறு"***
***"வடமொழி வரலாறு"***
***"The Language Problem of Tamilnadu and Its Logical Solution"*** ஆகிய நூல்கள் வெளியீடு.

தி.பி. 1999 (1968) : மதுரைத் தமிழ் எழுத்தாளர் மன்றம் இவரின் மணிவிழாவைக் கொண்டாடி ***"மொழிநூல் மூதறிஞர்"*** எனும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

| | | |
|---|---|---|
| | | 06–10–1968–ல் இவரைத் தலைவராகக் கொண்டு “உலகத் தமிழ்க் கழகம்” தோற்று விக்கப்பட்டது. ***“இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?”*** ***“வண்ணனை மொழிநூலின் வழுவியல்”*** – ***``Is Hindi the logical solution of India"*** ஆகிய நூல்கள் வெளியீடு. |
| தி.பி. 2000 (1969) | : | பறம்புக்குடியில் உலகத் தமிழ்க் கழக முதல் மாநாடு. இம் மாநாட்டில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் முனைவர் சி. இலக்குவனார், முனைவர் வ. சுப. மாணிக்கனார், புலவர் குழந்தை உள்ளிட்ட தமிழ்ச் சான்றோர் பங்கேற்றுச் சிறப்பித்தமை குறிப்பிடத் தக்கது.<br><br>இம் மாநாட்டில் – ***“திருக்குறள் தமிழ் மரபுரை”*** ***“இசையரங்கு இன்னிசைக் கோவை”*** ***“தமிழ் கடன்கொண்டு தழைக்குமா?”*** – ஆகிய நூல்கள் வெளியீடு. |
| தி.பி. 2002 (1971) | : | பறம்புமலையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெற்ற பாரி விழாவில் பாவாணர் “செந்தமிழ் ஞாயிறு” என்று பாராட்டிச் சிறப்பிக்கப் பெற்றார்.<br><br>பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களால் தென்மொழியில் அறிவிக்கப்பட்ட ‘செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம்’ வகுக்கப் பெற்றது. இத் திட்டத்தைப் பின்னர்த் தமிழக அரசே ஏற்று 1974ஆம் ஆண்டில் தனி இயக்ககமாக உருவாக்கியது. |
| தி.பி. 2003 (1972) | : | தஞ்சையில் இவர் தலைமையில் உலகத் தமிழ்க்கழக மாநாடு – “தமிழன் பிறந்தகத் தீர்மானிப்பு” மாநாடாக நடந்தது.<br><br>– ***“தமிழர் வரலாறு”***, ***“தமிழர் மதம்”*** ஆகிய நூல்கள் வெளியீடு. |
| தி.பி. 2004 (1973) | : | ***“ வேர்ச்சொற் கட்டுரைகள்”*** நூல் வெளியீடு. |

| | | |
|---|---|---|
| தி.பி. 2005 (1974) | : | **8.5.1974–ல்** “செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக”த் தமிழ்நாட்டரசால் அன்றைய முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் அமர்த்தப்பட்டார். |
| | | செந்தமிழ் சொற் பிறப்பியல் பேரகர முதலியின் முதல் மடல முதற் பகுதி அவரின் மறைவிற்குப் பிறகு **1985–**ல் வெளியிடப்பட்டது. |
| தி.பி. 2009 (1978) | : | ***“மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடைமை”*** – நூல் வெளியீடு. |
| தி.பி. 2010 (1979) | : | ***“தமிழ் இலக்கிய வரலாறு”*** – நூல் வெளியீடு. |
| | | வாழ்நாள் முழுவதும் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் ஆராய்ச்சிக்கும் ஒதுக்கிய இப் பெருமகனுக்குத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் ***‘செந்தமிழ்ச் செல்வர்’*** என்னும் சீரிய விருது வழங்கப்பட்டது. |
| | | சென்னையில் உலகத் தமிழ்க் கழக நான்காவது மாநாடு பாவாணர் முன்னிலையில் நடைபெற்றது. மாநாட்டிற்குப் பதிப்பாசிரியர் புலவர் அ.நக்கீரனார் தலைமை தாங்கினார். |
| தி.பி. 2011 (1980) | : | **`Lemurian Language and Its Ramifications - An Epitome'** எனும் ஆங்கில நூல் மதுரையில் நடைபெறவிருந்த ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டு அயல்நாட்டு பேராளர்களுக்காக (52 பக்க அளவில்) உருவாக்கப்பட்டது. |
| தி.பி. 2012 (1981) | : | மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டில் பங்கேற்று “மாந்தன் தோற்றமும், தமிழர் மரபும்” என்னும் தலைப்பில் தமிழர்தம் வரலாற்றுப் பெருமையை நிலைநாட்டிப் பேசினார். |
| | | சுறவம் 2ஆம் நாள் “சனவரி 15–ல் இரவு 12.30–க்கு இவ்வுலக வாழ்விலிருந்து மறைந்தார்”. |

# பாவாணர் பொன்மொழிகள்

மாந்தனெனக் குமரிமலை மருவியவன் தமிழனே!
மாண்புடைய நாகரிகம் மலர்ந்தவனும் தமிழனே!

மொழிவளர்ச்சி முதன்முதலாய் முற்றியவன் தமிழனே!
மோனையுடன் சிறந்தசெய்யுள் பேசியவன் தமிழனே!

துறைநகரால் கடல்வணிகம் தோற்றியவன் தமிழனே!
பிறநிலத்து வணிகரையும் பேணியவன் தமிழனே!

தொன்மையொடு முன்மை; தொன்மையொடு நன்மை;
தாய்மையொடு தூய்மை; தழுவிளமை வளமை.

பகுத்தறிவே மானமுடன் படைத்தவனும் தமிழனே!
பகுத்தறிவால் திணைவகுத்த பண்புடையான் தமிழனே!

பனிமலையை முதன்முதற்கைப் பற்றியவன் தமிழனே!
பலமுறைமீன் புலிவில்அதிற் பதித்தவனும் தமிழனே!

பலகலையும் பலநூலும் பயிற்றியவன் தமிழனே!
பலபொறியும் மதிலரணிற் பதித்தவனும் தமிழனே!

இருதிணைக்கும் ஈந்துவக்கும் இன்பமுற்றான் தமிழனே!
ஈதலிசை யாவிடத்தே இறந்தவனும் தமிழனே!

கடல்நடுவே கலஞ்செலுத்திக் கரைகண்டவன் தமிழனே!
கலப்படையால் குணத்தீவைக் காத்தவனும் தமிழனே!

பகுத்தறிவைச் சற்றும் பயன்படுத்தார் கல்வி
மிகுத்ததனால் உண்டோ பயன்?

தமிழயரத் தாழ்ந்தான் தமிழன் அவனே
தமிழுயரத் தானுயர்வான் தான்.

தமிழா உன்றன் முன்னவனே
தலையாய் வாழ்ந்த தென்னவனே
அமிழ்தாம் மாரி அன்னவனே
அழகாய் முதனூல் சொன்னவனே.

பஃறுளி நாட்டிற் பிறந்தவனாம்
பகுத்தறிவுப் பண்பிற் சிறந்தவனாம்
பகையாம் மலையை உறழ்ந்தவனாம்
பாலும் புலியிற் கறந்தவனாம்.

அன்பென்பது ஏசுவும் புத்தரும்போல் எல்லாரிடத்தும் காட்டும் நேயம்.

ஆட்சி ஒப்புமை நட்புறவிற்கே அன்றி அடிமைத்தனத்திற்கு ஏதுவாகாது.

ஓய்வகவையைத் தீர்மானிக்கும் அளவையாய் இருக்க வேண்டியது பணித் திறமையேயன்றி அகவை வரம்பன்று.

துறவு தம்மாலியன்றவரை பொதுமக்கட்குத் தொண்டு செய்வது சிறந்த துறவாகக் கருதப்படுகின்றது.

இந்தியாவில் விலங்கினம் இருக்கும் நிலைமையை உணர்த்த அவற்றின் கழுத்துப்புண்ணும் விலாவெலும்புத் தோற்றமும் போதும்.

கட்டுப்பாட்டில்லாவிடின் காவலனுங் காவானாதலாலும் செங்கோலாட்சியொடு கூடிய இருகட்சியரசே குடியரசிற் கேற்றதாம்.

பிறமொழி பேசும் சிறுபான்மையர் பிள்ளைகளும் அவ்வந் நாட்டுப் பெரும்பான்மை மொழியையே கற்றல் வேண்டும்....

கால் மொழிவாரி மாநிலப் பிரிவு என்பது பொருளற்றதும் பயனற்றதுமாம்.

மாந்தன் வாழ்க்கை, இல்லறம் துறவறம் என இருவகைத்து. மனைவியோடு கூடி இல்லத்திலிருந்து அதற்குரிய அறஞ் செய்து வாழும் வாழ்க்கை இல்லறம்; உலகப் பற்றைத் துறந்து அதற்குரிய அறத்தோடு கூடிக் காட்டில் தவஞ் செய்து வாழும் வாழ்க்கை துறவறம்.

ஒருவன் இல்லத்தில் இருந்து மனையாளோடு கூடிவாழினும் அறஞ் செய்யாது இருப்பின் அவன் வாழ்க்கை இல்லறமாகாது வெறுமனான இல்வாழ்க்கையாம்.

இலங்கையில் இடர்ப்படும் மக்கள் பெரும்பாலும் தமிழராயிருத்தலின் அவர்களின் உரிமையைப் பேணிக்காத்தற்கு அங்குள்ள இந்தியத் தூதாண்மைக் குழுத்தலைவர் தமிழராகவே இருத்தல் வேண்டும்.

கருத்துவேறுபாட்டிற் கிடந்தந்து ஒரு சாராரை ஒருசாரார் பழிக்காதும் பகைக்காதும் இருப்பதே உண்மையான பகுத்தறிவாம்.

இவ் வுலகில் தமிழனைப் போல் முன்பு உயர்ந்தவனு மில்லை; பின்பு தாழ்ந்தவனும் இல்லை.

இற்றைத் தமிழருட் பெரும்பாலாரும் தம்மைத் தாமே தாழ்த்துவதிலும், இனத்தாரைப் பகைத்துப் பகைவரை வாழவைப்பதிலும், பகைவர் மனங்குளிரத் தம் முன்னோரைப் பழிப்பதிலும், தம்மருமைத் தாய்மொழியைப் புறக்கணித்துப் பகைவரின் அரைச்செயற்கைக் கலவை மொழியைப் போற்றுவதிலும் ஒப்புயர்வற்றவராய் உழல்கின்றனர்.

## தந்தையும் அரசும்

ஒரு குடும்பத்திற் பிறந்த பிள்ளைகட்கெல்லாம் ஊணுடை யுறையுள் அளிக்கத் தந்தை கடமைப்பட்டிருப்பது போன்றே, ஒரு நாட்டிற் பிறந்த குடிகட்கெல்லாம் வேலையும் பாதுகாப்பும் அளிக்க அரசு கடமைப்பட்டுள்ளது.

கோவில் வழிபாடும் இருவகைச் சடங்குகளும் தமிழில் நடைபெற்றாலொழிய, தமிழ் விடுதலையடைந்து தன் பழம்பெருமையை மீளப் பெற முடியாது. தமிழுயர்ந்தால்தான் தமிழன் உயர்வான்.

அந்தணன் ஐயன் என்னும் பெயர்கள் முதன்முதல் தமிழகத் துறவியரையே குறித்தது போன்று பார்ப்பான் என்னும் பெயரும் முதன்முதல் தமிழப் பூசாரியையே குறித்தது.

தமிழன் என்னும் இனம் தமிழ்பற்றியதே யாதலால். தமிழ் தோன்றிய இடமே தமிழன் பிறந்தகமாம். அது தென்வாரியில் மூழ்கிப் போன குமரிநாடே.

2ஆம் நூற்றாண்டில் வெளிநாட்டினின்று வந்த முகமதியர் சிறுபான்மையரேனும் ஆங்கிலர் நீங்கியவுடன் தமக்கெனக் கோன்மை (Soveriegnity) கொண்ட தனிநாடு பெற்றுவிட்டனரே. நூறாயிரம் ஆண்டிற்கு முன்னமே தோன்றி ஒருகால் நாவலந்தேயம் முழுதும் ஆண்ட பழங்குடி மக்களான தமிழர் ஏன் தம் நாட்டையும் பெறவில்லை?..... இதற்குக் கரணியம், முகமதியர்க்குள்ள ஓரின வுணர்ச்சியும் ஒற்றுமையும் மறமும் மானமும் இற்றைத் தமிழருட் பெரும்பாலார்க்கு எள்ளளவும் இன்மையேயாம்.

எல்லாக் கேடுகளும் பாடுகளும் துன்பங்களும் தொல்லைகளும் நீங்கி எல்லாரும் இன்பமாக வாழவேண்டு மென்னும் இன்னருள் நோக்கம் கொண்டே தெள்ளிய மனமும் ஒள்ளிய அறிவும் திண்ணிய நெஞ்சும் நுண்ணிய மதியும் கொண்ட திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.

பணநாட்டமின்றி, எல்லாரும் தத்தமக்கியன்ற பணியைச் செய்து, எல்லாப் பொருள்களையும் ஒத்த உரிமையோடு பயன்படுத்தி ஒற்றுமையாக ஒருங்கே வாழும் குடும்ப அல்லது கூட்டுக் குடும்ப வாழ்க்கையே பொதுவுடைமை யாகும்.

ஒரு குடும்பத்திற் பிறந்த எல்லார்க்கும் எங்ஙனம் திறமைக்குத் தக்க பணியும் தேவைக்குத் தக்க நுகர்ச்சியும் உண்டோ, அங்ஙனமே ஒரு நாட்டிற் பிறந்த எல்லார்க்கும் இருத்தல் வேண்டும். இதுவே பாத்துண்டல் என்னும் வள்ளுவர் கூட்டுடைமை.

## தமிழ் விடுதலையே தமிழன் விடுதலை.

ஐந்து ஐரோப்பிய மொழிகளின் அடிப்படை தமிழே. அவற்றின் கொடுமுடியே சமற்கிருதம். ஆகவே ஐரோப்பிய மொழியமைப்பின் அல்லது வரலாற்றின் திறவுகோல் தமிழிலேயே ஆழப் புதைந்து கிடக்கின்றது. இதைக் கண்டுபிடிக்கும்வரை மேலையர் மொழியாராய்ச்சி யெல்லாம் விழலுக்கு நீரிறைத்தலும் வானத்து மீனுக்கு வன்தூண்டில் இடுதலுமே யாகும்.

தமிழின் தூய்மையைக் குலைப்பவர் எல்லாம் வாள்போற் பகைவரும் கேள்போற் பகைவருமே.

எவரெத்து (Everest) என்னும் வெள்ளிமலை போலுயர்ந்தும், அமேசான் (Amazon) என்னும் அமெரிக்க ஆறுபோல் அகன்றும், அமைதிவாரியின் (Pacific Ocean) தென்னகழிபோ லாழ்ந்தும் பிறங்கித் தோன்றிய பெரும்புலமை வாய்ந்தவர் மறைமலையடிகளே என்பது மிகையன்று.

பனிமலைபோலப் பரந்தும் நீண்டும் உயர்ந்தும் தலைசிறந்து விளங்கிய தமிழ்ப் புலவர் மறைமலையடிகள் ஒருவரே.

இனம் மொழி இலக்கியம் நாகரிகம் பண்பாடு என்னும் ஐங்கூறமைந்த தமிழம் முழுவதையும் ஆரியம் விழுங்கக் கவ்விவிட்டது.

அஃறிணை போலிருந்த தமிழனைப் படிக்க வைத்துத் தன்மானமூட்டி மீண்டும் உயர்திணைப்படுத்தியவன் ஆங்கிலேயனே.

இந்தியால் தமிழ் கெடும் என்றறிந்தே 'இந்தி பொதுமொழியா?' என்னும் சுவடியை வெளியிட்டார் தவத்திரு மறைமலையடிகள். பெற்றவருக்குத்தான் தெரியும் பிள்ளையின் அருமை; கற்றவருக்குத்தான் தெரியும் தமிழின் அருமை. பற்றும் புலமையும் அற்ற மற்றவர்க்குத் தெரியுமா நற்றமிழ்ப் பெருமை.

பொருளாட்சித் துறையில் எத்துணை முன்னேற்ற மாயினும் இந்தியொடு கலந்தது, நஞ்சொடு கலந்த பாலே.

தமிழ் அல்லது தமிழர் தோன்றிய இடம் தெற்கே மூழ்கிப் போன குமரிநாடே. ஆதலால், குமரிநாட்டை, அடிப்படையாகக் கொண்டே தமிழ், தமிழர், தமிழ்நாட்டு வரலாறுகளை வரைதல் வேண்டும்.

வீட்டிற்கு ஆவணம் போன்றதே நாட்டிற்கு எழுதப்பட்ட வரலாறு; அவ் வரலாறும் உண்மையானதாய் இருத்தல் வேண்டும்.

மொழிநூல் திறவுகோல் தமிழிலேயே உள்ளதென்னும் உண்மையை அவர் உணர்வராயின் வியக்கத்தக்க உண்மைகள் வெளிப்படுவது திண்ணம்.

****

செந்தமிழுஞ் செங்கதிரால்; சீர்சால் திருக்குறளும்
அந்தமிழால் வீசும் அணிமதியால்; – அந்தமதிக்
கெட்டிநடை யிட்டவறி வேற்றமே பாவாணர்
ஒட்டிநடை யிட்ட உரை.

செப்பா லடித்தவொரு காசுக்குச் செந்தமிழை
எப்பாலும் விற்கும் இழிஞரிடை – முப்பாலுக்
கொத்த மரபுரையொன் றோதினார் பாவாணர்க்
கொத்த கடனென் றுணர்ந்து.

தேவநே யன்என்னுந் தேர்ந்தமதிப் பாவாணர்
தேவத் திருக்குறட்குத் தீர்ந்தவுரை, மேவியபின்
மற்றோர் உரைசெயவும் மானுவரோ? மானுவரேல்
கற்றோர் நகைப்பர் கலித்து!

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

'பெரியார் குடில்'
பி.11. குல்மொகர் குடியிருப்பு,
35, செவாலியே சிவாசி கணேசன் சாலை,
தியாகராயர்நகர், சென்னை – 17.